உ

ஓம்தத்சத்.

அத்வைத கீர்த்தனானந்தலஹரி.

இது

சம்பத்கிரி பிரமபீடம்

ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகளால்

இயற்றியருளப்பட்டு

ஸ்ரீ சுவாமிகளின் மாணவரும்

பரிபாலனத் தலைவருமாகிய

வித்துவான் வல்லம்

வைத்தியலிங்கம் பிள்ளையவர்களால்

வெளியிடப்பட்டது.

உ

ஓம்தத்சத்.

பரப்ரஹ்மணே நம:

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

அத்வைத கீர்த்தனாநந்தலஹரி

இது

சம்பத்கிரி பிரமபீடம்

ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகளால்

இயற்றியருளப்பட்டு

Book Presented by:
Dr. T. P. MEENAKSHISUNDARAM
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY,
MADURAI.

அறப்பெருஞ்செல்வர் புதூர்

உயர்திரு. அ. அண்ணாமலை முதலியாரவர்கள்

நன்கொடைப் பொருளைக்கொண்டு

ஸ்ரீசுவாமிகளின் மாணவரும் பரிபாலனத்தலைவருமாகிய

வித்துவான் வல்லம்

வைத்தியலிங்கம் பிள்ளையவர்களால்

வேலூர்

கே. வி. பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1956.

சம்பத்கிரி பிரமபீடம்

ஸ்ரீமத் அச்சுதாநந்தசுவாமிகள்.

முகவுரை.

"அத்வைத கீர்த்தனுநந்த லஹரி" என்னும் இந் நூலின் ஆசிரியர் சம்பத்கிரி பிரமபீடம் ஸ்ரீமத் அச்சுதாநந்த சுவாமி களாவர். இவர், தமிழ் தெலுங்கு வடமொழி ஆகியவற்றில் பரிபூரண பாண்டித்யம் உடையவரெனத் தெரிகின்றது. சங்கீத சாஸ்திரத் திலும் சம்பூரண ஞானம் உடையவர். தாளப்பிரகரணத்திலும் ஸ்வரப்பிரஸ்தானத்திலும் இவருக்கு உள்ள ஞானம் அபாரமான தாகும். மிருதங்கம் வாசிப்பதில் அபர நந்திகேசுவரர் என்று கூறுவது மிகையாகாது.

இவர் இயற்றிய இந்நூல், இனிய கீர்த்தனங்களால் ஆக்கப் பட்டுள்ள காரணத்தால் இசைநூல் என்று கூறத்தக்கதாகும். இராம நாடகக் கீர்த்தனை, பாரதக்கீர்த்தனை, கந்தப்புராண கீர்த்தனை முத லியன ஒரு கதைப்போக்கை அனுசரித்தனவாக உள்ளன; இந் நூலோ வெனின்! சகல வேத சாஸ்திர புராண இதிகாசங்களின் பரம சித்தாந்தமாகிய அத்வைத ஆனந்த அனுபவத்தைச் சாதனங் களுடன் கரதலாமலகம் போல் அதிகாரிகளுக்கு உணர்த்தும் ஓர் ஒப்பற்றதாக விளங்குகின்றது. ஆதலின், இதனை, அத்தியாத்மதத் துவ சாஸ்திர நூலெனக் கூறுவதில் யாதோர் ஆட்சேபணையும் இன்றும்.

ஸ்ரீசதாசிவ பிரஹ்மேந்திர சுவாமிகள் அருளி யுள்ள "அத் வைதானந்தக் கீர்த்தனைகளை" இந்நூலுக்கு ஒப்பாகக் கூறலாம்.

இவர், தமது எதார்த்த வடிவாகிய ஆத்மசொரூபத்தைச் சந்தேக விபரீதங்கள் அற உணராதுணர்ந்த ஒப்பற்ற ஆரூட ஞானி யாய் ஸ்வகீயமான ஆத்மானந்த நிலையில் நிலைத்து, அவ் ஆனந்தம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏகரசமாய் இவரது முககமலத் தினின்று வழிந்து ஓடிய பெருக்கே இந்நூல்வடிவாக வெளிவந்த

மையின், இதன் பெயர், "அத்வைத கீர்த்தனு னந்த லஹரி" என அமைந்தது போலும்.

இக் கீர்த்தனங்களுள் ஒன்றின் விமர்சனத்தைச் செய்யப் புகினும் இக் குறுகிய முகவுரையில் இடம்பெறற்கு இயலாதாகலின் செய்யாது விடப்பட்டது.

இந் நூலில் உள்ள எல்லாக் கீர்த்தனங்களும் ஆத்மாபின்ன பிரமஸ்வரூப குருமூர்த்தியையே முன்னிலையாக வைத்து இயற்றியன ஆகும். உதாரணமாக ஈண்டுச் சிலவற்றைக் கூறுவாம். அவை, சன்மார்க்கத்தின் சோபானமே! சின்மாத்ர ஸ்வரூபமே! ஜீவசாட்சி சைதன்யமே! சுகசாகரோதயமே! சுகசாகர பர தெய்வமே! சுருதிமுடிப் பொருளே! சுத்த ஞானமே! சுத்தநிர் விகார தேவா! சுத்தாத்மஜோதி நீதியே! சுபோதவான் ஜோதியே! சுப்ரதீபஜோதி நாதா! சுருதியின் முடிவே! சேணுகாரசின்மய தேவே என்பன முதலியனவாம்.

அன்றியும், பல கீர்த்தனங்களின் வாயிலாக அகண்டாத் வைத சோசாதனங்களும் விளக்கப்பட்டுள்ளன.

ஜீவன் முக்தராய இவரது வியாவகாரிக வாழ்க்கையின் வரலாறு இந்நூலின் பிறிதோரிடத்துக் கூறப்பட்டுள்ளது. இவர், உபநிடதங்களிற் கூறப்பட்டுள்ளபடி ஸ்ரீராம பிரமத்தை உபாசித்து அவ்வுபாசனையின் பயனுல் சற்குரு தரிசனம் கிடைத்து, அவரது கடாட்ச தீட்சையினுலும், மகா வாக்கியோபதேசத்தாலும் பேசாப் பெருநலம் பெற்று, ஜீவன் முக்தராய் விளங்கப் பெற்றனர்.

இவர் பூர்வத்தில் அட்டாங்க யோகப்பயிற்சி செய்து சில சித்திகள் பெற்றன ரென்றும், பின்னர் அப்பயிற்சியை அறவே கைவிட்டுவிட்டனர் என்றும் தெரிகின்றது.

இவர் விதேக கைவல்யம் பெறுதற்குப் பத்து தினங்களின் முன்னர் "சன்மார்க்க தர்ப்பணம்" என்னும் ஞானசாத்திரம் ஒன்று இயற்றத்தொடங்கி, அதற்குத் தாமே உரையும் எழுதிப்

பத்தாவது நாள் முற்றுவித்தனர்; அந்நூல் அச்சிடப்பெற்றுப் பல்லோரானும் போற்றப்பட்டு வருகின்றது.

இவர் இயற்றியருளிய கீர்த்தனங்களுள் பெரும் பகுதி பல்லாண்டுகட்கு முன்னரேயே அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன. ஆயினும் அவை அச்சுப்பிழைகள் மிக்கனவாய் உண்மைக் கருத்துக்கள் நன்கு விளங்காதனவாய்ப் பெரிதும் இடர்ப்பாடு உறுவித்து வந்தன; ஆகவே, சுவாமிகளின் மாணவராகிய வித்துவான் வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் விரும்பியபடி, அவரும் நானுமாக சென்னைப் பெரிய மெட்டில் இரண்டு வார காலம் இக்கீர்த்தனைகளையெல்லாம் பன்முறை வாசித்து, மொழிச்சிதைவு, இலக்கண வழுக்கள், சாத்திர முரண்பாடு ஆகியவற்றையெல்லாம் நன்கு சோதித்துச் செப்பஞ்செய்து முடித்தோம். பின்னர் பிள்ளையவர்கள் இவற்றுடன் இதுகாறும் அச்சிடாது இருந்த கீர்த்தனங்கள் அனுபவானந்தக் கண்ணிகள் சுவாமிகளின் வரலாறு ஆகியவற்றையும் ஒன்று சேர்த்து, உயர்ந்த கிளேசு காகிதத்தில் திருத்தமான பதிப்பாக அச்சிட்டு, ஒரே புத்தகமாய் இதுபோழ்து வெளியிடுகின்றனர்.

சில்லாண்டுகட்கு முன்னர், சுவாமிகளின் ஆலயத்தில் நிகழ்ந்த பொன் விழாவில் அடியேன் தலைமை வகித்துப் பேசநேர்ந்த போது இக்கீர்த்தனங்களையெல்லாம் சுத்தம் செய்து, வரலாற்றுடன் வெளியிடுவது அத்தியாவசியமாகும் எனத் தெரிவித்திருந்தேன்; அச்சங்கற்பம் இதுபோழ்து பரிபூர்த்தியானது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்நூலின்கண் உள்ள கீர்த்தனங்களைச்சற்குரு மூர்த்தியின் வாயிலாக ஓதி உணரும் அதிகாரி புருடர்கள், சிந்தையும் மொழியும் செல்லாப் பரிபூரண நிலைமையை ஐயமின்றி அடைவார்கள் என்பது அடியேனது சிதையாத தீர்மானமாகும்; இக்கருத்து இனிது நிறைவேறுமாறு அருள்புரிய அருட்சத்தியாகிய ஸ்ரீபிரம்ம வித்யாம்பிகையைப் பன்முறையும் துதியாநின்றனன்.

ஸ்ரீ குகாநந்த மண்டலி
பழவந்தாங்கல்
பரங்கிமலை போஸ்டு,
சென்னை - 16.

இங்ஙனம்;
அருட்கவி
ந. சுப்பிரமண்ணிய ஐயர்.
(சிதாநந்த நாதர்)

அணிந்துரை.

—o—

“ நமது புனிதத் தாய்நாடு சமய வாழ்க்கையும் தத்துவ ஞானமும் நிறைந்த நாடு—துறவினைப் போற்றும் நாடு; மிகப் பழைய கால முதல் இக்காலம் வரையில் இங்கு மட்டும்தான் மனித வாழ்க்கையின் மிக உயரிய குறிக்கோள் நிலவி வருகின்றது.”

இது சுவாமி விவேகானந்தர் திருவாக்கு—பாம்பனில் சேதுபதி மன்னர் அவரை ஆர்வத்துடன் வரவேற்றபோது அளித்த பதிலின் முதல் வாக்கியம். அது சத்திய வாக்கே என்பதை மெய்ப்பிக்கும் மகான்கள் – பக்தர்கள் – சித்தர்கள் – யோகியர் – ஞானியர்—வாழையடி வாழை என நமது பாரதத் திருநாட்டில் வந்துதித்துள்ளனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்த ஞான பரம்பரையில் தோன்றிய பல பெரியார்களுள் ஒருவர் ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகள். ஸ்ரீ இராமலிங்கசுவாமிகள், ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர், ஈசூர் – சச்சிதானந்த சுவாமிகள், க. சிவப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீ பாம்பன் சுவாமிகள் முதலிய பல அநுபூதிமான்கள் அந்த நூற்றாண்டில் அவதரித்து, மேல்நாட்டு நாகரீகத் தாக்குதலினின்றும், தம் அநுபூதி விளக்கத்தால் பாரதீய ஆன்மீக லக்ஷியத்தைக் காத்தருளினர். “ வேதாந்த சிங்கம் ” என்று வியந்து போற்றப்பெற்ற சுவாமி விவேகானந்தரும், அற்புத அத்வைத கீர்த்தனங்கள் பாடிய ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகளும் ஒரே ஆண்டில்—1902-ல் பரிபூரணமெய்தினர்.

ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகள், “ சான்றோருடைத்து ” என்று ஔவைப்பிராட்டியாரால் பாராட்டப்பெற்ற தொண்டை மண்டலத்தில், வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1850-ம் ஆண்டில் போளூரின்கண் அவதரித்தவர்கள். இவர்களது வாழ்க்கை வரலாறு இதுவரையில் எழுதப்பெறாதிருந்தகுறை இப்போதுதான் நீங்கியது.

இக்குறையை நீக்கி அன்பர்களை மகிழ்வித்துள்ள அறிஞர், மகா வித்துவான் வல்லம் - வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் சுவாமிகளின் வரலாற்றுச் சுருக்கத்தை, அவர்கள் அருளிச்செய்த இசைப்பாடல்களின் தொகுதியாகிய ஸ்ரீ அத்வைத கீர்த்தனுநந்த லஹரி என்னும் நூலின்கண் பிறிதோரிடத்து சேர்த்துள்ளார்கள். இவர்கள் சுவாமிகளின் நேர் சீடராதலால், இவர்கள்தான் இச்சரிதத்தை எழுதுதற்கு உரியவர்கள். இவர்களே விரைவில் இதனை எழுதி உலகிற்கு அளிக்கவேண்டும் என்று அன்புரிமையுடன் அவர்களை வற்புறுத்தி வந்தவர்களில் யானும் ஒருவன். தமது முதுமையின் கஷ்டத்தையும் பாராமல், சுவாமிகள் சரிதச் சுருக்கத்தை எழுதி, கீர்த்தனங்களுடன் சேர்த்து வெளியிட்டு, சுவாமிகளின் பெருமையைப் பின்சந்ததியாரும் உணர்ந்து உய்ய உதவியுள்ளார்கள்.

இவர்கள் கண்டு எழுதியுள்ள உண்மைகளுள் ஒன்று படிப்போர் உளத்தைப் பெரிதும் கவர்ந்து விம்மிதமடையச் செய்ய வல்லதாம். அது யாது? சுவாமிகள் சிவயோக சமாதியில் இறுதியாய் அடங்கி விட்டபின் ஓராண்டு கழித்து, அவர்கள் சமாதியறைமீது கோவில் எழுப்பச் சீடர்கள் எண்ணினர். அவர்களுள் ஒன்பதின்மர் ஒன்று சேர்ந்து, சமாதியறையின்மீது பரப்பியிருந்த கருங்கற்களை அப்புறப்படுத்திவிட்டு, தம் ஆசாரியரது திருமேனியைத் தரிசித்த போது, அது யாதோர் பழுதுமின்றிக் காணப்பட்டது! அடக்கஞ் செய்த நாளில் அணிவித்த மாலையும் வாடவில்லை; இட்ட திரி புண்டரமும் கலையவில்லை. அம்மட்டோ! நெற்றியில் வியர்வை நீரும் பொடித்திருந்தது! என்னே அதிசயம்! சித்தர் சிவப்பிரகாசர், குகை நமசிவாயர், குரு நமசிவாயர், தோப்பா சுவாமிகள் போன்ற சிவராஜ யோகச் செல்வர்களின் சிறப்பையன்றோ இது நினைவூட்டுகிறது! இவ்வதிசயத்தை நேரிற்கண்ட நமது பெரும்புலவர் நமக்கதைத் தெரிவித்தருளியதற்கு நாமும் நம் பின்வருவோரும் எவ்வாறு கைம்மாறு செய்வது?

இன்னும் சில விவரங்களை, சுவாமிகள் சஞ்சரித்த ஊர்கள் சிலவற்றிற்கு நேரே சென்று விசாரித்தறிந்து எழுதவேண்டும் என்று

பிள்ளையவர்கள் கருதியுள்ளார்கள். இம்முயற்சி விரைவில் முழுப் பயனளிக்க வேண்டுமென்று அண்ணாமலையார் அடிகளைச் சிந்திக்கின்றேன். இம்மகா வித்துவான், தமிழிலக்கிய இலக்கணங்களையும், வேதாந்த சாத்திரங்களையும் கசடறக்கற்றவர். பல்லாயிரக்கணக்கான செழும் பாடல்களைப் பொருள் நயமுணர்ந்து மனப்பாடமாக வைத்துள்ள மாண்புடையவர். இதிகாசங்களையும், புராணங்களையும், கங்கையாற்றின் கம்பீர நடைபோன்று பெருகும் பிரசங்கங்களால், இனிது விளக்கிப் பற்பல்லாயிர மக்களின் உள்ளங்களில் அற நெறியில் ஆர்வத்தையும், ஆண்டவன்பால் பக்தியையும் வளர்த்துதவி வந்துள்ள சமரச ஞானப் பெரும் புலவர். இவர் சிவனடி மறவாச் சிந்தையர். அன்பும், தூய்மையும், அடக்கமும், எளிமையும் தொண்டில் மகிழ்வும், உள்ள நிறைவும் பெற்று நாட்டிற்கு நலம் செய்யும் சான்றோர், இவர்க்குத் தமிழகத்தின் நன்றி பெரிதும் உரியது.

இனி, ஸ்ரீ அத்வைத கீர்த்தனானந்த லஹரியைச் சிறிது கவனிப்பாம் :—சுவாமிகள் அருளிச் செய்த கீர்த்தனங்களுள் ஒரு சிலவே பல ஆண்டுகட்குமுன் அச்சாயின. மேலும் பலவற்றைச் சேகரித்து,மொத்தம் 314 கீர்த்தனங்களை இந்நூலில் பிள்ளையவர்கள் வெளியிட்டுள்ளார்கள். இவை செவிக்குமட்டுமல்ல, சிந்தைக்கும் இனியன; பிறவிப் "பிணிக்கு மாமருந்தும்" போல்வன. எண்ணிலாத பலபிறவி எடுத்து உழன்றபின், ஆன்மாக்கட்கு நித்தியா நித்திய வஸ்து விவேகம் பிறக்கிறது. "ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழலாதே, வான் நோக்கும் வழியாவது நினைமினோ" என்ற அப்பர் உபதேசத்தை அவசியம் பின்பற்றவேண்டும் என்னும் உணர்வு பிறந்து வளர்கிறது. மனிதன் தன்னை நொந்துகொள்கின்றான்; பின்பு இறைவனைக்கான அவாபெருகுகிறது. அவ்வுணர்வு பெருக்கும் கீர்த்தனங்கள் இந்நூலிற் பல உள. உதாரணம் :— (1) "எப்போதகலு மிந்தத் துன்பம்!" (கீ–70) (2) "ஏமாந்திறந்து போகாதே" (கீ–93) (3) ஏன் கெட்டுப் போறாயடா!" (கீ–100) (4) "காலம் போக்கினேனே பாவி" (கீ–112)

(5) " இன்னுந் தயையில்லை ஏனோ" (கீ–56) "எப்போ காண்பேனோ!" (கீ–69) (6) "காணவேணுமே கர்த்தனடி" (கீ–115) (7) "மூட மனதைச் செம்மையாக்காயோ தேவா" இப்படித் துடிதுடிப்பு நிகழ்ந்தபின், உருக்கமான பிரார்த்தனை நிகழ்கிறது. பின்பு உபதேசம் கிடைக்கின்றது.

(உ–ம்) "சமாதியோக சாதனை புரிவாய்" (கீ–135) (2) "தன்னைத் தானறிய வேணும்" (கீ–190) (3) "நினைமனமே நிலை நின்று" (கீ–220) (4) "எல்லாம் விட்டுப் பார் இலங்கும் ஒளி எங்கும்" (கீ–73), (5) "உன்னுலுனைக் காண்பதல்லால் என்றன் உணர்வினுற் காண்பதுண்டோ?" (கீ–60), (5) "சிவராஜயோகம் செய்திடும் சீரியர் எய்திடும் ரூபமே" (கீ–157), (6) "சும்மா இருப்பதுவே சுகம்" (கீ–169), (7) "ப்ரம்மானந்தத்தை நாடு" (கீ–252) சாதனத்தின் பயனுகச் செம்பொருட் காட்சி கிடைக்கின்றது. (உ–ம்) (1) "காணக் கிடையாத தங்கம்" (கீ–114), (2) "சுகஸ்வரூபமே! ஜோதி மிகுப்ரதாமே!" (கீ–161), (3) "வேதத்தின் முடிவான சேதி" (கீ–269), (4) "ஞான ப்ரகாச மோனவானே" (கீ–83) அப்போது பகைவனுக்கும் அருள் செய்யும் பண்பு பிறக்கின்றது. "தூஷிப்பவர்கள் சுகப்படட்டும்" (கீ–201). மூர்த்தி துவேஷம் இல்லை.

(உ–ம்)—(1) "பஜகோவிந்தம் பஜகோவிந்தம்" (கீ–224), (2) "பரமபத நிவாசனே! கண்பாராய்" (கீ–232), (2) "தாண்டவஞ் செய் ஆண்டவனே!" (கீ–191), (4) "சிவமே செயும் செயலறியேன்" (கீ–151) பேத வாதங்களும் ஒழிகின்றன. (உ–ம்) "பேதவாதங்களேது மிலதாய்" (கீ–262), "வேதமார்க்க விரோத வீணும் வார்த்தைகளாடி" (கீ-263) பூஜைபுரிவதன் உட்பொருள் அநுபவத்தில் விளங்குகின்றது: (1) "பூஜைபுரியும் புண்ணியர்க்கு" (கீ-254). அச்சுதாநந்தர் சுவாநுபூதியைக் குறிக்கும் சில கீர்த்தனங்கள்: (உ-ம்) (1) "பார் பார் திருக்கு விலாசச் சின்மய நிலை" (கீ-247), (2) "சுகசாகர பர தெய்வமே" (கீ–162).

சிவபோக சமாதி சித்திக்கப்பெற்ற இப்பெரியாரின் திருப் பாடல்கள் மூவாசையை விடாத சாமானியர்க்கும் தேவாசையை மூட்டும். ஒரு சில கீர்த்தனங்கள் சிறிது காலத்திற்கு முன்பு வானொலி வாயிலாகப் பரப்பப்பட்டன. இந்நூல் அச்சில் இப்போது வெளிவருதல் காரணமாக சுவாமிகளின் கீர்த்தனங்கள் இன்னும் பல இவ்வாறு பரப்பப்பெறும் என்று எதிர்பார்க்கலாம்

இருபதாம் நூற்றாண்டில் சமயச் சார்பற்ற அரசாட்சி முறை யால் இப்படிப்பட்ட பக்தியோக, ஞான கீர்த்தனங்கட்கு இடங் கிடைக்குமோ என்று ஐயுற வேண்டாம். தெய்வப் பாடல்கள் சில இப்போதும் அவ்வாறு பரப்பப் பெறுகின்றன. பொது மக்களின் மனப்பான்மைக் கேற்றவாறு பாடல்களின் தகுதியமையும். இராம நாதபுரத்தில் சுவாமி விவேகானந்தர்க்கு வரவேற்பளிக்கப் பட்ட போது நமக்கு அவர் பின்வரும் எச்சரிக்கை செய்தார். "நீங்கள் தெய்வ சாட்சாத்கார லட்சியத்தைக் கைவிடுவீர்களேயானால் அதைக் கைவிட்டு மேனாட்டு லௌகீக நாகரீகத்தை நாடிப்போவீர்களே யானால் மூன்று தலைமுறைக்குள் உங்கள் இனம் அழிந்து போகும். ஏனெனில் அப்போது நமது இனத்தின் முதுகெலும்பு முறிந்து போகும் நமது சமூக மாளிகையின் அஸ்திவாரம் சிதைந்து போகும்" இந்த எச்சரிக்கையை நம்தலைமுறையிலிருக்கும் பல பெரியோர்கள் இன்றும் செய்துதான் வருகிறார்கள் " இரைதேடுவதோடு இறையை யும்தேடு" என்று ஞானவாக்கிய ஆசிரியர் உபதேசித்துள்ளார், மகாத்மாகாந்தி, "பரம்பொருளைக்காணுதல் வாழ்க்கையின் தலை சிறந்த இலக்காகும். வாழ்க்கையின் இதர வேலைகள் இந்த இலக்கை அடைவதற்காகவே நடைபெற வேண்டும் " என்று உபதேசித்தார்." (காந்தீயநவநீதம் பக்கம் 1.)

ஈடும் எடுப்பும் அற்ற இக் குறிக்கோளை—என்றும் பொன்ற லாகாத இந்த ஞானவிளக்கைத் தன்வடகோடியில் தியானத்திலாழ்ந் திருக்கும் தட்சிணாமூர்த்தியையும், தென்கோடியில் "நீலக்கடற்கரை ஓரத்திலே நின்று நித்தம் தவஞ் செய்யும் உலகீன்ற அன்னையையும்

கொண்டு விளக்கும் இப் பாரதத் திருநாடு என்றும் மங்காத் பேரின்பப் பெருவாழ்வை மக்கட்கு நல்கிச் சிறப்புற்றிருப்பதாக; இப்புனிதப்பணிக்கு இவ்வினிய நூலும் ஏற்றதோர் துணையாய்ப் பயன்படுவதாக.

ச. சச்சிதானந்தம் பிள்ளை,
பி.எ., எல்.டி.,
ஓய்வு பெற்ற மாவட்டக் கல்வியதிகாரி,
சென்னை.

புலவர் பெருமக்களின் அபிப்பிராயம்.

சென்னை அரசாங்கக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்
பல்கலைச்செல்வர் பன்மொழிப் புலவர்
உயர்திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள்
வித்துவான் M.A., B.L., M.O L., Dip. Econ, Ctc.

தமிழிசை இன்று ஓர் இயக்கமாகவும் வளர்கிறது. ஆனுல், சென்ற நூற்ருண்டில், இத்தகைய இயக்கமில்லாத நாளையில், சுவாமி அச்சுதாநந்தர் வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பக் கீர்த்தனைகள் பாடிவந்தனர். அவை இன்று நண்பர் வல்லம், திரு வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் முயற்சியின் பயனுக அச்சேறி வெளிவருகின்றன. இவற்றை ஸ்வரப் படுத்தி வெளியிட்டால் பாடுவோருக்குப் பெரிதும் பயன்படும். இந்தக் கீர்த்தனைகள் தமிழ் நயமும் வழிய நிற்பவை. தமிழிசை வளர்க்கும் கீர்த்தனைகளின் இலக்கிய யாப்பமைப்பினை இங்கே கண்டு ஆராய்ந்து களிக்கலாம். இவை இன்று புதியவையாகத் தமிழ் நாட்டில் புகவில்லை. பலரையும் களிப்பித்துப் பலர் மனத்தினையும் கவர்ந்த பெருமை இவற்றிற்கு உண்டு. ஆதலின் இவற்றைத் தமிழ் நாடு பெரிதும் விரும்பி வரவேற்கும் என்பதில் யாதோர் ஐயமும் விளைவதற்கு இடம் இல்லை,

---

டாக்டர் உயர்திரு. மொ. அ. துரை அரங்கசாமிப் பிள்ளை
வித்துவான் M.A., M.O.L., P.H.D., அவர்கள்
சென்னைப் பல்கலைக்கழகத் தலைமைத்
தமிழ் விரிவுரையாளர்.

எல்லா வகையான துன்ப நீக்கத்திற்கும் எல்லையிலா இன்ப ஆக்கத்திற்கும் உரியநெறிகள் மூன்று என்ப. அவை துவிதம், விசிட்டாத்துவைதம், அத்வைதம், என்பன. உணவும் தானும் வேறுவேறு ஆதல்போல, ஆண்டவனும் தானும் வேறுவேறு என்று கொள்ளும் நெறியே துவைத நெறியாகும். உண்ட உணவு வேறாகவும் ஒன்றாகவும் தோன்றுதல் போல, ஆண்டவனும் தானும் வேறாகவும் ஒன்றாகவும் இருத்தலாகக் கொள்ளும் நெறி விசிட்டாத் துவைத நெறியாம். சீரணமான உணவு தானேயாக இலங்குதல் போல, இறைவன் தானேயாக இலங்கும் நெறி அத்துவைத நெறியாம். உணவு வேறாக இருக்கும் போது எல்லையிலா இன்பம் உண்டாதல் இல்லை. உணவு சீரணமாகாமல் வயிற்றில் வேறாகவும் ஒன்றாகவும் இருக்கும் அப்போதும் எல்லையிலா இன்பம் இல்லை. சீரணமான பிறகு உணவு தானேயான நிலையில் எல்லையிலா இன்பம் ஏற்படுகின்றது. எனவே, மூன்று நெறிகளுள் அத்துவைத நெறியே எல்லையிலா இன்பம் எய்துவிக்கும் செந்நெறியாம் என்பது உள்ளங்கை நெல்லிக் கனியாம்.

அத்துவைத நெறியாம் செந்நெறியைக் கடைப்பிடித்து மெய்யுணர்வு நிலை எய்தியவர் சுவாமி அச்சுதாநந்த ரவர்கள். தாம் பெற்ற இன்பம் அனைவரும் பெறுக என்ற பேரருளுடன், சுவாமிகள் அத்துவைத கீர்த்தனங்கள் பல பல பாடியருளினார்கள். பாடற் பொருளை உணர்ந்து பாடித் திளைப்பவர் அத்வைத அனுபூதி பெறுவர் என்பது உறுதி. "தன்னையும் தனக்காதாரத் தலைவனையும் கண்டானேல் பின்னை அத்தலைவன் தானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத் தீர்வன்" என அரைப் பாட்டில் ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் தாம் இயற்றிய கைவல்ய நவநீதம் என்னும் அனுபவ நூலில் அத்துவைத நெறியை

தெள்ளத் தெளிய உணர்த்தி யிருக்கின்றனர். இதனை இன்னும் சுருக்கமாகவே அச்சுதானந்த சுவாமிகள் அவர்கள் "தன்னைத்தான் அறியவேணும் தத் அநந்தரம் தானும் தலைவன் தன்நிலை தோணும்" என உலகவழக்கத் தமிழில் பாமரரும் எளிதில் உணரும் வண்ணம் உணர்த்தி யிருக்கின்றார்கள். பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்க்கப் போதும் என்பார்கள். சுவாமிகளுடைய மெய்யுணர்வு உணர்த்தும் ஆற்றலுக்கு இந்த ஓர் எடுத்துக் காட்டே போதும்.

இதுபோல் அமைந்த கீர்த்தனங்களின் தொகுதியே அத்வைத கீர்த்தனானந்த லஹரி என்னும் இந்நூலாகும். இந்தக் கீர்த்தனங்களை இசை தெரிந்தவர்கள் ஒன்று கூடித்தாளமும் பிற இசைக் கருவிகளும் துணையாகக் கொண்டு பாடுவார்களானால், இவை கேட்பவர்கள் உள்ளங்களை அத்வைதானந்த நிலையில் நிறுத்தி விடும்; கேட்ட கீழ்ப்பறவை சாதிகளும் வேட்டம் உறும்; பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான நாட்டம் உறும், இது முற்றும் உண்மை.

சுவாமிகளவர்களுக்கு மாணவர்கள் ஆயிரக்கணக்கானவர்கள். அவர்களுள் தலைசிறந்தவர், வல்லம் மகாவித்வான் உயர்திருவாளர் வைத்தியலிங்கம் பிள்ளை அவர்களே ஆவார்கள். எம்முடைய குருநாதராகிய இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த ஆசிரியர் மகாவித்துவான் கோ. வடிவேற் செட்டியார் அவர்களிடத்தில் பிள்ளையவர்கள் ஈடுபட்டுச் சென்னை வேதாந்த சங்கம் நிறுவுவதற்கும் துணையாயிருந்து ஆண்டு தோறும் போட்மெயில் போல் வேதாந்த சொற்பொழிவுகளும் காவிய இதிகாச சொற்பொழிவுகளும் ஆற்றி வந்ததோடு மூலை முடுக்கான ஊர்களில் எல்லாம் சென்று இத்தகைய சொற்பொழிவுகளை ஆற்றி லட்சக் கணக்காணவர்களுக்கு மெய்யுணர்வு உண்டாக்கி வந்துள்ள பெருமை பிள்ளையவர்களுக்கு உண்டு.

அண்மையில் சுவாமிகள் அவர்களுக்குத் திருக்கோயில் எடுத்துத் திருவிழாச் செய்து நாள்தோறும் பூசை நடத்த ஏற்பாடு செய்ததோடு அமையாது, சுவாமிகளுடைய அத்வைத கீர்த்தனாநந்த லஹரியையும் வெளியிடப் பிள்ளையவர்கள் முன்வந்தது அவருடைய

நன்றி மறவாத பேரன்பினை வெளிப்படுத்தும். சொற்களைப் பொருள் தோன்றப் பிரித்தும், சுரம் வகுத்தும், இந்த நூலை இன்னும் சிறக்க வெளியிட்டால் நன்றாக இருக்கும். துணையின்றித் தொண்டு கிழவரான இந்நிலையில் விரைவாக இந்நூலை அச்சிட்டதால் சில அச்சுப் பிழைகள் உள்ளவற்றை உலகம் பொறுத்துக்கொள்ளும். மாணவர் பரம்பரையில் பிள்ளையவர்கள் போன்றவர்கள் தொகை அருகி வருதல் வருத்தத்தை விளைவிக்கின்றது. பிள்ளையவர்களுக்கு நோயில்லா நல்லுடலும் பொருட் செல்வாக்கும் தந்து, மற்றொரு பதிப்பை அவர்கள் வெளியிட ஆண்டவன் அருள்புரியவேண்டும் என்பது அவனை யாம் இரந்து வேண்டிக்கொள்வது. பிள்ளையவர்கள் இன்னும் பெரும்புகழ் பெற்று வாழ்க! அச்சுதாநந்த சுவாமிகளவர்கள் அத்வைத கீர்த்தனாநந்தலஹரி நிலைபெற்று வாழ்க! தமிழும் அத்வைத நன்னெறியும் தழைத்தோங்குக.

சென்னை, பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர்
உயர்திருவாளர்

டாக்டர் - மு. வரதராசனார், யம்.எ., எம்.ஓ.யல்., பி,எச்.டி., அவர்கள்.

அரை நூற்றாண்டுக் காலத்திற்கு முன்னர் வட ஆர்க்காடு மாவட்டத்தில் போளூரில் சம்பத்கிரி என்னும் மலையில் ஒரு குகையினுள் இருந்து வாழ்க்கையின் உண்மையை உணர்ந்து தெளிந்தார் அச்சுதாநந்த சுவாமிகள் என்னும் சான்றோர். அவர்தம் மெய்யுணர்வின் அனுபவம் எழுத்து வடிவமாகவும் விளங்கி நிற்பது நல்லதொரு பேறேயாகும். அவர் இசைக்கலையினும் வல்ல கலைஞராக இருந்தமையால், தம் அனுபவத்தை இசைப்பாடல்களாக அமைத்து நமக்கு நல்கியுள்ளார். சுவாமிகளின் தெளிவையும் ஆர்வத்தையும் நேரில் கண்டும் கேட்டும், மாணவராகிக் கற்றும் பயன்பெற்றவர் பல்லோர். அவர்கள் அந்தப் பாடல்களைச் சுவாமிகளே பாடக் கேட்டும் பயன்பெற்று மகிழ்ந்தவர்கள். நாம் இன்று பெற்றுள்ளவை

எழுத்து வடிவாம் பாடல்களும், அவற்றில் பொதிந்துள்ள அரிய உண்மைக் கருத்துக்களும், அவற்றிற்குச் சுவாமிகள் அமைத்த இசை வடிவங்களுமே ஆகும். இன்றும் இந்தப் பாடல்களை இசையமைத்துப் பாடி உணரும் வாய்ப்பு இந்த நூலால் கிடைத்துள்ளது. ஆதலின், இந்நூலை அச்சிட்டு உதவ முன்வந்தது பெரிய தொண்டு ஆகும். வேதாந்தம் என்னும் மெய்யுணர்வுக் கலை, இந்நாட்டில் தொன்று தொட்டு இருந்துவரும் அருங்கலையாகும். "மறை" என்னும் பெயருடையதாய், பலர்க்கு எளிதில் எட்டாத நுண்மையுடையதாய் விளங்கிவரும் கலையாகும். இந்தக் கலையின் பயனை ஓரளவேனும் பெற்றபிறகே, மற்றக் கல்வித்துறைகளைப் பற்றி, "கற்றதனாலாய பயனென்கொல்" என்று எண்ணம் எழுகிறது. வாழ்க்கை வாழ்வதற்கே என்பர் சிலர். வாழ்க்கை உய்வதற்கே என்பர் பலர். வாழ்வது எங்ஙன்? உய்வது எங்ஙன்? வாழ்வது என்பது யாது? உய்வது என்பது யாது? இத்தகைய எண்ணங்களில் மூழ்க மூழ்க, ஒருவகைத் தெளிவை நாடும் நாட்டம் எழுகிறது. உள்ள பொருள் ஒன்றே, அச் செம்பொருள் தவிர வேறொன்றும் பொருள் அன்று, வேறு ஒன்று அல்லது பல இருப்பதாக எண்ணுவது மருள் அல்லது மாயை, அந்தச் செம்பொருளைக் காண்பதே அறிவு, காணும் அறிவும் அதுவே, காண்பவனும் அதுவே என்பன தெளிதலே மெய்யுணர்வாகின்றது. இத்தகைய அரிய நெறியை விழைந்து நாடுவோர் மிகமிகச் சிலரே; பெரும்பாலோர் நாடாத காரணத்தால் உண்மை உண்மையாகாமற் போதல் இல்லை. நாடுவோர் ஒரு சிலரே ஆயினும், அவரே அதன் சிறப்பைத் தலைமுறை தலைமுறையாக விளங்கச் செய்ய வல்லவர் ஆவர்.

இத்தகைய மெய்யுணர்வுக் கலையினை இந்நூலில் உள்ள பாடல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இவை இசைக்கலையோடு சேர்ந்து குழைந்து பாடுவோரின் உள்ளத்தை பண்படுத்தும் பான்மையுடன் உள்ளன. அறிவின் உச்சி, மெய்யுணர்வு. உணர்ச்சியின் உச்சி, பண்பட்ட நிலை, இசை இவ்வளவு சிறப்பு வாய்ந்த இரண்டும் ஒன்றுபட்ட வடிவம் வாய்ந்தவை இந்தப் பாடல்கள்.

ஆயின், ஒன்று குறிப்பிடல்வேண்டும்; இவற்றின் தமிழ்நடை பலர்க்கு மருட்சி ஊட்டக்கூடும்; வடசொற்கள் மிகுதியாக உள்ளனவே என்று பலர் தயங்கக்கூடும். வட சொற்களின் கலப்பிற்குக் காரணம் இரண்டு; ஒன்று சுவாமிகள் தொண்டுஆற்றிய காலம் அத்தகையது;மற்றொன்று வேதாந்தக்கலைவடமொழியிலேயே மிக விரிவாக வளர்ந்து அமைந்துவிட்டது. இந்த இருகாரணங்களை யும் கருதின் மருட்சி அகலும்.

இப்பாடல்களை ஆர்வத்துடன் தொகுத்து வெளியிட முன் வந்த வட ஆர்க்காடு மாவட்டத்தின் முதுபெரும்புலவர், சுவாமிகளின் மாணவர், ஓதியுணர்ந்து பிறர்க்குரைத்து ஒழுக்கத்தின் விழுப்பம் விளக்கிவரும் சான்றோர், திரு. வைத்திலிங்கம் பிள்ளை அவர்களின் பெருமுயற்சி நினைந்து நினைந்து போற்றத்தக்கதாகும்.

சென்னை வேதாந்த சங்கச் செயலாளர்

உயர்திரு M. குந்தன் பிரசாத்லால் அவர்கள்

பரந்த உலகத்தின்கண் தெய்வத்தன்மை பொருந்திய மகான்கள் சில இடங்களில் அவதரித்து ஞான ஒளியாக விளங்கி, மக்கள் இன்புற்று வாழத் தங்கள் மனத்தினாலும் வாக்கினாலும் காயத்தினாலும் பெருந்தொண்டு புரிந்திருக்கின்றார்கள்.

அத்தகைய முனிபுங்கவர்கள் கூட்டத்தில் சேர்ந்தவர் சம்பத்கிரி பிரமபீடம் ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகள்.

இவர் கைலாயகிரியின்கண் எழுந்தருளியிருந்த ஸ்ரீ நிஜாநந்த சுவாமிகளின் மாணவர்.

இவர் நீண்டகாலம் சதா நிட்டாபரராய் எழுந்தருளி இருந்து அபரோட்ச சாட்சாத்காரம் பெற்றவர். தமிழ் தெலுங்கு வடமொழி களில் அத்வைத பரமான அநேக கீர்த்தனங்களும்; செய்யுள் வடிவ நூல்களும் இயற்றியுள்ளார்கள். இசைக்கலையினும் மிக்க வல்லுநர்.

இக்கீர்த்தனங்கள் மன அமைதிபெற மிகச் சிறந்த சாதனமாய் உள்ளன என்பது வெள்ளிடை மலையாம். ஆத்மவிசாரம் செய்பவர்களுக்கு அப்பியாச காலத்தில் எழும் ஐயங்களைத் தீர்க்கத் தக்கனவாயும் உள்ளன. மெய்ப்பொருள் காணவும் ஞானக்கண் பெறவும் அனுபூதியின் மிக்க ஆசிரியரை ஒத்துள்ளன.

ஆகவே இக்கீர்த்தனங்களைப் பிழைகளின்றி அச்சுவாகனத் தேற்றி அழகிய புத்தகமாகத்தர முன்வந்துதவும் பெரியாரவர்களுக்கு எமது நன்றி.

மகாவித்வான் "வைத்தியலிங்கம் பிள்ளை" அவர்கள் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் பயனைத் தமிழ் நாட்டின் மக்கள் நன்குணர்ந்து தக்க ஆதரவளித்து ஊக்குவிக்குமாறு வேண்டுகின்றேன்.

சென்னை இந்து தியலாஜிகல்
உயர்தரப் பாடசாலை முன்னைத் தமிழாசிரியர்
வேதாந்த போதகர்
உயர்திரு ச. கந்தசாமி முதலியார் அவர்கள்

ஸ்ரீ சம்பத்கிரி பிரமபீடம் அச்சுதாநந்த சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய கீர்த்தனைகளைப் பற்றி என்போன்றவர் தம் கருத்தைத் தெரிவிப்பது, மின்மினியானது சூரியனது ஒளிப் பெருமையைத் தெரிவிக்கப் புகுவதாகும்.

ஆனால், ஆராய்ச்சியோடும், ஆர்வத்தோடும் பல நூல்களையும் தேடிக் கண்டுபிடித்து, அச்சிடும் பொறுப்பைத் தமிழகம் ஏற்றுக் கொண்டு நடத்தவில்லை. அதனால், சுவாமிகளின் கீர்த்தனங்களைத் தமிழகம் சிறிதே அறியும்; அறிந்த நான் சில கூற முன்வருவது தவறாகாது.

இலக்கிய இலக்கண வேதாந்த தருக்க போதகாசிரியர் சாது ஸ்ரீ கோ. வடிவேலு செட்டியார் அவர்களை ஆசிரியராக அடைந்தமையால் நான் பெற்ற பேறுகள் பலவாம். அவற்றுள் ஒன்று தவத்திரு அச்சுதாநந்த சுவாமிகள் அருளிய கீர்த்தனங்களைக் காதாரப் பன்முறை கேட்க நேர்ந்தது ஆகும்.

ஆசிரியர் செட்டியார் அவர்களோடு வடார்க்காடு மாவட்டத்தில் சொற்பொழிவு ஆற்றச் சென்ற பல வேதாந்த சங்கங்களில் இரவு முழுவதும் சுவாமிகளின் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டு ஆத்மாநந்தத்தில் மூழ்கியிருந்த அன்பர்கள் பலரைப் பார்த்திருக்கின்றேன்.

சென்னை வேதாந்த சங்கத்தில் நடைபெற்று வந்த ஆண்டு விழாக்கள் தோறும் தவறாமல் வந்திருந்து, அக்கீர்த்தனாம்ருதத்தை யாவரும் பருகுமாறு பாடிவந்த உயர்திரு ஆதிமூல சுவாமிகளை ஈண்டுக் குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை.

அவர்கள் இசைக்கருவி ஒன்றன் உதவியையும் எதிர்பாராது பாடத் தொடங்கி, ஒவ்வொரு கீர்த்தனங்களையும் பதம் பிரித்துச் சந்தச்சிதைவு இன்றிப் பாடவும், விரிவுரையாற்றவும், அவையகத்திருந்தோர் இசையின்பத்தையும் அனுபவித்தார்கள், அத்வைத சித்தாந்தத்தின் விழுமிய தன்மையையும் உணர்ந்து மகிழ்ந்தார்கள்.

சுமார் 30 ஆண்டுகட்கு முன்னர் இக்கீர்த்தனங்களைப் பெற விரும்பிப் பல இடங்களிலும் தேடி முடிவில் திருவண்ணாமலையில் இரண்டு பாகங்கள் வாங்கி வைத்திருக்கின்றேன். சதா படித்து மகிழ்கின்றேன்.

தமிழ் நாட்டில் இதுபோழ்து பல இசைச் சங்கங்கள் தோன்றியுள்ளன. அச்சங்கங்கள் இவ்வரிய கீர்த்தனங்களை ஆதரித்து, மக்கட்கு அத்வைதத்தின் அருமையை விளக்கி வருமாயின், விழுமிய தொண்டாற்றி வருவனவாக அறிவோரால் நன்கு மதிக்கப்படுவனவாம்.

நண்பர் திரு. வைத்தியலிங்கம் பிள்ளையவர்களும், திரு. சுந்தர உடையார் அவர்களும் இதுகாறும் வெளிவராதன வாய் இருந்த கீர்த்தனைகளையெல்லாம் பெரிதும் முயன்று பெற்று அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். ஆகவே இக்கீர்த்தனங்களைப் பெற்று ஓதியுணர்ந்து யாவரும் பயன் பெறுவார்களாக.

மகா வித்துவான் சிந்தமணிச்செல்வர்
உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள்.

பன்னூற்பதிப்பாசிரியர்
38, திருப்பூக்குடல் தெரு, பெரிய காஞ்சீபுரம்.

மக்கட்குழுவின் பகுத்தறிவுப் பண்பாட்டை விளக்குவது மொழி. வாய்மொழி கொண்டு மானிடம் பாடாது பிறப்பறுக்கும் பெருமருந்தாம் பெம்மான் திருவருளைப் பாடுவதே மொழியாற்றல் கைவரப்பெற்றதன் பயன் என்பர் மெய்ஞ்ஞானியராகிய மேதகு பெரியோர்.

'கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின் ?'

என்னும் வினா, குணமென்னுங்குன்றேறி நின்றார் கூற்றாதலுங் கருதத்தக்கது.

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை; தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுத்தானாகும் – மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்'

என்னும் ஆன்றோர் வாக்கும் மொழிப்பயனை முட்டின்றி விளக்கும்.

எனவே, பாடுவாரனைவரும் பரமனையே பாடுதலைத்தொழி லாகக்கொண்டனர் என்று கருதும் வகையில் தெய்வத்துதி நூல்கள்

தமிழ் மொழியில் மிகப்பல்கி, படித்தவர் மனத்தையும் பாமரர் மனத்தையும் பண்ணவனிடத்து ஈடுபடச்செய்து வருகின்றன. அவை பற்பல வடிவங்களில் திகழ்கின்றன.

இசைத்தமிழின்பாற்பட்டு இன்பம் பயக்கும் கவிகளில் கீர்த்தனை வடிவம் பெற்றவை சீர்த்தி பெற்றுப் பல்லாண்டுகளாய்த் தமிழரிடையே நிலவி வருகின்றன. 'அத்வைத கீர்த்தனானந்த லஹரி' என்னும் திருநூலும் அவ்வகையைச் சார்ந்ததே. இக்கீர்த்தனைத்தொகுதி சம்பத்கிரி – பிரமபீடம் – ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகளால் இயற்றப்பட்டதாதலின், இதன் பெருமை எனது சிற்றறிவைக் கொண்டு எட்டத்தகுவதன்று. இதனை மறைவெய்தாது அச்சேற்றுந்தொண்டை மேற்கொண்ட அறிஞர் மகாவித்துவான் வல்லம் வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் நன்முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றேன்!

யோகவாற்றல் பெற்று இலங்கிய பெரியார் திருவாக்காய்த் திகழும் இந்நூல் என்றும் மறையாது நின்று பயனளிக்க வழி வழி வகை செய்வது அப்பெரியார் பரம்பரையிற்றோன்றும் ஞானச்செல்வர்களின் நற்செயலாய்த் திகழ்வதாகுக!

சாது பெருமக்கள் அபிப்பிராயம்.

சென்னை வியாசர்பாடி ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் ஆனந்தாஸ்ரம சங்கமூர்த்தி
தவத்திரு. - சுவாமி முக்தானந்தா அவர்கள்

"அத்வைத கீர்த்தனானந்தலஹரி" என்னும் இந்நூல் சுமார் 60 ஆண்டுகட்கு முன்னர் தோன்றியதாகும். இது தோன்றிய காலம் தொட்டு இதன் வாயிலாக வேதமுடிபாகிய அத்வைத சித்தாந்தத்தின் உணர்வைப் பெற்று மகிழ்ந்த மக்கள் பல்லாயிரவர் ஆவர்; அவருள் மக்கட் பிறப்பின் மாட்சிமை வாய்ந்த பயனைப் பெற்றோரும் பல்லோராவர்.

இந்நூல் இனிய கீர்த்தன வடிவமாக அமைந்துள்ளமையின், புலமைப்பெருக்கம் பெறாதார்க்கும் பயன்பட்டு வருவதோடு, இசை பயின்றுள்ள மக்கட்கும், இசையார்வத்துடன் பயிலும் மக்கட்கும் இசைவகையால் மட்டுமன்றி, அத்வைத உணர்ச்சி வகையாலும் குரு உபதேசம் போன்று பயன்பட்டு வருகின்றது. இனி எதிர்காலத்தும் உலகுள்ளவரையும் மக்கட்குத் தமது பிறவிப் பேறு பெறுவதற்கு உற்ற துணையாய் விளங்கிவரும் என்பது ஒருதலையாம்.

இத்தகைய நூலை அருளிய ஆசிரியர், சம்பத்கிரி பிரமபீடம் உயர்தவ - அச்சுதானந்த சுவாமிகளாவார்கள்; இவர் வடமொழி, தென்மொழி, தெலுங்கு ஆகிய மொழிகள் நன்கு கைவரப் பெற்றவர்; இம் மூன்று மொழிகளிலும் பேசி வழங்கும் ஆற்றல் உடையவர்; தமிழ் தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் அத்வைத பரமான நூற்றுக்கணக்கான கீர்த்தனங்கள் இயற்றியருளியதன்றிப், பல செய்யுள் வடிவ நூல்களும் இயற்றியுள்ளனர். இசைக்கலையினும் மிக்க வல்லுநர்.

இந்நூலின்கண் அமைந்துள்ள விழுமிய அத்வைத சித்தாந்தக் கருத்துக்களைக் கண்டு, நம் தமிழ்நாடேயன்றிக் கன்னடமும்

களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும் ஆகிய நாடுகளும் போற்றி வருகின்றன.

இவர் முதலில் அடயோகப் பயிற்சியில் தேர்ச்சியுற்று, உயர எழுதல், இறங்கி வருதல் முதலிய சித்திகளும் பெற்றிருந்தனர். எனத் தக்கார் வாயிலாகத் தெரிகின்றது. இதற்குச் சான்றாகத், தாம் விதேக கைவல்யம் பெற்றபோது முன்னரே தம் மாணவர் களுக்கு நாளும் நாழிகையும் அறிவித்துக் குறித்தகாலம் சிறிதும் பிழையாது மகா சமாதி அடைந்தனர்.

தத்துவ ஞானத்தின் வாயிலாக அன்றி வீடு பெறுதற்கு இயலாது என்றும், சரியாதி மூன்றும் ஞானம் பெறுதற்கு உரிய சாதனமேயாம் என்றும், அறிவு நூன்முகத்தால் உணர்ந்த பின்னரே, தாம் பயின்றுவந்த யோகமார்க்கத்தைக் கைவிட்டுவிட்டு வடார்க்காடு மாவட்டத்தில் கைலாய கிரியின்கண் பிரமநிஷ்டானு பூதிச் செல்வராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ நிஜாநந்த சுவாமிகள் இடத்து மகாவாக்கியோபதேசம் பெற்று, நீண்டகாலம் நிருவிகற்ப சமாதியில் நிலைத்திருந்து ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு ஆத்மோபதேசம் செய்தும், பிற்காலக் காமிகட்கும் பயன்படுதல் வேண்டும் என்னும் கருணைப் பெருக்கால் தமது அனுபவத்திறங்களை எல்லாம் இந்நூலின்கண் நன்கு அமைத்தும் இயற்றியுள்ளார்கள்.

இக் கீர்த்தனங்களுள் பெரும் பகுதி பல்லாண்டுகட்கு முன்னரேயே அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளனவேனும், அவை, அச்சுப்பிழைகண் மிக்கனவாய் உள்ளமையின், இவரது மாணவராகிய வித்துவான் வல்லம் - வைத்தியலிங்கம் பிள்ளை யவர்கள் அப்பிழைகளை யெல்லாம் தக்காருடன் இருந்து ஆராய்ந்து அகற்றி, இதுகாறும் அச்சிடாது இருந்த கீர்த்தனங்களையும் ஒன்று சேர்த்து, உயர்ந்த காகிதத்தில் பதிப்பித்து, ஒரே புத்தகமாய் இதுபோழ்து வெளியிடுகின்றனர்.

இச்சீரிய நூலை யாவரும் அன்புடன் பெற்றுக் கற்றுப் பேரின்ப வாழ்வைப் பெறுவார்களென்று பெரிதும் நம்புகின்றனம்.

கைலாயகிரி பிரமபீடம் ஸ்ரீ நிஜாநந்த சுவாமிகள் மரபு ஸ்ரீ சிதாநந்த சுவாமிகள் மாணவர் கீழைப்பூண்டி

தவத்திரு அருளாநந்த சுவாமிகள்

"அத்வைத கீர்த்தனானந்தலஹரி" என்னும் இந்நூல், இனிய கீர்த்தனங்களால் ஆக்கப்பெற்றதொன்றாம். இது, இசை நலங்கள் யாவும் செவ்வனே அமையப்பெற்றுள்ளமையின் இசைக் கலை வல்லார்க்கு என்றும் நல்விருந்து போல்வதாம். மற்றைப் பண்டித பாமர மக்கள் யாவராலும் பொன்னேபோற் போற்றப்பட்டு வருவதாம். பிற மொழியாளரும் பெருவிருப்புடன் தத்தம் மொழி களில் எழுதிக் கற்கும் ஏற்றம் வாய்ந்ததாம். பிரபல சுருதிகளின் கருத்துக்களை எல்லாம் தன்னகத்தே கொண்டு, அத்வைத சித்தாந் தத்தின் விழுமிய தன்மையை எளிய நடையில் யாவருக்கும் விளக்கி வரும் ஏற்றம் வாய்ந்ததாம். இத்தகைய அரும்பெரும் நூலை இயற்றி அருளியவர், நம் தமிழகம் செய்த தவப்பயனாகத் தோன்றிய சம்பத்கிரி பிரமபீடம் ஸ்ரீ அச்சுதாநந்த சுவாமிகளாவர். இவர், தமிழ், தெலுங்கு, வடமொழிகளில் மிகவும் பாண்டித்தியம் பெற்றவர். இசைக்கலையினும் வல்லுநர். இவர் ஒருசமயம் சத்திரவாடி என்னும் கிராமத்தின் அண்மையிலுள்ள ஓர் குன்றின்கண், இந்நூலகத்து உள்ள கீர்த்தனைகளுள் ஒன்றைப் பாடத்தொடங்கியபோது இன்னோசைமயமான இவரது கண்டத்தொனியாலும், இசை நலத்தாலும் ஆண்டுப் பரவலாய் மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் யாவும் ஒன்றாகத் திரண்டு, எதிரே வந்து நின்று, நீண்டநேரம் இசை இன்பத்தை அனுபவித்து, பாடி முடித்தவுடன் செல்வன ஆயின. அதுகண்டு உடனிருந்த மாணவரும்; மற்றையோரும், அடிகளின் இசைஞானத் திறத்தைக் கண்டு என்றும் எய்தா இறும்பூதெய்தினர். ஆரம்பத்தில் இவர் யோகாப்பியாசத்தில் தேர்ச்சி பெற்றுச் சில சித்திகளும் கைவரப்பெற்றனர். இங்ஙனம் இருந்து வருங்கால், பண்டைய நல்வினைப் பயத்தானும், அறிவு நூற் பயிற்சியானும் பெறுதற்கரிய மக்கட் பிறப்பைப் பெற்றூர்

ஒவ்வொருவரும் சர்வ துக்க நிவிர்த்தி பரமாநந்த பிராப்தி வடிவ வீடுபேறு எய்தப் பெறுதல் இன்றியாக் கடமையென்பது தோன்றப் பெற்று, அவ்வீடுபேறு, தத்துவ ஞானத்தின் வாயிலாக அன்றிப் பிறவாற்றாற் பெறுதற் கியலாதென்பது நன்கு உணர்ந்து, வடார்க்காடு மாவட்டத்துள்ள கைலாயகிரியின்கண் ஞானபானுவாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ நிஜாநந்த சுவாமிகளைச் சரணடைந்து, அவரால் மகாவாக்கிய உபதேசம் செய்யப் பெற்று, நீண்டகாலம் நிருவிகற்ப சமாதியில் நிலைத்திருந்து, தன்னையும் தனக்காதாரத் தலைவனையுங் கண்டு, அத்தலைவனே தானாய், அகண்டாகார சிவ சொரூபமாய் விளங்குவாராயினர். பின்னர் தாம் பெற்றபேறு இவ் வையகமும் பெறுக என்னும் அருட்பெருக்கால், பிறப்பிறப்பால் எய்தும் பிழையும், இடைக்காலத் தெய்தும் இன்னலும், கருப்பாசயத்திற் கருதியிருந்த குறிக்கோளும் ஒவ்வொருவருள்ளத்தும் பசுமரத்தாணி போற் பதியுமாறு அறிவுறுத்திப், பிறவாப் பேறு பெறுதற்குரிய சாதனங்களையெல்லாம் இந்நூலின் கண் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளனர். ஆகவே, இந்நூலைச் சற்குரு சந்நிதானத்தில் ஓதியுணர்ந்து, உணர்ந்தவாறு ஒழுகும் ஒட்பம் உடையார் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை என்பது, எமது அபிப்பிராயமாம்.

கார்க்கூர் ஸ்ரீ இராமாச்சிரமம்
தவத்திரு - சிவராஜாநந்த சுவாமிகள்

மக்கள் யாக்கையைப்பெற்றார் ஒவ்வொருவரும் சர்வதுக்க நிவிர்த்தியும் பரமாநந்தப் பிராப்தியும் பெறுதல் இன்றியமையாக் கடமையாம். அவை, தன்னை(ஆன்மாவை)ச் சிவம்என்றுஉணர்தற்கு ஏதுவாகிய தத்துவ ஞானத்தின் வாயிலாக அன்றிப் பிறவாற்றாற் பெறுதற்கியலாது என்பது ஒரு தலையாம். அஞ்ஞானம், சந்தேகம், விபரீதம் இன்றிய அவ் அபரோட்ச ஞானம், ஜீவன்முக்தி விலட்சணாநந்தம் பெற்று விளங்கும் சற்குரு மூர்த்தியின் சுருதி யுக்தி அனுபவ பூர்வமான உபதேச வாக்கியங்களாலே பெறுதல் வேண்டும் என்பது மறுக்க முடியாத சித்தாந்தமாம். ஆகவே, அத்தகைய குரு மூர்த்திகளுள் ஒருவரும், அபரோட்ச சாட்சாத்காரம் பெற்றவரும் வேலூர் வட்டத்தைச் சேர்ந்த வல்லம் கிராமத்தின்கண் விதேக கைவல்யம் அடைந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளவருமாகிய சம்பத்கிரி பிரமபீடம் ஸ்ரீஅச்சுதாநந்த சுவாமிகள், தாம் பெற்ற சுவானுபவ பேரின்பப் பேற்றை முமுட்சுக்களாய் உள்ள யாவரும் பெறுதல் வேண்டும் என்னும் கருணைப் பெருக்கால், பிரமாத்ம ஐக்கிய அத்வைத ஞான சாதனங்களை எல்லாம் நன்கு அமைத்து, இனிய கீர்த்தன வடிவமான இந்நூலை இயற்றி அளித்துள்ளார்கள். காலம் செல்லச் செல்ல, இந்நூல், அச்சுப் பிழைகள் மிக மலியப் பெற்றதாயும், கிடைத்தற்கு அரியதாயும் ஆய்விட்டமையின், சுவாமிகளின் இறுதிக்கால மாணவரும், ஆலய ஸ்தாபகரும், பரிபாலனம் செய்து வருபவரும் ஆகிய வித்துவான் வல்லம் வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, இந்நூலின்கண் உள்ள அச்சுப் பிழைகளை எல்லாம் ஆராய்ந்து அகற்றி, உயர்ந்த கிளேசு காகிதத்தில் திருத்தமான பதிப்பாக அச்சிட்டு வெளியிட்டு உள்ளார்கள். சுவானுபவத்திருவாக்கு ஆகிய இந்நூல், சகல வேதார்த்தங்களையும் எளிய நடையில் நன்கு விளக்குவதாய் உள்ளமையால், வேதாந்த விசாரத்தில் சிரத்தை உள்ள ஆஸ்திகர் யாவரும் மிக்க ஆதரவுடன் பெற்று, ஓதி உணர்ந்து, உணர்ந்தவாறு ஒழுகிப், பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவார்கள் என்று பெரிதும் நம்புகின்றேன்.

குளப்பாக்கம் ஸ்ரீ நாராயண தேசிகர் நிலயம்

தவத்திரு - சுவாமி அருணகிரிநாதரவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பாக்கள்

சம்பத் கிரியச்சு தானந்தன் சற்குருவாம்
நம்ப னிஜாநந்த னல்லருளால் — உம்பருக்கும்
எட்டாப் பரம்பொருளை யெட்டிப் பிடித்தபிரான்
அட்டாங்க யோகத்தி னால்

சித்தியொடு முத்திநிலை தேர்ந்து தெளிவெய்தும்
அத்தனச்சு தானந்த னன்புருவன் — இத்தரையில்
பாமரரைப் போலிருந்தோன் பண்டிதரும் காணரிய
ஊமரென வின்பமுற் றோன்

பன்மார்க்கத் தோரும் படித்துக் கடைத்தேறச்
சன்மார்க்க தர்ப்பணநூ றந்ததன்றி — நன்மார்க்க
பத்திரசஞ் சொட்டுமின்பப் பாக்களினா லன்பருக்கு
முத்திநெறி காட்டு முனி

முனியச்சு தானந்தன் முக்கால மூங்கண்
டினிதிங் கெடுத்துரைத்த வெம்மான் — முனிவின்றி
நஞ்சமுத முண்பித்த நன்றிகெட்ட மாக்களையுந்
துஞ்சாமற் பாதுகாத் தோன்

உண்டநஞ்சு தன்னா லுயிர்க்கிறுதி நேராமன்
மண்டுமதன் வேகத்தை மாய்த்தொழித்தே — எண்டிசையுங்
கண்டு தொழுது கறைமிடற்றோன் போலுமெனக்
கொண்டாடு மச்சுதனெங் கோன்

மெய்யுணர்வு மெய்த்தவமு மேவியனு பூதிபெற்ற
ஐயனெங்க ளச்சுதா னந்தமுனி — செய்தளித்த
அத்துவிதக் கீர்த்தனா னந்த லஹரிதனைச்
சுத்தபதிப் பாகத் தொகுத்து

தந்த பெருந்தகை சான்ருேர்வாழ் வல்லநகா
வந்துதித்த சித்த மருத்துவனும் – மந்திர
மூர்த்தி யுடன்பிறந்தோன் முத்தமிழும் வேதாந்த
சாத்திரமுங் கற்ருேன் தக

நாக நதிக்கரையந் நல்லவல்ல மாநகரில்
யோகத் தமர்ந்தாங் கொடுக்கமுற்றுத் – தேகம்
அழியாத வச்சுதா நந்தற்குக் கோவில்
ஒழியாது கட்டிமுடித் தோன்

கோவிலின் பாங்கர் குருவச்சு தானந்தத்
தேவி னிலயமொன்று செய்வித்தே – யாவருக்கும்
இன்னமுத மான விருசெவிக்குச் சொல்லமுதும்
அன்னமு மள்ளியிடு வான்

வீழ்நாள் படாதவண மேதினியி ளுடோறும்
வாழ்நாண் முழுதுநன் மாணவருக் – காழ்கடனீர்
உப்பகற்றி நன்னீ ருதவுமுகில் போற்பாடம்
செப்பும் புலவன் றெரிந்து

தேனுஞ் சருக்கரையுந் தித்திக்கு முக்கனியும்
ஆன்பாலுஞ் சேர்த்தே யருந்துவபோல் – யான்காணச்
சொற்பெருக் காற்றியின்பந் துய்க்கவைக்குஞ் சொற்செல்வன்
கற்பகமாம் வைத்தியலிங் கம்

மைத்திரியு மன்பு மகிழ்முதிதை யும்வடிவாம்
வைத்தியலிங் கம்பிள்ளை வாழ்கவே – கைத்துணையும்
உச்சிமேற் கூப்பியகத் துள்வைத் திறைஞ்சுமெங்கள்
அச்சுதா நந்தனரு ளால்.

நன்றியுரை

அறப்பெருஞ் செல்வர்
உயர்திரு - அ. அண்ணுமலை முதலியாரவர்கள்

இப்பெருமகனார், வடார்க்காடு மாவட்டத்தின் உட்கிடையாய வாலாஜா வட்டத்தைச் சேர்ந்த புதூரின்கண் வாழ்ந்து வருபவர்; உயர்குடிப் பிறப்பினர்; கூரிய அறிவினர்; சீரிய ஒழுக்கத்தவர்; இனிய சொற்செல்வர்; சாந்த சீலர்; தயாள மனத்தர்; பாத்துண்ணும் பண்பினர்; ஈத்துவக்கும் இன்பத்தினர். கற்றோர் மாட்டுக் கழிபேரன்பினர்; நல்லோரின் நன்மதிப்பிற்குரியவர்; தமது, ஆகூழ் பயத்தானும், அயரா முயற்சியானும் பெருஞ்செல்வம் ஈட்டியவர். "தாளாற்றித்தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு" "அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால் அற்குப ஆங்கே செயல்" என்னும் பொதுமறை அறிவுரைகளைக் குறிக்கோளாகக் கொண்டு, தாம் பெற்றுள்ள செல்வத்தை, இன்றியமையா அறப்பணிகளின் வாயிலாகப் பொதுமக்கள் பலர்க்கும் ஊருணிபோன்று பயன்படச்செய்து வந்தவர்: வருகின்றவர். இவரது, ஒப்புரவின் உயர்வு, கொடைப் பெருக்கம், நற்குண நிறைவு ஆகியவற்றைக் குறித்து, உரைநடையானும், செய்யுண் முகத்தானும் புலவர் பெருமக்கள் பலர் பாராட்டிக் கூறியன யாவும் "சிறப்புரைக் கொத்து" என்னும் பெயருடன் வெளிவரப் பெற்றவர். எமது சற்குரு மூர்த்திகளாகிய ஸ்ரீ அச்சுதாநந்த அடிகளின் சமாதி ஆலயத்தை அடுத்துப் புனைவித்துள்ள அடிகளின் பெயரமைந்த கட்டிடத்திற்கும், அதன் திறப்புவிழாவிற்கும் போதிய பொருண் முழுதும் நன்கொடையாக நல்கி முற்றுவித்தவர். ஒவ்வொரு ஆண்டு விழாவின்போதும் பேருதவி செய்து வருபவர்.

இவையே யன்றி இதுபோழ்து இந்நூல் அச்சிடுதற்கு வேண்டிய பொருள் முழுவதும் உள்ளங்கனிந்து உபகரித்தும், ஊக்குவித்தும் வெளிவரச் செய்தவர். இவ்வாறு கைம்மாறு கருதாது பேருதவி செய்துவரும் இப் பெருந்தகையார்க்கு, எமது அன்பு கலந்த நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்வதேயன்றி வேறு யாது இயற்றவல்லேம். இவ்வள்ளற் பெருமான், இனியும், பல அறப்பணிகள் ஆற்றுதற்கு உரியராய், நோயற்ற யாக்கை, குறைவற்ற செல்வம், வாழ்நாட் பெருக்கம் ஆகியவைகளைச் செவ்வனே பெற அருள் புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனை வணங்கியும், வாழ்த்தியும் வேண்டிக் கொள்ளா நின்றனம்.

இங்ஙனம் :

வைத்தியலிங்கம் பிள்ளை.

பதிப்புரை

அத்வைத கீர்த்தனானந்தலஹரி என்னும் இந் நூலின்கண் உள்ள கீர்த்தனங்களுள், பெரும் பகுதி பல் லாண்டுகட்கு முன்னரேயே மூன்று பாகங்களாக வெளி வரப்பெற்று, அறிஞர் பெருமக்களால் பொன்னேபோலும் போற்றப்பட்டு வந்தது யாவரும் அறிந்த தொன்றும். ஆயினும், அவை, அச்சுப் பிழைகள் மிக்கனவாய், உண் மைப் பொருள் காண விழையும் முமூட்சுக்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடு உறுவித்து வந்தமையின், அவற்றை யெல்லாம் சில ஆன்றோர்களின் முன்னிலையிற் பிழை யறத் திருத்தம் செய்து, அவற்றுடன், இதுகாறும் அச் சிடாதிருந்த கீர்த்தனங்கள், அனுபவானந்தக் கண்ணி கள், அடிகளின் வரலாறு ஆகியவைகளையும் ஒன்று சேர்த்து, உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் திருந்திய பதிப் பாகக் கீர்த்தனங்களை மட்டும் அகரவரிசையில் அமைத்து அச்சிட்டு, ஒரே புத்தகமாய், அடிகளாரின் 54-வது குரு பூஜைதினமாகிய 29-11-1956ல் வெளியிடப்படுகின்றன. சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ மோட்ச விருப்பமுடைய யாவரும் இந்நூலை ஆதரித்துப் பெற்று ஓதியுணர்ந்து பிறவிப் பயன் பெறுவார்களாக.

கிடைக்குமிடம் :

வித்துவான் வைத்தியலிங்கம் பிள்ளை,
ஸ்ரீ அச்சுதாநந்த நிலையம்,
வல்லம், கண்ணமங்கலம் போஸ்டு.
(வ. ஆ. ஜி.)

ஸ்ரீ கணேசர் பிரஸ்,
பஜார் வீதி, ஆர்க்காடு. N.A.

கே. வி. பிரஸ் புக்டிபோ,
வேலூர்.

அறப்பெருஞ் செல்வர் - புதூர்

உயர்திரு. அ. அண்ணாமலை முதலியாரவர்கள்.

உ

ஓம் தத்சத்

ஸ்ரீ அச்சுதாநந்த அடிகளின் வரலாறு.

மகான் சம்பத்கிரி பிரமபீடம் ஸ்ரீஅச்சுதாநந்த அடிகள் வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த போளூரின்கண் பலிஜ நாயுடுமார் மரபிற் பிறந்தனர்; அப்பாய் நாயுடு என்னும் பிள்ளைப் பெயரினர்; இவர் பிறந்த காலக் குறிப்பும் பெற்றோர்களின் பெயரும் தெரிந்து கோடற் கியலவில்லை. ஆயினும், அடிகள் விதேக முக்தி யடைந்த போது வந்திருந்த சுற்றத்தவருள் ஒருவர் அடிகளுக்கு இதுபோழ்து வயது ஐம்பத்து மூன்றென்று கூறியது கொண்டு கணக்கிட்டுப் பார்க்கின், கி. பி. 1850 சாதாரண ஆண்டிற் பிறந்தவரெனத் தெரிகின்றது.

அடிகள் குழவிப் பருவத்திலேயே அருமைத்தந்தையாரை இழந்து அன்னையாரின் ஆதரவில் வளர்ந்தனர்; காலங்கடந்தே பள்ளியில் வைக்கப்பட்டனர்; ஆயினும், பண்டைய வாசனை வயத்தால் ஆசிரியரும் வியக்கும் வண்ணம் தமிழ் தெலுங்கு ஆகிய இரு மொழிகளையும் நன்கு கற்றுத்தேர்ந்தனர்; அத்தேர்ச்சியின் பயத்தால் கூரிய அறிவு, சீரிய வொழுக்கம், நேரிய பண்பு, இடைவிடா இராம பத்தி முதலிய உயர்நலங்களெல்லாம் ஒருங்கே யமையப்பெற்றனர்; இவ்விழுமிய நிலையைக்காணுந்தோறும் ஆர்வமிக்க அன்னையார் கழி பேருவகை எய்தி வந்தனர். ஆயினும், தம்மருமை மகனார்எதிர்காலத்து எய்த இருந்தபேரின்ப வாழ்க்கையையுங் கண்டுகளிக்கும் பேறு பெறாராய் இடைக்காலத்தேயே இறைவன் திருவடியடைந்தனர். அது கண்ட அடிகள் தம்மைப்பெற்று வளர்க்கும் பெருந்தவஞ்சான்ற அன்னையாரின் பிரிவாற்றாது பெரிதும் வருந்தினரேனும், உலகியல் உணர்

வால் ஒருவாறு ஆறுதலடைந்து, அப்போளூரின் கண்ணேயேபள்ளி யாசிரியராய் அமர்ந்து, அதன் வாயிலாகப் பெறக்கிடந்த சிற்றூதியத் தைக்கொண்டு வாழ்க்கை நடாத்தி வந்தனர்.

அக்காலத்து அவர் மீட்டும் தக்க புலவர் பெருமக்களிடத்துப் பலஇலக்கிய இலக்கணங்களை முறையே ஓதியுணர்ந்து புலமைப் பெருக்கம் பெற்றனர். போதிய வடமொழியுங் கற்றனர். இசைக்கலை யினும் வல்லுநராயினர். இந்நிலைமை யெய்திய பின்னர் அவ்வாசிரியர் பதவியையும்கைவிட்டு, பஜனை மந்திரமொன்று நிறுவி, இராமபிரானை எழுந்தருளுவித்து வழிபாடு செய்து வந்தனர்; அப்பெருமான் மீது தமிழ் தெலுங்கு ஆகிய இருமொழிகளினும் பல நூற்றுக் கணக்கான கீர்த்தனங்களும் தோத்திரப் பாக்களும் இயற்றி யருளினர்; அன்றி யும், பிரகலாத சரித்திரம், துருவ சரித்திரம், சக்குபாய் சரித்திரம் முதலிய பல சரித்திரங்கள் இயற்றி யாவருள்ளங்களையும் கவரத்தக்க கதாகாலட்சேபகராய் விளங்கி வந்தனர்.

அடிகள் அக்காலத்து வேலமாநகரை அடுத்துள்ள கஸ்பாவின் கண், கல்வி கேள்விகளின் மிக்கவராய், கவிதா சாமர்த்தியம் வாய்ந்த வராய், தெய்வத் திருவருள் கைவந்தவராய், மிகப் பிரசித்தி பெற் றிருந்த வேங்கடகிருஷ்ண தாசர் என்னும் வைணவப்பெரியாரைத் தரிசிக்க விரும்பி, ஒருநாள் சென்றுகண்டனர். அப்பெரியார் இவரைக் கண்டவுடனே மலர்ந்த முகத்துடன் வரவேற்று, இன்மொழி கூறி, இருக்கை யளித்து, சின்னாள் உடனிருக்கச் செய்து அளவளாவி வருங்கால், இவரது மாசற்ற மனம், தேசுற்ற வடிவம், கரையிகந்த கல்வி, புலமைப் பெருக்கம், கவிதை யியற்றுங் கம்பீரம், ஆய்வு மிக்க அறிவு, வாக்கு வன்மை, இசைக்கலைத் தேற்றம், இராமபத்தி யாதிய வற்றைக் கண்டு கண்டு களிப்பும் வியப்பும் கையிகப்பப் பெற்று, ஒரு நாள் தம்மருகிருக்கச்செய்து, 'அன்புமிக்க ஐய! எம்முள்ளத்தின் கண் இகவாது எழுந்தருளி யுள்ள திருமகள் கேள்வன் திருவருள் உணர்த்திய வண்ணம், இன்று முதல் உமக்கு "அச்சுத தாசர்" என் னும் அருமைத் திருநாமம் அமைவதாக' என, உள்ளத் தெழுந்த

உவகையோடும் உரைத்தருளினர். அன்று முதல் அத்தெய்வத் திருப்பெயர் அமையப்பெற்ற அடிகள், அப்பெரியாரிடத்துப் பிரியா விடைபெற்றுப் போளூருக்கு வந்து வாழ்க்கை நடாத்தி வந்தனர்.

இங்ஙனம் சில ஆண்டுகள் கழிந்தனவாக, ஒரு நாள் தமது சுற்றத்தவருள் உரிமை வாய்ந்த ஒரு சிலர் அடிகளை யணுகி வேண்டுகோள் செய்து கொண்ட வண்ணம், ஆரணி வட்டத்தைச் சேர்ந்த கஸ்தம்பாடியின்கண், ஒத்த மரபில் உயரிய குடியிற் பிறந்து,நற்குண நிறைவும் பொற்புறு வடிவும் பூத்து விளங்கியிருந்த "தாயம்மை" என்னும் இளங்கன்னிகையை வாழ்க்கைத் துணைவியாக மணந்து கொண்டு அம் மாதுலர் இல்லத்தின் கண்ணேயே வைகி வந்தனர்.

அக்காலத்துப் போளூர் வட்டத்தைச் சேர்ந்த பொத்தரை என்னும் கிராமத்தின்கண், வெங்கம்மையார் என்னும் ஒருவர், சீரிய யோகானுபவச் செல்வியராய் உள்ளனர் எனக் கேள்வியுற்று ஒரு நாள் சென்று சந்தித்தனர். இவர் வருகையைக் கண்ட அப் பீடு சான்ற பெருமாட்டியார், அன்னையினும் மிக்க ஆர்வத்தினராய் வரவேற்று, உரையாட்டயர்ந்து உவகை யெய்துவாராயினர். அடிகள் ஆண்டுச்சின்னுள் வைகி அவரால் சீரிய யோகாப்பியாசத்திற் குரிய நெறிநிலைகள் எல்லாம் நன்கு உபதேசிக்கப்பெற்று, மீண்டு மாதுலர் இல்லத்திற்கு வந்து ஓர் தனித்த அறையின்கண் இடைவிடாது அப்பியசித்து வந்தனர். பயிற்சியின் மிகுதிப்பாட்டால் சில திங்கள்கட்குள்ளாகவே முறையே ஆறடி உயரம் மேல் எழவும், எறியவாறே இறங்கி வரவும் கைவரப் பெற்றனர். ஆயினும், மீட்டும் இடையறுது பயின்று வந்தனர்.

அக்காலத்து அடிகளின் மாண்பு மிக்க மனைவியார் ஒரு நன்ஞளின் முதுக்குறைவு எய்தினர். அதுகண்ட பெற்றோர்கள் ஒவ்வொரு நாளும் செய்தற்குரிய கடமைகளைச் செவ்வனே செய்து வந்து, ஒன்பதாவது நாளின் மங்கல நீராட்டி, அன்றிரவே கணவனோடு உடனுறைவு செய்வித்தல் வேண்டும் என்னும் கருத்தினராய்

அன்று முன்னிரவிற் சில சடங்குகளைச் செய்து கொண்டிருந்தனர். அடிகள் அன்றும் வழக்கம்போல அறைக்குட் சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு அப்பியசித்துக் கொண்டிருந்தனர். அந்நிலையில் சடங்குகள் யாவும் முற்றுப் பெற்றமையின், இவரையும் உடனிருக்கச் செய்து சாந்தி செய்விக்குங் கருத்தினராய், அறைக் கண் வந்து அழைக்கத் தொடங்கினர். அதுபோழ்து அடிகள் மேலெழுந்து இறங்கி வந்து கொண்டிருந்தமையின், பதிலிறுத்தற் கியலாராக, மீட்டும் கதவைத் தட்டித் தட்டிப் பன்முறை யழைத்தும் பதிலிறுக்கப் பெறாமையால் மாதுலர் முதலானோர் பெரிதும் ஐயுற்று, மிக்க பரபரப்புடன் வாய்தற் காலின் ஓர்புறத்துச் சுவரை யிடித்துத் தாழைத் திறக்கத் தொடங்கினர். ஆண்டு நிகழ்ந்த ஆரவாரத்தால் அடிகள் சித்தசாஞ்சல்யம் அடைய நேர்ந்தமையின் முறை பிறழப் பட்டுத் திட்டெனக்கீழே வீழ்த்தப்பட்டனர். அதனால் வெளிப்படற் குரிய வாயுவனைத்தும் பீஜத்தின்கண் இறங்கப்பெற்றுமிகவும்பருத்து தாங்கற்கியலா உபத்திரவத்தால்தத்தளித்து, வெம்மை மிக்க வெயில் வாய்ப் பட்ட புழுப்போல் துடிதுடித்துக் கோவெனக் கதறத்தொடங் கினர். அவ்வளவில் தாழுந்திறக்கப்பட்டு விட்டது. யாவரும் அடிகளின் துன்பப் பெருக்கைக்கண்டு தாமுந் துன்புற்றனர். அன்றி அவரது துன்பொழிவிக்குமாறு ஒன்றும் தோன்றாதவர்களாய்த் திகைத்து நின்றனர். அதுகண்ட அடிகள், இஞ்ஞான்றே பொதத்தரைக்குச்சென்று, அம்மையாரை அழைத்து வந்தாலன்றி உய்யுமாறில்லை என்றுரைப்ப, மாதுலர் அஞ்ஞான்றே தக்கார் ஒருவரை அனுப்பினர். அவர் காற்றினுங் கடுகிச்சென்று அம்மையாரைக்கண்டு ஈண்டு நிகழ்ந்தன யாவுங்கூற, அவர் அக்கணமே புறப்பட்டுக் கஸ்தம் பாடிக்கு வந்து யாவரையும் அப்புறப் படுத்திவிட்டு, மீட்டும் மேலெழுந்து இறங்கிவருவாயாக வெனக் கட்டளையிட்டனர், அடிகள் அங்ஙனமே ஏறியிறங்கியபோழ்து வாயுவனைத்தும் வெளிப்பட்டு விட்டமையின், உபாதியாவும் ஒழியப்பெற்று, அம்மையாரின் அடிவணங்கி நின்றனர். அவர், "அருமை மகனே! வாழ்வாயாக; இனி இத்தகைய இடையூற்றுக்கு இடம் பெறாவாறு மிக்க விழிப்புடன் பயின்று வருவாயாக" என அறிவுறுத்திவிட்டு அஞ்ஞான்றே

பொத்தரைக்குச் சென்றுவிட்டனர்; அன்று நடாத்துவிக்கக் கருதியிருந்த குறிக்கோளும் நடவாதாயிற்று. அடிகளும் அவ்வியோகப் பயிற்சியை அன்று முதல் அறவே கைவிட்டு விட்டனர்.

இங்ஙனம் சில திங்கள் கழிந்தனவாக, அடிகள் ஒருநாள் தனித்திருந்தபோழ்து கடந்த பிறப்புக்களிற் பயன்குறியாது செய்து வந்த நல்வினைப் பெருக்கானும், ஆன்றோர் கூட்டுறவானும், நான்யார்? எனக்குத் தலைவன்யார்? பல்வேறு பிறப்புக்களினும் பிறத்தலும் இறத்தலுமாகி உழல்வானேன்? இஃது ஒழியுமாறு எங்ஙனம்? என்னும் விசாரந்தோன்றித் தாம் பயின்றுவந்த அறிவு நூன் முகத்தாற் பிறவிக்கு வித்தா யுள்ளது வினையே யென்றும், அவ்வினை தனது எதார்த்த வடிவாய ஆத்மசொரூபத்தை அறிவதாய தத்துவ ஞானத்தானன்றிப் பிறவாற்றான் ஒழியுமாறில்லை யென்றும், அவ்வாத்ம விளக்கம் சற்குரு கடாட்சத்தானே பெறுதல் வேண்டுமென்றும் நன்குணர்ந்து, அன்றுமுதற் பல ஆசிரியன்மார்களை அடுத்து விண்ணப்பித்தும், எவரானும் அறிவிக்கப்படாராய், பெரிதும் வருந்தியிருந்தனர் அப்போதுமேற்கூறிய மாவட்டத்தைச்சேர்ந்தகடாமூரின் கண் கைலாயகிரியின்மீது காட்சிக் கெளியராய், கருணை நிலையமாய், திடஞானச் செல்வராய் ஓர்மகான் உள்ளனர் எனக் கேள்வியுற்றுக் கேட்ட அஞ்ஞான்றே புறப்பட்டு இரவுபகல் எனக்கருதாது விரைந்து சென்று அக்கடாமூரை அடைந்து கைலாய கிரியின்மீதேறி ஆண்டு அடியவர் குழாஞ்சூழ எழுந்தருளியிருந்த ஆசிரியர் பெருமானைக் கண்டு, ஆனந்த பரவசராய், அவரது திருவடிகளில் அடியற்ற பனைபோல் வீழ்ந்து வணங்கி, எழுந்து நின்று, இருகரங்களையும் சிரமேற்குவித்து, "எந்தையே! எளியேனை ஆட்கொண்டு உய்வித்தல் வேண்டும்" எனப் பெரிதும் வேண்டிக்கொண்டனர். இவரது அடங்கிய விருத்தியையும், அதிதீவிரதரப் பக்குவத்தையும் கண்ட ஆசிரியர், அருள்கனிந்த நோக்கத்துடன் ஆசிகூறி அமருமாறு கட்டளையிட்டனர்.

அடிகள் ஆசிரியரைத் தரிசித்த அந்நாள் நிறையுவாவாயினமையின், அன்றைய வழிபாட்டின் நிமித்தம் வந்து குழுமியிருந்த

மாணவர்கள், இவரது வீரவைணவ வேடத்தைக் கண்டு சிறிது அருவருப்புறுவது கண்ட குருநாதர், அக்கிரியினின்று கீழே யிறங்கிவிடுமாறு குறிப்பித்தனர். அக்குறிப்புணர்ந்த இவர், அவ்வாறே யிறங்கி வந்து ஓர்பால் எய்தியிருந்தனர். சிறிது போழ்தில் ஆசிரியரும் வந்து அம்மலையடிவாரத்து ஓர்மறைவிடத்து இருந்த விநாயகராலயத்திற் கழைத்துக் கொண்டுபோய், 'அன்பனே! நீயாவன்? யாண்டுள்ளவன்? யாதுகருதி எம்பால் வந்தனை'? எனவினவ? " எம்பெருமானே! அடியேன் இம் மாவட்டத்தைச் சேர்ந்த போளூரின்கண் உள்ளவன் என்பெயர் அச்சுதன்; எனது ஆத்மசொரூபத்தை யறியவேண்டி, இதுகாறும் பதினைந்து ஆசிரியன்மார்களை யடைந்து வேண்டிக் கொண்டேன். எவரானும் அறிவிக்கப் பட்டிலேன். அதனால் வாடினேன், வருந்தினேன், மேற்செய்வதறியாது திகைத்துக்கிடந்தேன். இந்நிலைமையில் அடிகளைப் பற்றிக் கேள்வியுற்றேன். கேட்ட அஞ்ஞான்றே ஓடிவந்தேன்; கண்டேன்; களித்தேன்; கவலையொழிந்தேன்; கருணைகூர்ந்து என்னை எனக்கறிவித்துப் பிறப்பென்னும் பெருங்கடலினின்று கரையேற்றுவித்தல் வேண்டும்" என கை குவித்து நின்றனர்.

அருளே வடிவாகிய அக்குருநாதர் இதயமுருகி, இன்னுரை நவிற்றி, எதிரில் இருத்தி, இன்றியமையாத் தீக்கை செய்து, ஐவகைக் கோசங்கட்கும் அயலாய், நனவு கனவு உறக்கமென்னும் மூத்திற நிகழ்ச்சிகட்கும் சாட்சி மாத்திரமாய், சச்சிதாநந்த வடிவாயுள்ள ஆத்ம சொருபத்தை ஒருமொழி வாயிலாக நன்கு விளக்கியருளினர்.

அங்ஙனம் விளக்கியருளப் பெற்ற அடிகள், ஒருங்கிய வுள்ள நலம் வாய்க்கப்பெற்றிருந்தமையின், அவ்வளவிலேயே நிருவிகற்ப நிட்டை வாய்க்கப் பெற்று, தமது ஆத்ம லட்சியத்திற் சிறிதும் பிறழுமாறின்றி நிலைத்தருளினர். அதுகண்ட ஆசிரியர், மிகவும் வியப்பெய்தித், தாமும் நிருவிகற்ப சமாதியில் நிலைத்தருளினர். மறுநாட் காலையில் அடிகள் முன்னும் ஆசிரியர் பின்னுமாகப் பகிர் முகப்பட்டனர். அன்று தாம்கண்ட ஆன்ம விளக்கமாகிய அரும்

பெருங் காட்சியினுல் ஆனந்தாம்புதியில் திளேக்கப் பெற்று, "எந்தையே! உய்ந்தேன்! உய்ந்தேன்!'என்று உரைத்துரைத்து 'இது காறும் எவரானும் விளக்கற் கியலாத எனது நிஜசொரூபத்தை இத்துணை எளிதில் கரதலாமலகம்போல் விளக்கி அருளினமையின் இன்றுமுதல் தாங்கள் நிஜாநந்தர் எனப் படுவீராக' என விண்ணப் பித்து அப் பெயரமைந்த பதிகமொன்று அஞ்ஞான்றே இயற்றி அவரது திருவடிகளிற் சமர்ப்பித்துக் கைகுவித்து நின்றனர். அது கண்ட நிஜாநந்தர். அடிகளின் அன்பின் பெருக்கமும் ஆசுகவித்திற னுங் கண்டு அளவா மகிழ்வெய்தி, "ஞானமைந்தனே! எத்தகைய ரேனும் பன்னுள் அரிதின் முயன்றுலன்றிப் பெறுதற் கியலாத நிருவிகற்ப நிட்டை இத்துணை யெளிதின் வாய்க்கப் பெற்று உனது ஆத்ம லட்சியத்திற் சிறிதும் பிறழாது நிற்கும் பேறுபெற்றனை யாத லின், நீயும், அச்சுதாநந்தன் 'எனப்படுவாயாக"எனக் கூறி' இனியும் இந்நிருவிகற்பநிட்டை நன்கு வாய்க்கப் பெற்றுச் சுவானுபவச் செல் வனுய் விளங்குவாயாக என வாழ்த்தியருளினர்.

இங்ஙனம் ஆசியருளப் பெற்ற அடிகள், அக் குருமூர்த்தி களிடத்துப் பிரியா விடை பெற்றுக்கொண்டு, போளூருக்குவந்து சம்பத்கிரியின்கண் ஆறுதிங்கள் நிருவிகற்ப நிட்டாபரராய் நிலைத்து நின்றனர். பின்னரும் கஸ்தம்பாடிக்கு வந்து ஒரு அழகிய சோலை யின்கண் ஆறுதிங்கள் இடையரு நிட்டாப்பரராய் வீற்றிருந்தருளினர். அக்காலத்தில், ஆசிரியர் பெருமாளுகிய நிஜாநந்தரும் வந்து உடனி ருந்து, அவ்வப்போது தோன்றும் ஐயப்பாடுகளையெல்லாம் நிவிர்த் தித்து, 'மாணவமணியே! கடத்தற் கரிய பிறவிக்கடலைக் கடந்துவிட் டனை; சீரிய ஜீவன் முத்தனுகித் திகழப் பெற்றனை;. இனி, பெறக் கடவது யாதும் இல்லை' எனக் கட்டுரைத்துவிட்டுக் கைலாய கிரிக் கெழுந்தருள்வாராயினர்.

இங்ஙனம் தன்னையும் தனக்காதாரத் தலைவனையுங்கண்டு, அத்தலைவனே தானுய் அகண்டாகார சிவ சொரூபமாய்த் திகழப் பெற்ற அடிகள், சிலகாலம் படைவீட் டாரண்யத்தில் தங்கி, பின்னர்

வெளிப்பட்டு, வடார்க்காடு தென்னார்க்காடு சேலம் சித்தூர் செங்கற்பட்டு மாவட்டங்களிற் சஞ்சாரம் செய்யத்தொடங்கி, சென்றவிடமெல்லாம் அத்வைதசித்தாந்தத்தின் ஒப்புயர்வு இகந்த உண்மை நிலையினை விளக்கி வருவாராயினர். மேற்கூறிய சஞ்சார காலத்து அடிகளிடத்துத் தத்துவோபதேசம் பெற்ற மாணவர்கள் இரண்டாயிரவருக்கும் மிக்கவ ராவரெனத் தெரிகின்றது, இத்திறத்திற் பல்லாண்டுகள் கழிந்தனவாக, கி. பி. (1902) சுபகிருது ஆண்டு ஆவணித்திங்கள்முதல் ஐப்பசித் திங்கள்வரை மீட்டும் மாணவர்களுள்ள ஊர்கள் தோறும் சென்று சென்று, " அன்பின் மிக்க மைந்தர்காள்! உமது பொன்னொத்த காலத்தை அவலநிலைக்கு இலக்காக்கிவிடாது ஆத்மானுபவத்திற்கு உரித்தாக்கி, அகண்டானந்தப் பெருவாழ்வைப் பெறுவீர்ளாக" எனவும்,"எமது வருகையின் இறுதி இதுவே" எனவும் அறிவுறுத்திவிட்டுக் கார்த்திகைத் திங்கள். 2வது நாள் வேலூர் வட்டத்தைச் சேர்ந்த வல்லம் கிராமத்திற்கு வந்து, தமது மாணவருள் ஒருவராகிய அரங்கசாமி முதலியார் இல்லத் எழுந்தருளிச், "சன்மார்க்க தர்ப்பணம்" என்னும் ஞானசாத்திரம் ஒன்று இயற்றத் தொடங்கினர்.

11-வதுநாள் புதன்கிழமையன்று பிற்பகல் 3-மணிக்கு மற்றொரு மாணவராகிய சித்தமருத்துவர் மந்திரமூர்த்திப்பிள்ளையவர்களை அழைத்து அரிய மருந்து முறைகள் சிலவற்றைக் கூறியருளினர் அன்று பின்னிரவு 3-மணிக்கு மேற்கூறிய சன்மார்க்க தர்ப்பணம் என்னும் நூலை முற்றுவித்து, மற்றொரு மாணவராகிய வைத்தியலிங்கம் பிள்ளையிடம் கொடுத்து 'ஐய! இந்நூலை அச்சிட்டு வெளிப்படுத்துவாயாக, எனக் கட்டளையிட்டனர். பின்னர், 4-மணிக்குமேல் தமக்கு உடல்நலமில்லை எனத் தெரிவிக்க, அருகிருந்த மேற்கூறிய மந்திரமூர்த்திப் பிள்ளை தக்க பரிகாரம் செய்வதாகக்கூறினர். அது கேட்டு புன்னகைப் பூத்த முகத்துடன் " தன்வந்தரியே! பிராரத்வ வினையோ முற்றுப்பெறுந் தறுவாயிலுள்ளது: யாக்கையோ வீழுங் காலத்தை எதிர்நோக்கி நிற்கின்றது. இந்நிலையில் யாதுசெய்ய வல்லாய்' எனக்கூறி, அவ் வைகறைப் போதிலேயே நாகநதிக்குச்

சென்றுகாலைக்கடனைக்கழித்துவிட்டு மீண்டுவருங்கால் ஓர் வெற்றிடத்தைச்சிறிதுபோழ்துநின்றுநோக்கி, 'இனிநிகழ்தற் பாலனவாயயாவும் நிகழுமிடம்இதுவேபோலும்,என தமக்குத்தாமேஉரையாடிக்கொண்டு, இல்லத்திற் எழுந்தருளி, காலையில்திரவரூபமான உணவருந்தி, மாணவர்களை யெல்லாம் தம் எதிரில் இருக்கச்செய்து யாக்கை அருமையும் போக்கின் நிலைமையும் நன்கு விளக்கி, உமது பெறுதற்கரிய வாணாளை வீணாளாக்கிவிடாது சமாதி யனுட்டானத்திற் காக்கிப் பிறவிப் பேற்றைப்பெறுவீர்ளாகவென அறிவுறுத்திக் கொண்டிருந்தனர். அதுபோது அடிகளின் அணுக்கத் தொண்டரும், மைத்துனி மகனுருமாகிய மூத்துகிருஷ்ண நாயுடு என்பவர் வந்து, அடிவணங்கி ஆசியருளப்பெற்று 'அடிகேள்! கஸ்தம்பாடிக்கெழுந்தருள வேண்டும்' என விண்ணப்பித்தனர். அது கேட்ட அடிகள், தமக்கு உடல் நல மில்லையெனவும், இன்னம் சிறிதுபோழ்தின் நலம் பெற்றுவிடும் எனவும், பின்னர் செல்வது குறித்து முயற்சிக்கலாம் எனவும் கூறியருளினர். அதுகேட்ட நாயுடு அவர்கள் அடிகள் கூறிய தன் கருத்து யாதாயிருக்கலாமெனச் சிறிது விலகிச்சென்று சிந்தித்துக்கொண்டிருந்தனர். அவ்வளவிற் சிறிது போழ்துங் கழிந்ததாக, அக்கார்த்திகைத் திங்கள் கஉ-வதுநாள் வியாழக்கிழமை சுவாதி நன்னாள் முற்பகல் 10 மணிக்கு ''யாவரும் எம்மை நோக்குவீர்களாக'' எனத் திருவாய் மலர்ந்து, பத்மாசனத்துடன் வீற்றிருந்து விதேக கைவல்யமடைந்தனர். அது கண்ட மாணவர்கள் யாவரும் திடுக்கிட்டுத் திகைத்துவிட்டனர். பின்னர் ஒருவாறு தெளிவெய்தி நோக்கிய போழ்து, அடிகளின் திருவுருவத்தின்கண் யாதொரு மாறுபாடுங் காணப்படாமையின் பெரிதும் ஐயுற்று, யாதும் துணிதற்கியலாது நிற்பாராயினர். அவ்வளவில், இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற மக்கள் கூட்டங் கூட்டமாக வந்து சேவித்துச் சென்றுகொண்டிருந்தனர். அன்றே கஸ்தம்பாடிக்கும் மாணவர்களுள்ள மற்றை ஊர்களுக்கும் ஆட்கள் மூலமாகவும் தந்தி மூலமாகவும் செய்தி தெரிவித்தனர். அன்று மாலையே அடிகளின் மனைவியார் சுற்றத்தவர் அண்மையிலுள்ள மாணவர்கள் ஆகியோர் பெருங்கூட்டமாக வந்து, சேவித்து, வருந்திய மனத்துடன்

வைகுவாராயினர். வந்த மாணவருள் தக்க அனுபவம் வாய்ந்த ஒரு சிலரால் ஐயமகலப்பெற்ற பின்னர், மறுநாள் வெள்ளிக்கிழமை யன்று முன்னுளில் அடிகள் நின்று நோக்கியவிடத்தேயே சமாதிக் குகை சமைப்பித்து, அப்போது தற்செயலாய் ஒருவர் கொண்டுவந்த புனிதமான கங்கை நீரால் திருமஞ்சனம் செய்து, அலங்கார ஆராதனைகள் புரிந்து, முத்துவிமானத்து எழுந்தருளுவித்து, மங்கல வாத்தியத்துடனும்; பல பஜனை கோஷ்டிகளுடனும், ஆயிரக்கணக் கான மக்கள் சூழ்ந்துவர ஊர்வலம் செய்து, மாலை 5-மணிக்குத் திருவுருவம் அடக்கம் செய்யப்பட்டது அன்றுமுதல் மேற் செய்தற் குரியனவாய கடமைகள் யாவும் முறைப்படி செய்யப்பட்டன. நித்தியவழிபாடும் செவ்வனே நடாத்தப்பட்டு வந்தது.

முதலாவதாண்டு நிறைவு விழாவிற்கு முன்னர், அடிகளின் திருவுருவக் காட்சியைத் தரிசித்தல் வேண்டுமெனப் பல மாணவர் பேரவாக் கொண்டனர். அவர்களுள், (1) வல்லம் அரங்கசாமி முதலியார், (2) மந்திரமூர்த்தி பிள்ளை, (3) வைத்தியலிங்கம் பிள்ளை, (4) கந்தசாமி ஆசாரி, (5) சடைய கவுண்டர் ஆகிய ஐவ ரும், கண்ணமங்கலம் (1) கோவிந்தசாமி செட்டியார், (2) ராமசாமி ராயுடு, (3) டேக்சந்த் லாலா, (4) லக்ஷ்மைய நாயுடு ஆகிய நால்வ ரும் ஆக ஒன்பதின்மரும், ஒருநாள், நடுப்பகலிற் சமாதிக் குகையைத் திறந்தனர். திறந்து நோக்கியபோது, அடிகளின் திருவுருவம் அடக்கம் செய்த அன்றுபோலவே யாதொரு மாறுபாடுமின்றி காணப்பட்டதோடு, நெற்றியின்கண் வியர்வை நீர் பொடித்திருப்பக் கண்டு, பெரிதும் வியப்புறுவாராயினர். அவருள் லக்ஷ்மைய நாயுடு அவ்வியர்வை நீரைத் துடைத்தனராக, மீட்டும் சிறிது போழ்தில் முன்போலவே பொடிக்கக் கண்டனர்; இவ்வாறு துடைக்குந்தோ றும் பொடித்துக் கொண்டே இருந்தது. இவ் வரும்பெருங் காட்சி யை அன்று கண்டுகளிக்கும் பேறு பெற்றவர் மேற்குறித்த ஒன் பதின்மரை உள்ளிட்ட இருபத்தொருவராவர். அன்றும் அலங்கார ஆராதனைகள் புரிந்து, சமாதிக் குகையை மூடி. பஞ்சாக்கர மேடை கட்டத் தொடங்கியபோது இந்நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற மக்கள்,

பெருங்கூட்டமாகத் திரண்டு வந்து, மீட்டும் சமாதிக் குகையைத் திறந்து சேவித்தற்கு இடந்தர வேண்டும் எனப் பெரிதும் கேட்டுக் கொண்டனர். அவ்வமயம் மாலைக்காலமாய்விட்டமையானும், மேடை கட்டவேண்டி இருந்தமையானும் மாணவர் ஒருப்படாராக, வந்தவர்கள் திறந்தேயாதல் வேண்டுமென மிகவும் நிர்ப்பந்தித்தனர். அதனால், மாணவர்கள் யாதும் செய்தற் கியலாதவர்களாய்த் திகைத்து நின்றபோது, எதிர்பாராத நிலையில் திடீரெனப் பெருமழை பெய்யத் தொடங்கிவிடுதலும், ஆண்டு நிற்றற்குப் போதிய இடமின்மையால், வந்தவர்கள் யாவரும் ஊருக்குட் சென்றுவிட்டனர். அவ்வமையமே மேடையும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. மழையும் ஓய்வடைந்து விட்டது. மீட்டும் யாவரும் வந்து நோக்கி, இனித்திறத்தற் கியலாதெனக் கருதியவராய்ச் சென்று விட்டனர்.

அடிகளின் திருவுருவத்திற் காணப்பெற்ற அபூர்வமான அக்காட்சிகளைக்குறித்துப் பல அறிஞர் பெருமக்களைக் கேட்டும், எவரும் தக்க காரணம்கூறி விளக்கற்கு இயலாராயினர். பின்னர், ஓர் ஆண்டு விழாவில் தலைமை வகிக்க விஜயம்செய்த சென்னை வேதாந்த சங்க ஸ்தாபகரும், இலக்கிய இலக்கண வேதாந்த தருக்க போதகாசிரியரும், ஞானச் செல்வருமாகிய ஸ்ரீமத் கோ. வடிவேலு செட்டியார் அவர்களிடம் தெரிவித்தபோது, யோகானுபவ மிக்கவர்கள் பிராண வாயுவைக் கும்பித்துவிட்டு அகண்டசமாதிசெய்வது உண்டென்றும், அடிகள் யோக சித்தி ஞான சித்தியாகிய இருவகைச் சித்தியும் பெற்றவராதலின் ஜீவசமாதி உற்றனரென்றும், ஆதலின் அவரது திருவுருவத்தின்கண் யாதொரு மாறுபாடின்மையும், வியர்வைத் தோற்றமும் காணப்பட்டன என்றும்,நன்கு விளக்கியருளினார்கள்.

பின்னர் மாணவருள் சிலர், வெளியூர் வாழ்க்கையை மேற்கொண்டும், சிலர் வாழ்நாள் முடிவடையப்பட்டும் பிரிவுற்றனராக, மேற்கூறிய மந்திரமூர்த்திப் பிள்ளை, வைத்தியலிங்கம் பிள்ளை ஆகிய சகோதரர்கள் இருவரும் பெரிதுமுயன்று, பெரும்பொருட் செலவில் ஆலயமும் அடுத்து மடாலயமும் புனைவித்து, குடமுழுக்கு விழாவும்

நடாத்திப் பரிபாலித்து வந்தனர். அவருள் மூத்தவராகிய மந்திரமூர்த்திப்பிள்ளை விதேக கைவல்யம் அடைந்த பின்னர், இளையவராகிய வைத்தியலிங்கம் பிள்ளை பரிபாலித்து வருங்கால், பழமை மடாலயம் செல்லரித்து மிகவும் பழுதுபட்டு விட்டமையின், அதை அறவே பிரித்து அப்புறப்படுத்திவிட்டு, அண்மையிலுள்ள புதூர் வாசியும், அறவினைப் பிரியரும், சிறந்த கொடையாளியும் ஆகிய உயர்திருவாளர் அ. அண்ணுமலை முதலியாரவர்கள் மனமுவந்துதவிய பெரும் பொருளைக் கொண்டு, ஸ்ரீ அச்சுதாநந்த நிலயம் என்னும் பெயரிய அழகிய கட்டிடமொன்று நிறுவி, திறப்பு விழாவும் நடாத்துவித்தனர். மற்றும் பெரிது முயன்று அந்நிலயத்தின் பிற்பகுதியிற் சமையற் கட்டிடம், சுற்றுச்சுவர் ஆலயத்துள் மடைப்பள்ளி ஆகிய திருப்பணிகளை முற்றுவித்து, இன்றளவும் செவ்வனே பரிபாலித்து வருகின்றனர். சுபம்!



அத்வைத கீர்த்தனுநந்த லஹரி,

பாயிரம்.

சொரூபஸ்துதி விருத்தம்

உரியமறை யுபநிடத மாவாக் யங்கள்
உட்கருத்தி னிலக்கியார்த்த வுண்மை நன்ருய்த்
தெரியசதா நிட்டையினைப் புரிந்த கண்ட
செல்வமுறுஞ் சீரியராம் பயிர்த மைப்பக்
கரியமுகி லினங்கலந்து வருஷித் தாற்போல்
கருணையுட ஞனந்த மாரி பெய்யுந்
துரியபரஞ் சுடருருவாய்த் துலங்குஞ் சோதிச்
சொருபமதைப் புறத்தகத்துந் தொழுதுய் வாமே

உபாசன மூர்த்தி வணக்கம்

கலி விருத்தம்

வேத மோதும் வியன்பொரு ளைத்தெருண்
மாத வத்தினர் மாமனச் சோதியைப்
போத மூர்த்தியைப் பூரண னைரகு
நாத னைத்தின நாடியுய் வாமரோ

குரு வணக்கம்

எழுசீர் அடி விருத்தம்

ஆரண முடிவை யமலவான் வடிவை
அதுலிதா னந்தசா கரத்தைப்
பூரணப் பொருளைப் பகலிர வகலப்
பொலிந்தருள் பொழியுமம் புதத்தைக்
காரணங் கடந்த வகண்டசின் மயத்தைக்
கைவலமே வியநிஜா நந்தப்
பேரணங் குறுமெங் குருபரஞ் சுடரைப்
பிரியமா யுளத்தின்வைப் பேமால்

அடியார் வணக்கம்

வெண்பா

காலான பல்விதசற் கன்மங் களுக்கெல்லாம்
மேலான மெய்ஞ்ஞான விண்டலத்தின் - பாலான
மெய்யடியா ரைத்தொழுவேன் வேதாந்த கீர்த்தன
செய்யமதி யோங்கத் தெளிந்து [ங்கள்

அவையடக்கம்

விருத்தம்

மன்னுபாற் கடலி னறிதுயி லமரு
மாயனைத் தவனையொன் றணுகித்
துன்னுநம் மிருவே மிடங்கடனுமந்
துரிசறு மரிநிறம் பசுமை
உன்னுமிவ் வாற்று னிருவருஞ் சமமென்
றுரைத்தகங் கரித்தவா றெளியேன்
பன்னுமிந் நூலைப் பரமஞா னியர்முன்
பரிவினோ டுரைசெயும் பரிசே.

உ

ஓம் தத்ஸத்.

பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ

அத்வைத கீர்த்தனானந்தலஹரி.

(1) இராகம் - காம்போதி - கண்டராதி, அடதாளம்.

பல்லவி

அகஞான சுகவானே
அதுலித வசிபத நிலையெனும்
நிஜதுரிய மயமிலகு மனுபவ
மதிவளர வரமருளும் (அகஞான)

அனுபல்லவி

இகபர வுலகினி லெழில் நிறை
மலரிடை மண முறும் வகை
வளம்பெற வயங்கிடுங் கதியதி
பதிஸ்திதி பரம்பொரு ளெனல்
திரமாய்ப் பொலியும் புகழுடைய (அகஞான)

சரணம்

1 குருபோதமிலாக் குருடர்க்கேலாதுன
தடியவ ருள்மதைக் கவர்ந்திடு நவநவமவி
ராட்சியொளி தானக ஆ. அ. ஆ
அடிநடு முடியகன் றகம்புற
மொருவகை யினிவயங் கிடு
மருமமாய் மல ரஹிதமாய்
மகிமையாவு மலிந்திடு மொரு
மொழி காட்சி கனங்கமழு

மாநில மருளி ஞான்
மனமது மெலிந்து கடைத்தேற
நெறியெதேனுந் திரமதாய்த்
தெரிந்திலாம லவல மாகி
யுழலுவ துன்றனுக் கழகோ
துயரதனை யொழித்திட
வுனைவிட வுலகி லெவருந்
துணையிலை யிதுநிஜ மாகு
மொழியலவோ சொலவோ
துலங்குஞ் சுவிசேஷ வச்சுத நெறி (அகஞான)

---

(2) இராகம் பைரவி, அடதாளம் சாப்பு

பல்லவி.

அகண்டை கரஸா னந்த தேவனே
அருட்ஜோதி ஆதியனாதி (அகண்)

அனுபல்லவி

ஜகமுழுதும் பெருந் தகைமை யொளி நிறை
மகிமைமலிநிஜ நிகமமுடி யுறை (அகண்)

சரணங்கள்

1 தரணியி லழியும் சம் சாரமருளைக் கொண்டு
சஞ்சலமடைந்துள்ளந் தவிக்குமென் முகங்கண்டு
கருணை புரிவாய் கதி தெரிவாய்
கருதரியதன துருதிறமை கதி
யுரைதெரிய வருங் குருதுரிய பதி (அக)

2 காலபாசத்தினால் கட்டுண்டவ மாகாது
காப்பதுன் கடனாமுக் காலுந்திக்கய லேது
சீல தரமே திகழ் பரமே
சித்த நளினத டத்துணடமிடும்
சுத்த நிர்க்குண வஸ்துவெனப்படும் (அக)

3 இனிதாரத் தேசிக னிசைத்த மோனமர்மம்
இன்றளவு மெய்திட வில்லையீதென்ன கர்மம்
அனக வுருவே யரு ளருவே
அலமலருமனச் சலனமறும்படி
இலகு மச்சுத நிலையுதவு நடி (அக)

---

(3) கீர்த்தனை - அம்சத்வனி - ரூபகம்.

பல்லவி.

அகமுகசுக மீந்திடாய்
ஆதியே பரஞ் சோதியே (அக)

அனுபல்லவி

நிகமசிரோதயப் பொருளே
நேரோய்ந்திடும் பேரருளே (அக)

சரணம்

1 விதுர விகாந்திகண் மூலமாய்
வெறுவெளியின் பக்கல் லோலமாய்
எது செயலு மிலாது மேன்மை
இல கெழிற் பான்மைப்
பொதுவாகு மிறை யெனத் தெருளாய்
புகழ்ந்து போற்றினே னருளாய்
அதுலிதப்பேரோங்கும் ஸ்ரீ
அச்சுதப்பர ப்ரம்மமே (அக)

---

(4) இராகம் - யமுனு ரூபகதாளம்

பல்லவி

அகமுகந் திகழ் சுகம்
அளித்தா தரிப்பா யப்பா (அக)

அனுபல்லவி

ஜகமுகத் தோரோ ராத
வகைமன்னபேத போத(அக)

சரணம்,

1 நிருமல நிபுண நிதான
நிலையினை மேவுசோ பானப்
பெருமை பெறும் பிரக்ஞான
பிரமமெனும் வரமோன த்யான (அக)

2 உள்ளும் புறம்பு மமு தூரும்
ஒரு மொழியுட்பொரு ணேரும்
வெள்ள வெளிக்கடல சேரும்
விதமடி யாரினங் கோரு மாரும் (அக)

3 நிச்சல நெறியனு பூதி
நிலைசொலு நிகமங்க ணீதி
அச்சுதானந்தாம் போதி
யாமத்வைத சேர்தி சோதி (அக)

---

(5) இராகம் - அம்சத்வனி - ரூபக தாளம்

பல்லவி

அகமுகாநந்த லஹரீ அமுதமே
ஆண்டருள் புரீ

அனுபல்லவி

ஜகமுகமாமிரு டீர்ந்தொளி
சாதக ரெய்துந் தன்மய வெளி(அக)

சரணங்கள்

1 கங்குல் பகலுமோ ரியல்பாய்க்
கற்பிதங்கள் போய்த் தானுய்ப்

பொங்கித் ததும்பி யெங்கணும் பரி
பூர்த்தியாயுறை போகமே நிறை (அக)

2 ஞாதுரு ஞானஞேய நீங்கி
நாட்டமதோங்கித் தூங்கி
மாதுரியாதீத மாகிய
மாதவரடை வளர் சீருடை (அக)

3 அச்சு ததாச னக ஜோதியாய
ஆடுமாதியாய் நீதியாய்ச்
சச்சிதாநந்தந் தானே கனி
சாட்சியே பர மாட்சியே வர (அக)

---

(6) இராகம் . தஞசரி - ஏக தாளம்

பல்லவி

அகஞ்சுகந்தரு மாண்டவனடி
ஆவலாய்ப்பணி மனமே கதிமே
லாமனு தினமே இனி(அக)

அனுபல்லவி

இகஞ்சுகந்தரு மென்றுழன்றிடும்
இருண்மயந்தனை யோட்டி நிஜ
பொருண்மயந்தனைக் காட்டி இனி (அக)

சரணங்கள்

1 இடும்பர்களினமாகிப் பாரில்
இரவும் பகலும் சீரில்
கடும்பவம்புரிந் திறுமாப் புறும்
கற்குணங்களைக் கரைத்து மிகு
சற்குணங்களை யுரைத்து இனி (அக)

2 எழிலி டம்பொருளேவலை நாடி
எண்டிசையிலு மோடிப்
பழிவிளைந்திடப் போம் புலன்களின்
பாரத்தைத் தவிர்த் தெடுத்து வேத
சாரத்தை நனி கொடுத்து இனி (அக)

3 மதபேதமெனு மயக்கம் போக்கி
மன்னுந் திருக்கை நோக்கிச்
சதத முந்துதி செய்யு மச்சுத
தாசனுக் கருள் பெருகித்திகழ்
ஆசறுமதி யுருகி இனி (அக)

---

(7) இராகம் - கமாஸ் - ரூபக தாளம்

பல்லவி

அகவானே அருளானே
அமிதானந்தத் தேனே அதுலித (அக)

அனுபல்லவி

தகை வாழ்ந்திடும் வகை யாக்கும்
சுகவாரியிற் றேக்கும் துதிமிகு மதி (அக)

சரணங்கள்

1 மோன சுபாவந் தழைக்க
முனிபுங்கவருளங் களிக்கத்
தானும்பே ரருட்டன்மை மேவித்
தண்ணு ரொளிதாவிச் சகலமு நிறை (அக)

2 தினமாகுல மதனை னய
வினையேவிளைவிக்கும் வெய்ய
மனமாசிருள் வலியேகும்
மதிதானுதயமாகும் மன்னிசை விரி (அக)

3 தடுத்தாட் கொள்ள வேறோர் துணை
தரைமீதிலை யெனத்தா ளிணை
அடுத்தேன்றயை செய்யு மாதி
அமலாச்சுத ஜோதி யற்புத நிலை (அக)

---

(8) இராகம் - நாத நாமக்கிரியை - ரூபக தாளம்

பல்லவி

அஞ்ஞானிக டங்க ணேசம்
அகலா தென்றுந் தருங் கிலேசம் (அஞ்)

அனுபல்லவி

மெய்ஞ்ஞானிகள்போன் மொழிந்திடும்
மேதினிமீதினி லழிந்திடும் (அஞ்)

சரணங்கள்

1 கபட வேடங் கொண்டு நடிப்பார்
கண்டால் பதங்களைப் பிடிப்பார்
சபையினிற் கீர்த்தியைப் படிப்பார்
தனித்தாற்று டையி லடிப்பார் (அஞ்)

2 கர்ம வலைக்குள்ளாய் மலைப்பார்
கருத்தறிந்தவர் போ னிலைப்பார்
மர்மம் பேசி மனங் கலைப்பார்
மறைந்தால் நாய்போற் குலைப்பார் (அஞ்)

3 வீடடைந்திடும்வித மேவார்
வெய்ய நரகிற் புகப் போவார்
ஆடுமாடு போற் சாவார்
அச்சுதனடிக்கய லாவார் (அஞ்)

---

(9) இராகம் - செஞ்சுருட்டி - ஆதி தாளம்

பல்லவி

அண்ணலே ஆரா
அமுதேயென் னார்த்தியைத் தீரா (யண்)

அனுபல்லவி

தண்ணி லாப்பொழிசு தாரச மூரும்
கண்ணிலாரும் கருத்திற் சேரும் நேரும் (அண்)

சரணங்கள்

1 மெத்தபுண்க னிறைய நித்தியக் காய
மேதினிவீழ்முன மேநிலை ஞாய
மத்துவிதப் பேரருளார்ணவந் தோய
அருளுந்தூய வப்ரமேய ஞேய (அண்)

2 மாயசம் சார மருண்மய கூப
மத்தியிலழுந்திமூ வகைப்படுந் தாபத்
தீயிடை மெழுகானேனிருட் பாப
க்ஷீணதீபசித்ப்ர தாப ரூப (அண்)

3 மந்திர மாமறை வாக்கிய மோதி
வாழ்த்திய தேசிகன் வாய்மையின் சேதி
அந்தரங்கமா கியவனு பூதி
அனகஜோதியச்சு தாதி நீதி (அண்)

---

(10) இராகம் - நீலாம்புரி - அடதாளம்

பல்லவி

அண்ணலே கண்ணு ரொளியே
அகஞான வெளியே (அண்)

அனுபல்லவி

திண்ணிய மாயைமனதின் றிமிரந் தீர்த்திடும்
சிந்தனை பேர்த்திடும் திரநிலை சேர்த்திடும் (அண்)

சரணங்கள்

1 மின்னுருந் துய்ய
வீடெய்தச் செய்ய
இன்னமுமென்மேற்கிருபையிலையிது தர்மமோ
என்னிட கர்மமோ ஈதென்ன மர்மமோ (அண்)

2 விளங்காதி வானுய்
விரிவாகித் தானுய்
வளர்ந்தோங்கிடுமாமறைப் பொருளே
மாட்சிமைத்தெருளே வரமெனக்கருளே (அண்)

3 தகைசேரடி யார்
தாமோர்ந்திடுஞ் சீர்
அகண்டானந்த சாரார் ணவ கீர்த்தியே
அகில பூர்த்தியே அச்சுத மூர்த்தியே (அண்)

(11) இராகம் - ரீதிகௌளம் - அடதாளம்

பல்லவி

அபயமபயங்கண் பாராய்
ஆண்டருள் சீராய்(அப)

அனுபல்லவி

உபரஹிதப் பொருளே
ஓங்குங்கட லருளே(அப)

சரணங்கள்

1 வெய்ய வாழ்க்கையிற் கூடி
வெம்பவங்களைத் தேடி

வையகந்தனில் வாடி
வந்தேனுன்றனை நாடி (அப)

2 ஆலகாலம் போற் சீறி
அனல்விழிப்பக டேறிக்
காலன் வாராமுன் மீறிக்
காண்பேனோ வுளந் தேறி (அப)

3 இருவினைக ளிறக்க
இதயத்தொளி பிறக்கத்
திருவுருவாய்ச் சிறக்கத்
தேகந்தனை மறக்க (அப)

4 மனதின் சேட்டைக ணீங்க
மருவித்தூங்காமற் றூங்க
நனவிற் சுழுத்தி யோங்க
ஞானவெள்ளத்திற் றேங்க (அப)

5 சச்சிதாநந்த யோக
சாதனையால் விராக
அச்சுததாசன் மோக
மான சஞ்சலம் போக (அப)

---

(12) இராகம் - காபி ஆதிதாளம்

பல்லவி

அபரோட்சானந்த ஜோதியே ஆதியே (அப)

அனுபல்லவி

விபுவாய் விலகா தெங்கும் விளங்கும் (அப)

சரணங்கள்

1 வெளியி லொளிகண் டென்று
களிக்கட லிடை நின்று

தெளிவேன் யானறி யேன்
சிறி யேன் (அப)

2 வெய்யவிரு ணசிக்கத்
துய்ய மதி யுதிக்கச்
செய்ய நினையல் லாது
திக் கேது (அப)

3 துன்பந் தொலைய மிக்க
அன்பருளங் களிக்க
இன்பம் பொழியும் விண்ணே
என் கண்ணே (அப)

4 உச்சித மறை பன்னும்
அச்சுத நிலை யென்னும்
மெய்ச்சிதாகாச மோன
வித் தான (அப)

---

(13) இராகம் சாமா ரூபகதாளம்

பல்லவி

அப்பன் சேவை யானந்தம் (அப)

அனுபல்லவி

துப்பாருயர்சோதி யாதி யென் (அப்)

சரணங்கள்

1 கண்ணாயினி கருத்தாய்த் தனி
விண்ணாய்ப் புகழ் மேவுந்தாவுமென் (அப்)

2 தானிலை பெருந் தாரகந் தரும்
மோனசின்மய மூர்த்தி கீர்த்தி யென் (அப்)

3 அகநீரஜ மதிலார் நிஜ
சுகமேலொளி தோணுங் காணுமென் (அப்)

4 எங்கணுமதி யியல்பாய் நதி
பொங்கும் பூரண போத னாதனென் (அப்)

5 அச்சுதனர னயனும் வர
சச்சிதாநந்த சாட்சிகாட்சி யென் (அப்)

---

(14) இராகம் - இந்துஸ்தானி - ரூபகதாளம்

பல்லவி

அப்பனே யொப்பிலானே
அருளாநந்தத் தேனே (அப்)

அனுபல்லவி

முப்பாலுக்கப் பாலாய் மின்
மோன ஞானமான வென் (அப்)

சரணங்கள்

1 செப்புமறை யாதியே
சிற்சுகானு பூதியே
ஒப்பகன்ற ஜோதியே
ஒருமொழி நீதியே (அப்)

2 பொன்னுடனே மண்ணோடும்
பொருந்த வொன்றதாய் நாடும்
அன்னவரன்பாய்க் கூடும்
அவ்வெளியுள் ளாடும் (அப்)

3 துக்க விருளோய்ந்து வான்
சுகமுய்ய நின்னை யான்
எக்காலத் தினி லெய்து வேன்
ஏதொன்றையு மோர்ந்தி லேன் (அப்)

4 எந்தன் பிழையெண் ணாது
இன்புதவாயேற் றீது
வந்துறு மப்பா லேது
வாழ்வெனக்குநீ யோது (அப்)

5 சோதிக்காம லென் மதி
சுத்தமாக்கியே ததி
ஆதரி நீயே கதி
அச்சுத தயா நிதி (அம்)

---

(15) இராகம் - சங்கராபரணம் ஆதிதாளம்

பல்லவி

அம்பர ஜோதியே அருளா ராதியே
அகண்டாகார நீதியே அனுதியே (அம்)

அனுபல்லவி

உம்பர்கணிதந்தாகமாக வுணர்ந்திடும்
பிம்பபூத ஞானம் பிறங்கிடும் சீர் (அம்)

சரணங்கள்

1 காமமாதி குணங்களின் பசை பிரியும்
நாமதாகு மெய்ஞ் ஞானக்கதிர் விரியும்
க்ஷேமமாகுமாத் மானுபவந் தெரியும்
தூமலியுமானந்த மாமழை சொரியும் (அம்)

2 தீதுமாயையின் சேட்டைக ளொழிக்கும்
மேதகை விளங்கிடு மெய்யறிவை யழிக்கும்
பேதவாதங்களைப் பேசிப்பொழு தொழிக்கும்
சூதர்க ளென்றுங் காணுதமோதஞ் செழிக்கும் (அம்)

3 பூரணுேதயம் பூத்தகம் புறந் துன்னும்
காரணங் கருணைசெய் காட்சியதாய் மின்னும்
ஆரணங்க ளன் பாயனிசமும் பன்னும்
பேரணியுமச்சுதா காரகர்த்தவ்ய மென்னும் (அம்)

---

(16) இராகம்-கமாஸ் அடதாளம்

பல்லவி

அரிதரிதம்மம்மா அகமாயை வெல்வ (தரி)

அனுபல்லவி

கருதிற்றன்னிலை காணப் பெரும் பாலும்
கமலசம்பவ நிமல னாலும் (அரி)

சரணங்கள்

1 தேக விலட்சணமாகிச் சிற்சுக
சாகராம்ருத போக மரு டிக
மேகவெளிபர லோகந் தெரியாது
சோகவிருடரு மோகம் பிரியாது (அரி)

2 மீதொளிரு நபமாதி திரிசிய
பேதமறும் பரஞ்சோதி சின்மய
போதநிலையனு பூதிகெடுத்திடும்
தீதடையுமெம வாதைகொடுத்திடும் (அரி)

3 பேசுமும்மலப்பி சாசம் பிடித்ததி
ஆசைவலைக்குள்ளாய் மோசமாய்மதி
நாசப்படும்ஜக பாச நிறைத்திடும்
மாசிலச்சுத தேசை மறைத்திடும் (அரி)

---

(17) இராகம் - செஞ்சுருட்டி ஆதிதாளம்

பல்லவி

அருட்சோதி நீதி
ஆதி யனாதி (அரு)

அனுபல்லவி

தெருட்சோதிகண் டுய்யும்
திருவருட் செய்யும் (அரு)

சரணங்கள்

1 புல்லிந்திரியங்களின் போரதை யொழிக்கும்
அல்லவித்தை யழிக்கும் அகத்திற் செழிக்கும் (அரு)

2 சரியாதி நான்கையுந் தவரும லாற்றும்
பெரியோ ரெப்போதும் போற்றும் பெருமையிற்
ஞேற்றும் (அரு)

3 கற்பனையறக் காணும் காட்சிமெய்ஞ் ஞான
தற்பரத்யானமோன சாதக மான (அரு)

4 சச்சிதாநந்தவி சாரமே லோங்கும்
அச்சுதானந்தந் தேங்கும்அடங்கலுந் தாங்கும் (அரு)

---

(18) இராகம் - கல்யாணி ஆதிதாளம்

பல்லவி

அருட்சோதி யாத்மானு பூதி நிலை
யான ஞானமணியே நவமணியே (அரு)

அனுபல்லவி

தெருட்சோதிகன தேவநிரஞ்சன
பொருட்சோதி பூரணபுவி காரண (அரு)

சரணங்கள்

1 நித்ய முக்த நிரவயவ சனுதன
நிர்விகாரநிர்ப்பேத நிர்வசன
சத்யமோங்குமத்வைத சித்தாந்த
ச்சாட்சியேகாந்த காட்சிமிகுசாந்த (அரு)

2 சுஜாதீயவிஜாதீய ஸ்வகதபேத
சூன்ய சுபாவந் துலங்கு சுபோத
நிஜாநந்தநெறி நின்றிடத் தயைபுரி
நின்மல முறுபரி சின்மயக் கதிர்விரி (அரு)

3 சுகந்தரும் ப்ரபலசுருதி சம்மதமாய்த்
தொந்தமகலுந் துரியாதீதப் பதமாய்
அகண்டைகரஸ பூரித வாரிதி
யாரு முவாமதி யச்சுதாக்ய பதி (அரு)

---

(19) இராகம் - ஆனந்தபைரவி ரூபகதாளம்

பல்லவி

அருணிலைப்பே ரம்பலத் தானே
ஆனந்தத் தேனே (அரு)

அநுபல்லவி

பொருணிலையீதெனக் கண்டுய்யும்
பொது மார்க்கத்தைப போதனை செய்யும் (அரு)

சரணங்கள்

1 நண்ணும் வினைகளை வாட்டும் பர
நாதாந்த நன்னெறி காட்டும்
எண்ணுமெண்ணங்க ளெளிதிற் கைகூட்டும்
எழிற்பூரணத் தொட்டிலிலிட் டாட்டும் (அரு)

2 தேட்டமதாய் முனந் தோற்றும் சகத்
சித்திராகாரங்கண் மாற்றும்
நாட்டமதாயது நாமெனச் சாற்றும்
ஞானிகளை யெந்நாளுங்காப் பாற்றும் (அரு)

4 காரிருளவித்தை மாயும் அகக்
கண்ணிடைத் தண்ணொளி யேயும்
சோராதின்பஞ்சொரிதூமதி தோயும்
துதிகொளச்சுதகதிமே லீயும் (அரு)

---

(20) இராகம் - பாஷாங்கம் ஆதிதாளம்

பல்லவி

அருளாரானந்த மலேயே
ஆதிபரஞ்சோதி நிலேயே (அரு)

அனுபல்லவி

தெருளாருந் திறத்தோர் சேரும்
க்ஷேத்ர விசேஷத்தெளி வெளி (அரு)

சரணங்கள்

திக்குத்திகந்த மெல்லாம்
திகழத்தானுயோர் சொல்லாம்
மிக்கசீர்மலர்மேன் மணம்
வீசிடவே விரிபரி (அரு)

சகஜசமாதி பெற்றுச்
சச்சிதாநந்தவாழ் வுற்றுச்
சுகிப்பதென்றோ காண்கிலேன்
தூய்மறை நாளுந் துதிபதி (அரு)

எச்சமயத்தோரு நின்றே
இறைஞ்சுமெய்த்தெய்வ மென்றே
அச்சுததாசனுர்ய னுல்
ஆவலோடாய்ந் தறிகுறி (அரு)

---

(21) இராகம் - எதுகுல காம்போதி ரூபகதாளம்

பல்லவி

அருளானந்தத் தேனே சீ
ராரக வானே (அரு)

அனுபல்லவி

இருளாமவித்தையை வாட்டும்
எண்ணங்கைகக்கூட்டும் இன்ப மூட்டும்
இன்ன லோட்டும் தன்னைக்காட்டும் (அரு)

சரணங்கள்

1 கிரியாயோக மார்க்கம் எல்லாம்
கேடென்றகற்றித் தீர்க்கும்
துரியாத்மகமாகி மன்னும்
சுபகுணமின்னும் தொண்டர் பன்னும்
துதி துன்னும் பதியென்னும் (அரு)

2 சூழும்வினைக ணீங்கிப்பரி
சுத்த சுயஞ்சுட ரோங்கி
வாழும்வண மாக்குஞான
மாமதிலீன மயத்யான
வகை யான தகைமோன (அரு)

3 சத்யக் ஞானசம் பூர்த்தி சர்வ
சாட்சியச்சுத மூர்த்தி
நித்தியமாம் ப்ரம்மானு பூதி
நிர்க்குண நீதி நிஜ சேதி
நிகமாதி சுகஜோதி (அரு)

---

(22) இராகம் - இந்துஸ்தானி - முகாரி ஆதிதாளம்

பல்லவி

அருளானே அகவானே
தெருளாரகண்டானந்தத் தேனே தெளிவெளி (அரு)

அனுபல்லவி

இருளாமவித்தையி னிடரிலா தெங்கும்
பொருளாகிப் பூரணம் பொங்கும் புகழ் நிகழ் (அரு)

சரணங்கள்

1 சீருறைந்திலகிடுந் திருக்கொளி நீதி
பாரறிந்தில்லாப் பரஞ்சோதி பதி மதி (அரு)

2 அத்துவிதாநந்தப் பே ராருங்கண்காட்சி
சத்தெனமன்னுஞ்சர்வ சாட்சி தனி நனி (அரு)

3 பூதலபோகங்கள் பொய்யெனத் துணிந்தேன்
பாதமே கதியெனப் பணிந்தேன் பழியொழி (அரு)

4 மர்மஸ்வபாவமா மறைமொழி மோன
நிர்மலாச் சுதபத த்யான நெறி செறி (அரு)

---

(23) இராகம் - தேசிகதோடி ஆதிதாளம்

பல்லவி

அருளே பரம்பொருளே யகலாநிலை (அரு)

அனுபல்லவி

தெருளுளமாருஞ் சிவஞ் சேரும்
பவந் தீரும் நிலை (அரு)

சரணங்கள்

1 ஒளிசுகவாரி யுறத்தயை மாரி
தெளிவுடன் பெய்யும்
திரஞ்செய்யும் தினமுய்யும் நிலை (அரு)

2 தாமதமேனினிச் சாற்றிடுவாய்தனி
மாமறை பேணும்
மதிதோணும் கதி காணும் நிலை (அரு)

3 ஆண்டவனேநிதம் அச்சுதவான் பதம்
வேண்டினே னாடும்
வெளிகூடும் விளையாடும் நிலை (அரு)

(24) இராகம் - தேசிக தோடி ஆதிதாளம்

பல்லவி

அறிவாகி நின்றுல் தெரியும் தெரியும் (அறி)

அனுபல்லவி

குறியாயிலகிடுஞ்சுடர் விரியும் விரியும் (அறி)

சரணங்கள்

1 மேனிலையான மெய்ஞ் ஞானபூமியேழினில்
மோனந்தழைக்கப்பர மானந்தம் வேண்டினுல் (அறி)

2 காரணமாம் பரி பூரணச் சின்மயம்
ஆரணமோதிடுஞ்சீர் அணவக் கோரினுல் (அறி)

3 வீசுபுகழச் சுத தாசனகமேவிய
தேசுலாவிடுஞ்சிதா காச நிலையினன்றுய் (அறி)

---

(25) இராகம் - கமாஸ் ஆதிதாளம்

பல்லவி

அற்புதத்தையாரா லாமோதவே (அற்)

அனுபல்லவி

சிற்பர விலாசா காச
தேஜமா மந்த (அற்)

சரணங்கள்

1 வேதமார்க்க மோராது
மெய்யறிவைச் சேராது
பேதவாதமோது வோர்க் கெய்
தாததா மந்த (அற்)

2 பேரருளோங்கும் துய்ய
ஆரியரின முய்யச்
சோராதின்பமாரி பெய்யும்
காரதா மந்த (அற்)

3 மாபதவி யீந்திடும்
மனச்செயல்க ளோய்ந்திடும்
ஆபோஜ்யோதிரூபா கண்ட
தீபமா மந்த (அற்)

4 மேனிலையினைத் தாவும்
விதிவிலக்கின்றி மேவும்
வானச்சுத ஞான மோன
த்யானமா மந்த (அற்)

---

(26) இராகம் - தர்பார் அடதாளம்

பல்லவி

அனுபவிக்காதகலாது தர்ம்மா தர்ம்மம்
ஆகிய பூர்வஜன்மாந்த்ரஞ் செய் கர்ம்மம் (அனு)

அனுபல்லவி

தனுபுவன போகங்க டவிர்ந்தகுணேத் துங்க
சாந்தர்களாகிலுமே காந்தர்க ளாகிலும் (அனு)

சரணங்கள்

1 சுத்திகாரஜிதம் போல் மித்தைப் பெயரைக்கொண்ட
இத்தரையடங்கலுஞ் சித்துருவெனக் கண்ட
முத்தர்களாகிலும் சித்தர்க ளாகிலும்
பத்தர்களாகிலும் பெத்தர்க ளாகிலும் (அனு)

2 ஏகசந்திரன் பொழியும் வாகுயரு மதுவைத்
தாகமுடனருந்திச் சோகமொழி பொதுவை

ராகிக ளாகிலும் யோகிக ளாகிலும்
போகிகளாகிலும் த்யாகிக ளாகிலும் (அனு)

ஆவலறுத்தோருளந் தாவுமொளி காட்சியாய்
மேவுமச்சுதகுருசத் பாவபரஞ் சாட்சியாய்
மூவர்களாகிலுந் தேவர்களாகிலும்
ஜீவர்களாகிலும் யாவர்களாகிலும் (அறு)

---

(27) இராகம் சங்கராபரணம் ரூபகதாளம்

பலலவி

ஆண்ட ததிசயம் அன்பாய்
ஆண்ட ததிசயம்

அனுபல்லவி

பேண்ட வன்னேப்
பெருமையா லென்னே (ஆண்)

சரணங்கள்

மங்களகுணமணி குருவாய்
வந்து பூமலர் மருவாய்
எங்குந் துலங்குமின் புருவாய்
இருக்கவே யருவாய்த் தருவாய் (ஆண்)

மலேவகன்றுள்ளமா மதியாய்
வயங்கிடப் பரவஸ்துஸ் திதியாய்
நிலேபெறத்தயைநிறை நிதியாய்
நிதமறை விதியாய்ப் பதியாய் (ஆண்)

இமையாவிழியினத் தோராய்
இருப்போர்க் கருளேமொழி தாராய்
அமைதியுறுந்தொல்லச்சுதப் பேராய்
ஆரவே சீராய் நேராய் (ஆண்)

---

(28) இராகம் - கமாஸ் ரூபகதாளம்

பல்லவி

ஆண்டவனே ஆதித்தில்லைத்
தாண்டவனே தயைபுரி (ஆண்)

அனுபல்லவி

வேண்டினேன் மேனிலை வான்
வேதகீத நாதபோத வென் (ஆண்ட)

சரணங்கள்

1 மருளுருவாய் மலைக்கும்
மதிதெளியா தலைக்கும்
இருவினைகளைத் தொலைக்கும்
இயல்புடனே நிலைக்கும்
அருளுரு வாகிய கரு
ணைலயகல்லோல சீல வென் (ஆண்ட)

2 சிற்றம்பலத் திடை விடாது
சேவித்திடச் செய்யிப் போது
உற்றதுணை நீயல் லாது
உண்டோ வுலகத்தின் மீது
முற்றும் மறை முடிவாய் நிறை
மோன ஞான வான மானவென் (ஆண்ட)

3 பாந்தசன் மார்க்கச் சேரும்
பாவங்கடந் திருக்கும் நேரும்
ஈந்துய்யக் கடைக்கண் பாரும்
எச்சமயத் தோருங் கோரும்
சாந்தபதசாமி யச்சுத
தாச பாச நாச ஈச வென் (ஆண்ட)

(29) இராகம் - பர்வா - ஆதிதாளம்.

பல்லவி.

ஆண்டவனே சிற்சோதி
யானே யருட் டேனே யாதி (ஆண்ட)

அனுபல்லவி

வேண்டினேனுன்றன் மெய்க்கழலுய்யும்
விதமார்க்கத்தை மேலருள் செய்யும் (ஆண்ட)

சரணங்கள்

1 பொய்யாகுந்துச்ச போகங்களைப்
"பொருந்திடையும் பொருட்டவங்களைச்
செய்யத்துணியும் தீய ஜனங்களைச்
சேராவடி யாரினங்களை (ஆண்ட)

2 பேருலகினிற் பிறந்து மீட்டும்
பேரிடருருப் பெருமை காட்டும்
ஆருவாமதி யமுத மூட்டும்
அபிஷ்டந்தனை யகங்கை கூட்டும் (ஆண்ட)

3 நித்திய வேதங்க ணிதமும் பன்னும்
நிர்மலாத்ம நிச்சயந் துன்னும்
சத்யமாயெங்குந் தானுகி மன்னும்
சாட்சியச்சுதக்காட்சி விண்ணென்னும் (ஆண்ட)

---

(30) இராகம் - நாட்டகுறிஞ்சி – ஜம்பை தாளம்

பல்லவி

ஆதரித்தடியேனை யாளாய்
ஆதாரம் வேறேது அவனி மீது (ஆதரி)

அனுபல்லவி

மாதாபிதா குரு தெய்வமனைத்து நீயேயென்று
மதித்துளந் துணிந்தேன் மலரடி பணிந்தேன் (ஆதரி)

சரணங்கள்

1 வந்த வழியை விட்டு மதி கெட்டு
வஞ்சக வையக மையலைத் தொட்டு
வருத்தங்கள் பட்டு
இந்த மட்டுமெய்தின சுகம் போதும்
இனிமேல் வேண்டே னீதுண்மை வசனம்
எந்தையே யித் தினம் (ஆதரி)

2 தெருணிலையாய் நின்று திகழ் நன்று
"திருக்கொளி தன்மயச் சின்மய மென்று
செப்பிடுந் தொன்று
அருணிலை நாடாதவிவேக மிகுதியாற் செய்த
அபராதங்கண் மன்னித்துக்
கிருபையுளத்தில் வைத்து (ஆதரி)

3 பூரண வொளியெங்கும் பொலிந்து பொங்கும்
பொதுவாகு மெய்ப் பொருளென்றிசை தங்கும்
போதம் பிறங்கும்
ஆரணங்களன்பாக வனுதினம் துதி யாற்றும்
அச்சுதாநந்த பதம்
அடைந்துய்ந்திடும் விதம் (ஆதரி)

---

(31) இராகம் - பியாகு - ஆதி தாளம்

பல்லவி

ஆதரியென் சாமியே
பேதையானிப் பூமியே (ஆதரி)

அனுபல்லவி

மேதகவ நாமியே தீதிலந்தர் யாமியே
போதசுக நேமியே (ஆதரி)

சரணங்கள்

1 இத்தரையாதாரமே தத்துவ கம்பீரமே
வித்தகவி சாரமே சுத்தநிர்வி காரமே ப்ர
சித்தப்ரம்ம சாரமே (ஆதரி)

2 கன்மவினை நாசமே தன்மநிலை நேசமே
நன்மனதின் வாசமே தன்மய விலாசமே தனி
சின்மயப்ர காசமே (ஆதரி)

3 உச்சித சோபானமே மச்சிலக வானமே
மூச்சந்தியின் மோனமே நிச்சல நிதானமே திகழ்
அச்சுதப்ரக் ஞானமே (ஆதரி)

---

(32) இராகம் - கேதாரகௌளம் - ரூபக தாளம்

பல்லவி

ஆதரியென் னாண்டவனே
ஆனந்தத் தாண்டவனே (ஆதரி)

அனுபல்லவி

வேத முடிவாய் விளங்கிடும்
விண்ணொளியே யென்றனிரு கண்ணொளியே (ஆதரி)

சரணங்கள்

1 பொய்யுடலைமெய்யென் றெண்ணி
வெய்யவினைகண்மிகப் பண்ணி
வையகத்தின் மையலான் மனம்
வாடிவந்தேன் இன்பத்தை நாடி வந்தேன் (ஆதரி)

2 என்னைப்புரந்திடவிப் போது
இந்த மகிதலத்தின் மீது
நின்னையன்றித் துணைவே றில்லை
நித்தியனே நிஜமிது சத்தியனே (ஆதரி)

3 தன்மயமதாயெங் கெங்கும்
சச்சிதாநந்தம் பொங்கும்
சின்மயவிலாச மோனத்
தெருணிலையேஸ்ரீயச்சுதப் பொருணிலையே (ஆதரி)

---

(33) இராகம் - இந்துஸ்தானி காபி - ஆதிதாளம்

பல்லவி

ஆதாரம்வேறேது நாதாநீயல் லாது (ஆதா)

அனுபல்லவி

மீதாகி வாழவே மெய்ச்சோதி சூழவே (ஆதா)

சரணங்கள்

1 தீமைகளேநினைந்து செய்தமையா லினைந்து
பாமரனுனேன் முகம் பாராய் தாராய் சுகம் (ஆதா)

2 ஞானப்ரகாசமே நானெனு நேசமே
தானமெனக் கண்டோங்கத் தாமசங்கணீங்க (ஆதா)

3 ஆசையற்ருேர்கூடும் அம்பலத் தாடும்
மாசிலச்சுதாகார மாண்பின் மார்க்கஞ்சேர (ஆதா)

---

(34) இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி

ஆதாரம் வேறேது
அணிகொணினதருளல் லாது (ஆதா)

அனுபல்லவி

நாதாந்தகாட்சியாம் ஞானப்ரகாசமே
நாடுமடியாரினங் கூடும் ப்ரதேசமே (ஆதா)

சரணங்கள்

1 சீராகயானின் திருவடியைச் சதா
சிந்தனைசெய்து மேன்கருணை வரவிலை
நேரிலாதப் பேராரும்
நிஜானுபூதிசுநீதிய தோங்க
நிசிபசை நீங்க (ஆதா)

2 ஏரதானப்பேரறிவதைப் போக்கும்
எருமையூர்தியிடருக்கா ளாக்கும்
பாரகவாஞ்சையாம் பாமரத்வம் பேர்ந்திட
பாசிதாச்சுதவான்பதவியைச் சார்ந்திட (ஆதா)

---

(35) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

ஆதியனாதி ஆதரி நீதி (ஆதி)

அனுபல்லவி

ஏதமிலாதசோதி ஏகப்ரக்யாதி (ஆதி)

சரணங்கள்

1 பூதலந்தன்னிலோடும் பொன்னுமொன்றுகநாடும்
மாதவரினங்கூடும் மன்றதி லாடும் (ஆதி)

2 இப்பொய்யுடலின்பற்று ஏகித்தன்னிலைபெற்று
எப்போதேகாந்தமுற்று இருப்பதிடுக்கணற்று (ஆதி)

3 மேனிலையான பூமி வெளியிலானந்த நேமி
ஆனசர்வாந்தர்யாமி அச்சுத சாமி (ஆதி)

---

(36) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி.

ஆதியே பரஞ் சோதியே
அல்லலைத்தீரா யருள் பாராய் (ஆதி)

அனுபல்லவி

நீதியே நிராகாரமே
நிதமுமேத்துமன்பரிதய மேமதியு தயமே (ஆதி)

சரணங்கள்

1 உண்டுறங்கியே வாணுளை யொழித்தேனலா
னின்றுளைக் கண்டுய்யுமா றென்றுங்
காணே னன்பெனுளம் பூணே னந்தோ
வீணுனேன் (ஆதி)

2 மூவராகியுந்தேவ தேவராகியுமண்மீதிற்
சீவராகியு மாகாத
சிவமே சிற்சுகத் தலமே சீரிய நிச் சலமே (ஆதி)

3 சச்சிதாநந்த வானமே சமரஹித மோனமே
அச்சுதாமல ஞானமே
ஆரைநம்பியிந்தப் பாரிலுய்வதெனைத் தந்த (ஆதி)

---

(37) இராகம் - உசேனி - ரூபக தாளம்

பல்லவி

ஆதியே யனுதியே இல
காத்மானு பூதியே யுல (காதியே)

அனுபல்லவி

நீதியே நிலைத்திடுஞ் சித்கன
வீதியே நிறை சோதியே மறை (ஆதி)

சரணங்கள்

1 அடிநடுமுடிவில தாகி
அதுவிதெனுஞ்சுட்டுத லேகி
விடிதலொடத்த மித்தலற்றுச்சித்த
மேவுமதன்றிதி யேவிளம்பாய்ததி (ஆதி)

2 கதியடைந்திடக் கருத்தோங்கக்
கண்டவர் கண்ணும் விண்ணுந்தேங்கத்
துதியருண்மாரி சொரிந்தின்பவாரி
சொக்கச்செய்யும்புகழ் திக்கனைத்துந்திகழ் (ஆதி)

3 நிருமல நிஜமஜ மச்சுதம்
நித்தியம் சுயம்பெனப் பலவிதம்
பிரமத்தையுன்னப் பெரியவர் சொன்ன
பேர்ப்படுநூல்வழி யேற்படுமோர்மொழி (ஆதி)

---

(38) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ஆத்மாராமனை நாடு மனமேபர
மானந்த நிலைவீடு நீதேடு பர (மாத்மா)

அனுபல்லவி

தாத்பர்யமீதெனச்சாற்றிய மாயோக
சற்குருமொழிகாத்து நீ பார்த்துப் பர (மாத்மா)

சரணங்கள்

1 எனதுனதெனுஞ்சொல்லை யேற்றியிகத்திலலை
மனதினவித்தையேகித் தானுகிப்பர (மாத்மா)
2 மறையாய்ந்திடுமுனிமாதவர் பாலினி
குறையாத சுகபோதம் அபேதம் பர (மாத்மா)

3 ராகாதிகுணங்களாம் ராக்கதரைவென்று தாம்
ஏகமாயரசாளும் எந்நாளும் பர (மாத்மா)

4 முத்தியைத்தந்திடும் மோனம் விளைந்திடும்
நித்தியவைபோகம் விதேகம் பர (மாத்மா)

5 பிரியாதபேரொளி பிறக்கு மகத்தில்வெளி
துரியராணியைச்சேரும் கண்ணுரும் பர (மாத்மா)

6 ஆங்கருணை மாமணி அச்சுததாசன் பணி
ஓங்குஞ்சின்மய ரூபம் சுதீபம் பர (மாத்மா

---

(39) இராகம் - உசேனி - ரூபகதாளம்

பல்லவி

ஆபோஜ் ஜோதிஸ்வ ரூபமே
அத்வைதாநந்த தீபமே (ஆபோ)

அனுபல்லவி

தாபானலங் தணிந்து வாழத்
தண்ணருள்பெய்யும் சாதக சாகர ஸ்ரீகர (ஆபோ)

சரணங்கள்

1 பாதல பூதல மாதிந போதல மீதில பேதம்
வேதம் மோதும் மொழிமுறை
யோதம் ப்ரோதம் மொளிநிறை (ஆபோ)

2 நித்திய சத்திய முத்தியளித்திடுவத்துத் தத்துவ
சுத்தசுபாவத்திதி புகழ்
மத்திய நாட்டத்திற் றிகழ் (ஆபோ)

3 கன்மன தென்மன தின்மரு டுன்மைகெட
நன்மை கொடு
நின்மல நிச்சய தன்மய
சொன்முடி வச்சுத சின்மய (ஆபோ)

---

(40) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

ஆமோவரு ளுதயம் அக
மாகியசோதியி லம்பரவீதியில் (ஆமோ)

அனுபல்லவி

போமோமலநோய்க டீர்ந்தொளி
பூக்கபோக பூமிதனில் வெளி (ஆமோ)

சரணங்கள்

1 பாவாதீதமான தன் னுரு
பார்த்துய்யும் வழிபாழ்த்துழன் றிரு
பூவுலகினிற் சீவபா வகம்
பூண்டமூடரெம்போல் வருளே சுகம் (ஆமோ)

2 யானெனதெனுமமதைக ளற்று
யாவையுமது வாய்க்குறி யுற்று
மோனநிலையி லாரென்ற முனி
மொழிதப்பியுழன் மூர்க்கருக்கினி (ஆமோ)

3 அச்சுததாசன் றுதி பேசிடும்
அந்தரங்கத்திலொளி வீசிடும்
சச்சிதாநந்தம்வெளி யாகிடத்
தாவுமாயைய தானதேகிட (ஆமோ)

---

(41) இராகம் - சலிலா - ஆதிதாளம்

பல்லவி

ஆரகவானும் ஆனந்தத் தேனும்
ஆத்ம ரூபமே (ஆரக)

அனுபல்லவி

சீரதான பேரதான
தேவ தீபமே (ஆரக)

சரணங்கள்

1 மாயாவிகாரவையக மென்னு
மாசிரு ணீங்கும்
ஓயாதகத்தும் புறத்தும் பேரொளி
ஒருதன்மை யோங்கும் (ஆரக)

2 மேவுநின்னருளில்லாம லிந்த
மேதினி மீது
தீவினைகளைத்தீர்த்தின் பந்தரத்
திக்குவே றேது (ஆரக)

3 மீதாய் விளங்கும் பாதமலரை
வேண்டினேன் பரிவாய்
ஆதரித்தொளி ரச்சுத வெளி
அடைந்துய்யப் புரிவாய் (ஆரக)

---

(42) இராகம் - பிலஹரி ஜாதிஸ்வரம் - ஆதிதாளம்

பல்லவி

ஆரணப்பொருளாமரு வுருவே
அகமுகசுக மளித்திடுங் குருவே

அனுபல்லவி

பூரணமே காரணமே
போற்றினே னென்றன் குறை
ஆற்றுமனைத்து நிறை (ஆரண)

சரணங்கள்

1 மித்தையுலகமருள் விட்டகல
மேதகைவிளங்கும் வித்தக விமல
நித்தியமே சத்தியமே
நினையன்றித்துணையில்லை எனைப்புரந்திடுந்
தொல்லை (ஆரண)

2 உற்பவமொழிவு முரு வொளியே
கற்பனையாவுங்கடந்திடும் வெளியே
தற்பரமே சிற்பரமே
தானுயிலகச்செய்யும் வானருண் மாரிபெய்யும்(ஆரண)

3 அண்மையுஞ்சேய்மையு மமைந்ததான
அதுலித நிலையபரோட்சக் ஞான
விண்மணியே கண்மணியே
மெய்ச்சுடர்விதியுறும் அச்சுதப்பெயர்பெறும் (ஆரண)

---

(43) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

ஆவிநின் பொன்னடிக்
கர்ப்பிதஞ் செய்வேனென் (ஆவி)

அனுபல்லவி

தேவனே வேறென்றும்
சிந்தைசெய்யே னென்றும் என் (ஆவி)

சரணங்கள்

1 தீவினை வசத்தால் திகழம்புவிமேல்
பாவியான்மேன்மேலும் பாதைப்பட்டாலும்என் (ஆவி)

2 சொல்லுந்தந்தை தாயும் சுற்றமு நற்சேயும்
எல்லாநீயென்றெண்ணி ஏத்திப்பூஜை
பண்ணி என் (ஆவி)

3 இன்பசாகரத்தில் இருக்கும்பேதமில்
அன்பர்கணேசமே அச்சுதாகாசமே என் (ஆவி)

---

(44) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ஆனந்தஞான விண்ணே
ஆண்டருளென் கண்ணே

அனுபல்லவி

தானுந்தயா காரமே
சாமவேத சாரமே (ஆன)

சரணங்கள்

1 மேதினியாத்தோணும் ஜோதியைக்காணும்
சாதனேவர வில்லேபேதைக்கிதென்ன தொல்லே (ஆன)

2 மேனிலேயாந்திட மோனவீ டீந்திட
எனின்னமர்மமோ யானியற்றுங்கர்மமோ (ஆன)

3 நேரிலுன்னிருபதம் கோரிநின்றேனிதம்
தீருமென்னூர்த்தியே சீரச்சுதமூர்த்தியே (ஆன)

---

(45) இராகம் - இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

பல்லவி

ஆனந்தஞானந் தரும் வானமே பர (மான)

அனுபல்லவி

மோனந்திகழகமுக த்யானமே பர (மா)

சரணங்கள்

1 தீனனேனென்றன் வினை
தீர்த்தருளச்சோ தனை
ஏனொருமொழி நூனமேபர (மா)

2 மன்னிலந்தன்னி லுய்யும்
வகைப்ரம்மநிட்டை செய்யும்
அன்னவரா தீனமே பர (மா)

3 இகழிருண்மாயை யேக
எங்குஞ்சின்மய மாக
திகழுஞ்சித்த லீனமேபர (மா)

4 மனத்தொழில்க ளொழிக்கும்
மௌனநெறி செழிக்கும்
அனகாச்சுத ஸ்தானமேபர (மா)

---

(46) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

ஆனந்தத் தாண்டவனே
ஆதரியென் னாண்டவனே (ஆன)

அனுபல்லவி

மோனந்தந்திடுங் காரண
மானஞான பூரண (ஆன)

சரணங்கள்

1 பல்லுயிரைத் தற் செயலாய்ப்
படைத்தளித்தழித் தயலாய்ச்

சொல்லுமொருமொழி மேன்மையில்
சுகக்கடலாம் பான்மையில் (ஆன)

2 சத்தமுதலைந்துங் கோணுத்
தவம்புரிவோருங் காணுச்
சித்தசிதாகாச வீதியில்
சின்மயமதாஞ் சோதியில் (ஆன)

3 ஆதிமுதனம்பினே னினம்
ஆரச்சுததாசனைத் தினம்
சோதிப்பதேனரு ணுட்டினில்
சொல்லுமேழாம் வீட்டினில் (ஆன)

---

(47) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ஆனந்தத் தாண்டவ ராயா
அடியாருயிர் நேயா (ஆ)

அனுபல்லவி

வானந்தரையெல்லாம் சோதி
மோனந்தழைத்தோங்கு மாதி (ஆ)

சரணங்கள்

1 நண்ணுமிருண்மாயை யற்று
நடுநிலைப்பார்வை யுற்றுக்
கண்ணுங்கருத்துமொன் ருன
காட்சியின் பூரணமோன (ஆ)

2 என்றுந்தானொரு சீரதாய்
இருந்தடைய நேரதாய்

நின்றொளியெத்திக்கும் வீசும்
நிகமாகமங்கள் பேசும் (ஆ)

3 உபயமில்லாமேற் கதி
உனையலாற்காணேன் மதி
அபயத்தந்தந்தெந் நாளும்
அச்சுததாசனை யாளும் (ஆ)

---

(48) இராகம் - கேதாரம் - ஆதிதாளம்

பல்லவி

ஆநந்தமெய்ப் பொருளே மாசிலா
மோனமளிக்குந் தெருளே (ஆன)

அனுபல்லவி

தீனதயாபர தேவ க்ருபாகர
ஞானசிகா மணியே (ஆன)

சரணங்கள்

1 சத்ய குணாலய சாமிநிராமய
நித்ய நிரஞ்சனமே (ஆன)

2 அருமறையாதியே யற்புதஜோதியே
பெரும்புகழ் பூரணமே (ஆன)

3 அச்சுததாசன்றுதி யகிலஜகத்பதி
சச்சிதாநந்த வடிவே (ஆன)

---

(49) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

ஆனந்தாதீத ஞான
மானவானமே மோனந்திகழ் (ஆன)

அனுபல்லவி

ஏனிந்தச்சோதனை கண் பாரும்
இல்லைகதியாரும் இறைஞ்சினேன்
என்கலி தீரும் எழி லாரும் (ஆன)

சரணங்கள்

1 பூதலத்திற்பேதையா மென்றன்
தீதகலவேதெளிந் துன்றன்
பாதாப்ஜம் பண்ணும் மாதாண் டவத்தெம்
பார்வை மாருது பார்த்திருக்கும்
பான்மையையோது ஏனிவ்வாது (ஆன)

2 துக்கம்விளை விக்கும்பாழ் மனம்
மிக்கவுநி லைக்கவே தினம்
எக்காலந்தனி லேதவஞ்செய் தினி
இன்பமுடனுய்வேன் இருவினை
யின்வேரைக்கொய்வேன் என்னசெய்வேன் (ஆன)

3 ஈறுமுதலீததென் னுஞ்சொல்
மாறுபடும் வா றல்லும்பகல்
ஆருறுக்கப்பா லாயொளிருந்துப்பா
ரச்சுத ஜோதியே அகண்டப்பே
ரமைந்திடு நீதியே யனாதியே (ஆன)

4 சத்தசத்தாம் வத்துவின்மேல்
சித்தங்கொள்ளு முத்தர்கட்பால்

நித்யோதயமாய் நின்று சொயமாய்
நீணிலந்தாங்கும் நேரம்ருத
நீதியரு டேங்கும் நிஜமோங்கும் (ஆன)

---

(50) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

ஆனந்தவாரிப்பர ப்ரம்மமே யரு
ளாத்ம நிஜதர்மமே மர்ம்மமே (ஆன)

அனுபல்லவி

தானந்த மாதியின்றி வானந்தரை யெங்கெங்கும்
மோனந்தழைக்கப்பர ஞானந்தயங்கத் தங்கும் (ஆன)

சரணம்

1 அருவாகியேயுரு வாகியே யொளிர்நிலை
அன்புகொண்ட தடைய
இன்பம துடைய
தருவாகியே குருவாகியே ஸ்ரீ யச்சுத
தாசனேயாண்டு கொண்ட தேசு வீசுமகண்ட (ஆன)

---

(51) இராகம் - கேதாரகௌளம் - ஆதிதாளம்

பல்லவி

ஆனுலுமென்போற் பாவி
அம்புவியின்கண் ணுண்டோ
அழுதென்னென்றெவர்பா லறைவது
அநியாயமநியாய மிது (ஆனு)

அனுபல்லவி

மேனுடடைந்தொளிரும் விதமதனையறியேன்
நானெனுமகந்தையி னுனலிவுறும் வெறியேன் (ஆனு)

சரணங்கள்

1 என்றும்பெரியோர்களுக் கிடர்செய்து
பழித்திட்டேன்
இணையகலும் பேரின்பத் திச்சையை
யொழித்திட்டேன்
தின்றுமகிழ்ந்துறக்கஞ் செய்வதிற்
செழித்திட்டேன்
சேனுருவைக்காணாது வீணாய்க்காலம்
கழித்திட்டேன் (ஆனா)

2 கோபலோபாதிவஞ்ச குணங்களாற்கெட்டேன்
கோதொழிஞானநிட்டைசாதிக்காதுகைவிட்டேன்
பாபவினைகணிதம்பண்ணவுந் துணிந்திட்டேன்
பரமசற்குருமீது பழிபகர்ந்திடத்தலைப்பட்டேன் (ஆனா)

3 மாதவப்பயனதான் மானிடனாய்ப் பிறந்தேன்
வந்துமோராதஹித மார்க்கத்திற் சிறந்தேன்
நீதிநிகழுமோன நெறிமுறைமை துறந்தேன்
நிச்சல நிலையருளச்சுதவிபுவை மறந்தேன் (ஆனா)

---

(52) இராகம் - அபுரூபம் - ஆதிதாளம்

பல்லவி

ஆனாலும்யார்க்கு யார்சொல்லுவாரினி (ஆனா)

அநுபல்லவி

தானுந்தனித் தலைமை
சாட்சியி னிலைமை (ஆனா)

சரணங்கள்

1 ஞானம்புதிசுக மோனக்குதியது
ஆனலதாவரது வேநவிலுமிது (ஆனா)

2 கர்மசங்கரஹித நிர்மலநிலைநின்று
மர்மமிலங்கும்பர ப்ரம்மமின்னதென்று (ஆன)

3 ஞாதுருஞானஞேய மேதுமின்றியெவைக்கும்
ஆதியாயுமகண்ட ஜோதியாயுநிற்கும் (ஆன)

4 மோகப்பசையற்றது வாகியிரவுபகல்
ஏகமயமாயனு போகித்தறியாமல் (ஆன)

5 பண்ணுலாநிகமங்க ளுண்ணிஜநெறிகொண்டு
தண்ணருளாரச்சுத விண்ணைக் கண்ணிற்கண்டு (ஆ)

---

(53) இராகம் - பியாக் - ரூபக தாளம்

பல்லவி

இந்தவேளை வந்துன்றுளை
ஈந்தருட் டருளே
யேகாந்தமெய்ப் பொருளே யருளே (இந்த)

அனுபல்லவி

அந்தகார மான கோர
பந்தங்கடீர நீர
பத்தரைச்சேர நேர (இந்த)

சரணங்கள்

1 பொய்யுடலின் பொருட்டதர்மரைப்
போற்றி யிறைஞ்சினேன் அந்தோ
வெய்யவீழ்கதிப்புகுந் தீய
வினைகளின் மிஞ்சினேன் எம
வேதனைக்கஞ்சினேன் கெஞ்சினேன் (இந்த)

2 ஓதியுணர்ந்து ரைக்கும் விதந்தன்னை
யுற்றுநாடா திகமே யுழல்
பேதையாமிவ னென்றகற்றினும்
பெரியவா னகமே நின்னைப்
பிரியேனெஞ்சகமே சுகமே (இந்த)

3 சத்தசத்துக்கப்புறந் தனிமையாய்த்
தயங்குநிச்சயமே யென்றுஞ்
சுத்தபரானந்த வாரியாமச்
சுதநிரா மயமே ஞான
சூரியோ தயமே சுயமே (இந்த)

(54) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

இந்தவேளை வந்துன்னர
விந்தபதந் தந்திடுவாய் (இந்த)

அனுபல்லவி

சந்தத மலந்தை புரி
பந்தங்கடவிர்ந் தீடேற (இந்த)

சரணங்கள்

1 கங்குல்பக லுங்கருணை யங்கிங்கெனுஞ்
சங்கையற
எங்கணுமி லங்குமொளி பொங்கு
மந்த ரங்கதேவா (இந்த)

2 ஒப்பகலுந் துப்பசிப்ப தப்பொருணி லைப்பகர
அப்பவெனை யிப்படிசோ திப்பதும்வி திப்பயனோ (இந்)

3 இச்சகமி ரச்சரவெ னச்சரிமொ ழிச்சுருதி
நிச்சயவு ணர்ச்சியரு ளச்சுதச்சு யச்சுடரே (இந்த)

(55) இராகம் - காபி - ஏகதாளம்

பல்லவி

இந்தவேளை வந்தருளாய்
உந்தன் சேவை தந்தருளாய் (இந்த)

அனுபல்லவி

தொந்தமகன்றிடு மாதியே
ஜோதியே சிற்சுக நீதியே

சரணங்கள்

1 கதிய லில்லையென்று யான்
கண்டகத்திற்காதலித் தேன்
பொதுநிலையோங்கு மேக
போகப்பொருண்மயம தாக (இந்த)

2 எல்லாம் வல்லவனே யின்னே
எண்ணமறியாத தென்னே
அல்லலந்தகாரந் தீர
ஆர அகவானஞ் சேர (இந்த)

3 நினைப்புமறப்பின்றி நாடும்
நின்மலர்கணெஞ்சி லாடும்
அனகப்ரகாச வுருவே
யருவே யச்சுத குருவே (இந்த)

---

(56) இராகம் - பியாக்கடை - ரூபகதாளம்

பல்லவி

இன்னந்தயையில்லை யேனே சாமி
ஈதுமக்குநீதி தானே (இன்)

அனுபல்லவி

மன்னுமாண்புறு மன்னையைப் போனின்னை
உன்னியுன்னியுளமுருகித்தளரு மென்னை
வாவென்றருகிலிருத்தி வஞ்சக மனதைத்திருத்தி
மாவிண்ணக மதி சேர்த்திட
மாயைப் படலந்தீர்த்திட (இன்)

சரணம்

1 நிகரேதுமில் லா தொளிவிரி
நிகமாகம மோதும் மேலாம்
நிருமலகதி தருமதிபதி
நினதடிவனஜந் தனையெப் போதும் கூடிக்
குகையாரெழிற் குன்றுடைக்ககனஞ் சென்று
கொடிதாம்போரிடுமைம் பொறிகளை வென்று
சகஜாநந்தந் தருமற்புதநிலை நின்று
சந்தேக மகன்று
தனியிருந்தருந்தவமடி யேன்
தரைபுரிந்திடச் சரணுற் றேன்
இனிதடைசெய்வ தடாது
ஏகாந்தத்திடை விடாது
நனிமிகுமுனிஜன மகிழும்
நடுநிலைகுறியிற் றிகழும்
அனுபவசாராம் புதியே
அச்சுதவானக பதியே (இன்)

---

(57) இராகம் - மாயாமானவி - ஆதிதாளம்

பல்லவி

இன்னமென்மீதுஏதுக்கிவ் வாது
எவருனையல்லாது புவனத்திற்றுணை யோது (இன்)

அனுபல்லவி

மன்னுமாரணங்கள் வாக்கியாந்தசேதி
வந்தையாத்மஜோதி மய ஞானமணியே (இன்)

சரணங்கள்

1 மோனத்யான நிட்டை முரணுதினிச் செய்யும்
முனிவோர்கண்மூழ்கி மோதமோங்கியுய்யும்

ஞானதீர்த்தமென்னு நாதாந்த காட்சி
நண்ணுஞ்சர்வசாட்சி நலமெய்தக்கடாட்சி (இன்)

2 அசிபதார்த்த நாடியதுகாரண மன்றோ
அடுத்ததீதுணர்ந்து மல்லலாக்குத னன்றோ
விசுவமெங்குமான் வேதாந்த விண்ணே
விஞ்சுகீர்த்திமேவும் வில்லாரென்னிரு கண்ணே (இ)

3 என்பிழைகளெல்லா மெண்ணுமன் மன்னித்து
இவனம்மவனு மென்றுளத்தில் வைத்து
அன்போடென்னையாளு மானந்தஸ் திதியே
அகவர்ச்சிதஸ்ரீ அச்சுதாக்ய பதியே (இன்)

---

(58) இராகம் - சுருட்டி - அடதாளம்

பல்லவி

உந்தனுள்ளமறியேன் மந்தமதிச் சிறியேன்
உய்யுமுளவைக்குறியேன் வெய்ய நெறியேன் (உ)

அனுபல்லவி

சந்ததமு முயர்ந்த சத்யக் ஞானனந்த
சிந்துவாய்த் திகழணியே எந்தன் கண் மணியே (உ)

சரணங்கள்

1 வாலாயமாயெங்கும் மாருவகையிலங்கும்
வஸ்துதத்வசிலாக்யமே மகா வாக்கியமே
மதியமுதத்தின் போக்யமே மௌனபாக்கியமே
மேலாநிலையைக்கண்டு மேவியின்புருக்கொண்டு
மின்னுந்தயை மழை பெய்வாயோ
என்ன செய்வாயோ (உ)

2 பூதமுதனுதமும் பொய்யென்ற போதமும்
போயொளிரனுபூதியே பொருணீதியே
புனிதபரஞ்சோதியே புவிக்காதியே
வேதனைப்பிறப்பேழும் விட்டொழிந்துற்றுவாழும்
மெய்வழி சேர்த்திடுவாயோ
கைவிடு வாயோ

3 இழிவாமெண்ணங்க ளெண்ணி
யென்றும் பாபங்கள் பண்ணி
எள்ளளவேனு நன்று இரக்கமகன்று
இருகான்மாடுபோலுழன்று இருப்போனென்று
கழிக்கக்கோபிப்பாயோகதியே ஸ்தாபிப்பாயோ
கனமாமச்சுத ஞானமே அனக வானமே (உ)

---

(59) இராகம் - உசேனி - ரூபகதாளம்

பல்லவி

உற்றதுணை யேதுனை யன்றி
ஓதுமாதி நாதனே (உற்ற)

அனுபல்லவி

பற்றற்றுள்ளொளி யோங்கவே
பரமாநந்த வெள்ளந் தேங்கவே (உற்ற)

சரணங்கள்

1 அவித்தையினுட்டங்க ளோய்ந்து
அணுவணுவாய்த்தேய்ந்து தேய்ந்து
சிவயோகசமாதி செய்யவே
சீரருளைப்பெற் றுய்யவே (உற்ற)

2 ஜகஜீவேசுரரெனும் பொய்யைச்
சாராமனீயாகிய மெய்யை

அகமுகத்திலன்பாகச் சேர்க்கவே
ஆகுலங்களைத் தீர்க்கவே (உற்ற)

3 தேசிகனுருவாயெழுந் திந்தத்
தேகாதிநீயன்றெனத் தந்த
மாசிலைக்ய வாக்ய மர்மமே
வானச்சுத ப்ரம்மமே (உற்ற)

---

(60) இராகம் - நாத நாமக்கிரியை - அடதாளம்

பல்லவி

உன்னுலுன்றனைக்காண்ப தல்லாமலென்றன்
உணர்விஞற்காண்ப துண்டோ வுடையவனே (உன்)

அனுபல்லவி

தன்னுலென்றுரைப் போர்க்
கன்னிய முறுஞ் சீர் (உன்)

சரணங்கள்

1 மிடியிருள்கெடமேல் விடியுமுதயம்போல்
அடிமுடியற்றெங்கெங்கும் நடனம்புரிந்திலங்கும் (உ)

2 மகிழ்மறைமுடிவாய்ப் புகற்றிரிபுடிபோய்த்
திகழகண்டபொருளே சுகந்தருந் தெருளே (உ)

3 வினைநசித்துய்யும் கனமருட் செய்யும்
தனியச்சுதநிலையே யனுபவ மலையே (உ)

---

(61) இராகம் - உசேனி - அடதாளம்

பல்லவி

எக்காலத்திலுன்சேவை நேருமோ நாயேன்
எனதிடரடங்கலுந் தீருமோ தேவா (எக்)

அனுபல்லவி

துக்கசாகரத்திற் புக்கிவிஷய போகத்திற்
சொக்கிமிகத்தவிக்கு மிக்கொடியேனுக்கையையோ(எ)

சரணங்கள்

1 நேற்றிருந்தாரின்றில்லாச் சேதியை நினைக்கில்
நெஞ்சமஞ்சுதென்செய்வேன் பீதியை யின்றே
மாற்றிவான்சகஜச மாதியைச் செய்து
மன்னும்பரமாத்மானு பூதியை யடைய

வரமருளுமனவரத மடியேன்
திரமுடன்றுதிசெய்து நின்றேன்
மருமமேனினிமௌனஸ் திதியே
நிருமலாக்ருதிநிகழும் பதியே (எக்)

2 சகலசங்கற்பங்களுந்தாழவே பாவத்
தருக்களடியோடற்று வீழவே நன்ருய்
அகம்புறத்திலுமொளி சூழவே பர
மானந்தாம்புதியி லாழவே என்றும்

அதுவிதென்னுங்குறியகன்று மேலாய்ச்
சதுமறைகண்மொழிவதற்கப் பாலாய்ப்
பொதுவினடமிடும்புனித விண்ணே
இதமளித்திடு மென்றன் கண்ணே (எக்)

3 வீணுய்க்காலங்கழித்து விட்டேனே இந்த
மேதினிமாயைக்குட்பட்டேனே பாவி
காணுதருளைமதி கெட்டேனே யழியுங்
காயமெய்யென்றுகளித் திட்டேனே மேலாம் (எக்)

ககனமயமெங்கும் மகவும் ஜோதி
மகிமையுணர்ந்தக முகமுற்றிடு நீதி

நிகழடியவர்க்கு நேரும் பணியே
திகழுமச்சுத தெவ்வ மணியே (எக்)

---

(62) இராகம் - காபி - ரூபக தாளம்

பல்லவி

எங்கும்மபரி பூரணமே
எவைக்கு முதற் காரணமே (எங்)

அனுபல்லவி

பொங்குங்கடலரு ளானே
புரிவாயருளெங் கோனே (எங்)

சரணங்கள்

1 எதிரார்ந்திடு தூலத்திலும்
எழிற்சூக்கும மூலத்திலும்
அதின்மேலுடற் சீலத்திலும்
அப்பாலுறுங் கோலத்திலும் (எங்)

2 சுத்தவெளியி னுதத்திலும்
தொனிக்கும் வேத கீதத்திலும்
அத்துவிதசு போதத்திலும்
அருந்துரியா தீதத்திலும் (எங்)

3 நிச்சலமன வீனத்திலும்
நின்மலான்ம ஞானத்திலும்
அச்சுத தாசன் த்யானத்திலும்
அதுவாகிய மோனத்திலும் (எங்)

---

(63) இராகம் - கேதாரகௌளம் - ரூபகதாளம்

பல்லவி

எண்ணினுல் நெஞ்சங் கலங்குதே
என்னசெய்வேன் ஏழையானடியேன் (எண்)

அனுபல்லவி

கண்ணினு லளவிடப் படாக்
காட்சியே யருளாட்சியே கருத்தே (எண்)

சரணங்கள்

1 பெண்டுபிள்ளை யுடனிலம் பொருள்
பெற்றேமிவை நிலையென்றே மருள்
கொண்டிருக்குங் கொள்கையா லழியும்
கோலத்தைமாயாஜாலத்தைக் குறித்தே (எண்)

2 நாடிக்கருத்தின்படி யுண்டு
நாரியரை யணைந்து கொண்டு
வேடிக்கையாயிருந் துயிர்போம்
விந்தையை வருநிந்தையைக் குறித்தே (எண்)

3 திருவருட்சுரந்தெந் நாளும்
சீரச்சுத தாசனை யாளும்
பெருமையை மறந்ததால் வரும்
பிறப்பையும் படியிறப்பையு மினி (எண்)

---

(64) இராகம் - கமாஸ் - ஏகதாளம்

பல்லவி.

எத்ததிசமாதி யோக
இன்பபோக மெய்திடுவென் (எத்)

அனுபல்லவி

முத்தரனுபூதி யான
மோனகவெளி கூடிக் குரு
மூர்த்தியினரு ளொடி இரு
கண் மூடி யான் (எத்)

சரணங்கள்

1 பசுபதிபாச மென்றிடும்
பசைநசித்திசை மிகப்படும்
அசிபத தாத்பர்யத்தினற்புத நிலைகண்டு பர
மானந்தரச முண்டு
அன்புளங் கொண்டு யான் (எத்)

2 சொல்லகன்று தொழிலகன்று
துரியங்கடந்து நின்று
அல்லும்பகலில்லா நெறி
யடைந்தகம்பவ நீங்கியது
வாய்த்தூங்காவணந் தூங்கி
யருளொளி யோங்கி யான் (எத்)

3 அமிதப்ர காசமதாய்
அச்சுதவி லாசமதாய்
ஸமரஹிதாத்மபோத சாகரந்தனைச்சார்ந்து நல்ல
சாதனங்களிற் றேர்ந்து
சஞ்சலந்தீர்ந்து யான் (எத்)

---

(65) இராகம் - முகாரி - திரிபுடைதாளம்

பல்லவி.

எந்தக்காலத்தில் எந்த ஞாலத்தில்
நைந்துதேகம் விழுந்திடுமோதான்

இதற்கேன் கர்வித் திருக்கின்ருய்
மனமே நீ தினமே (எந்த)

அநுபல்லவி

இந்தவாறிக்கா யத்தை நாடி
ஏமாந்த மாந்தர்களெத்தனேயோ கோடி (எந்த)

சரணங்கள்

1 பொய்யெண்ணங்களே யெண்ணும்போதோ
புன்ருெழில்களே நண்ணும் போதோ
ஐயமின்றியன்ன முண்ணும்போதோ
ஆனபின்பயர்ந்து றக்கந்தான் பண்ணும்போதோ (எ)

2 வானுதிதத்வங்கள் விரிந்து
வந்தவாறயிக்ய மாய்ப் பரிந்து
ஆனவிழிகள் பஞ்சடையத் திரிந்து
அறிவுமாறியாயாச மீறிமேலாவி பிரிந்து (எந்)

3 இன்பதுன்பங்களில்லாச் சீராய்
எங்குநிறைவஸ் துவென்றெழிற் பேராய்
அன்பிலகச்சுதஜோதியை நேராய்
அடைந்தென்றுஞ் சுகமாகவே வாழ்ந்திடப்பாராய் (எ)

---

(66) இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

பல்லவி

என்றனுவி தேவன் சேவை
என்றுசெய்வேனே நன்றுய்வேனே

அநுபல்லவி

இந்த லோகபந்தம் போகவே
ஏக மாகவேமோக மேகவே (எ)

சரணங்கள்

1 இயங்குஞாதுரு ஞான ஞேயம்
எனுந்த்ரிபுடிபோய் மோனம்
தயங்குஞ்சீரியரினஞ் சேரவே
தன்னுள்ளாரவே தாபந் தீரவே (எ)

2 பகர்ந்திடுமிந்திரியங்க ளென்னும்
பத்மங்களலர்ந் திலங்க
அகமுதிக்குஞ் சிற்ஜோதிக் கோலமாம்
அருட்கல்லோலமாம் ஆதி மூலமாம் (எ)

3 மன்னு மின்பரசஞ் தோய்ந்து ஜனன
மரணதரங்கங்க ளோய்ந்து
மின்னுமச்சுத வெளி நீதமாம்
விமல போதமாம் வேதாதீதமாம் (எ)

---

(67) இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

பல்லவி

எந்தாய்வரந் தந்தா தரிப்பாய்
இன்றேயெதிர் நின்றே (எந்)

அநுபல்லவி

சிந்தாகுலம் தீர்ந்தொளி நலம்
சேரவேயின் பாரவே சாரவே (எந்)

சரணங்கள்

1 அண்ணாவினை நண்ணாதயை
பண்ணாயக முகத்தோர்
கண்ணாடிடு முண்ணாடிடும்
காரணமேபரி பூரணமேவிரி (எந்)

2 அப்பாமன தொப்பாய் நினே
இப்பாரிடை யுற்றேன்
தப்பாமொழி செப்பாய் வழி
சாதனேபார்த்தினிச் சோதனே யேன்றனி (எங்)

3 அய்யா மிகு துய்யா மறை
மெய்யாமின் னச்சுதனே
செய்யாயிதம் கையாவிதம்
சேர்த்தடியாரொடு காத்திடுமேம்படு (எங்)

---

(68) இராகம் - அடாணு - ஆதி தாளம்

பல்லவி

எப்படி கடைத் தேறுவனே
இச்சிறியே ைெரு ஏதுவையுமறியேன் (எப்)

அனுபல்லவி

அப்படி யிப்படி யாமெனலகன்றடி
யாருள்ளிலகருளே பாருள்ளும் பொருளே (எப்)

சரணங்கள்

1 மைவிழியாரிடமைய லெனுஞ்சண்ட
மாருத மடங்கவில்லே நிதம்
ஐவகைப்புலனெனு மரிகளால் விளேயு
மரும்போ ரொடுங்க வில்லே
மெய்வகையையடைய விருப்பம் கதிக்கவில்லே
பொய்வகை யற்றருளேப்போற்றித் துதிக்கவில்லே
கைவள்ர்கனியதின் கருத்தை மதிக்கவில்லே
தெய்வமொன்றென மனத் தெளிவுமுதிக்கவில்லே(எ)

2 ஈடணத்தி ரியங்களிச்சை யெள்ளளவு
மிகழ்ந்து தொலைக்கவில்லை மதி
யோடணு மகத்தெனு முண்மை யுணர்ந்தகந்தை
யொழிய நிலைக்கவில்லை
மூடநடையற்றகமுளரி விரியவில்லை
சீடனுரியனெனுஞ்செய்தி பிரியவில்லை
வீடணுகவானக மேகஞ் சொரியவில்லை
நாடநயனுனந்த நாட்டந் தெரியவில்லை (எப்)

3 பூரணவடிவது பொலிந்த னைத்திலுந்தனைப்
பொருந்தியுந் தானயலாய்ச்சொலுங்
காரணகாரியங் கடந்த நிஜாநந்தக்
கடலாய்த் தற்செயலாய்
ஆரணமுடி விளையாடுந்தூய குணியே
நாரணனயன்சிவ னுமமதி னணியே
சீரணியும் பரமதெய்வசிகா மணியே
தாரணியிலச்சுத தாசனரும் பணியே (எப்)

---

(69) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

எப்போகாண்பேனே ஏகாந்தமாய்
எங்கும் பூர்த்தியை யின்ப மூர்த்தியை (எப்)

அனுபல்லவி

அப்போதானந்தமா மவ்விடம் சொந்தமாம்
அடைவாறறியே ன்றிவிற்சிறியேன் (எப்)

சரணங்கள்

1 விடையபோக நீக்கி வெளியிலொளி யாக்கி
இடையருது நோக்கி யின்பவாரி தேக்கித்

தடையிலாதிலங்கத் தானதாய்த் துலங்க
அடையலாம் நிஜத்தை யாதியான சத்தை எப)

2 ஜீவபாவங்கெட்டுத் திரிபுடியேகித் தொட்டு
மேவலுங்கை விட்டு விஸ்ராந்தி பட்டுப்
பாவாதீத மான பர ஞானமோன
மாவெளங்குளித்தே மானதங்களித்தே (எப்)

3 தேசுலாநால்வேதம் செப்புமான்ம நீதம்
பேசினோனற் பாதம் பேணியுண்மெய்ப் போதம்
வீசமேலச்சுத தாசன்மா புனித
காசினியிலுய்யக் கண்கண்மாரி பெய்ய (எப்)

---

(70) இராகம் - முகாரி - அடதாளம்

பல்லவி

எப்போதகலுமிந்தத் துன்பம் சும்மா
இருந்தறிந்திடிலன்றோ பொருந்தும்பே ரின்பம் (எப்)

அனுபல்லவி

செப்புமாயையின் செய்கை வென்றிட
ஒப்பகன்றுள மோய்ந்து நின்றிட (எப்)

சரணங்கள்

1 பெண்டுபிள்ளைகளெனும் பெரியசம்சாரம் அதைப்
பேணப்பொருடனைத் தேடமிகுந்த விசாரம் தனைக்
கொண்டு பலகொடுமைகளைச் செய்தெந்
நேரம் தெருக்
கோலங்காட்டித் திரிந்தினிய காரசாரம் உடனே
உண்டுறங்கிப் பொழு தொருங்கு கழிக்கிறேன்
பண்டுவினையினாற் பாழுக் குழைக்கிறேன் (எப்)

2 சற்றுநிலையென நம்பொணுதிக் காயம் ஒரு
க்ஷணத்தில்வருந் தெரியாததாகி யபாயம் எனப்
பற்றகல நிலைநிற்கவொருமொழி ஞாயம் குரு
பரனுமினிமொழியாது மொழிந்திட்ட நேயம் புவியிற்
பெற்றுமுணராதுபேதை தவிக்கிறேன்
முற்றும்பவங்களை மூட்டைகுவிக்கிறேன் (எப்)

3 பகலிரவு மலை கின்றமனதின் சேட்டை யது
பாழ்த்துக்கதிதருமோன கனந்திகழ் வீட்டைத் ததி
சுகமடையபரதுரிய நிஜநிலை நாட்டை யருட்
சோதிவானகமேவுமெய்ஞ்ஞான பாட்டை யிதுவே
தகைமையச்சுத தாசன் பணியே
நிகமமுடியுறை நிபுண மணியே (எப்)

---

(71) இராகம் - நாத நாமக்கிரியை - ஆதிதாளம்

பல்லவி

எப்போதுமுன் சந்நிதியே யிருந்திடச்செய்
அப்பாகருணா நிதியே
நீயே கதியே (எப்)

அனுபல்லவி

துப்பாரகம் விரிந்து ஒப்பாய்நிலை தெரிந்து
இப்பாரிச்சை பிரிந்து தப்பாதன்பு புரிந்து (எப்)

சரணங்கள்

1 நன்னிலை நியாயமே நனிசிதா காயமே
மன்னப்ர மேயமே மறையபிப் ராயமே
வந்து ஞானம் வளர்ந்து மோனம்
மனது லீனம்
வாய்த்தவித்தை போய்த் தவத்தை (எப்)

2 மன்ருளிர் நீதமே மர்மப்ர சாதமே
என்றுமெய்ப்போதமே யிலகும் விநோதமே
இன்ன லகன்று இந்திரியம் வென்று
இருப்பின்ன தென்று
ஏற்படவே சீர்ப்படவே (எப்)

3 சிற்பர நீதியே திகழுலகாதியே
அற்புதஜோதியே யாத்மானு பூதியே
அன்பர் நேசனே யருட்ப்ரகாசனே
அச்சுத தாசனே
ஆண்டவனே தாண்டவனே (எப்)

---

(72) இராகம் - நாடகுறிஞ்சி - ரூபகதாளம்

பல்லவி

எப்போதெய்தி யீடேறுவேன்
எளியேன் யான் (எப்)

அனுபல்லவி

ஒப்போய்ந்திடு மோர் சொல்லானே
யுளங்கனிதேனைக்களங்க மில்லானே (எப்)

சரணங்கள்

1 வேதனையொழித்தேதனை யுறுஞ்
சாதனையினைப் போதனை புரி
நீதனைசுவி நோதனைக் குரு
நாதனைநாதா தீதனை யான் (எப்)

2 முத்தனையனு வத்தனை யொளிர்
அத்தனையென்றன் கத்தனை நிகழ்
நித்தனை ஞானு தித்தனைப் பிர
சித்தனைப்பரி சுத்தனை யான் (எப்)

48924
MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI.

3 பூசனை செய்வோர் நேசனைப்பவ
நாசனை ரவி தேசனையெங்கும்
வாசனை சித்வி லாசனைச்சிதா
காசனையச்சு தேசனையான் (எப்)

(73) இராகம் - இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

பல்லவி

எல்லாம் விட்டுப்பா ரிலங்கும் ஒளி
யெங்கும் பொங்கும் (எல்)

அனுபல்லவி

சொல்லாலேபய னில்லை
துட்ட மனமே தொல்லை (எல்)

சரணங்கள்

1 வில்லாரும்பிரம்ம வித்தை யல்லாத கல்விகளால்
வல்லாண்மை கொண்டெவர்க்கும் பொல்லாங்கு
செய்தழிவ (தெல்)

2 மாடுமக்களுமச்சு வீடும்படைத்தோ மெமக்
கீடெவரிங்கெனவு மூடமாய்ப் பேசுகின்ற (தெல்)

3 தீரவுதாரகம்பிரமு மென்றனைப் போல்
யாருக்குள்ளதென்றகங் காரங்கொண்டுழலகின்ற(தெ)

4 தாணுவிற்புருடன்போற் காணுந்தே காதியெல்லாம்
கோணுதிருக்குமென்று வீணவாக் கொண்டிருப்ப(தெ)

5 சந்தத மச்சுதனைச்சிந்தித்துலகி லுய்ய
வந்தமார்க்கந்தனை மறந்து திரிந்தலைவ (தெல்)

(74) இராகம் - எதுகுல காம்போதி - ஆதிதாளம்

பல்லவி

எவ்வா றுய்வாரோ
எதையெண்ணிச் செய்வாரோ
ஏதுவென்பதேது பூதல மீது (எவ்)

அனுபல்லவி

முவ்வவாவையடுத்து மூதறிவை விடுத்து
வெவ்வினைக் குள்ளானவர் வீணனமானவர் (எவ்)

சரணங்கள்

1 தன்னிகரில்லாஞான சாத்திரங்களைக்கல்லாதார்
தசவிதேந்திரியங்களாஞ் சத்துருக்களை வெல்லாதார்
மன்னு மதியோங்குசன் மார்க்கத்திற்செல்லாதார்
மாசகலும் ப்ரம்மப்ர காசமாய் நில்லாதார் (எவ்)

2 எள்ளுளெண்ணெய்போ லெங்கு மிலகருளைப் பாராதார்
இருவினைகளென்னுங்கா ரிருட்படலந் தீராதார்
உள்ளும்புறம்பு மொன்று யொளிருண்மையை யோராதார்
ஓர்மொழியுட்கருத்தின் சீர்மையைச் சேராதார் (எவ்)

3 தினமாகுலத்தைத்தரும் ஜீவச்செயன் மாய்ந்தில்லார்
சென்மத்திற்கேதுவான கன்மயோக மோய்ந்தில்லார்
அனுமானமற்று ரியரையடைந்து தன்னை யாய்ந்தில்லார்
ஆதியச்சுதாம்ருதாம் போதியிற் றோய்ந்தில்லார் (எவ்)

(75) இராகம் - சங்கராபரணம் - ஆதிதாளம்

பல்லவி

எளிதாக நேருமோ (எளி)

அனுபல்லவி

தெளிவாமாமதி சீரணி பேரணி
ஜீவ சாட்சிதேவன் காட்சி (எளி)

சரணம்

1 பேதமும்வாதமும் பேசுதன் மாயாது
பேர்மிகு மோர்மொழிச்சீர்மையை யாயாது
மாதவ மாற்றிச்சுகாம் போதியிற் றேயாது
வானச்சுதானந்த ஞான மேயாது (எளி)

---

(76) இராகம் - சஹானா - ரூபகதாளம்

பல்லவி

எளியனேன் என்ன செய்வேன்
எவ்வா றுய்வேன் (எளி)

அனுபல்லவி

ஒளியாரென துருவினை யான்
ஓராதுழன் றேன் (எளி)

சரணங்கள்

1 மதிவி ஹீனமாய்மருண்டு மாயாஜகவாஞ்சை கொண்டு
இதுகாறு மெப்பயனுங்காணேன் எதுவுந் தோணேன் (எளி)

2 எந்தநாளுமிடரானைய வேசெய்மன மாசெனும் மெய்ய
அந்தகார நீங்கவில்லை யருளோங்க வில்லை (எளி)

3 உபயமின்றி யுயருமோன மொளிரா ரணசாரமான
அபரோட்சாநந்த கீர்த்தி யச்சுதமூர்த்தி (எளி)

---

(77) இராகம் - எதுகுல காம்போதி - ஆதிதாளம்

பல்லவி

என்னையாளுந்தேவ தேவனே வந்
தின்று முன்னின்று நன்று (என்னை)

அனுபல்லவி

நின்னையேநாடி னேனும் வினை
நீக்கிச் சுத்த மாக்கி (என்னை)

சரணங்கள்

1 தாவுமனச்செயல்கள் யாவுந்தவிர்ந்தோரினி
மேவுமேலானகதி யீவாய் அவாவாய் (என்னை)

2 எத்தோடமுமின்றுகு மத்துவித சித்தாந்த
வத்துவெனுமெய்ஞ்ஞான வித்தே சதசத்தே (என்னை)

3 பூதலபோகங்களால் கேதப்ர யோசனங்கள்
மீதடைந்த திம்மட்டிற் போதும் போதும் (என்னை)

4 சந்ததமுமானந்த சிந்துமயம் வாழ்ந்திட
எந்தன் கருத்திலெண்ணி வந்தேன் பணிந்தேன் (என்னை)

5 ஞானிகளுய்யும்விதம் சோனைமாரி சொரியும்
தானே தானுமச்சத வானே செந்தேனே (என்னை)

---

(78) இராகம் - கேதார கௌளம் - ரூபகதாளம்

பல்லவி

என்றனிரு கண்மணியே
ஏதமகலும் போத விண்மணியே (என்)

அனுபல்லவி

நன்றிலகுந் தியான மோன
நாட்டச்சின்மய ஞானவானக மான (என்)

சரணங்கள்

1 எந்தாய் நினையன்றித் திக் கில்லை
யென்றெண்ணிச்சர ணெய்தினன்றோல்லை
சிந்தாகுலத்திமிரந் தீரும்
சீரருட்பாரும் பூரணப்பெயராரும் (என்)

2 சிவராஜயோக சமாதி
செய்திடுஞ் சீரியர்க்கு நீதி
தவறுநெறி தனைக்கை கூட்டும்
தானாத்திக ழானந்தரச மூட்டும் (என்)

3 பாங்காகு மலருண்மணம் போலும்
படிவத்துள்ளுயிர் போலு மேலும்
நீங்காவணமெங்கு மொளி செய்யும்
நேரிலச்சுதப் பேரருண்மாரி பெய்யும் (என்)

---

(79) இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

பல்லவி

என்றுமறவா வின்பந் தாராய்
என்மனக்குறை தீராய் (என்)

அனுபல்லவி

நன்றருளிராதி மன்று ளானே
நம்பினே னெம்பி ரானே (என்)

சரணங்கள்

1 இப்பாரை யணங்கைப் பொன்னைக்
கைப்பாய்க் கருதுமவர்க்குத் தன்னைத்
தப்பா தளித்துப்பாலிக்கு மன்னை
யொப்பாமென்னப்பா நின்னை (என்)

2 வேற்றுமையகன்றிட விவரமாய்ச்
சாற்றிடுங் குருவின்சொற் றிரமாய்த்
தோற்றங்களனைத்தும் நஸ்வரமாய்
மேற்றிகழவே பரமாய் (என்)

3 அச்சுதப்பொருணிலை தெரிந்து
மச்சில்லகக் கமலம் விரிந்து
மெச்சியிருகண்ணீர் சொரிந்து
நிச்சலதுதி புரிந்து (என்)

---

(80) இராகம் - புன்னுக வராளி - திரிபுடைதாளம்

பல்லவி

என்ன செய்வேன் எவ்வாறுய்வேன்
என்றனுருயிரானே யின்பக்கனிதேனே (என்)

அனுபல்லவி

பொன்னம்பல நடனுங்கரி
தன்றனுளி பொருந்தாது
போக்கினேன் வீண்பொழுதந்தோபூதல மீது (என்)

சரணங்கள்

1 ஓங்கிச்சினம் பாசம் சூலம்
ஒடுதண்டங்கூர் வாளாதியாயுத ஜாலம்
தாங்கிப்பகடேறிச் சாலவுமிந்த ஞாலம்
தத்தளிக்க வந்தகன்ருன்சார்ந்திடி லந்தக்காலம் (என்)

2 கவலையற்றிருகண்கண் மூடிக்
கணப்போதாயினுந்தான் கருத்தொடு கூடி
நவநவகாட்சியாய்மே லவிரரு ணுடி
நனியுருது புரிந்தேன் றீவினைபல கோடி (என்)

3 தீராவிருண் மாயைத் தொல்லை
தீர்க்குஞ்சமமில்லாச் சீருறுமொரு சொல்லை
ஆராய்ந்து சொப்பனத்தின்கண் ணுயினுமெல்லை
யற்றௌிருமச்சு தாநந்தம் பெற்றிட வில்லை (என்)

---

(81) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

என்னகத் தீசனே
இந்த வேளை
தந்தருளுன் திருத் தாளை (என்)

அனுபல்லவி

மின்னகண்ட பூர்த்தியாய்
மேதினிமீதினி லேதிக மாதியே யருள் (என்)

சரணங்கள்

1 ககனுரவிந்த நீதி காணுஞ்சரீரமாதி
அகிலாரோபங்க ணுச
மானசு தான மெய்ஞ் ஞானமே நானெனத்திகழ் (எ)

2 கீர்த்திமேவுமார்யனுய்க் கிளருஞான சூர்யனுய்ப்
பார்த்திவ்வாறென் றுரைக்கப்
பாவப்ப டாவகை யேவொளிர் கேவலநிலை (என்)

3 இச்சமயமாயையேகி யின்புறவேயென் பாகி
அச்சுத தாசனை யாதரி
ஆரணகாரணபூரண பேரணி பெறும் (என்)

---

(82) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

என்னகைம்மாறுனக் கினிபுரிவேனப்பா (என்)

அனுபல்லவி

அன்னதையறியேன் யான் சிறி போனப்பா (என்)

சரணங்கள்

1 தன்னைக்கைகாட்டித் தாண்முடிசூட்டித்
தண்கட லாட்டினை கண்கடலூட்டினை (என்)

2 பூரணக்கிருபையொடு புவிதனின் மேம்படு
பொருண்மயஞ்செய்தனை யருண்மழை பெய்தனை (எ)

3 அன்பர்கணேசனை யச்சுத தாசனை
அருட்குண விந்தனே குருநிஜாநந்தனே (என்)

---

(83) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

என்னதிடங் கொண்டு நீ மனமே
உன்னைமறந்து திரிகிறுய் தினமே (என்)

அனுபல்லவி

பொன்னைத் திடங்கொண்டோ மாதரவனி
பொய்யுடலைக் கண்டோ நீசொல் லினி (என்)

சரணங்கள்

1 கானலுதகத்தோடிந்திர ஜாலம்
கனவுபோலழிந்திடு மென்று ஞாலம்
ஞானநெறிநின் றுய்யும்வழி தனை
நாடாதினி மாயைமயமா கினை (என்)

2 மாற்றிலகும் பொன் மகுட முற்று
மண்டலந்தனை யாண்டுநிக ரற்று
நேற்றிருந்த நிருபரின்று வெந்து
நீருவதைநீபார்த் திருந்து மகிழ்ந்து (என்)

3 அங்கை நெல்லிக்கனியென நம்மை
அகம்புறங்காட்டிய மிகு செம்மை
துங்கநிஜாநந்தன் வழிநில் லென்று
சொல்லச்சுததா சன் மொழி யகன்று (என்)

---

(84) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

என்னப்பா நின்னையல்லால்
இல்லைகதி யாளாய்ததி (என்)

அனுபல்லவி

தன்னைப்பார்ப்போ ரகத்திற்
றுண்டவமாடும் மினி கூடும் (என்)

சரணங்கள்

1 காரண காரியம் கடந்த நிராமயம்
பூரணனெனும் பெயர்
பூண்டவனே யாண்டவனே (என்)

2 காணப்படா ததாய்க்கனமகத் தணுவதாய்த்
தோணும் பொருளாய்த் தனி
துலங்கிடுவோனே யருளானே (என்)

3 அச்சுதனீசன்விதி யாதிதேவர்க டுதி
நிச்சலாநந்தாத் மக
நிர்க்குண தேவே யென் கோவே (என்)

---

(85) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

என்னவித மாக யான்
இன்படைந் தீடேறு வேன் (என்)

அனுபல்லவி

துன்னுமிருண்மாயை யின்னம்
தொலைந்திடவுமில்லை தொந்தமீ தென்னதொல்லை (எ)

சரணங்கள்

1 நாசவுடலைநா னென்று
நம்பிநாய்போலு ழன்று
காசினியில்யான் பட்ட
கஷ்டங்களை நினைக்கக்
கலங்குதேமன மிக்க (என்)

2 வஸ்து நிலை யோராது
மதிமயங்கி மண் மீது
புத்திரரில்லா ளென்னும்
பொய்ப்போகங்களை மேவிப்
பொழுதொழித்த பாவி (என்)

3 செப்பரிய சீ ரன்னே
ஒப்பாயுளத்தி லுன்னே
எப்பொழுதுங்கோரி நின்றும்
இன்னமிப்புவியின் மேல்
எளியேனேச்சோதித் தால் (என்)

4 எவரெனக்கா தாரம்
இங்குனேயல்லாலிந் நேரம்
அவஸ்தாத்ரயங்கண் மீதாம்
அச்சுதப்பெய ரானே
அருளானந்தத் தேனே (என்)

---

(86) இராகம் - பைரவி – திரிபுடை தாளம்

பல்லவி

என்னேக்கைசோர விட்டாயே
லென்ன செய்வேன்
இந்நிலத்தெவ்வாறெளியேனினி துய்வேன் (என்)

அனுபல்லவி

அன்னேயாயருளாசை பெருகும்
நின்னேயே நிதநெஞ்சகத்துண்ணினேந் துருகும் (என்)

சரணங்கள்

1 அவமாயந்தோ மண்ணி
லவிவே கத்தினுற்பா பங்களதிகம் பண்ணி
விவிதாகுலங்களாற் குண்ணி
வீணுளொழிப்போனு மென்றுன துளமெண்ணி (எ)

2 அகமாயாமாச கன்று
ஐயிந்தி ரியங்களாமரிகளே வென்று

திகழுந்திருக் மயமாய் நின்று
தெளியாதசந் தேக சித்தனிவ னென்று (என்)

3 தீதிலாத்தெய்வலோகத் தருவே
செப்பருஞ்சீர்மேவிடும் ஸ்ரீசற் குருவே
ஆதிமத்யாந்தமில் லருவே
அச்சுதாநந்தமூர்த்தியா மதுலித வுருவே (என்)

---

(87) இராகம் - உசேனி - ஆதிதாளம்

பல்லவி

ஏகஸ்வ ரூபப்ரகாசமே எங்குநிவாசமே (ஏ)

அனுபல்லவி

மோகமாதிகளை வென்ற முத்தர்களடையா நின்ற (ஏ)

சரணங்கள்

1 பொருணிலமும்பெண் போகம்
பொருந்துமவாவைத் யாகம்
தருமற்புதவி வேகம்
தயைசெய்யவேன் சந் தேகம்
மருளுருவாகிய மாயைசம் சார
வாதனையொழிந்து சன்மார்க்கத்தைச் சேரக்
கருமவலைகட்டுக டூரக்
கதிமுதலைக் கண்டுள மார
அருள்விளங்கிடு மகவிழி பெற்று
ஆதியானசோதிவானை யுற்றுத்
தெருளுறைந்திதர செயலினை யற்றுச்
சித்த நிலைத்திடுவித்தையைக் கற்று
இருளொழியமுழு நிலாவி லுலாவி
இன்னமுதினை யருந்தியின்பு மேவி

யெச்செயலுமிலா மோன
நிச்சயமுதவு நி தானச்
சிற்சுக மயமெய்ஞ் ஞான
உச்சிதகதி சௌ பான
அச்சுதகுருமணி யான (ஏக)

---

(88) இராகம் - மோகனம் - ஜம்பை தாளம்

பல்லவி

ஏகாந்தவீட்டினி·லிருக்கத்தயை புரிவாய்
ஏகமயமாகிச்சுக போகமுறப் பரிவாய் (ஏகா)

அனுபல்லவி

மோகாந்தகாரமது முற்றும்பாழ்பட நீங்கி
முன்னிலைச்சுட் டொழிந்துதிகழ் தன்னிலையிலோங்கி

சரணங்கள்

1 கற்பனைகளொழிசிதா காசநிலவர மாகிக்
கருத்தறியாக்காமுகர் காணத்துஸ்த்தர மாகி
அற்புதமாயெங்குமொளி ரந்நிலையிற்றிரமாகி
அனுபவாநந்தவெள்ளத் தாழ்ந்துதற் பரமாகி (ஏகா)

2 அகக்கரணப்புறக்கரண வல்லல்கள கன்றே
அவத்தாத்ரியங்களவைக்கயலாக நின்றே
திகழ்கின்ற பரஞ்சோதிச்சித்துருவனு மென்றே
திடபாவமுடனேசந் தேகமொழித் தின்றே (ஏகா)

3 மனநலமிலங்கப்பரவஸ்து தந்திர மோர்ந்து
மருளொழியக்குரு மொழிந்த மௌனநிலைசர்ர்ந்து
ஜனனமரணங்கடரும் தாபத்ரயந் தீர்ந்து
சச்சிதா நந்தப் பொருளச்சுதமெனத் தேர்ந்து (ஏகா)

---

(89) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

ஏங்குதையோமன மெங்கடைவேன் கதி
ஏதுசொலாய்ஜக தீச தயா நிதி (ஏங்)

அனுபல்லவி

பாங்குடன் பூரணபாவமுற்றுய்ய முனம்
பாக்கியமில்லாக்கொடும் பாவியானேன்தினம் (ஏங்)

சரணங்கள்

1 குருவழிதானிலாக் குருடரைக்கூடிக்
கொண்டவமாகிடுங் கூத்துக ளாடி
ஒருவழியேனுமுணர்ந் துணராநமக் குங் கன
மோங்குசின்மயசுக முண்டோவிலையோ வென (ஏங்)

2 பெரியவர் மீதினிற் பிழைசொலும் பாவி
பின்முன்னுணராதுவாய்ப் பிதற்றிடுங் கோவி
வறியவர்க்காகுலம் வளர்த்தினதா லினி
வருமோநமக்குப்பர வாழ்க்கையென்றி கந்தனி (லேங்)

3 நானிலமீதிதனுன் மிக வெம்பினேன்
நற்றுணை நீயென நாடியே நம்பினேன்
ஆனதினுற்சிதாகாச வெளியினி
லச்சுத தாசனையாண்டருள் புரி நனி (ஏங்)

---

(90) இராகம் - உசேனி - ரூபக தாளம்

பல்லவி.

ஏதுக்கப்யாசம் புரிந்தனரோ கருத்
தென் றெரிந்தனரோ (ஏ)

அனுபல்லவி

சூதுக்குழைப்ப தீதென்ன முறை
வேதியராயாதிமா மறை (ஏ)

சரணம்

பேதச்சொலகன்றரு ளியை
சோதிச்சுக நிஜபே ரனு
பூதிச் சுகவடி வாகா
தாதிச் சதுர் வேதங்களை (ஏ)

1 சின்மயவடிவுறு மெனவயுந் தன்மய
மென் றுண்ணுடிடு
நன்மையையநனி யடையாததி
நின்மல நிஜ நிகமங்களை (ஏ)

2 "சீரணிசத்சித்சுகபரி பூரணஞானச் சுடரெனப்
பேரணியச்சுதவிபுவின் காரணமறியா தாரணம் (ஏ)

---

(91) இராகம் - கேதாரகௌளம் - சாப்புதாளம்

பல்லவி.

ஏதுக்கின்னமும் சோதனை
ஏழையேனை யீடேற்ற (ஏ)

அனுபல்லவி

ஓதுமறை மீதிலுறை
நாதனே நாதாதீதனே (ஏ)

சரணங்கள்

1 மேதினியெங்கும் சம் பூர்த்தி
மேவியிலங்கிடுஞ் சீர்த்தி
ஆதிபரஞ்சோதி கீர்த்தி
அத்துவிதாநந்த மூர்த்தி (ஏ)

2 பொய்திகழம் புவி மீது
பொய்ப்போகங்களாலோ யாது
எய்தவிடர் போதும் போது
மின்னமென்றனுலா காது (ஏ)

3 என்னிதயப்போதினிற் சால்
எந்தவேளையும் பெரும் பால்
உன்னுடைய தியானமல் லால்
உண்டோவுணர்ந்து மொருக் கால் (ஏ)

4 வன்பிறப்பீந்திடும் வெய்ய
மாயாவிருண்மாசு நைய
அன்போடருண்மாரி பெய்ய
ஆரச்சுதாகாரஞ் செய்ய (ஏ)

---

(92) இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி

ஏதேது செய்யுமோ என்னென்னசெய்யுமோ விதி
ஏது முணர்ந்தில்லேன் பேதையான் (ஏதே)

அனுபல்லவி

கோதையர்காதன் மேற்
கொண்டழியச் செய்யுமோ
போதரசம் பொழியச் செய்யுமோ (ஏதே)

சரணங்கள்

1 பொருந்தும்புத்தி யீனமாய்ப்
புவியினையச் செய்யுமோ
அருந்தவஞ் செய்யச் செய்யுமோ (ஏதே)

2 செத்துதிக்கு மாயையாந்
திரை மூடச் செய்யுமோ
முத்திநெறிகூடச் செய்யுமோ (ஏதே)

3 பொருளவாவாற் புல்லரைப்
புகழ்ந்திடச் செய்யுமோ
அருட்டிகழ்ந்திடச் செய்யுமோ (ஏதே)

4 துருக்கந்தரும் பாரகத் தோற்றந்
தோணச் செய்யுமோ
திருக்கொளிகாணச் செய்யுமோ (ஏதே)

5 துச்சவிஷ யபோகங்க
டுயரைத்திரஞ் செய்யுமோ
அச்சுதவான பரஞ் செய்யுமோ (ஏதே)

---

(93) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

ஏமாந்திறந்து போகாதே நீ நெஞ்
சேவிடயப்படுகுழி மேவிக்கெடு வழி (ஏமா)

அநுபல்லவி

காமாந்தகாரக் கலுடந்தீரக்
கதிதருமறை மொழி கண்டிசை
மதிதெளியா திக மிசை (ஏமா)

சரணங்கள்

1 எவ்விதத்துங்கீர்த்தி யுற்றோம்
இணையிலாச்செல்வம் பெற்றோம்
இவ்வாறே நாம் இருந்திடு வோம்
என்றுளமெண்ணித் திரிந்து
புன்றொழிலிணைப் புரிந்து (ஏமா)

2 மெய்யதைப்போல் விளங்குமிந்த
மேதினியை விரும்பு மந்தப்
பொய்யெண்ணம் போய்ப் புகழறிவாய்ப்
பூரணவடிவாகிய தனி
காரண மறியா தினி (ஏமா)

3 ஜெகமுகமாம் பற்ற கன்று
சித்திரபிம்பம்போ னின்று
அகமுகமாய் அதிசுக மாய்
அச்சுதனடியைக் கண் டிரு
நிச்சல நெறி கொண் டிரு (ஏமா)

---

(94) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

ஏழைக்கருள் செய்யு மையா
ஏனோவாது என்றன் மீது (ஏழை)

அனுபல்லவி

மாழையருண்மாரி சொரியும்
வானே வழி முந்த வந்தித்த (ஏழை)

சரணங்கள்

1 இகபோகமே திரமாய்
எண்ணிநிதந் தற்பரமாய்
அகம்பலசெய்தவ னென
அகற்றுதிடரேக வன்பாக (ஏ)

2 தன்மயம தாம்பரஞான
சாதனையிற் பூர்த்தியான
நின்மலர் கட் பாலென்றனையு
நிலைசெய் நீநன்று நின்றின்று (ஏழை)

3 நினைப்பொடு மறப்பதும்போய்
நிரதிச யானந்தமாய்த்
தனித்ததுவாகி யச்சுத
தாசன்கதி சேரத்தாரை (ஏழை)

---

(95) இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

பல்லவி

ஏனின்னமிரக்கம் வாராதோ
எளியன்செய்த தீதோவினி யாதோ (ஏனி)

அனுபல்லவி

ஆனந்தத்தாண்டவ ராயனே
அப்ர மேயனே (ஏனி)

சரணங்கள்

1 நானெனலகன் றுய்ய
வானருண்மாரி பெய்ய
ஞானந்தழைக்குந் துய்ய
மோனநிலையிலுறச் செய்ய (ஏனி)

2 பூவலயத்திற் பண்டு
தீவினைகடி ரண்டு
மேவக்கலக்கங் கொண்டு
பாவியான்படுந்துயர் கண்டு (ஏனி)

3 எச்சமயமுந் திர
நிச்சயமுன்னும் வர
சச்சிதாநந்த கர
அச்சுத பதவியைத் தர (ஏனி)

---

(96) இராகம் - கேதார கௌளம் - ரூபகதாளம்

பல்லவி

ஏனின்னந்தயை செய்திடாமல்
இருப்பதெம்மிறையே யிடரொழித்திட (ஏ)

அனுபல்லவி

நானீயெனுஞ்சொ லீனமாய்நடு
நாட்டத்துண்ணவ நவமிலகிடு சுய வொளியே (ஏ)

சரணங்கள்

1 காகம்பலகோடி சேர்ந்திருக் கினுமொரு
கல்லின்முன்னிற்கப் படாதோ அந்தக்
கதைபோற் சற்றுன்கடைக்கண் பார்த்தால் ஜன்ம
கன்மங்களுச மாகாதோ
ஆகையாலினியடாதடா திவ் வாது
அன்னியருன்னையல்லாலகதி யேது
மாகலையன்பொடு வாழ்த்திடு மேம்படு
வான்பொருளாகிவருமச்சுத குருமணியே (ஏ)

---

(97) இராகம் - எதுகுல காம்போதி - அடதாளம்

பல்லவி

ஏனோதயைவராது ஏழையேனென் மீது
ஏதுசெய்தேனோமுன் தீது (ஏ)

அனுபல்லவி

வானோரெய்திடு நீதி வளருமானந்த ஜோதி
மதியே கதியே பதியே பாவனஸ் திதியே (ஏ)

சரணங்கள்

1 தரைமேற் பொரு ளனைத்துந்
தாயைச்செங் கோனடாத்தும்
பரமே வரமே திரமே கருணாகரமே (ஏ)

2 தண்ணேரொளி மேனிறை
சத்தென்றோதுமா மறைப்
பண்ணே மண்ணே விண்ணே யென்னிருகண்ணே(ஏ

3 கருவேதனையைப் போக்கும்
காட்சியச்சுத மாக்கும்
குருவே வுருவே அருவே தேவ தருவே (ஏ)

---

(98) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ஏனோதயை வாராதெந்தையே
இது நீதி தானோ (ஏனோ)

அனுபல்லவி

வானோரடையுஞ் சுக
வானேசெந்தேனே யிக (மேனோ)

சரணங்கள்

1 பூவலயத்திற்கதி யாவுநீயென்று மதி
பாவித்தனிசந்துதி மேவிச் செய்தேனித்ததி (ஏனோ)

2 வீடுமக்களும்பெண்டு மாடும்பொய்யெனவிண்டு
தேடிநின்னன்பு கொண்டு நாடிநிற்பது கண்டு(ஏனோ)

3 பேரிலகுமாமறை சாரப்பிழம்பு நிறை
வாரியொளியாயுறை சீரச்சுதனே மிறை (ஏனோ)

---

(99) இராகம் - தேசிக தோடி - ஆதி தாளம்

பல்லவி

ஏனோவாரா தென்றன் மேற்றயை
என்னசெய்வேன் சின்னஞ் சிறியேன் (ஏ)

அனுபல்லவி

நீ நானெென்னனீங்கத் தானு மோன ஞான
பானூதய வானமே (ஏ)

சரணங்கள்

1 வேதநெறியையோர்ந்து சாதனங்களிற் றேர்ந்து
பேதங்களேதும் பேசாதருட்
போதா ரதீதாநந்த நாதனே (ஏ)

2 தீங்குலகாசைவிட்டு ஆங்காரபாவங் கெட்டுப்
பாங்காகத் தூங்காமற்றூங்குஞ்சீரீங் கென்னு
ணீங்காமலோங்கச் செய்ய (ஏ)

3 பாரடங்கலு நன்று வாரிவாகம்போ னின்று
நேராகச்சோராது பேரின்பமாரிபெய்யு
மேரச்சுதா காரமே (ஏ)

---

(100) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

ஏன்கெட்டுப் போருயடா
மனமடப் பயலே (ஏன்)

அனுபல்லவி

கான்விட்டலைந்தொருக் கால்
மான்கெட்டழிவது போல் (ஏன்)

சரணங்கள்

1 தண்ணீரெழுத்தைப் போல்
சதமிலிவ் வாக்கையின் மேல்
பண்ணிமோகபுத்தியை மண்ணிலணுவளவும்
புண்ணியபாவங்களை யெண்ணி நடவாது நீ (ஏன்)

2 ஜீவேஸ்வர ஜகத்தின்
செயலாய்ந்துணர்ந் தகத்தின்
பாவங்கடநதொளிருந் தேவன் சேவடிகளை
மேவலகன்றறிவில் லாவினத்தைப் போல நீ (ஏன்)

3 ஆனமதியாய் மின்னும்
அச்சுததாசன் மன்னும்
ஞானவிண்ணகமுறு மோனமுத்திரையதன்
மேனிலையைக் காணாது தீ நரகுக்காளாய் நீ (ஏன்)

---

(101) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

கடைக்கண்பார் நாத நாதனே (கடை)

அனுபல்லவி

அடைக்கல மென்றே னருளுடி நின்றே
னர்க்கமண்டலம்போய் நிற்கச்சீரதாய்க் (கடை)

சரணம்

1 நிகரில்பைராகி நிஜாநந்த யோகி
சுகரூபமாகிச் சொன்னவண்ண மேகி
அகமாளிகைமே லாதனத்தி லேறச்
சகமச்சுததா சன்கடைத் தேறக் (கடை)

---

(102) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

கண்டாரைக் கண்டு கொண்டால்
கடைத்தேறலாகும் இடர் போகும் (கண்)

அனுபல்லவி

பண்டாய் விளங்கும் பரா பரத்தைத்
தத்வகோசரத்தை யாத்ம சூத்திரத்தைக் (கண்)

சரணங்கள்

1 அற்புதமானதாய் அடங்கலுந்தான தாய்ச்
சொற்பொருளில்லாதமாச் சுகத்தை
என்றுமொளிரகத்தை மேவுமக முகத்தைக் (கண்)

2 இனிதூணனந்தலை யிழந்தேக மேனிலைத்
தனிதுரியாதீதமாந் தலத்தை
வாழுநிச்சலத்தைச்சாட்சி நின் மலத்தைக் (கண்)

3 தண்ணருளாரச்சுத தாசகரார்ச்சித
மண்ணுய்மற்று மாநிரா மயத்தைச்
சோதிமிகுஞ்சுயத்தை மோன நிச்சயத்தைக் (கண்

---

(103) இராகம் - கேதாரம் - ஆதிதாளம்

பல்லவி

கண்டால் காதல் தீரும்

அனுபல்லவி

விண்டால்யாவும் வெளியாய் மேவும் (கண்)

சரணங்கள்

1 தொண்டர்கலைசீர் சொலும்பத மதைச்சேர்
சுகமேவானு யகமே தானுய் (கண்)

2 செறிவாமைம்புலச் சேட்டைக ளகலக்
குறியா னென்றே நெறியா னின்றே (கண்)

3 மனமேகமதாய் மயக்கமெலாம்போய்க்
கனமேகாரணம் தினமே பூரணம் (கண்)

4 அழிவிலெலாநிறை யச்சுததாசனறை
வழிகோணுதாய் விழிகா ணுதாய் (கண்)

---

(104) இராகம் - தன்னியாசி - ஆதிதாளம்

பல்லவி

கண்டேன் கனவொன்றதன் கருத்தென்னடி நீ
கண்டுரையடி மானே

அனுபல்லவி

விண்டேனருந்திட மேதகையம் பரத்தில்
வேதியரோதிடுமாதி சித்தி புரத்தில் (கண்)

சரணங்கள்

1 பூரணனெனு மொருபுருட னிந்திர ஜாலம்
புரியமயிர்ப் பாலத்திலேறிக் கொண்டு
ஒரணுவினிற்றிரியுலக சித்திரங்களி
னுண்மையைக்காட்டினன் கண்மய
லூட்டினன் (கண்)

2 உளசித்தொளி யிடையா காசங் காட்டுகிறதாய்
உரைத்திணையகன்றெலாம் வல்லவனுய்ப்

பேசியடைந்தவரை யேசிப்பூரணப்பொடி
வீசியறி வழித்தான் பூசைகளைக் கழித்தான் (கண்)

3 கானனீரருந்திக் கனவிடந் தலைக்கேறிக்
கடந்த ஞானிகளெலாங் கண்மூடப்
போனவரு முன்னிலை யானவரும் பொருளும்
பூஜ்ஜிய முற்றிடவும் வேஜ்ஜியமற்றிடவும் (கண்)

4 கொண்டலேழு மெழுந் தண்ட சராசரங்
குலுங்கக் குமுறிக்கால்வீசி மின்னி
விண்டலம்பரவி விடாமழை பொழிந்தெலாம்
வேலையிலாழ்ந்திட மேலொளி சூழ்ந்திடக் (கண்)

5 நாடிக்கடலின் மேலா னந்த யோகநித்திரை
கூடி யச்சுதன் புரியுங் கோலத்தையான்
வேடிக்கை பார்த்திருக்க வேயிதற்குள் விடிந்து
விட்டதினிப்பொழுது திட்டமுடனெழுது (கண்)

---

(105) இராகம் - பிலஹரி - ரூபக தாளம்

பல்லவி

கண்ணானந்த சாகரனே ஜகத்
காரண பூரண (கண்)

அனுபல்லவி

பண்ணார்மறைப் பதத்தகத் துறை
பான்மைச் சோதியே பாராதியே (கண்)

சரணங்கள்

1 மானிலத்தின் வாழ்க்கை மொழியும்
வானத்தின் வின்மையா யொழியும்

ஆனதான் மதியமுதம் வழியும்
அருண்மறை பொழியும்
ஞான சுகா தீத மூர்த்தியே
நலிந்திடச்செய்வாயென் ஞார்த்தியே
மோனசுகாதீத கீர்த்தியே
முழுதும் பூர்த்தியே
முச்சுடர்முதலாய்ப் பரவிய
உச்சிதகிரண சுகோதய
சச்சிதாநந்த தயாலய
அச்சுத தாச னகாம்புய (கண்)

---

(106) இராகம் - இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

பல்லவி

கதிர்விட் டெரிந்திடும் பரவடிவம்
கண்டுங்காணுது மண்டல மீது (கதி)

அனுபல்லவி

எதிர்வீட்டிருந்திட வேகமதாகும்
இறப்பொடு பிறப்பெனு மிருவினைபோகும் (கதி)

சரணங்கள்

1 மோனநிலையாமொரு மொழிவழி காட்டும்
ஆன பூரணமதினடைவுகை கூட்டும் (கதி)

2 சீருறவேண்டினுற் றெரிந்துற வேணும்
ஆருறத்தனதுளே யானந்தந் தோணும் (கதி)

3 சச்சிதாநந்தமயந் தனித்தினி தோடும்
அச்சுததாசனக மதில்விளை யாடும் (கதி)

---

(107) இராகம் - சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

கத்தனே பரிசுத்தனே ரட்சித்தருளுவாய் மா
கலைநீதி நிலையாதி (கத்)

அநுபல்லவி

நித்தனே நிஷ்களதீப தத்துவங்கடந்த சோப
அத்துவித சிற்சொரூப சிந்தாந்தப்ரதாப (கத்)

சரணங்கள்

1 வீதாகும் பிறவிக்குமிக விகலுறுத்தலின்
மிசையினி தேறித் திரியும்
கோதாகுங் குணமுள கூற்றுவனலக்கணுக்
கும்பத்தப்படத் தெரியும்.

பூதாரம் பொருளொடு புகன்றிடுந்திரி வித
புரிவெறியது புரியும்
தீதாகுலத்திமிரந் தீரக்கன்ருயமைக்குஞ்
சீரியர்க்கிசை விரியும்

சேதாவாகி வந்தருட் செய்தாதரிக்குந் திவி
பாதாளமடங்கலும் பரிபூர்ணமாகச் சவி
மேதாரவிலக்கென வியன்மெய்ச்சுடர் பரவி
மீதாய்த்தனித்து நனி மேவுந்துரிய புவி

மூதாநந்தம் விளங்க
பேதாநந்தம் மின்றச
நாதானந்தம் நவீன
போதானந்தம் பொருந்த

மாதாகங்கொடு மனதினி லெளியேன்
தாதாவென்றுனையே சர னுற்றேன்

ஏதா கிலுநெறி
யோதா யுரைப்பது
சூதா துயர்தெரி
யாதா சுதனுடன்
வாதா

ஆதாரத்திடை யாரக வான
மதினடம்பயி லற்புத மான
பாதாரவிந்த தொந்தத் யான
பரனுவதெநா ளச்சுத ஞான (கத்)

---

(108) இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

பல்லவி

கருணைக்கென்னகைம் மாறியற்றுவேன்
கத்தனேபரிசுத்தனே யென்னத்தனே யுன்றன் (கரு)

அனுபல்லவி

அருணிலை நாடும் அவருள் ளாடும்
ஆதியேபரஞ்சோதியே நீதியே யுன்றன் (கரு)

சரணங்கள்

1 சதுர்மறை முடிமீதி லமைந்த
சமரச நிலை தந்த
பொதுநிலையான புகழ்மெய்ஞ் ஞான
பூமியேசுக நேமியே சாமியே யுன்றன் (கரு)

2 எந்தனுக்கென்னை யீந்தருட் செய்ய
இன்பாகாரமா யுய்ய
வந்த தேசிக வள்ளலே யக
வாரண ஜகத் காரணபூரண வுன்றன் (கரு)

3 அருளஸ்தி பாதிப்ரிய ருபமாய்
அச்சுத சுப்ர தீபமாய்த்
தெருளுறவாண்ட செயலே பூண்ட
சீர்த்தியேதிவ்ய மூர்த்தியே கீர்த்தியே யுன்றன் (கரு)

---

(109) இராகம் - செஞ்சுருட்டி - அடதாளம்

பல்லவி

கருணைபுரிவாய் கண்டென்கவலை யெந்தாய் (கரு)

அனுபல்லவி

சரணமடைந்தே னுன்பொற் ருளை யிவ்வேளை (கரு)

சரணங்கள்

1 படருமாயைக்குட் பட்டுப் பாரினிற்ருென்று
தொட்டுத்
தொடருஞ்சன் மகன்மங்க டொலைக்க நிலைக்க (கரு)

2 சரமரசத்தோற்றந் தானசித்தகத் தேற்றம்
பிரமரசவெள்ளமே பெருக்க விருக்க (கரு)

3 நிருவிகற்ப சமாதி நிலையினிட்டானு பூதி
பெருகியச்சுததாசன் பிழைக்கத் தழைக்க (கரு)

---

(110) இராகம் - மாஞ்சி - அடதாளம்

பல்லவி

கருணைவிண்ணே கண்ணே என்றன்
கருத்திற்கிசைந்த மோன
காரணமான ஞான

அனுபல்லவி

அருணகோடிதேஜா காரமாய்ச் சச்சி
தானந்தாம்ருதபாரா வாரமாய் நாளும்

அடியாரின முய்யும்
படிவானருள் பெய்யும் (கரு)

சரணங்கள்

1 மித்தையவித்தையிருண்மிகத்தீர்ந்து தன்னை
மேவித் தழைத்திடுமேலோரைச் சார்ந்து மின்னும்
அத்துவிதத்தினுண்மையதை ரோர்ந்து பர
மாத்மானு சந்தானமதிற் றேர்ந்து வாழ
அடுத்தேனே யன்பு தொடுத்தேனே இன்னம்
அகலாத்தகை மன்னப்
புகலாவகை யென்ன (கரு)

2 தரியாதொருகணமுந் தாளுேடி யலையுஞ்
சலனசித்தங்கெடவாய்தனை மூடித் தானும்
அரியசமாதிநிட்டை யதைக் கூடித் திகழென்
அந்தரங்கத்தெப்போது மடிகளுேடி நிற்க
அறியேனே யறிவிற் சிறியேனே என்றும்
அதுவாகிய நீதி
பொதுவாகிய ஜோதி (கரு)

3 கர்ம்மானுஷ்டானபந்தங்களைப் பிரிந்து நிர்வி
காரச்சுடர்க்கொழுந்தெங்கணும் விரிந்து மிக்க
மர்ம்மமிலங்கும் ப்ரம்மமதைப் பரிந்து. மேவி
மகிழச்செய்திடுவாயென்மனந் தெரிந்து மாசின்
மதியோங்கும் மறையின் துதியோங்கும் சிந்தித
வரதாச்சுத மூர்த்தி
அரிதாகிய கீர்த்தி (கரு)

(111) இராகம் - நாத நாமக்கிரியை - அட தாளம்

பல்லவி

கரைந்து கரைந்தென் னெஞ்சம்
காண்பதெக்காலமோவுன்றன்கழற் கஞ்சம் (கரை)

அனுபல்லவி

நிரந்தரமன்பதைக் கொண்டு
நிகமாம்ருதமதனை யுண்டு (கரை)

சரணங்கள்

1 பொற்பொளியுமிழும் பால்
புணரியிலாழ்ந்து மேல்
அற்பகலும் பெரும் பால்
அனலின்மெழுகிட்டது போல் (கரை)

2 மோனமுறைமை யோர்ந்து
மோகாந்தகாரந் தீர்ந்து
ஞானவானகஞ் சார்ந்து
நானீயெனும்பேதம் பேர்ந்து (கரை)

3 பகையவித்தையை வென்று
பசிக்கெதுவேனுந் தின்று
அகலாநிலையி னின்று
அச்சுதப்பொருளு மென்று

(112) இராகம் - பிலஹரி - ஆதிதாளம்

பல்லவி

கவலை மாற்றுவாய் காப்பாற்றுவாய் (கவ)

அனுபல்லவி

அவனிமேலா தாரம் ஆருமின்றெனத்திரம்
ஆவலாய்நின்ருளே மேவினேனிவ் வேளே (கவ)

சரணங்கள்

1 காதலென்னும் வெய்ய காட்டுத்தீயால் வெந்து
கர்மசஞ்சித துக் கங்களான் மெலிந்து
ஏதுந்தோன்ருதலேயும்பேதையேன்முன் வந்து
இச்சித்தவண்ணமா யின்பெய்தவரந் தந்து என்றன் (க)

2 கற்பனேகளென்னுங்கல்மிஷங்க டீர்த்துக்
கலக்கந்தருமாங் காரமூலம் பேர்த்து
அற்பகலில்லாதா ரதிசயத்தைப் பார்த்து
ஆனந்தங்கொள்ளுமெய்ஞ்ஞானிகளினம் சேர்த்து
என்றன் (க)

3 வாரணஞ்சூழவனிவாஞ்சை யென்னு மார்த்தி
மாற்றிவாழச்செய்யுமாசான்ற சீர்த்தி
ஆரணங்கணுன்குமன்போடேத்துங் கீர்த்தி
அனுபவாதீத ஸ்ரீ அச்சுதாக்ய மூர்த்தி என்றன் (க)

---

(113) இராகம் - சாமா - ஏகதாளம்

பல்லவி

காக்கக் கருணையினி வருமோ
கலக்கமே தருமோ (கா)

அனுபல்லவி

பார்க்க நிஜாநந்தந் தெரிய
பரஞ்சுடர் விரிய பார்ப்பவன் (கா)

சரணங்கள்

1 உத்தமருளங்களித் ததுவா
யுறங்குந் தன்னருளாற்
சித்தசிதாகாசமா னவி
சித்ரமேடையின்மேற் சேர்த்தெனைக் (கா)

2 மழைநிசிபோலடிக்கடி வந்து
மறைக்கு மாமாயை
அழித்தல்லும் பகலற்ற வாழ்வில்
அமர்த்தியிச்சேயை யாருறக் (கா)

3 தெரியேன்மனக்கவலை நீங்கித்
தெளியும் யோசனை
அருளாயிதற்கென் செய்குவேன்
அச்சுததாசனை யாண்டவன் (கா)

---

(114) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

காணக்கிடையாத தங்கம் அது (காண)

அனுபல்லவி

தோணும்பொழுதே பவபங்கம்
எங்கும் விளங்கும் (காண)

சரணங்கள்

1 சாதனையாயோதச் சாற்றிடுமாவேத
கீதம்வினோதம்சுபோத மனு நீதம் (காண)

2 மேலொளிநாதாந்த மெய்யுணர்வேதாந்த
மூலங்கல்லோலஞ்சுசீல மனுகூலம் (கா)

3 ஆந்துணைப்பொருளிக அச்சுததாசனக
சாந்தம் மாபாந்தம் வேதாந்த மின்னேகாந்தம் (கா)

---

(115) இராகம் - காம்போதி - ரூபகதாளம்

பல்லவி

காணவேணுமே கர்த்தனடி
காணவேணுமே கர்த்தனடி (காண)

அனுபல்லவி

கோணுத நிலே யருணீதி
மாணுதி யானஜோதி (காண)

சரணங்கள்

1 தப்பாகுமவித்தையினுல் விரி
ஜகஜீவேசுரரெனப் புரி
முப்பாழுக்கப்பாலாய்த் திகழ்
மோனமோங்க மோக நீங்க (காண)

2 பன்னுஞ்சகலவுயிர்கட் பால்
பரமாகிய தன்னேயு மேல்
தன்னிடஞ்சகல வுயிர்களேயுஞ்
சாருமபாவ சாந்திமேவ (காண)

3 அச்சுதப்பேரொளியை நாடி
ஆனந்தாம்புதியி லாடி
நிச்சலவாழ்க்கையி னிலேபெற
நீயார மாயைதீர (காண)

---

(116) இராகம் - சரஸ்வதி மனோகரி - ஆதிதாளம்

பல்லவி

காணவேணு முத்தி
வேணும் பட்சத்தில் விரக்தி (காண)

அனுபல்லவி

காட்சியாகுந் துய்ய
கருணைமாமழை பெய்ய வுய்ய (காண)

சரணங்கள்

1 தோணுந்தோற்ற மெல்லாம்
தூய்மையாமொரு சொல்லாம்
சேனகாரம தென்று
தேட்டமோங்கிட நின்று நன்று (காண)

2 பேதவாதங்க ளற்றுப்
பிரம்ம வித்தையைக் கற்று
ஆதியினரு ளுற்று
அச்சுதாநந்தம் பெற்றுப்

பூதலந்தனி லொன்றே
பொருண்மே விடு மென்றே
மீதறைந்திடும் பண்டு
வேதவாக்கியங்கண்டு கொண்டு (காண்)

---

(117) இராகம் - யமுனா கல்யாணி - ஏகதாளம்

பல்லவி

காணுவிடிற் கலிதீருமோ
கண்மணிக்கதிரொளி நேருமோ (காணு)

அனுபல்லவி

தோணும்பேரருள் சொரி மேகத்தைச்
சுவிவேகத்தைச் சுக போகத்தைக் (காண)

சரணங்கள்

1 வேதமொழியின் விவரத்தை
வித்தக வெளிசித் திரத்தை
ஓதரும்பரா பரத்தை
ஓங்கார பீஜாங் குரத்தைக் (காண)

2 உத்தம புருடர்க ளார்த்தியை
ஒழிக்குங்கருணைப் பூர்த்தியை
அத்துவித மார்க்கக் கீர்த்தியை
அகண்டானந்த மூர்த்தியைக் (காண)

3 நசித்திடும் பஞ்ச கோசத்தை
நண்ணாதசின் மயவி லாசத்தை
அசிபதப்பொரு ணேசத்தை
அச்சுதப்ரம் மாகாசத்தைக் (காண)

---

(118) இராகம் - செஞ்சுருட்டி - ரூபகதாளம்

பல்லவி

காணுமோ காணாதே
கண்ணாருங் காக்ஷிதான் (காணு)

அனுபல்லவி

மாணதாம் ஞான
வான மேனிலே (காணு)

சரணங்கள்

1 வேதநெறி யோராது
மெய்யறிவைச் சேராது

நீதமாஞ் சேதி
யாதி ஜோதிதான் (காணு)

2 தீவினைக ளோயாது
ஜீவச்செயன் மாயாது
யாவுமாய் மேவும்
தேவன் சேவைதான் (காணு)

3 ஆரருளை நாடாது
அச்சுதனைப் பாடாது
நேரிலின்ப சாரா
காரப் பேரொளி (காணு)

---

(119) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

காணேன் காணேன்
கடைத்தேற வேறே கதி (கா)

அனுபல்லவி

சேணுலகோர் பேரொளிசேர்
தேவநிரஞ்சனசுபாவ சுகமேவ (கா)

சரணம்

1 மோன ஞானிக ளுய்யும்
முறையருண்மாரி பெய்யும்
வானிலையே மேனிலையே
வாழமனதயர்ந்துவீழ வெளிசூழ (கா)

2 அற்பகலின்ருய் மின்ன
அருளிரங்காயி தென்ன
முற்பழியோ பிற் பழியோ
மூடனறியேனருணுட நலந்தேட (கா)

3 ஈண்டிருண்மரு டீர்ந்திடும்
இதயாம்பரஞ் சேர்ந்திடும்
ஆண்டவனே தாண்டவனே
ஆதியச்சுதவிபு நீதி நிலைஜோதி (கா)

---

(120) இராகம் - முகாரி - ரூபகதாளம்

பல்லவி

காண்பேனோ கண்மணியானே யுனைக்
கலந்து தானே (காண்)

அநுபல்லவி

மாண்பே ரொளி வானக வெளி
மயநாட்டினில் மௌன வீட்டினில் (காண்)

சரணங்கள்

1 பாழ்மனஞ் செயும் பாதை யடங்கிப்
பஞ்சப்புலன்க ளொடுங்கி
ஏழ்பவமெனு மிடுக்கண் மேற்படு
மிருணீங்கவே யின்ப மோங்கவே (காண்)

2 கோதறப்பஞ்சகோசங் கடந்து
குறியற்றுத்தனி கிடந்து
ஏதொன்றுந்தலை யெடுத்திடாதலை
என்முன்சோதியை யிலங்குமாதியைக் (காண்)

3 மாசகன்றிடு மறைகளின் முடி
வாக்கியங்குரு மணிசொன்ன படி
ஆசித்தச்சுத தாசனுன்பத
மடைவதாகியே யல்ல லேகியே (காண்)

---

(121) இராகம் - கரஹரப்பிரியை - ஆதிதாளம்

பல்லவி

காலம் போக்கினேனே பாவி
காசினியாசை மேவியே வீண் (காலம்)

அனுபல்லவி

மேலானந்தம் வேண்டாது பேய்க்
கோலமாயைக்கூத்தாடிக் கொடியனுய் (காலம்)

சரணங்கள்

1 இடம்பொருளேவ ஞடி
எங்குஞ்சுவானம் போ லோடி
மடம் பெறுநெஞ்சால் வாடி
மயங்கிமானவாதமர்களைக் கொண்டாடி (காலம்)

2 இன்னலிந்திரியம்த்வே ஷித்து
இணையில்பேரொளி சேஷித்து
மின்னுதுடலம் போஷித்து
மெலிந்து மேலோரைச்சாலவுந் தூஷித்து (காலம்)

3 அனகமாமறைக ளோது
மணுவாய்மகத்தாய் மீது
மனப்போதினிடைமா ருது
வயங்குமாணச்சுத மதியைக் காணுது (காலம்)

---

(122) இராகம் - வசந்தவி - ரூபகதாளம்

பல்லவி

கைசோர விட்டாயே யானுல்
கதியேது காக்கக்காசினி மீது (கை)

அனுபல்லவி

மெய்சேருள்ளன்பு கொண்டருளன்னே
மேலெனவே நம்பினேனுன்னை யென்னை (கை)

சரணங்கள்

1 முத்தரடியிணைப் பணிவிடைகளை
நித்தம் பத்திபுரிந்துய்யா தகிலத்திற்
சித்தம் பிரமித்துத் திரிந்துழன்றிடு
மத்தமதியினனிவனென்று இன்று (கை)

2 தன்னிலை கரதலாமலகம் போல்
மின்னத்தெரிவித்த தேசிகருக்குப்
பின்னராகுலத்தைத் தந்திடுவோரின்
முன்னோனிவனெனவேயுன்னிப் பன்னி (கை)

3 சபலன் கபடன்பல விதத்திலு
மபராதியாயினு மன்னித்தினி
உபயமில்லாதொளி ரச்சுதனே
கிருபை செய்யென் றுயர்கண்டு கொண்டு (கை)

---

(123) இராகம் - கேதாரம் - ஆதிதாளம்

பல்லவி

சகஜநிலையானந்த சாகர சாட்சியே
சர்வ பரிபூரண காரண (சக)

அனுபல்லவி

நிகமாந்தரங்கமாம் நிமல நிஸ்ஸங்கமாம்
நிலைத்த பரம்பொருளே நேரருளே (சக)

சரணங்கள்

1 மேலானதர்மமாய் வேதாந்தமர்மமாய்த்
தாலத்திலங்காதியே தனிச்சோதியே (சக)

2 அருளச்சுத சாமியே அகிலாந்தர்யாமியே
இருளவித்தை நாசமாய் இரியச்செய்வாய் (சக)

---

(124) இராகம் - காம்போதி - திரிபுடைதாளம்

பல்லவி

ஜகதாதாரப்ரம்மமே அகமறியாமர்ம்மமே
சாட்சியின் பொருளே காட்சிசின்மயத்தெருளே (ஜக)

அனுபல்லவி

சுகதாயகத் தருவே சுடர்விரிமெய் யுருவே
சுஜனுளிலக்கின்விந்தமே நிஜாநந்த மே (ஜக)

சரணங்கள்

1 சோரா தருண்மாரியைச் சொரியும்வானின்மேகமே
சீரார்திருக்கின்வை போகமே
காராரிருண்மாயையைக் கடிந்த கதி ரேகமே
ஆராவமுதாலவாலமே தாராய் சீலமே (ஜக)

2 சொல்லும் பொருளுமின்ருய்த் தோன்றும்
பொருள்கள் யாவும்
வெல்லவுண்டப்பாலாய் மேவும்
அல்லும்பகலுமொன்ருயகம்புற மாயு லாவும்
வில்லோங்குமென்றன் கண்மணியே
நல்லோர் பணியே (ஜக)

3 நானிலத்தாசையென்னு நரஸுயின் கரையேற
மானுபிமானங்க ணீறத்
தானுகிஸ்ரீயச்சுத தாசன்கடைத் தேற
ஞானந்தருவதுன்பாரமே மோனு காரமே (ஜக)

---

(125) இராகம் - காம்போதி - ஜம்பை தாளம்

பல்லவி

சச்சிதாநந்தாத்ம சாரஜல நிதியே
சாட்சிசுகமாட்சிமை கடாட்சிஜக பதியே (சச்சி)

அனுபல்லவி

உச்சிதாநந்தநிஷ்டையைச் சதாமேவி மகிழ்
உத்தமருளேமோன சத்ததாகிய ஞான (சச்சி)

சரணங்கள்

1 சுத்தியிலுதித்த ரஜி தத்தை மிகவொத்த புவி
யத்தனையுமித்தையென வித்தகமாய்ச்
சித்தநளி னத்தினிடை நிர்த்தமிடு முத்திமுதல்
வித்தைசக ஜாத்வைதப தத்தையுறப்பாராய் (சச்சி)

2 மென்மலர யன்பரசி வன்மகித வன் முயலும்
இன்முனிகள் கன்மகுணத் தன்மை யொழிவாம்
பன்மறைக ணன் மொழிக ளின் மகிமைமுன்மருவும்
தொன்மை யொரு சொன்மௌனச்
சின்மய மென் னச்சுதமாம் (சச்சி)

---

(126) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

சச்சிதாநந்தசாட்சி நாதனே
சகதா தீதனே (சச்சி)

அனுபல்லவி

நிச்சலாநந்த நேமி யழுந்த
நினைச்சரணுகதி யென்றேன்
எனையாளத்தயையிலை யேன் (சச்சி)

சரணங்கள்

1 கனகருமங்க டின மோயாது
கண்டு செய்தின்பங் கொண்டாலு மண்மீது
நனவிற்சுழுத்தி ஞான மில்லாது
நற்கதியேது தீது
ஜனனபயாதி நிவாரண
மினிபுரிந்திடு மெழி லாரண
நனிமுடிவாக்கிய காரண
மெனுமச்சுதபரி பூரண (சச்சி)

---

(127) இராகம் - பலாம்சம் - ஆதிதாளம்

பல்லவி

சதசத்தே யானந்தந் தருமோன
சமரசக் ஞான சார விஞ்ஞான (சத)

அனுபல்லவி

அதுவிது நா னவனு மெனலோய்ந்
தருட்பெருஞ்சோதி யாயொளிராதி (சத)

சரணம்

1 கோதிலாத நால்வேதமா வாக்ய
மோதுமபேதபோதவை ராக்ய
நீதியைமேவவேதயை பாரும்
தீதிலச்சுதமாய்ப்பூதல மாரும் (சத)

---

(128) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

சதானந்தத்தாண்டவம் செயும்பாத வரந்
தாஜகந் நாத (சதா)

அனுபல்லவி

சிதாகாசத்திடையற் புதாகாரமா யொளி
ரதாமுறைதெரியச் சுதாம்ருதஞ்சொரிய (சதா)

சரணங்கள்

1 முத்தருஞ்சித்தரு முனிவர்களும்
மோதமாதவரு மூவர்களும்
நித்திரையாதிவிட்டு நினைப்புமறப்புங்கெட்டு
நிருவிகற்பத்தைநன்று மருவத்தனி நின்று (சதா)

2 ஜாதிசமயமதாசார மென்னும்
சழக்ககன்றனைத்திலுஞ் சம மின்னும்
நீதிவிளங்கும்படி நிகழ்த்து நிகமமுடி
நிஜப்பொருள் வெளியாகப் பசையாமிருளேக (சதா)

3 தனுமூன்றதிலவத்தைகண் மூன்றும்
தாண்டிச்சத்தாய்ப் பெருந் தகைதோன்றும்
தினகரனம்புலிக்கும் திவ்யதேஜசளிக்கும்
சீரகண்ட பதமாய் நேரி லச்சுதமாய் (சதா)

---

(129) இராகம் - தேசிகதோடி - ஆதிதாளம்

பல்லவி

சதோத யானந்தமே
தால மெங்கும்
மேலொளியரு டங்கும் (சதோ)

அனுபல்லவி

இதோபதேசிக மணியா
யென்னை யாண்ட
நன்னிலைப்பெயர் பூண்ட (சதோ)

சரணங்கள்

1 ஜகததிஷ்டான சத்தாய்
ஸமரஸஞான வித்தாய்ப்
புகழுறவே பிறங்கிடும் பிம்ப
பூதமயமா மாதி நிச்சய (சதோ)

2 அல்லையுண்டபகலைப் போலாய்
அடங்கலுமுண்டு மேலாய்
எல்லைகடந்தேக மாகிப்பே
ரின்பமளிக்கு மன்பரினங்களிக்கும் (சதோ)

3 வேதக சின் மாத்திரமாய்
விளங்கக நேத்திரமாய்ப்
போதவடிவாந் தனி யச்சுதவை
போகமார வரமரு ளுங்கம்பீர (சதோ)

---

(130) இராகம் - காம்போதி - ஆதிதாளம்

பல்லவி

ஸத்தா ஸாமான்ய ஸம்ப்ராப்தமே
ஸச்சிதாநந்த தீப்தமே (ஸத்தா)

அனுபல்லவி

சுத்தசுரூபோதய வான்
துணையான ஞானசுதாரஸ மோன (ஸத்தா)

சரணங்கள்

1 விண்ணொளிவிஸ் தீரணமாய்
விசுவசம் பூரணமாய்க்

கண்ணொளியின் காரணமாய்க்
கருணைசெய் யாரணமாய்த்

தண்ணொளியென்னக நீ ரஜமே
தனிலிலங்கிடுஞ் சகஜமே
அண்ணலெம்மச்சுதமே யஜமே
அத்துவிதாபரோட்சானுபவ நிஜமே (ஸத்தா)

---

(131) இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி

சத்பாவ ஸாக்ஷாத் காரமே
சாமமாதிவேத தாத்பர்யபோத (சத்பா)

அநுபல்லவி

சித்பானுமண்டலப்ரகாச மான
திருவருணிதான திவ்யக் ஞான மோன (சத்பா)

சரணங்கள்

1 சொல்லாச் சொல்லினீரு யல்லவில்லா தெங்குஞ்
சுத்தமாகி நின்று துலங்க நானென்று
எல்லா நீயறிந்து மேதுமறியார்போல்
என்றனைக்கை விட்டாலென்ன சீருண்டுமேல் (சத்பா)

2 ஏதின்னமென்னுலா காதில் வாழ்க்கையினி
லிருந்து மின்பமேது மிலையிம்மட்டிற் போதும்
பாதசாக்ஷியாயுன் பார்வையல்லாம லோர்
பற்றென்னுள்ளத்திலேற் படவில்லையருட்பார் (சத்பா)

3 கன்மயோகமார்க்க ரின்மானசத்திற்
காணொணப்ரபாவ காட்சியை மேவ

நன்மைசெய்யச்சுதாநந்த நாமமாரும்
நாதநின்னைக்கோரும் நாயேனையந்தீரும் (சத்பா)

---

(132) இராகம் - கேதார கௌளம் - ரூபகதாளம்

பல்லவி

சந்ததானந்த சாட்சியே சை
தன்ய காட்சியே (சந்)

அனுபல்லவி

சிந்தை தீரும் சேவைதாரும்
சித்தஞ்சேரும் சீரொளிகன மாரொளிமன (சந்)

சரணங்கள்

1 அமர்செய்யுமாயை யழித்தே காந்த
மடைந்தவருள்ள மகவுஞ் சாந்த
சமரஸ வான சாம்ய மான
சத்யக்ஞான சாகரகரு ணாகரவர (சந்)

2 அகலாதுபுறத் தகத்து மங்கையின்
அமலகம்போ லருணிறைந்து மின்
நிகமத்தின்சார நெறியா தார
நிர்விகார நின்மலதர சின்மய வர (சந்)

3 துவிததுஸ்ஸங்க சோகுதொலைந்து போய்ச்
சுயம்பச்சுதவத் தொந்தத் துரியமாய்த்
தவம்புரிந்துய்யத் தயை நீ செய்யத்
தடையேனைய ததிசொலு நிலை கதிவேறிலை (சந்)

---

(133) இராகம் - பைரவி - ரூபக தாளம்

பல்லவி

சபாபதே தயாநிதே
சதோதய நிச் சயமே (சபா)

அனுபல்லவி

அபாவஜகத் துபாதைக ளொழிய
விபாசித்திடுசுய நபோமய மதிலய (சபா)

சரணங்கள்

1 ஞானந்தரு மோனந்தனி
லானந்தநி தானக்கனி
நூனந்தெளி த்யானம் புகழ்
தேனந்தச மானந் திகழ் (சபா)

2 தீதக மறு மேதகையுறு
வேதக மொழி போதகமாய்
மாதவமிகு சாதுஜனு
வனுஸனு தனுவரத (சபா)

3 இருணிலைபுவி யிடைதுனி படு
மருணிலை மன மயலக னடு
அருணிலை யென தகவெளி யொடு
தெருணிலையனு தினநட மிடு (சபா)

4 தாரணியில் பேரணிநல்
லோருணர்வில் மேரணுவாய்ச்
சீரணிதொல் லாரண சொல்
காரணபரி பூரண கன (சபா)

தாமோம் சமோ ஹமூழ் துமோய்ந்
துமோ ட்சமோ ணமோர்ந் துமோ

டமோ கமோ தமோங் குமார்க்
கமோ துமா னமா மண்டல
மராதல மடங்கலுந்துதி
பராவிய பராபர கதி
இராப்பக லிலாதுறு மதி
நிராமய நிரஞ்சனத் திதி
சராசராத்மக சாஸ்வத
புராதன புருஷ புனித
விராஜித விபுத வினுத
ஸுராஜிதாச்சுத சுசரித (சபா)

---

(134) இராகம் - தேசிகதோடி - ஆதிதாளம்

பல்லவி

சமயமிதாதரித்திடா யெந்தாய்
தயாநிதே யன்பாய்ச் (சமய)

அனுபல்லவி

அமலமதிச் சுடரகத் தார
அசிபதத்தைச் சார (சமய)

சரணங்கள்

1 மண்ணிலெம வாதனையும்
மறு ஜன்ம வேதனையும்
எண்ணினெஞ் சங்கலங்குதினி யென்செய்வேன்
எவ்விதத்தி லுய்வேன் (சமய)

2 துதிமிகுந்தோங்குந் துய்யு
துரியசுபாவ முய்யக்

கதிவேறெருவருமிலை கண்டாய்
காருண்ய முண்டாய் (சமய)

3 பாராதியண்ட மெலாம்
படர்கானற் சலமாம்
நேராகத் தரிசித்தவருக் கேது
நிசியென்னுந் தீது (சமய)

4 சச்சிதாநந்த நீதி
தயங்கிடுமாத்ம ஜோதி
அச்சுதா நந்தக்கடலி லாழ
அருளொளி சூழ (சமய)

---

(135) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

சமாதியோகசாதனை புரிவாய்
பரிவாய் சகஜ (சமாதி)

அனுபல்லவி

எமாதியிறைவனைக் கொண்டாடி
இரவிகோடி எழிலை நாடி
இன்பங் கூடி (சமாதி)

சரணங்கள்

1 தன்னையுந்தனக்கா தாரத்
தலைவனையுங்கண்டுள் ளார
மன்னும்பரவெளியைச் சேர்ந்து
மகிழ்வு கூர்ந்து மயக்கந் தீர்ந்து
மதி யோர்ந்து (சமாதி)

2 மறப்புநினைப்பும் பாழ்த்துமேல்
வஸ்துவாகாரமா னுல்
பிறப்பிறப்பென்னும் பஞ்சுவேமே
பிறங்குநாமே பிரமமாமே
பேதம் போமே (சமாதி)

3 வஞ்சகமாயையின் கூறுய்
வயங்கும்யாக்கைக்கு வேருய்
நெஞ்சகமேயச்சுத வான
நிலைமையான நிபுணஞான
நிஜ மோன (சமாதி)

---

(136) இராகம் - கேதார கௌளம் - ஆதிதாளம்

பல்லவி

சம்சாரசள்ளை பொல்லாது மாயா
ஜால ஞாலபேய்க் கோல (சம்)

அனுபல்லவி

அம்ஸஸ்வ ரூபமாம் பே
ரறிவைப்பா ழாக்கும்
அறநெறிகீ ழாக்கும் (சம்)

சரணங்கள்

1 விடமேறும் விதம் போலாய்
விடயங்கண்மேலு மேலாய்
இடராழிக்குள் ளாழ்த்திடும்
எப்பொழுது நிஸ்ஸார
மென்றுரைக்கு மபார (சம்)

2 மெய்யாயிருந்து நாளை
வெய்ய நமன்வரும் வேளை

பொய்யாயதோ கதியிற்
புகச்செயுந் தப்பாது
பூதலத்தின் மீது (சம்)

3 ஞானந்தருமோன மோங்க
நனிகண்ணும் விண்ணுந் தேங்க
ஆனந்தமாரி பெய்யும்
அச்சுதனேயிந் நேரம்
அருள்பெருகப் பாரும் (சம்)

---

(137) இராகம் - அம்சத்வனி - ஆதிதாளம்

பல்லவி

சர்வசாட்சி ப்ரம்ம ஸார மர்மமே
தானாய்மின்னும் வானாய் மன்னும் (சர்வ)

அநுபல்லவி

நிர்விகாரமான நீதிஞான மோன
நிலையனுபூதியே நித்ய ஜோதியே (சர்வ)

சரணம்

1 சேண்டரையோடட்ட திக்குகளு முட்டத்
தாண்வஞ்செய்திட்ட ஸஜ்ஜனர் காணப்பட்ட
ஆண்டவனே நின்னை வேண்டினேனின்றென்னை
அன்புடன்கண்பாரும் அச்சுதப்பேராரும் (சர்வ)

---

(138) இராகம் - காம்போதி - ஆதிதாளம்

பல்லவி

சர்வசாட்சி காட்சி தன்மயமே
தானான சின்மயமே (சர்வ)

அநுபல்லவி

நிர்விகார நிரவயவ நிச்சல
நீதிநிகழும்வேத மோது நின்மல (சர்வ)

சரணங்கள்

1 எத்திரிபுமில்லாமலேக நிலையாய் எக்காலமும்
சுத்தவியல்பொடுதோன்றுஞ்சோதி மலையாய்
அத்துவிதநாம மடைந்துமலரின் மண
மாரும்வகையெங்கணு நேருமொளி நிர்க்குண
வத்துமயமெங்கும் வயங்குமாண்பு நிறைநிபுண
வானக மேனெறி யானமோன லட்சண (சர்வ)

2 ஐந்துவகை யிந்திரியங்களார்த்திகெடப் பரமாநந்த
சிந்துவினிடைப்படிந்துளந் தெளிந்திட
இந்திரவிசுடர்க ளென்னுமிரவு பக
லில்லாவிடநம்தென் றெண்ணிவாழு மதிக
வந்தைவகித்தொளிரு மாதபோதனரக
வாரிஜமுறுஞ்சுக சீரியதா மனக (சர்வ)

3 கற்பனைகடந்திடுங்கதி காரணமாய்க் கண்ணொடு
விணணும்
பொற்பொளி பொலிந்திடும் பரி பூரணமாய்ப்
பற்பலமதத்தரும் பரிவுகொளுமசங்க
பான்மையுற்றகம்புறம் பரப்ரம்மரசம் பொங்க
விற்பெருகுமச்சுதவிஙனுருவா யிலங்க
வெண்டினேனடியேனை யாண்டரு ளகளங்க (சர்வ)

(139) இராகம் - தர்பார் - அடதாளம்

பல்லவி

சர்வம்ப்ரம்ம மயம்
தானென்றுணர்ந் திருப்பாய்
தன்னுட்டானுய் பொறுப்பாய் (சர்வ)

அனுபல்லவி

நிர்வசனநிர்த்தொந்த நிரதிச யானந்த
நிலைநிர்மலநாயகமே அலைவில்லக மாய்ச்சுகமே (சர்வ)

சரணங்கள்

1 விவிதவடிவங்களாய் மேதினிமிசைக்காட்டி
விச்சித்ரமாமாயா விஷயபோகங்களூட்டித்
தவிக்கச்செய்யும் விட்சேபம் தானொழிந்து சுரூபம்
தத்தன்மயமதாக்கும் சித்தத்தியற்கை போக்கும்(சர்வ)

2 அறையும்பழுதைக்குவே ருமோகட்செவி சோதி
அரிக்கயலாமோவில்லாதப மின் னீதி
முறைமைவஸ்துவல்லாது மோகங்கொள்ளுவதேது
முன்னமென்னவே ஞானம் மின்னநன்னிலை
மோனம் (சர்வ)

3 வெளியிலில்லாதுதித்த மித்யாபுருட னென்னும்
மேயவகம்பாவத்தின் வேரைக்களைந்து மன்னும்
ஒளிபரவியகீர்த்தி யோங்குமச்சுத மூர்த்தி
ஒப்பற்றபதஞ்சேர்ந்து எப்போதுங்களி கூர்ந்து (சர்வ)

---

(140) இராகம் - பியாகடை - ரூபக தாளம்

பல்லவி.

சற்குருமணியே சதானந்த
சாகரகருணகர ஸ்ரீகர வர (சற்)

அனுபல்லவி

சிற்கனவிலாசமா யெங்கும்
தெள்ளமுதொளி வெள்ளம் பொங்கும்
நிர்க்குணநிஜ நிலை பெற்ற
நேரற்ற சீருற்ற (சற்)

சரணம்

1 விதிநிஷேதங்கண் மேவும்வினைகளை விண்டு
விரிசித்தார்த்த விவேகத்திடமொழி கொண்டு
பதிகூடஸ்தப்ரம்மயிக்கியங் கண்டு
பண்புய்யப் பண்டு
துதிமிகுமதிசுக லீனச்
சுடருமிழச்சுத மோன
கதிதருமாகலை ஞானக்
கண்ணுன விண்ணுன (சற்)

---

(141) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

சற்றுமுன்னின் னுன்றன் சேவை
தனைச்சாதிப்பா யென் னப்பா (சற்)

அனுபல்லவி

உற்றுமுன்னின் றேங்கும் விளக்
கொளியே பரவெளியே (சற்)

சரணங்கள்

1 ஓயாதபுன்கண் டரும்
உலகஜாலத்தைப் பெரும்
மாயவாழ்க்கைதன்னுல் மனம்
வாடினேனுனை நாடினேன் (சற்)

2 படிவிசும்பெல்லா மொன்ருய்ப்
பரந்துங்காணுததாய் நின்ருய்
முடிவில்லானந்தாம் புதியா
மோனமே பர ஞானமே (சற்)

3 நிச்சலநிலையாய் நின்றே
நினைப்புமறப் பகன்றே
அச்சுததாசன் யுான் சுக
மாகவேயிடர் போகவே (சற்)

---

(142) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

சாட்சாத்காரசுக சாகர தெய்வமே
ஆட்சியடையுங்கதி யாரவருளாய்த்ததி (சா)

அனுபல்லவி

மோட்சசாம்ராஜ்யம பேட்சித்தவர்க்கரு
டாட்சியிலாதுகண் காட்சியாய் விளங்கிடும் (சா)

சரணங்கள்

1 போதவடிவைச்செறி போக்குளவதையறி
யாதசமயநெறி யார்க்கயலாங்குறி
ஓதுஞ்சது ராரண மீதிலகுங் காரண
பேதநி வாரண நாதபரி பூரண (சா)

2 மேனிலயக வெளி வீதிசொரியுந் துளி
தேனுணும்பாட்டளி சீரதுவா ஙியொளி
தானகல்பகஸ்வய ஞானபரான் வய
த்யான நிராமய மோனசுகோதய (சா)

3 சோமரவி சேவித ஜோதிசு பாசித
தாமதயாச் சுத தாசமனே ரத
ஏமசிம்மாசன நீமநிரஞ் சன
நாம சனுதன சாமிகனு கன (சா)

(143) இராகம் - தேசிக தோடி - ஆதிதாளம்

பல்லவி

சாமிசதா நந்த
நேமிநேர்மை நிறைந்த (சாமி)

அனுபல்லவி

க்ஷேமமுறு மெய்ஞ் ஞான
பூமியேழின்மே லான (சாமி)

சரணங்கள்

1 திண்ணங்குரு வானவர்
செப்பிய சீரானவர்
கண்ணும் விண்ணுந் தண்ணொளி
கலந்தோங்கிடுந் தூவெளி (சாமி)

2 நித்தியப்பொருள்வே றென்று
நின்னையல்லாலில் லென்று
சித்தத்தினி தெண்ணினேன்
திருத்தாளிணைக ணண்ணினேன் (சாமி)

3 நிசிதிவா வெனும் பெயர்
நீக்கமாய் நிகழந் துயர்
அசிபதமா மித
மருள்செய்யமலாச் சுத (சாமி)

(144) இராகம் - இந்துஸ்தானி - ஆதிதாளம்

பல்லவி

சிதாகாச விலாசதேஜோ மயமே (சிதா)

அனுபல்லவி

சதாநந்தப்ர போத சந்த் ரோதயமே (சிதா)

சரணங்கள்

1 மாமறையோதும் மாண்பரெப்போதும்
நீமமுறுநிச் சயமே (சிதா)

2 முத்திநெறிசேர்த்திடும் மோகவிருடீர்த்திடும்
புத்தமிர்த போக்கியமே (சிதா)

3 மதசம்மதம் பெருத வகையாயோங்கும பேத
திதிதிகழ்ந்திடுஞ் சொயமே (சிதா)

4 கோரியடைந்தேனுனைத் தீராயென்றனூழ்வினை
யாருமச்சுதாஹ் வயமே (சிதா)

---

(145) இராகம் - சஹானா - ரூபகதாளம்

பல்லவி

சித்தசரோஜத்தி லொளிருந்
தேவதேவனே சுசீல (சித்)

அனுபல்லவி

சுத்தசத்வ குண மலையாய்
ஸத்தாமாத்திர நிலையாய் (சித்)

சரணங்கள்

1 உகம்பல்வு மெதார்த்தமாகி
ஜகம்புகழ்குரு மூர்த்தமாகிச்
சுகந்தரு ஞான தீர்த்தமாகி
அகம்பதலக்ஷி யார்த்தமாகி (சித்)

2 நீடத்துவ கிஷ் கர்மமாகிச்
சேடத்தையுடை தர்மமாகி
நாடற்கரிய மர்மமாகிக்
கூடத்த ப்ரம்மாகி (சித்)

3 மன்னுதியச்சுதப் பேராய்
எந்நேரமுமிறைஞ்சி நேராய்த்
தன்னுனந்த நிலேயிற் சீராய்
மின்னுரும் படிக்கருள் பாராய் (சித்)

---

(146) இராகம் - பிலஹரி - ரூபகதாளம்

பல்லவி

சித்ப்ர காசமே வர
த்ருக்விலாசமே நேசமே (சித்)

அனுபல்லவி

சத்பாவம் பெறும் தத்பாவ முறும்
மத்பாக்ய யோக்ய (சித்)

சரணங்கள்

1 நீநானுகிடு நிலேயை யோதும்
நெஞ்சகத்துக்கொண்டே னினேயெப்போதும்
தானுந் தித்திக்குந் தேனும்
ஆதிபெம்மானும் வானும் (சித்)

2 பாலாறுபொங்கும் படி யெங்கெங்கும்
பண்பின்ப வெள்ளம் பரந்திலங்கும்
காலாம்வேதச்சொல் நாலாமவைக்கப்
பாலாம் மேலாம் (சித்)

3 பாராதியெல்லாம் பாழென் றுய்யும்
பக்குவர்க்கருள் பரிவு செய்யும்
காரா மச்சுதப்பேராங் கலையின்
சீராம் நேராம் (சித்)

---

(147) இராகம் - மத்யமாவதி - ரூபக தாளம்

பல்லவி

சித்விலாச தேவதேவா
சேணுருமானு பாவா (சித்)

அனுபல்லவி

தத்வார்த்தவிசாரக் ஞான
ஸாரபாராவார மான (சித்)

சரணங்கள்

1 இத்ததியெனையாளா விடி
லெத்திறமுய்•வேனிப் படி
அத்தனேபிழை பொறுத்தென் முடி
வைத்திடுவாய் நின்றிரு வடி (சித்)

2 ஜனித்தற்கிடமாமல் லலை
அனுதினந்தருமாயா வலை
தனையகற்றிடத்துணை வேறிலை
யெனவெண்ணினனீ மேனிலை (சித்)

3 உச்சிதமறைமொழி வழி தெரி
நிச்சலமாதவர்க்கருள் புரி
சச்சிதாநந் தச்சுடர் விரி
அச்சுதமதி யமுதஞ் சொரி (சித்)

---

(148) இராகம் - மத்யமாவதி - ஆதிதாளம்

பல்லவி

சிந்தனைகளைத் தீராய்
வந்தென்ற னேராய் (சிந்)

அனுபல்லவி

சுந்தரசுகசிந்து மயந்தின
மெந்ததிக்கு மொளிருந்தெள் ளமுதமே (சிந்)

சரணங்கள்

1 தீதொழித்தெனை யாதரிப்பாயெனக்
கோதறு நின்பாத மடைந்தும்
சோதிப்பது நீதிய தாமோ
ஓதுமனக ஜோதி நாதனே (சிந்)

2 ஆணொடுபெண்ணலியெனு நாமம்
பூணுவித முள்ளும் புறம்பும்
கோணுது சுடர்க்கொழுந் தொளிருஞ்
சேணிலைமாணிக்க தீபமே (சிந்)

3 மருளுறுமனமாயை யொழித்திடும்
பொருளென்றும் புந்தி செழித்திடும்
அருளடியவரன் புட னடையும்
தெருளுடையச்சுதகுரு மணியே (சிந்)

---

(149) இராகம் - இராகமாலிகை தோடி - ரூபகதாளம்

பல்லவி

சிந்தாகுலந்தீரும் தேவனே
சிறியே னென்றன் (சிந்)

அனுபல்லவி

அந்தாத்ரியாதி நீதியே
இந்தோடினனேத்துஞ் சேதியே (சிந்)

சரணங்கள் - ஆனந்தபைரவி

1 திரமாய்ப்பொதுவாய்த் திகழ்ந்திடும்
அருமாமறையறை மேம்படும்
பரமானந்தபரித பாவன
தரமாமொளிசாந்தமே யென்றன் (சிந்)

2 தவறுதுன்றன்றுளினே யான்
விவிதமாகவேண்டியுந் தான்
இவணமாகச்சோதிக்கி லெனே
யவனியிலெவராளுவா ரென்றன் (சிந்)

பியாகடை

3 அம்புவியின் கண் ணல்லலுற்று ரன்றி
வெம்பவசம்சார வாழ்க்கையை
நம்பியார்கடைத் தேறினார்களி
யம்பு மெம்பிரானே யென்றன் (சிந்)

நீலாம்புரி

4 நீலம்பரவிடு மேக
ஜாலம்போலருண் மாரி
காலூான்றி வருஷிக்கும் வான்
மூலத்துரிய மூர்த்தியே யென்றன் (சிந்)

அம்சத்வனி

5 உச்சிதப்பொருளொன்றென நன்றாய்
எச்சமயங்களுமெச்சி யிறைஞ்சிடும்
நிச்சலாநந்த நீதி நிகழ்ந்திடும்
அச்சுத மென்னுமம்ஸஸ்வ ரூபமே (சிந்)

---

(150) இராகம் - காம்போதி - அடதாளம்

பல்லவி

சிவமே சிவமே அன்பர்
செய்யு மாதவமே
தீதிலாதப்ரபோத பாஸ்கர
தேஜகல்பக பூஜபர (சிவ)

அனுபல்லவி

நவமிலகுபத நளினதரிசனமாம் கனமாம்
ஞானமடைந்தது நானதாம்வர
மோனமருளக வான பர (சிவ)

சரணங்கள்

1 பாவனையாவும் பாழ்படவான் கேவலசுபாவத்தை
மேவியே விளங்க வெய்யனேன்
ஆவன்மிகுத்துன்னடிகளைச் சேவித்தேனென் மிடிகளை
அகலுமதரதைப்புகலுவாய்த் திர
வகை சகலத்திலுந் திகழும் பர (சிவ)

2 மாமதி சோதிமண்டல சீர் வளரற்புதாநந்த
நேமியிலாழ்ந்து வாழ்ந்திடநேர்
சாமநிகம நிஜநெறி யாமொருமொழி·சொலுங்குறி
தன்னிலையிலென்று மன்னுமின்பந்தர
இன்னமருமமதென்ன பர (சிவ)

3 மாசுறுவெவ்வினைக ளடர்ந்து வந்ததனாலாகிய
நாசவுடலினசை கடந்து

தேசுபழுத்ததிகதுதி வீசிடுமேலச்சுதகதி
சித்தித்திடச் செய்யு மித்தை பவஹர
கத்தனும் பரிசுத்த பர (சிவ)

---

(151) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

சிவமே செயும்
செயலறியேன் சிறியேன் (சிவ)

அனுபல்லவி

தவமே லவரெலாம்
சாருந் துதி யாரும் (சிவ)

சரணங்கள்

1 களங்கமிலா விண்ணுகிக்
கருணுதயத் தண்ணுகி
விளங்கு ஞானக் கண்ணுகி
மேவும் ஒளி தாவும் (சிவ)

2 வசனமுடிவாய் மன்னும்
வான்பொருளு மென்னும்
அசலமார்க்கத்திற் றுன்னும்
ஆதி சுயஞ் சோதி (சிவ)

3 மிக்கநின்மேலன் புண்டாய்
வேண்டிநின்றேன் றெண்டாய்
திக்குவேறில்லை கண்டாய்
தேசா ரச் சுதேச (சிவ)

---

(152) இராகம் - பியாக் - ரூபகதாளம்

பல்லவி

சிற்சுகோதய ப்ரபாவ
தேஜோமய தீபமே (சிற்)

அனுபல்லவி

தற்சொருபானந்த மோன
சாட்சிஞான வான மான (சிற்)

சரணங்கள்

1 புன்குரம்பையை நீக்கி மேலாம்
பொருணிலே தேடும்
நன்கடியாரின்புட னது
நாமென நிதம் நாடும் கூடும் (சிற்)

2 திருவருட்பெருகாதின்ன மென்ன
செய்குவேனே யையோ
விரைவிலென்குறையாற்று மென்றுள்ள
மேவினதென்ன மெய்யோ பொய்யோ (சிற்)

3 இருந்திடுந்தலமறந்திடு நிட்டை
யென்று நேருமோ
தெரிந்திலேனென்ன செய்வேன் றீவினை
தீருமோ கதி சேருமோ (சிற்)

4 கண்ணுரமுதே செங் கரும்பே
கற்பகக் காவே
தண்ணுரருட்சோதி நாட்டந்தழைத்திடச்செய்யென்
கோவே தேவே (சிற்)

5 மடமையைத்தருமாயாஜக வாழ்க்கை யுபாதி
அடைதனீதியோ நின்னடிமையச்சுதானு பூதியாதி (சி)

(153) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

சிற்பரவெளியே திருக்கொளியே
திருவருட்கனிந்த சிதானந்த (சிற்)

அனுபல்லவி

சற்குரு மூர்த்தி சகலசம் பூர்த்தி
தானாமெய்ஞ்ஞானநெறி கீர்த்தி (சிற்)

சரணங்கள்

1 வேதகீத நாதமோத காட்சி
போதசூர்யோதயசர்வ சாட்சி
நீதி நிகழுமாதி புருடனாகிய
நிராமயாச்சுத தேவதேவ
திடமொடுநடு நிலையடைந்திடும்படி பரிவாய்
அடியேனுக்கருள்புரிதடமகிதல மிசை
மிடிதருமக நிசிவிநாச விசேஷப்ரகாசவிலாச (சிற்)

---

(154) இராகம் - உசேனி - ரூபகதாளம்

பல்லவி

சின்மயமே ஸ்வயமே பர
தெய்வமேதயை செய்யினி வர (சின்)

அனுபல்லவி

நன்மையாமொருசொன்மயந் திணி
வென்மனமல ரின்மின்னுங்குரு மணி (சின்)

சரணம்

1 பகனிசியகல்வகை திகழ்ந்திடும்
பற்றறுமாதவர் மகிழ்ந்திடும்
பண்புடைப்பூரணப்ரம் மானு
பவரச மெங்கும் பொங்கும்
சுகநிதியே பதியே மதியே கதியே
சுபமே சொல்லச்சுதமே நிச்சல நிருமல (சின்)

---

(155) இராகம் - பைரவி - ரூபகதாளம்

பல்லவி

சின்மயவான்தேவனே பவந்தீராய்
சீரார நேராக வாராய் (சின்)

அனுபல்லவி

நின்மலமேலோங்கு நித் யானந்த
நிர்ப்பேதநிராமய நிர்த்தொந்த (சின்)

சரணம்

1 சந்ததமின்ப சாரந்தோயு மதியாய்ச்
சாயுச்யபதமீந்திடும் பதியாய்
அந்தரங்கத்யான மோனஸ் திதியாய்
அச்சுதப்பேராருங் கதியாய்த்
தொந்தங்களொழிவானவரக மன்னும்
ஜோதிப்பொரு டுன்னும்
வந்தைமறைகள் பன்னும்
வஸ்து வென்னும் (சின்)

---

(156) இராகம் - சங்கராபரணம் - ரூபக தாளம்

பல்லவி.

சின்மயானந்த மூர்த்தியே
க்ஷிதிசம்பூர்த்தியே சீர்த்தியே (சின்)

அனுபல்லவி

தன்மயானந்த சாகராம் ருத
சாரபூரணா கார கம்பீர (சின்)

சரணங்கள்

1 கற்பனையெனுமிருள் கடிந்து
கங்குல்பகலொன்றாய் விடிந்து
சொற்பொருளிலாச் சுடரே மலி
சோதி நிர்க்குண நீதியெம் மாதி (சின்)

2 மேன்மைகொண்டமறையுப நிடதங்கள்
விதிதவறா தாய்ந்தினி தங்கள்
பான்மையிற்சரி பார்த்திடும் பரி
பாகவிராகருள் ளேக வைபோக (சின்)

3 அச்சுததாசனக நீரஜ
மமலாம்பரமய்மாய் நிஜ
முச்சுடர்முதன் முறையா மதின்
மோனம் விளைவதானசுக் ஞான (சின்)

---

(157) இராகம் - இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

பல்லவி

சின்மாத்ர ஞான வானமே
செயலோய்ந்த ஸ்தானமே (சின்)

அனுபல்லவி

சன்மார்க்கத்தின் சோ பானமே
தானுன மோனமே (சின்)

சரணங்கள்

1 சத்வாதிகுணங்க ளின்மையாய்
சாசுவிதத் தன்மையாய்
அத்வைத காட்சி மேற்படும்
ஆரியனு லேற்படும் (சின்)

2 எப்போதுமேகமா யெங்கும்
இன்ப சாரம் பொங்கும்
ஒப்போய்ந்திலங்கு மாமறை
ஓதும்பொரு ளாயுறை (சின்)

3 சிவராஜயோகம் செய்திடும்
சீரிய ரெய்திடும்
சுவிநோதநாத ரூபமே
தூரம் சமீபமே (சின்)

4 அன்பாக நின்னிசைபாடி னேன்
ஆடினே னுடினேன்
என்பாலினந்தயை யேனிலை
ஈந்திடுவாய் மேனிலை (சின்)

5 மருளாருமாயை நீக்கிடும்
மாமதிசீ ராக்கிடும்
அருளாருமச்சுத ஜோதியாம்.
ஆனந்தாம் போதியாம் (சின்)

---

(158) இராகம் - உசேனி - ருபகதாளம்

பல்லவி

சின்மாத்ரஸ்வ ரூபதீபமே தேஜோமயானந்த
சேனுய்த்திகழ் த்ருக்ப்ரதாபமே சீரருட்கனிந்த (சின்)

அனுபல்லவி

தொன்மாமறை யுபநிட தங்கள்
சொல்லா வணஞ்சொலு நலங்கொள்
சன்மார்க்க சமஞ்சி தாத்ம
சார மெய்திடும் தகைசெய்திடும் (சின்)

சரணங்கள்

1 ஆதியந்தியமேது மின்ருய்
அல்லும்பகலுமகலா தொன்ருய்
ஓதுஞ்சரா சரங்களி னன்ருய்
ஒளிர்மணிக் குன்ருய்ப்
பேதநீங்கும் பெருமை பெற்றுப்
பேசாதவிசேஷ முற்று
நீதி நிகழுநின் பெருமையை
நிகழ்த்திடுவோர் ஜகத்தினில்யார் (சின்)

2 வந்துமர்ம்ம மாய்ந்து நன்று
வாழ்ந்திடாம ருழ்ந்து நின்று
சிந்தையுழலு மந்தனு மென்று
திரஸ்கரிக்க வின்று
உந்தனுள்ளந்தனி லொருக்கால்
உன்னினுலிவ்வுல கத்தின் மேல்
எந்தவாறிடுக்க ணுழிக் கரை
ஏறுவேன்கடைத் தேறுவேன் (சின்)

3 மானுபிமானந் தொடுத்து
மலேவுறுமன மருளேக் கெடுத்து

நானீயெனுங்குறியை விடுத்து
நடுநிலை யடுத்து
மேனாட்டமிகுந்து களிக்கும்
மேலோர்களபீஷ்ட மளிக்கும்
ஞானாக்ருதியான மோன
ஞாயசகித ஸ்ரீ யச்சுத (சின்)

---

(159) இராகம் - கல்யாணி - ரூபகதாளம்

பல்லவி

ஜீவ சாட்சி சைதன்யமே
சித்ப்ரகாச சிதாகாச (ஜீவ)

அநுபல்லவி

பாவ சாட்சி தேவ காட்சி
பராட்சாப ரோட்ச மோட்ச (ஜீவ)

சரணங்கள்

1 தானாகி யாதினிலும்
தட்டாமனின் றெளி செய்யும்
வானாதி யானசோதி
மதாந்தமணிபாந்த சாந்த (ஜீவ)

2 தாயாகியருண்மழை சொரி
தனிப்புயலென்றிசை விரி
நீயாயதாய மோன
நிதானமரு ஞான ஞான (ஜீவ)

3 பாராது பார்த்தென்றுந் துதி
பண்ணச்சுததாசனுண் மதி
சோராத சார போத
சுகோதய நிராமய ஸ்வய (ஜீவ)

---

(160) இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்

பல்லவி

சுகசாக ரோதயமே ஸ்வயமே (சுக)

அனுபல்லவி

அகஸாட்சி வான் ஆதியேபேதையேன்
அருட்செய்வாயே ஆதாரம் நீயே (சுக)

சரணம்

1 சசிபானுகோடி சமப்ர காசம்
தனைமேவியபாவன சித்வி லாசம்
அசிவாக்யமே லாயிலங்குங் கேவ
லாத்மஸாரமாமச்சுதப்ர பாவ (சுக)

---

(161) இராகம் - நாட்டை குறிஞ்சி - ரூபகதாளம்

பல்லவி

சுகஸ்வ ரூபமே ஜோதி
மிகுப்ரதாபமே ஆதி (சுக)

அனுபல்லவி

புகழோங்கும்ப்ரபோத காரண
அகநிவாரண பூரண (சுக)

சரணங்கள்

1 ஈனமாமிவ்வுலக பந்த
இருண்மருள் கொண்ட மந்த
மானதசேஷ்டைக ளொழிந்த
மாண்பருண் ணிறைந்த

2 ஞான நேத்ரமே நனி
த்யான க்ஷேத்ரமே தனி
யானவானசியெனு மேற் பத
மருள் செய்யதுலித வச்சுத (சுக)

---

(162) இராகம் - ஆரபி - ரூபகதாளம்

பல்லவி

சுகசாகர பரதெய்வமே
சுகுணாலய ஜோதிர் மய (சுக)

அனுபல்லவி

அகசாகரமதைக் கடந்தோர்
அடையும்பே ரருளேகனி பொருளே தனி (சுக)

சரணம்

1 குருவாயடி முடியிற் சூட்டிக்
கோதிலாவமு தூட்டி
அருவாயிருந்தேனைக் காட்டி
அகத்திரு ளோட்டித்
தருவாயாவையு மச்சுத
தாசனுக்கருளிய வுச்சித
உருவாயிலகிடு பூரண
ஒளியே துதி வெளியே மதி (சுக)

---

(163) இராகம் - சக்கரவாகம் - ஜம்பை தாளம்

பல்லவி

சுகந்தருவாய் துதியோங்குமாதி
சுருதிமுடிப் பொருளே திருவருளே (சுகந்)

அனுபல்லவி

அகமுகமுற் ரேர்பணிக்கா ளாகி
ஆத்துமஜோதியை யடைந்திடும் (சுகந்)

சரணம்

1 நானென நீயெனநவில் வாக்கியங்களவை நீங்கும்
நானிலந் தாங்கும் நனியோங்கும்
ஆனந்தநாட்டினை யன்புடனர
சாளுமென்றன் கோவே
அணிமலர்க் காவே அச்சுத தேவே (சுகந்)

---

(164) இராகம் - மலயமாருதம் - ஆதிதாளம்

பல்லவி

சுத்த ஞானமே ஜோதிவானமே (சுத்)

அனுபல்லவி

சித்தபங்கஜத்திற் சேஷித் திலங்கும்
சீராரானந்த தேவ ப்ரபாவ (சுத்)

சரணம்

1 மீதிலங்குநாதாதீதத் தெருளாய்ப்
போதசாகரத்துட் புக்கிமெய்ப் பொருளாய்
மேதினியிலுய்யும் மேன்மையன்பு செய்யும்
ஆதிவேதம்பன்னும் அச்சுதாத்ம மென்னும் (சுத்)

---

(165) இராகம் - தேசிக தோடி - அடதாளம்

பல்லவி

சுத்தநிர்விகார தேவா
இத்ததியிலாள வாவா (சுத்)

அனுபல்லவி

எத்தனையான் வேண்டினுந்தான்
சித்தமிரங்காதின்ன மேன் (சுத்)

சரணங்கள்

1 அன்னைதந்தை யாதி நீ யென
உன்னியுளத்தே நிற்றலை
நின்னருட்காணு தல்லவே
இன்னமதையான் சொல்லவே (சுத்)

2 சேயின்பிழை பொறுப்ப தின்ற
தாயினருட் சீரல்லவோ
நீயெனவே ருக்கின் மெய்யா
மாயைவசமாவே னையா (சுத்)

3 ஆசித்தடிபோற்று மச்சுத
தாசன் குறை யாற்றிடுவாய்க்
காசினியின் காரணனே
தேசிலகு பூரணனே (சுத்)

---

(166) இராகம் - இந்துஸ்தானி காபி - ஏகதாளம்

பல்லவி

சுத்தாத்ம ஜோதி நீதியே
சித்தாந்த சேதியே (சுத்)

அனுபல்லவி

இத்தாத்ரி மூலமான
சத்தாமாத்திர மெய்ஞ்ஞான (சுத்)

சரணங்கள்

1 தகைமிகுவேத சாரமாய்
சாட்சி கம் பீரமாய்
நிகரொழி நிலைமை யோங்கும்
நித்யானந்த வெள்ளந் தேங்கும் (சுத்)

2 பற்றகலச்சகலந் தானதாய்ப்
பரவிய வானதாய்
உற்றவுனதிசை திரமா
யுரைசெய்திட வென் றரமா (சுத்)

3 துட்டமனச் சேட்டையாவும் போய்த்
தூங்காமற்றூங்கிய தாய்
நிட்டைபுரிந்துய்யச் செய்யும்
நிதமருண்மாரி பெய்யும் (சுத்)

4 துன்புடைய மாயை நீக்கமாய்த்
துலங்கக நோக்கமாய்
அன்பர்களினங் களிக்கும்
அமலாச்சுதவீ டளிக்கும் (சுத்)

---

(167) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

சுபோதவான் சோதியே
தூயமறை யாதியே (சுபோ)

அனுபல்லவி

அபேதமாய் அதீதமாய்
விபாசமேன்மை மேவிடும்
ஆரகவெளியே பேரருளொளியே (சுபோ)

சரணங்கள்

1 பூரணப்பொருணிலை பொருந்திடவே
புகலரும்புவியிடைப் பொதுவாம்
புகழதுமேவிய வகையாய்த்
திகழுந்திருக்கோ தயசகித (சுபோ)

2 மாதவம்புரியக விழி யுடையோர்
மதித்திடுமாமணிச் சுடராய்
வயங்கிடும் வாக்கிய முடிவாய்
வளருமழகா மதியுசித (சுபோ)

3 யாதொருநெறி நலனதை யறியேன்
அகவிருளது கெட சுகமாம்
அசிநிலையோர்ந்திடு மதிசீர்
அருளுமனகாச்சுத ககன (சுபோ)

---

(168) இராகம் - இந்துஸ்தானி முகாரி - ஆதிதாளம்

பல்லவி

சுப்ரதீப ஜோதிநாதா
சுகபோத மோதவாதா (சுப்)

அனுபல்லவி

அப்ரமேய ஸொயவான
மானமோன த்யான ஞான (சுப்)

சரணங்கள்

1 பாரகத்திற் பாவி நானே
பலவாகவாடி னேனே
சீராயானிடேறத் தானே
திக்குவேறுகாண்கி லேனே (சுப்)

2 போகபூமியோர்ந்து நேராய்ப்
பூர்ண போகமேவிச் சீராய்
மாதவமேலோங்கிப் பேராய்
வாழநின்கடாட்சம் பாராய் (சுப்)

3 சாற்றுஞ்சர்வலோக பூர்த்தி
சச்சிதாநந்தாத்ம கீர்த்தி
ஆற்றுவாயித்தீன ஞார்த்தி
அச்சுதப்ரபாவ மூர்த்தி (சுப்)

---

(169) இராகம் - காம்போதி - ரூபக தாளம்

பல்லவி

சும்மா விருப்பதுவே சுகம்
சுகமேயக முகம் (சும்)

அனுபல்லவி

எம்மான்பரி பூரணனை
இதயவெளியி ஞடிக்கூடி (சும்)

சரணங்கள்

1 ஓடியேயொருகணத்திற் பறந்து
உலவியேயெங்குந்தன்னை மறந்து
ஆடியேயுழன்மனது பம்பர
மதுபோல்விசை யடங்கி மடங்கி (சும்)

2 அல்லும்பகலுமேகப் பே ரொளி
அதுதுரியா தீதப்பர வெளி
செல்லுமவருக்கேதருந் தன்னைச்
செம்மையிம் மொழிதேர்ந்து சார்ந்து (சும்)

3 பேரிலகிடும் பொருளல வென்று
பேதமற்றது வாய்நிலை நின்று
பாரிலச்சுததாச னுண்மையைப்
பகர்ந்தானெனப் பார்த்துக் காத்து (சும்)

---

(170) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

சுயஞ்சோதி யானே
சுக வானே
சொல்லற்றேனே தேனே (சுயஞ்)

அனுபல்லவி

பயந்தீர்த்தெனைப் பாலிப்பா
யயர்ந்தேன் மிகவென் னப்பா (சுயஞ்)

சரணங்கள்

1 சுத்தசுபாவஜோதி வான்
வத்துமயம் வாழநா யேன்
எத்தனை வேண்டினாலுந் தான்
சித்தமிரங்காயென் செய்வேன் (சுயஞ்)

2 முன்னிலைச்சுட்டொழிந்து மீது
மன்னுமுண்ணாட்டம்மா றுது
தன்னிலைதான்றரிசி யாது
என்னகற்றாலும் பய னேது (சுயஞ்)

3 கர்ம்மவிதூர மெய்ஞ் ஞான
தர்ம்ம முணர்ந்தோரா தீன
மர்ம்ம மிலங்குமாண் பான
நிர்ம்மலாச்சுதமா மோன (சுயஞ்)

---

(171) இராகம் - ரீதி கௌளம் - அடதாளம்

பல்லவி

சுருதியின்முடிவே சுயவடிவே சிற்
சுகச்சீலம் துலங்கிநிற்றலெக் காலம் சுபோத (சுரு)

அனுபல்லவி

அருளடியாரினம் அதாய்த்தினம்
ஆனந்த முறுங்கீர்த்தி யாருமகண்டமூர்த்தி (சுரு)

சரணங்கள்

1 கன்மானுஷ்டான மேலும் மேலுமெத்தனை
ஜன்மாந்தரஞ் செய்தாலும்
வன்மாயை யொழிந்தெக்காலும் வாழும் சுத்த
சன்மார்க்க வியல்பான
சகஜம் விளையுமோ ஞான (சுரு)

2 பலயோனிகளை மேவி யவலமாமிவ்
வுலகிலந்தோயான் பாவி
அலைவுற்றது போதுமென் னுவி யன்போடுப்புஞ்
சலம்போனின்னடி சேரும்
தகையித்ததி கண்பாரும் (சுரு)

3 ஜகவாசனை தீர்த்துச்சித்தஞ்சிவமா
யகவானக ஞ்சேர்த்துப்
பகவானுருவ மெனப் பார்த்துத் தானுந்தன்னை
அகலா நிஜ சமாதி
அருளச்சுத விபூதி
அரனமல கமலாசனனனகனென்றிடு மாதியரியிவ
ரருமை புரிதிரி விதவினைக ளொழிவா யிலகு சீர்
அமையுமற்புத மலரு மொளியே யகவெளியே
அவித்தை யிருளற அசிபதத்தை யுற
அருளும் பரிபூரண சனுதன
மாருங் கதிகா ரணகனுகன (சுரு)

(172) இராகம் - செஞ்சுருட்டி - ஏகதாளம்

பல்லவி

செயலகல மாதவம்
செய்து சீரடைவ தெந்நாளோ
சிறியேன்வெறியே னறியேன் (செய)

அனுபல்லவி

சுயமிலகாத்மாநந்தச் சோனேயினிதமாடி யருட்
டுவெளியினைக் கூடிக் கேவலத்தைநாடி (செய)

சரணங்கள்

1 ஐந்தொழிலைச் செயுமபேதன்
அணுமகத்தெனு மதீதன்
பந்தமகற்றுங் குருநாதன்
பகர்ந்திட்டவுரை பரிந்து பரி
பாலனமினி புரிந்து
மூலந் தெரிந்து (செய)

2 தனுவனித்திய மென்றெண்ணிச்
சர்வசங்கபரித் யாகம்பண்ணி
வனவரையுறுங் குகையை நண்ணி
மனோசங்கற் பங்க ளேதும் வாரா
வகையருமறை யோதும்
தகைமைகண் டெப் போதும் (செய)

3 மகிமையுற்றெவருக்குந் தெரி
வரியவஸ்து வென்றிசை விரி
அகவிண்ணிற்ருண்டவம் புரி
யமலாச்சுத தேவ னணி
யரவிந்தக்கழன் மேவப்
பரவிய ஜீவ (செய)

(173) இராகம் - சங்கராபரணதானவர்னம்
14 அக்ஷரம் - அடதாளம்

பல்லவி

சேனுகார சின்மயதேவே, தெருளாந்,
திருவருடிகழுந், திர மதாம், பரமதாந்,
திருக்கொளி பெருக்கெனுங், கன,
சீராருமறைமுடிமிசை யுறை,
நிராமயநன்னிலை மாரு வாரு
மாயோபாதை, தோயா தகமுகமாகிச்,
சுகமாய்ப் பகலிரவகல் வயங்கிடுந்தனி (சேனு)

அனுபல்லவி

காணும் பாருலகமெலா நீயாய்க்,
கண்டுளங் களித்திடுங், கடவுளரைப்
புரந்திடுங், குருவுருக்கொளு, மதுலித
கருணுகரப்பண்பொடு தானே தானு
யிலகு மாணுரு, மிறையவனெனு மமித
மகிமை சதாவளரும் சமானரஹித
சாசுவித தன்மை யுதவ,
வேருெருதுணையதேது, புவிமீது, நின
திணையடியலாது சுகாம்புதியிலாழ்ந்
தன, வரதமவசமா யதுலமாய்த்,
தழைத்திருக்க மனந்திடப்படும்,
வகைசெயினி மீது, வதைபட
லென்றர மல சகஜசுபாவ,
நெறிநிற்றிட, நேருற்றிட, நிகழுற்றிட,
சுருதி சொற்றிடும், சுயவொளி பெற்றிடும், (சேனு)

சரணம்

1 ஆண்டருள் புரிந் திடுவாய்
வேண்டினன் பரிவாய்

துனிதருதோஷ முமலக்,
களக்கமறு விளக்கமுற,
விதாயக வித்தக விபுவே (ஆண்)

2 மாசகலும் பரவெளி மயமாகிய
பதவியையானடையு மாறவாவாய் (ஆண்)

தீபிதகரசசி யிரவியனலுக், கொளியளித்திடும்
உசிதவஸ்துவை, நாடிநலமதாய், நிதமருந்தவ
முயன்று மோனமேவு, நிஜ நெறிவாழ (ஆண்)

3 கோபகுணமா, யொருவர்மேற், பழிமொழி சொலாப்
பசையுளமிலா, வடியர் பா, லுறச்செய்ய,
மருமமேன், வரதவான், வடிவமே (ஆண்)

4 ஆனவிஞ்ஞானவதிசய வழகுடைய,
ஆபோஜ், ஜோதி விபவமா ரகத்யான
ப்ரபாவாத்மானு, போகமாம்சனுதனுச்
சுதபதிகதிதா, னுதவும் தனிமுதற்
பொருளெனுந்துரிய நிலை யோங்கிப் பொதுவா,
யிலகுமாதியே நின தடியேனே (ஆண்)

---

(174) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

சேவித்திடேற வாவா
தேவாதி தேவனே (சேவி)

அனுபல்லவி

பாவித்தேன்யாவுநீயாய்ப் பாங்குடன்முகம் பாராய்
அகந்தீராய் சுகந்தாராயிகஞ்சீராய் நேராய் (சேவி)

சரணங்கள்

1 மானிலமாய்விரி மாயைமுன்னே சரி
யானதானத்திலோடி யாரசற்கதிதேடி
நடமாடி நசைகூடி இசைபாடி நாடி (சேவி)

2 தாமதம் நீங்கியே சாந்தமுள்ளோங்கியே
காமாதிகளைப்பேர்த்துக் கற்பனகுலந் தீர்த்து
அறங்காத்து வழிசேர்த்து விழிபூத்துப்பார்த்து (சேவி)

3 ஆகம நீதியே யச்சுத ஜோதியே
ஏகாந்தாகரஞ்சென்றே இன்பசாரமி தொன்றே
நிலையென்றே கதிமன்றே மதிநின்றே இன்றே (சேவி)

---

(175) இராகம் - மோகனம் - ரூபகதாளம்

பல்லவி

சோதிநாதனே வா ஞாதிநாதனே (சோதி)

அனுபல்லவி

தீதவித்தையு பாதி நிவாரணச்
சின்மயபரி பூரணவான் (சோதி)

சரணங்கள்

1 வையகத்தின்மைய றீர்ந்து
மன்னுந்தன்னிலை மர்ம்ம மோர்ந்து
உய்யச்செய்யுந்துய்ய மறை முடி
மெய்யனேயெனதையனே வான் (சோதி)

2 ஆவலாம் பேய்பிடித்துக் கெட்ட
தீவினைகளையே புரிந் திட்ட
பாவியென்றென்னை நீக்கினலெங்ஙன்
ஜீவிப்பேன்யாரைச் சேவிப்பேன் வான் (சோதி)

3 ஆருமாத்ம சாரநிறை தெருள்
வாரிதிபுகக்கோரினே னருள்
காரியகாரணங் கடந்திடும்
சீரணியச்சுதப் பேரணிவான் (சோதி)

---

(176) இராகம் - பைரவி - ஆதிதாளம்

பல்லவி

சோதி நாதனே
சுப்ரபோதனே ஞான (சோ)

அனுபல்லவி

ஆதியா யெல்லாம்
ஆனவோர் சொல்லாம் மோன (சோ)

சரணங்கள்

1 இறைவனருண் மேல்
எய்தியும் பெரும் பால்
இன்பமோங்க வில்லை
என்னசெய்வே ன்றெல்லை
அறையவாயுண்டோ தான்
ஆயினுமேழை யேன்
அன்னைபோனம்பி னேன்
அருளுமச்சுத வான் (சோ)

---

(177) இராகம் - பியாக் - ஆதிதாளம்

பல்லவி

சோதியே மறை யாதியே துலங்கும் வான் (சோ)

அனுபல்லவி

நீதியே நின்மலசுகந் தருவாய்
நேரதாய்க்காணவே சேர வருவாய் (சோ)

சரணங்கள்

1 ஆதரிப்பா ருனே
யன்றி யன்னியராரெனேச்
சோதிக்க நீதிதானுேசேய னல்லவோ
சூக்ஷ்ம நீயறி யாயோ சொல்லவோ (சோ)

2 சேணிந்த்ரதனுசைப் போல்
திரமில்லாப் புவியின்மேல்
வீணுயலேந்து திரிந்ததினிப் போதும்
வீடெய்தும் விதமின்றெனக் கோதும் (சோ)

3 ஓங்கியொன்றிலு மேவா
தொளிருமச்சுதனே தேவா
தேங்கிய பேரானந்தலஹரி சீராய்த்
தீனனேனுய்யக் கடைக்கண் பாராய் (சோ)

---

(178) இராகம் - இந்துஸ்தானி - ரூபக தாளம்

பல்லவி

ஜோதி ரூபமே ஆதி (ஜோ)

அனுபல்லவி

நீதியாம் நிமலமே நித்யானுபூதி சிற் (ஜோ)

சரணங்கள்

1 அகமகமெனுந் த்யானமாய்
ஆத்மசாரக் ஞானமாய்த்
திகழுமய தேவமாத்
திருக்கொளி சீராய தூயசிற் (ஜோ)

2 வையகமையல் நீக்கமாய்
மாருதக நோக்கமாய்
மெய்யடியார்கண் மேவுமேல்
வெளியிலாம் விநோதநாத சிற் (ஜோ)

3 சச்சிதாநந்த சாந்தமாய்த்
தானுகுமே காந்தமாய்
அச்சுதானந்தம் ஆரும்பேர்
அம்ருதமேயசமான மோன சிற் (ஜோ)

---

(179) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ஜோதிவானமே சுமோனமே
சுய ஞானமே மதி
தோன்றிடுஞ்சிற்சுகஸ் தானமே (ஜோ)

அனுபல்லவி

நீதிவளமை கொண்ட ஆதிபகவன் விண்ட
வேதரசத்தையுண்ட மேதையர்மேவிடுமகண்ட (ஜோ)

சரணங்கள்

1 பவந்தருசம்சார பந்தத்துட் பட்டஹிதப்
பழிகளியற்றித்துயர் படுத்துமாய சஹிதப்
புவியிலடைந்தபலன் போதும் நாதரஹிதப்
பூரணச்சின்மயம் பூத்திடுஞ் சீர்த்திகழ் புனித (ஜோ)

2 எல்லாம்நீயென்றெண்ணி யெப்பொழுதுநாடியன்
இருக்கு முண்மையினைக்கண் டின்னம்
பராமுகமேன்
அல்லலடைவதுனக் கழகோ பேதையடியேன்

ஆதாரம் வேறில்லை யாதரிப்பாய் நினை
யடைந்தேன் (ஜோ)

காசினி மோகவிகாரம்விட்டுப் பிரியும்
கண்மணியாமச்சுதக் கடவுணிலை தெரியும்
மாசிலகக்கமல மலரின்மடல் விரியும்
மாருமலானந்த மாமழை சொரியும் (ஜோ)

---

(180) இராகம் - தன்னியாசி - ரூபக தாளம்

பல்லவி

ஞானசாகரோதய பானுவே யக
மோனவானக சுக (ஞா)

அனுபல்லவி

மானசாதியான விந்திரிய
லீனகரப்ர தானசரம த்யானபரம (ஞா)

சரணங்கள்

1 கயிற்றிலண்டஜங் கண்டதைப்போல்
கருத்துணராத காரணத் தால்
அயராபாஸ னவனியீச
ஞமென்றியம்பு மபாவமறு சுபாவ முறு (ஞா)

2 ஓதருமறையுரை முடிவாய்
உள்ளும்புறம்பு மோர்வடிவாய்
மேதகைமின்னும் மேன்மையைத் துன்னும்
விண்ணகநெறி மேவியகதி யேவிய பதி (ஞா)

3 ஜகமாயாவிரு டவிர்ந்து வாழும்
தன்மை யெத்திக்குந்தண்ணொளி சூழும்
அகண்ட நாட்டம் அருளுந் தேட்டம்
அச்சுதகண்மணியதானவர நிதானகர (ஞா)

---

(181) இராகம் - கமாஸ் - ரூபக தாளம்

பல்லவி

ஞானசுக வானமே நமோ (ஞான)

அனுபல்லவி

த்யானசுகஸ் தான மான
தானமேனிலை மோனமே நமோ (ஞான)

சரணங்கள்

1 ஏதும்பற்றில்லாம லெங்கும்
ஏகமயமா யிலங்கும்
வேதகீத நாத மோத
போதமே நமோ (ஞான)

2 பாரறியொணாத மர்ம்மம்
பண்புறும்ப்ரகாச ப்ரம்மம்
ஸாராபாரா வாரா காரா
தாரமே நமோ (ஞான)

3 மாயையிருளோய்ந் தச்சுத
வஸ்துவெனமன் னசிபத
நேயஞாய தூய தாய
ச்ரேயமே நமோ (ஞான)

---

(182) இராகம் - உசேனி - ரூபக தாளம்

பல்லவி

ஞானசூர்யோதய மெந்த
நாளில்வாய்க்கு மோப்ரம்மானந்த (ஞா)

அனுபல்லவி

ஈனமாயை யிருளை வென்று
தானுய்த்தனி தயங்கு நன்று (ஞா)

சரணங்கள்

1 சந்ததமு மலைந்திடுஞ் சித்தம்
தயிலதாரை சமமாய் நித்தம்
அந்தரங்கதியானத்தி ருத்தம்
ஆரமிகுந்தவ வாக்கொடு சுத்தம் (ஞா)

2 ஆருறுக்கப்புறத்தாரு மாத் துரிய
அம்ருத ஜோதியி னற்புதந் தெரிய
மாருவின் பஸ்திதி மன்னுமாச் சரிய
வானகவிழி வனசம் விரிய (ஞா)

3 பொதுவாகு நிலைநின்று யாவும்
பொருந்தியும் பொருந்தா வொளிதாவும்
அதுவி தென்னுஞ்சுட்டகன்று மேவும்
அச்சுதவானகத்து லாவும் (ஞா)

---

(183) இராகம் - தேசிக தோடி - ஆதிதாளம்

பல்லவி.

ஞானப்ரகாச மோன வானே
நாதாந்தத் தேனே (ஞா)

அனுபல்லவி

நானுனென்றெங் கணும்
நடனம்செய்யாதி நீதி (ஞா)

சரணங்கள்

1 திகழுறுந்திருக்கல் லால்
செகமில்லையென்று மேல்

புகழுறும் வேதங்களைப் போதும்
மகிழ்வுட னோதும் (ஞா)

2 துங்கமாதவ ருள்ளம்
தங்கும்வெளி வெள்ளம்
பொங்குமின்பப் பூர்ணவை போக
புங்கமா மேக (ஞா)

3 இருளொளியில்லாப் பதி
பொருளொளி மேற் கதி
அருளளியச்சு தாந்தர் யாமி
தெருளாரும் சாமி (ஞா)

---

(184) இராகம் - தோடி - ரூபக தாளம்

பல்லவி

ஞான வானமே மோன (ஞா)

அநுபல்லவி

த்யானஸ் தானமே யான (ஞா)

சரணங்கள்

1 வீணுவலை மேவி மேதினி
வாணுளொழித்தன னேதினி
காணுமோகதி தோணுமோமதி
கலங்குதே மனம் தினம் (ஞா)

2 சந்ததமுன் சந் நிதியே
சிந்தித்திருக்குந் திரந் ததியே
தந்தருடொந்த பந்த மொழிந்த
சகஜமாயெங்கும் தங்கும் (ஞா)

3 ஒன்றுய்ப்புறம்புள்ளு மின்ன
நின்றேதுக்கு நீயஞ்சே லென்ன
நன்றருளுவாயென்றுள் ளன்பாய்
நம்பினே னாதி ஜோதி (ஞா)

4 நன்னிலைதர நாயே னுக்கு
இந்நிலந்தன்னி லேதய றிக்கு
அன்னையாய்ப்பரி வென்னை யாதரி
அச்சுத மூர்த்தி கீர்த்தி (ஞா)

---

(185) இராகம் - ஹம்சத்வனி - ஆதிதாளம்

பல்லவி

ஞானஜபா னலவா னகமே
நானதாகுமா ஞாயமே தூயமெய்ஞ் (ஞா)

அனுபல்லவி

தானாய்மனோ லீன நீணெறி
மோனசித்பானத்யான மான மெய்ஞ் (ஞா)

சரணம்

1 வேதார்த்தவீறோர்ந்து நாதானந்தபோக
போதார்த்த சாரானு பூதிப்ர வாக
மீதாஞ்சுகா தீதச் சீரருண்
ணீதியெம்மாதி ஜோதி யச்சுதமெய்ஞ் (ஞா)

---

(186) இராகம் - கல்யாணி - ஆதிதாளம்

பல்லவி

ஞானானந்த சாகரனே
நாதாந்தசாந்த வேதாந்த (ஞா)

அனுபல்லவி

தானுய்த்துலங்கியாவுந் தாங்கும்
தன்மையொளியோங்கும் சர்ச்சனர்கடேங்கும் (ஞா)

சரணங்கள்

1 காரிருண்மாயை கெட்டுக்
கருத்துள்ளொளிமேற் பட்டுச்
சீருறச் செய் யாரியரா
தீனமோனநிலேயான நிச்சலநிதான (ஞா)

2 உயிர்த்துணை நின்னே யல்லால்
உண்டோமண்டலத் தின்மேல்
பயந்தீர்த்தெனேப் பாலிப்பாய்ப்
பண்டதானபுகழ் கொண்ட வானிலே யகண்ட (ஞா)

3 பரிதிமதியாதிக் கெல்லாம்
பானந்தந்திடுமோர் சொல்லாம்
சுருதிமுடிவான சுயஞ்
சோதி யெங்குமொளிராதி யச்சுத விபூதி (ஞா)

---

(187) இராகம் - தேசிக தோடி - ஆதிதாளம்

பல்லவி.

ஞானேதயத் தெருளே பூரண
வானேதயப் பொருளே (ஞா)

அனுபல்லவி

மேனிலே யிலகிடு
மோன நிதான (ஞா)

சரணங்கள்

1 மாதவமிகுஞ்சன காதிமுனிவர்களும்
வேதனுந்தொழும் பரஞ் சோதியனுதி (ஞா)

2 தேகமுதற்கொடுபூ லோகப் பற்றுகளெனு
மோகவிருளகற்று மேகவைபோக (ஞா)

3 ஜீவச்செயலொழியுங் கேவலநிலையினை
மேவச்செய்யுமச்சுத தேவ ப்ரபாவ (ஞா)

---

(188) இராகம் - கம்ஸ்த்வனி ஜாதிஸ்வரம் - ஏகதாளம்

பல்லவி

ததேகத்யான வானமே சதானந்தந் தருமோனமே (த)

அனுபல்லவி

விதேகநாட்டில் விளைதேவ தருவே
மேனிலையருள் விய னுருவே (ததே)

சரணங்கள்

1 சித்தாந்த நீதமே தெரிவரியசுபோதமே
சுத்தமுத்தப்ரசித் தப்பெய ரைத்தாவும்
தொண்டரினந்தினங் கண்டுள்ள மேவும் (ததே)

2 எல்லாமும் வல்லதாய் இலகிடுமொரு
சொல்லதாய்
கல்லோலஞ் சூழின்பக்கடலமு தென்னும்
காரணமாகிக்கண்ணும் விண்ணு மின்னும் (ததே)

3 தேசாரு நின்பதம் சேர்ந்துய்யப்புரிவாய் நிதம்
ஆசித்துன்பாலடைந்தேனலந் தங்கும்
அச்சுதமெய்ச்சுட ராயெங்கும் பொங்கும் (ததே)

(189) இராகம் - கேதாரம் - ரூபகதாளம்

பல்லவி

தருணமீதே கருணை செய்வாய்
சர்வலோக சாட்சி யெந்தாய் (தரு)

அனுபல்லவி

அருணகோடி தேஜமார
அகமாயாந்தகாரந் தீர
அபேதவானக சுக நெறிசே
ரதுலிதகதி யதாகு மதி
அன்ப டைந்திட (தரு)

சரணம்

1 நன்றின்பமழை வருஷிக்கும் வான்
ஞானமெய்த நாயடியேன்
என்றுநின்பதங் கோரியுந்தான்
இன்னமென்னைச் சோதிப்பதேன்
இருநில முழுதும்பூர்த்தி இலகிடு நின்மல கீர்த்தி
அருணிலையுற்றிடு சீர்த்தி யச்சுதசற்குரு மூர்த்தி (தரு)

---

(190) இராகம் - கல்யாணி - அடதாளம்

பல்லவி

தன்னைத்தானறிய வேணும் ததனந்தரம்
தானுந்தலைவன்றன்னிலை தோணும் (தன்)

அனுபல்லவி

அன்னையாமாரிய னருட்பிரசாதம் பெற்று
அல்லும்பகலுமாருதக முகநாட்ட முற்று (தன்)

சரணங்கள்

1 உலகாபேக்ஷையென் னுமலைகை பிடித்துநாய்போல்
உழலும் பிறவித்துன்ப மொருங்கொழிந்திட சால்
இலகும்பேரின்பகதி யெய்திடப்புவியின் மேல்
ஈதன்றித்தாயகம் வேறின்ருமெனப்பெரும் பால் (தன்)

2 அற்பநூல்கணெறி யல்லலாமென விண்டு
அரும்ப்ரபலமறைக ளபிப்பிராயத்தைக் கொண்டு
பொற்பமைந்திடுமேழாம் புவியின்பொலிவைக்
கண்டு
பூரணச்சுடர்மதி பொழியின்னமுத முண்டு (தன்)

3 சீரணிந்திலகிடுஞ்சித்த விண்ணக த்யான
தீரத்வமுடையவர் கோருங்கோதொழி ஞான
சாரபூரிதாகண்டசாகரமய மோன
சாம்ப்ரதாயப்ரபாவங் தயங்கச்சுதப் பேரான (தன்)

---

(191) இராகம் - தேசிக தோடி - ஆதிதாளம்

பல்லவி

தாண்டவஞ்செய யாண்டவனே
சதா காலமும் (தா)

அனுபல்லவி

நீண்டபுகழ் பூண்டவனே
நித்தியா னந்தத் (தா)

சரணங்கள்

1 தத்துவாதீதமாய் சாட்சிசத்போதமாய்
அத்துவிதாநன்னீதமாய் அருளோதய (தா)

2 மன்னுமகிமை நான் மறைமுடிவாயவான்
தன்னிலே யாயெங் கணுந்தான் தனியாயருள் (தா)

3 எந்தையே பரிவாய் எனக்கருள்புரிவாய்
விந்தைப்பே ரொளிவிரிவாய் விளங்கும் விதம் (தா)

4 தீதக லுருவாய்த் திகழ்தேவ தருவாய்
ஆதியச்சுதகுருவாய் அகவிண்ணிடைத் (தா)

---

(192) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

தானே தானும்
வானே வந்தாதரி (தா)

அனுபல்லவி

தேனேரானே தேவர்கட்கோனே (தா)

சரணங்கள்

1 வெந்துயர்விட்டோர் கூடும்
வெளியிற்றுண்டவ மாடும்
எந்தாயுன்னடி மறப்பேனே
இறப்பேனே பிறப்பேனே சிறப்பேனே (தா)

2 சர்வம்ப்ரம்மப்ர காசம்
தானதாமென்று ணேசம்
நிர்விகற்ப நிலையிற் றூங்க
நிஜந்தாங்க நிசிநீங்கச்சுட ரோங்க (தா)

3 ஆதியச்சுத மூர்த்தியே
அசிபதத்தின் கீர்த்தியே

பேதையென்றென்னைக்கைவி டாது
ப்ரியமோது கதியேது புவி மீது (தா)

---

(193) இராகம் - தர்பார் - ரூபகதாளம்

பல்லவி

திரமதியொடுத்யானம் செய்வாம்
ஜென்மகன்மங்கடீர்ந் துய்வாம் (திர)

அனுபல்லவி

பரமாத்மஸ்வ ரூபப்ர காசத்தைப்
பாசமிலாச்சிதாகாச விலாசத்தை (திர)

சரணங்கள்

1 வாசாம கோசரமாகிய மர்ம்மத்தை
மதசம்மதம்பெருமாணெறி தர்ம்மத்தைப்
பேசாப்பெருமைபிறங்குநிஷ் கர்ம்மத்தைப்
பேரணியும்பரிபூரண ப்ரம்மத்தை (திர)

2 அல்லலளித்திடுமஞ்ஞான த்வாந்தத்தை
அகற்றிடுமருளாரொளி சாந்தத்தை
எல்லைகடந்தினிதிலகே காந்தத்தை
ஏதங்களேதுமிலாதவே தாந்தத்தை (திர)

3 மேதினியெங்கணுமேவுஞ்சம் பூர்த்தியை
வித்தகமீந்திடுஞ்சித்துரு சீர்த்தியை
நீதிதழைத்திடு நிர்க்குண கீர்த்தியை
நிச்சலானந்தவா னச்சுத மூர்த்தியை (திர)

---

(194) இராகம் - காம்போதி - அடதாள சாப்பு

பல்லவி

தியாயேத்ரகுராமம் தாபாட்ட விதத்தநாமம்
ஸ்ரேயஸ்கரனுசோமம் சிற்சுக தாமம் (தியா)

ஸ்ரீயுதாத்மகதீபம் ஸ்திரசாயுச்ய நிக்ஷேபம்
காயத்ரிமந்த்ரரூபம் ககனரத்நப்ர தாபம் (தியா)

தபனகுலபவித்ரம் தானவத் வாந்தமித்ரம்
தசரதவரபுத்ரம் தரஜாங்கன களத்ரம் (தியா)

கபிகுலதீபமித்ரம் கமனீய சுசரித்ரம்
கமலலோசனபத்ரம் காஞ்சனும் பரசித்ரம் (தியா)

சத்யக்ஞானவிசாரம் சகலேந்திர்ய சம் மாரம்
சங்கற்பவிகற்பதூரம் சரஸ்வான்சம கம் பீரம் (தியா)

நித்யமத்வைதசாரம் நிகிலஜகதா தாரம்
நிருபமஜெலதீரம் நீலநிறதா காரம் (தியா)

கனஷடாக்ஷரஹிதம் காமவைரி சேவிதம்
கம்புகனசோபிதம் கர்மசங்க விவர்ஜிதம் (தியா)

அனகமக்ஷர்மவிஹிர்தம் அகிலசாஸ்த்ர சம்மதம்
அந்தர்பஹிர்பாசிதம் அச்சுதாநந்தா மிர்தம் (தியா)

---

(195) இராகம் - காபி - ரூபக தாளம்

பல்லவி

திருவுளச்செய லெப்படியோ
தேவாதிதேவனே நின் (திரு)

அனுபல்லவி

குருவளர்மறைமுடி மேவிய
கோனேகுணவானே நின் (திரு)

சரணங்கள்

1 எந்நேரமுங்கவலை கண் மிஞ்சி
இழுக்குமாயைவாழ்வதற் கஞ்சிப்
பொன்னேரடிசரண் புக்கித் ததி
போற்றினேன் குறை சாற்றினேனின் (திரு)

2 பலதீங்குகடமைப்புரிந் தகப்
பார்வையற்றிழி நாயெனச் சக
தலத்திலலையுங்கொடிய ஞமெனத்
தள்ளுமோகைக்கொள்ளு மோநின் (திரு)

3 அருளன்னை தந்தையாதி நீ யென்று
அகத்தெதார்த்த மாய் நம்பி நின்று
கருதுமச்சுததாசனுக் கொளி
காட்டுமோவெளி யோட்டுமோ நின் (திரு)

---

(196) இராகம் - காம்போதி - ஆதிதாளம்

பல்லவி

தீராயென்றன் சிந்தா குலந்தேவ (தீரா)

அனுபல்லவி

பாரறியாத் தர்மமே பரப்ம்மதேவ (தீரா)

சரணங்கள்

1 மாமாயையாம்வாழ்க்கை மாக்கடலிலே
நாமென்றமுந்தியறமைந்தேன் வந்தேன் தேவ (தீரா)

2 கோரரா துளஞ் சுகங் கொடாவிடிலினி
யாரெனக்கிதங் கதி யேபதியே தேவ (தீரா)

3 பேசாததாம்பெருமை பெற்றிட வச்சுத
தாசன் விண்ணப்பமிதுவே பொதுவே தேவ (தீரா)

---

(197) இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி

தீனனேனென்றனைக் கடைத்
தேறச் செய்வாய் (தீன)

அனுபல்லவி

நானென்னும்பொருடன்னை நாடாதல்லும் பகலும்
நானில நசைகொண்டு நாய்போலுழலும் (தீன)

சரணங்கள்

1 எள்ளலாகியவைய மெடுப்பவர் தமக்கீத
லில்லாவிடினும் பரிந்தினிய சொல்லு மோதாத
உள்ளம்படைத்து வீணுக்குழைத்திதுகாறுங் கேத
முற்றதல்லாது பலனென்றுங்கா ணுத (தீன)

2 அருணிலைபெறும்பே ரறிவதனை யழிக்கும்
அவித்தையிருளருகி லணுகாவண மொழிக்கும்
கருணைபொழி மெய்ஞ்ஞான ககனுகாரஞ்
செழிக்கும்
கருத்தின்னதென்றுன்னுது காலங் கழிக்கும் (தீன)

3 அரிதா முனதடிகளடைந்தும் பவப் பிணியே
னகற்றவில்லை யீதுனக்கழகோமுத்தர் பணியே
திரமென்றிருப்ப வருட்டிகழுந்திருக் கணியே
க்ஷேமமொளிரச்சுதமா மணியே (தீன)

---

(198) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

துணைநினை யல்லாலிலை
சுகக்கடலானே பெம்மானே (துணை)

அனுபல்லவி

இணையடியைக் கோரினேன்
இனிவர்மமேனோ வினைதானோ (துணை)

சரணங்கள்

1 எனதகமா மணியே
எழிலடியார் பணியே
மனதகோசர மோன
வடிவெனுந்தே வேயென் கோவே (துணை)

2 குறியேகமதாய் நாடும்
குறிப்பறியாமல் வாடும்
சிறியேன்முறைக் கிரங்கித்
திருவருளோது புவி மீது (துணை)

3 திரைநின்றவாரி போலாய்ச்
சித்தநிலைத்து மேலாய்த்
தரைதனிலா ரச்சுத
தாசன்கடைத்தேற ஈடேற (துணை)

---

(199) இராகம் - இந்துஸ்தானி காபி - அடதாளம் சாப்பு

பல்லவி

துணைவே றிலையென் றுனைநாடி னேன்வான் (துணை)

அனுபல்லவி

இணைவே றிலையாமெந் தாயே நீயே (துணை)

சரணங்கள்

1 தரைமாதர்கண்மா தனகாத லெலாம்
திரமாய் நீக்கஞ்செய்தேக சொலாம்

மருமமறிந்தக நேசமாய் சுவிசேஷமாய்
நிருமலர்கணலஞ் சேர்ந்திடும்
நிலேதேர்ந்திடும் நிஜமோர்ந்திடும் நெறி (துணே)

2 நன்ருண்விழிவிண் ணகமும் பெரும்பால்
ஒன்ருயுணர்ந்து வுணர்ந்தாங் கதுமேல்
சென்றுசென்றணுவதாய் முனேதேய்ந்து போய்
என்றுந்தூங்காமற்றூங்கவே இடர் நீங்கவே
இன்பமோங்கவே இனி (துணே)

3 பொய்ச்சாத்திரங்கள் புகல்பாவனேகள்
எச்சார்புமிலா வியல்போடிசை கொள்
சச்சிதாநந்தந்தாவிடும் தகைமே விடும்
அச்சுதாநந்த மூர்த்தியே அருள்பூர்த்தியே
அதி கீர்த்தியே யணி (துணே)

---

(200) இராகம் - சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

துரியபரஞ்சுட ரொளியே
சுத்தவிண்வெளியே சுகமளியே (துரி)

அனுபல்லவி

அரியபரம்பொரு ளாகியெங் கெங்கும்
ஆனந்தத்தாண்டவ மாகி விளங்கும் (துரி)

சரணங்கள்

1 மகிதல்மாயையின் மரு ணீங்கும்
வகைகுருவாற்சுக வாரியிற் றேங்கும்
அகவிழிமேவித்தூங்காதினித் தூங்கும்
அன்படியவர் பாலகம்புற மோங்கும் (துரி)

2 இறந்தவர்போலுரை யிறந்திசை விரியும்
என்றுமோனமாகியா னென்பது பிரியும்
சிறந்தவிடநின்றிடச்சேணதிற் றிரியும்
திரண்முகிலெனப்பே ரருண்மழை சொரியும் (துரி)

3 கனலுதகம்புவி காலொடு வான
கம்முதலெவைக்குமேற்கார ணமான
அனகவிவேகிக ளடைந்திடுந் தான
மருள்புரிவாய் ஸ்ரீயச்சுத ஞான (துரி)

---

(201) இராகம் - செஞ்சுருட்டி - அடதாளம்

பல்லவி

தூஷிப்பவர்கள் சுகப் பட்டும்
பட்டும் மனமே (தூ)

அநுபல்லவி

தோஷத் தருக்களின் வேரறட்டும்
அறட்டுந் தினமே (தூ)

சரணங்கள்

1 தூஷிப்பவர்கடமை த்வேஷிக்காதே நித்தியம்
போஷிக்கப்புவி யுண்டோர்
பொருள் சத்தியஞ் சத்தியம் (தூ)

2 சிறந்துமுன் னன்பாய்த்துதி
செய்து பிறகவ் வெண்ணம்
மறந்துபின்போயவர் மனதுக்கிசைந்த வண்ணம் (தூ)

3 உன்னையூட்டிவளர்க்கும் முன்னையகனைக் காணாய்
தனனைமறந்து நீயுந்
தடுமாறுகிறாய் வீணாய் (தூ)

4 தடையிலாதனைத்திற்குஞ் சாட்சிநிலையா தாரம்
உடையவனிருக் கையி
லுனக் கேனந்த விசாரம் (தூ)

---

(202) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

தெய்வசிகா மணியே தெளி
தேவர்கள் பணியே (தெய்)

அனுபல்லவி

மெய்வருஞானப் படியே
மிளிராதிமாமறை முடியே (தெய்)

சரணங்கள்

1 சொலவரிதாயெங் கெங்கும்
சுயஞ்சோதியாய்த் தங்கும்
உலகேகமாம் பொருளே
உனையன்றியேதினி யருளே (தெய்)

2 வஞ்சப்ரபஞ்சத்தின் கோல
மாமாயையாற் சால
அஞ்சியுன்றன் பதமே
அடைந்தேனென்னுருயி ரிதமே (தெய்)

3 அருளச்சுத தாசனை
ஆட்கொள்ள யோசனை
திருவுளங்கொண்டா லுய்வேன்
திரஸ்கரித் தாலென்ன செய்வேன் (தெய்)

---

(203) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

தெரிவாரோ தெளிவாரோ
சச்சிதா நந்தம் (தெரி)

அனுபல்லவி

வரவா னுருமா குரு
மார்க்க மில்லா வழி
மூர்க்கரெல்லாமுயர் கதி (தெரி)

சரணங்கள்

1 கூற்றுக்காளாகுங்கோரக் கொடியசம்சாரச்
சேற்றினிலாழ்ந் தென்றும்
தீமைக ளதைப்புரிபாமரராமவர் பரி (தெரி)

2 புகழார ணசாரமாய்ப் பூரணாகாரமாய்த்
திகழ்தேவ பாவா
தீத விமலவெளி போததிவ்ய திருக்கொளி (தெரி)

3 துதிகொண்மோ னநீதியில் துலங்கனு பூதியில்
மதிசுட ராதியாய்
மன்னுமச் சுதமலை யென்னமின்னுந் தன்னிலை (தெரி)

---

(204) இராகம் - காபி - ஏகதாளம்

பல்லவி

தேவநிரஞ்சன தீபிதமாகன (தே)

அனுபல்லவி

பாவப்படாத பராத்பர ஶ்ரீகர (தே)

சரணங்கள்

1 விண்ணெளியோங்கியே மேதினிதாங்கியே
கண்ணெளியோங்கியே காரண பூரண (தே)

2 கற்பனையாவுங்கெடக் கண்டகம்பொங்கிடப்
பொற்புறுமாரிய பூஜிதராஜித (தே)

3 நிச்சலநாட்டினில் நிர்மல வீட்டினில்
அச்சுத தாசனை யாண்டவ தாண்டவ (தே)

---

(205) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

தேவாதி தேவனே கதி
சீராய்த் தாராய் (தே)

அனுபல்லவி

பாவாதீதப் பரமாநந்தப்
பாரா வார (தே)

சரணங்கள்

1 வாழுமுயிர்க் குயிராய்க் கலை
மறைமுடிச் சச்சி தாநந்த நிலை
சூழுங்கிரணப் பரிபூரணச்
சோதி யாதி (தே)

2 ஏகித்தனதெனும் வாசகம்
இருவினையகன்றடியார் சுகம்
மோகித்தகங்கலக்குஞ் சின்மய
மூர்த்தி கீர்த்தி (தே)

3 சீரியநெறி வாழ்ந் திலங்கும்
செயலுணர்விலி யாய்க் கலங்கும்

ஆரச்சுததாச னென்றுயர்
ஆற்ருய் தேற்ருய் (தே)

---

(206) இராகம் - காம்போதி - ஆதிதாளம்

பல்லவி

நம்பிவாணுளை வீ ணுக்காதே
ஞானமார்க்கமதனைப் ---- போக்காதே (நம்)

அனுபல்லவி

வெம்பவவினைகளை விரும்பித்திரிந் துழன்று
மிகவுநெஞ்சக மே நீ
வெறி கொண்டுயானென தென்று (நம்)

சரணங்கள்

1 துனிமிகும் பலரோகங்க டோயும் பாழ் மல மூட்டை
தோற்றுருத் தியைநவ
தொளை யமைந்திடுங் கூட்டை
வினைமுடிவாய பின்னர் விரைவினிற் சுடுகாட்டை
மேவுந்தத்வங்களாருன் மிடைதலாநடை வீட்டை
ஜனனமென்னுமருந்து சார்ந்திடுஞ் சம்புடத்தைச்
சம்பராரிநிதமுஞ் சஞ்சரிக்கு மிடத்தை
அனகதண்டபாணி வந் தடித்திடுமட் குடத்தை
அக்கினிக்குமண்ணுக்கு மாகாரமாகு மிச்சடத்தை (ந)

2 அன்னை தந்தை தாரஞ்சேயாதிபந்து ஜனத்தை
அளகேசனுக்குச்சம மாய்ப்பெருகுந் தனத்தை
மன்னராயுலகாண்டு மகிழ்ந்திருக்குங் கனத்தை

மைவிழிமங்கை மார்கள்வசமாகு மெவ்வனத்தை
பண்ணுஞ்சகடுருளை யென்னமாறுங் காலத்தைப்
பயனின்றியனுதினம் பண்ணுங்கர்ம சீலத்தைப்
பொன்னுலகாதி பத்யம் பொருந்திமின்னுங் கோலத்
தைப்
பொங்குங்கடல் வளைந் திலங்கு மிஜ்ஜகஜ்ஜாலத்தை(ந)

3 ஆரணங்கண்மேனெறி யறையு மாத்மானு பூதி
யானஞானகாயமே யமலாரியனு யாதி
காரணமுங்காரிய முங்கடந்து மேலோங்குஞ் சேதி
கண்டுணர்வாயிதென்று விண்டவிதமாய் நீதிப்
பூரணப்பொருளொளி பூத்துள்ளருட் டாகத்தைப்
பொருந்தினவருக்கருள் பொழியச்சுத மேகத்தை
நேருணர்ந்துவாழாம னிதமுஞ்சோக மோகத்தை
நிறைவித்தறிவழிக்கு நீணிலவிஷய போகத்தை (நம்)

---

(207) இராகம் - பைரவி - ஆதிதாளம்

பல்லவி

நம்பினேனின் செம்பொற்பாதம்
நாதனே நாதா தீதனே (நம்)

அனுபல்லவி

அம்புவித்துய ராறிவானுய
ரனுபவமடைந் தாரவே கதி சேரவேமதி (நம்)

சரணங்கள்

1 அன்புடனுத் மானு பூதி
யருளுமாதியாஞ்சிற் சோதி
இன்புறவோதி யேநன் னீதி
எனைப்பரிபாலித்திடு மித
அனையெனவுள் ளந்தனி னித (நம்)

2 திரமுடன்மனச் செயல்க டோர்ந்து
சித்தம்பரசிவத்திற் சேர்ந்து
பெருமையோர்ந்து பேதம் பேர்ந்து
பிரியாமற்பெரியவ ரொடு
சரிவாழ்ந்திடத்தயைசெய் திடு (நம்)

3 இருளும்பகலுமெனும் வித் யாச
மின்றிமெய்ச்சுடரெங்கும் வீச
அருள் விலாச மாகி நேச
மகமகிழ்வுட னடியவர் பணி
சுகமிகுமச்சுத குரு மணி (நம்)

---

(208) இராகம் - பியாக்கடை - அடதாளம்

பல்லவி

நம்பினேன் கைவிடாதே
நற்றுணையென்றிப் போதே (நம்)

அனுபல்லவி

உம்பருறும் பரம்பரைச்
சிதம்பரச் சுகம்பெற (நம்)

சரணங்கள்

1 தீர்க்கமுடன்குரு வாற்கழறுமறை
மார்க்கமதினிலே யேற்கத்தனதியல்

பார்க்கமனவிழி பூக்கவடிக்கா
ளாக்கவினிதெனைக் காக்க நினை (நம்)

2 ஈண்டுவெறுப்பொடு வேண்டுவதுமறச்
சேண்டரையோடிசை பூண்டவமலவெளி
காண்டலிலகிடும் ஆண்டுதுரியநிலை
ஆண்டவனே தாண்டவனே ததி (நம்)

3 பேசுந்திரிபுடி நாசமாய்ச்சிதா
காசதிருக்குவி லாச பரஞ்சுடர்
வீசுங்கடனிலை யாசித்தச்சுத
தாசனுள நனி யோசித்தினி (நம்)

---

(209) இராகம் - காம்போதி - ரூபக தாளம்

பல்லவி

நாதனே நாதா தீதனே
நாளுகும்ப்ர போதனே யென்றன்சாமி (நா)

அனுபல்லவி

வேதகநெறி மேவியே மின்னும்
மாதவரக மன்னுமென்றன் சாமி (நா)

சரணங்கள்

1 வாக்குமானதமுந்தாக்கா நிலையாகி
மாசிலருட்சோதி மாமலையாகிப்
போக்குவரவொடு நீக்கமற்றெங் கெங்கும்
பொற்புறப்பூரணம் பொங்கும் என்றன்சாமி (நா)

2 இல்லதுமுள்ள தென்னு மிரண்டின்பாலும்
என்றுமனூர்ப்பூத மாகிமேன் மேலும்

அல்லும்பகலு மன்றுய நன்னீதி
யமையத்தனித்திகழாதி யென்றன்சாமி (நா)

3 வெம்பவமென்னுங் கூபத்திடை வீழ்த்திடும்
மெய்யுறச்செய்யும் விவேகத்தைத் தாழ்த்திடும்
அம்புவியின்றுன் பகன்றுய்யக் கண்பாரும்
அச்சுதாநந்தப்பே ராரும் என்றன்சாமி (நா)

---

(210) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

நாதா வெனையாள வாதா
போத குரு (நாதா)

அனுபல்லவி

நீதுணையல்லா லொரு
ஆதாரமில்லை குரு (நாதா)

சரணங்கள்

1 மாயை யொழிந்தஞான நேயர்வாழும்ப்ரதான
தூயகற்பகத்தரு வாயிலகுங் குரு (நா)

2 ஜாக்கிரமுதற்றுன்ப வாக்கியம் போக்கியின்ப
நோக்கமருளியிரு ணீக்கு நின்மலகுரு (நா)

3 கோரபவாம்புதித் தீரமேற்றிடத்துதி
சேருஞ்சுகபேரருளாரு மச்சுத குரு (நா)

---

(211) இராகம் - எதுகுல காம்போதி - அடதாளம்

பல்லவி.

நானுரோ நீயாரோ நடுநிலை தானுரோ
நாதாந்தத் துய்யனே வேதாந்த மெய்யனே (நா

அனுபல்லவி

வாநாரோபிதமான மாசைப்போன் மெய்ஞ்ஞான
வடிவிலென்று மிறந்த வஞ்சமாயையால் வந்த (நா)

சரணங்கள்

1 அடர்ந்தமும் மலச்சேட்டை யகற்றும்பூமிக ளேழும்
அமைந்தசோபானத்தி லாகியமுப் பாழும்
கடந்தசச்சிதாநந்தக் கதிரொளிமலர் சூழும்
கடவுட்கனலியென்னுங் கற்பகநிழல் வாழும் (நா)

2 கண்ணேது கருத்தேது கண்ணுங்கருத்துங் கூடும்
கலையேதுநிலையேது காதலித்தவர் நாடும்
விண்ணேதுவெளியேது வெளியினில்விளையாடும்
விதமேதுபதமேது மெய்யாய்விளங்கத் தேடும் (நா)

3 சொல்லேதுபொருளேது சொல்லும்பொருளுமற்ற
சுகமேதுவகமேது தோன்றிடாம னிற்ற
அல்லேது பகலேதங்கவைகளொடுக்க முற்ற
அருளேதுதெருளேதா ரச்சுதப்பெயர் பெற்ற (நா)

---

(212) இராகம் - செஞ்சுருட்டி - ரூபக தாளம்

பல்லவி

நிஷ்டை செய்வோர்க்கேது மாயை
நிசியென்னுந் தீது நிஜாநந்த (நிஷ்)

அனுபல்லவி

அஷ்டாங்கயோகாப்யாச முங் கர்ம்ம
அனுஷ்டானமா மென்றறிந்த கற்றி ப்ரம்ம (நிஷ்

சரணங்கள்

1 தாமசாதிகளை வென்று ஜன
சங்கமிலாத்தலஞ் சென்று
ஆமைம்பொறிகளை வென்று
அகலாச்சுகநிலை நின்று
மாமதிநாட்டம் வயங்கக த்யான
வானகஞ்சேரவளருஞ் சோபான
சேமந்திகழுஞ் சிதாத்மக மோன
சேதிநீதியாதிசோதி சீரருளச்சுத ஞான (நிஷ்)

---

(213) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

நித்யநிரஞ்சன நிருபம நிஜதேவே
நின்மலரிளைப்பாரு நன் மலர்க் காவே (நித்)

அனுபல்லவி

சத்யமொளிருமாதி சமரஹிதசிற் ஜோதி
தாஞய்விளங்கு மொன்றே தனிமணிக்குன்றே (நித்)

சரணங்கள்

1 கதிதரவேறெவர் காண்கிலேன் மெய்யாக்
கருதிடின்மாமறை களின்மொழி பொய்யா
விதிவழிப்படநின்னை வேண்டிநம்பின வென்னைத்
ததிபரிட்சிப்பதேனே தலைவிதி தானே (நித்)

2 பகலிரவகலாது பார்த்து விண்ணகமேகிப்
பரமசுகாப்தியிற் படிந்தது வாகிச்
சகஜநிலையடையத் தயைசெய்யெங் குமுடைய
சுகிர்தஜோதிவடிவே சுருதியின் முடிவே (நித்)

3 சீரணிதனியொளிச் செல்வமிகுந்துய்யச்
செய்வதுன்பரமெனச் செப்பினே னைய
தாரணியிலச்சுத தாசகரார்ச்சித
சாட்சிபரம்பொருளே காட்சியின்றருளே (நித்)

---

(214) இராகம் - தேசிக தோடி - ரூபக தாளம்

பல்லவி

நித்ய நிராகார தேவனே
நின்மலாத்ம ஞான மோன (நித்)

அனுபல்லவி

சத்யவேத சாரபோத
சர்வசாட்சியே காட்சியே (நித்)

சரணங்கள்

1 காமமாதிகுணங்க ணீத்துக்
கருவிகரணங் களையும் பேர்த்து
க்ஷேமமாகிச் செயல தேகித்
திகழச்செய் யணியே தினமணியே (நித்)

2 தானதாகுந் தன்மை யான
சச்சிதாநந்த சாட்சி ஞான
வானநாட்டம் வந்த கூட்டம்
மகிழ்வைபோகமே யேகமே (நித்)

3 அடியாருயிர் நேசமாகி
அச்சுத சுப்ரகாச மாகி
முடிவிலாதமோன தீத
மோட்சகாரண பூரண (நித்)

---

(215) இராகம் - பியாக்கடை - அடதாளம்

பல்லவி

நித்தியானந்த நிஷ்டை நெறியருளாய்
நிர்க்குணப் பொருளாய்
நிகமமுடிமிசை நிகழ்நிஜஸ் திதியே
நீயே கதியே (நித்)

அனுபல்லவி

சத்தியாசாரிய னெனும்யதியே பரமாத்மக் ஞான
சாரபூரித பாராவாரிதியே 'சாயுச்ய பதியே (நித்)

சரணங்கள்

1 வீசுமிசையெங்குமிகு நிராதார வஸ்துவென்னும்
வெட்டவெளி நிழன்மேவி யிளைப்பாற
மாசுடையமனமாயை யிருடீர இடைமாருதின்ப
மாரிசொரிமேக மண்டலஞ்சேர
மதியொளி நேர (நித்)

2 துன்னுசங்கற்பங்க ளின்னன் மடிந்திடவே துரியாதீத
சுரதருக்கனிசுதை வடிந்திடவே
மின்னுஞ்சமரச பாவம் படிந்திடவே
இந்திரிய கமலங்கள் விகசித்திடப்
பொழுதினிது விடிந்திடவே விரதமுடிந்திடவே (நித்)

3 நாதபிந்துகலாந்த நிலையானே நடுநாட்டத்துள்
நவநவந்திகழ் ஜோதிமலையானே
ஆதியந்தமிலாத வியல்பானே காண்டற்கேலாம
லணுவிலணுவாயவிரு மெம்மானே
யச்சுத வானே (நித்)

(216) இராகம் - தோடி - ரூபகதாளம்

பல்லவி

நிரஞ்சனமே நித்யபரி பூரணமே
நிருபமசுக நெறியக முக (நிர)

அனுபல்லவி

பரஞ்சுடரோங்கிப் பவங்க ணீங்கிப்
பதம்பெறவருட் பாரதிபதி யாரினி கதி (நிர)

சரணங்கள்

1 மிகுந்ததுயர் விளை விக்கும்
விடயங்கண்மேவி நிற்கும்
அகந்தைநீக்கி யறிவை நோக்கி
யருந்தவஞ்செய்யு மவரனுபவ மதிலொளிர் சிவ (நிர)

2 சித்தத்தனுதினமுந் தானே
தித்தித்திடுஞ் செந் தேனே
சுத்தஞானந் தோன்றி மோனம்
துலங்குநாளென்றோ சொலுமாமறை சொன்முடியுறை

3 பலகாலும் பாத கஞ்சம்
பணிந்தேனிப்பாவி நெஞ்சம்
நிலைநின்றுய்யும் நீதி செய்யும்
நிஷ்க்ரியாச்சுத நிர்க்குணநிச்சல நிருமல (நிர)

(217) இராகம் - இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

பல்லவி

நிரதிசயாநந்த மூர்த்தி (நிர)

அனுபல்லவி

வரதிருக்கா யொளிர் பூர்த்தி (நிர)

சரணங்கள்

1 தூண்டாமணி தீபமாய்த்
துரியப்ர தாபமாய்க்
காண்டலிலாச்செல்வக் கீர்த்தி (நிர)

2 சுகநேமியிற் குளித்துத்
துலங்கவர மளித்து
அகற்றிடுவாயென்ற ஞர்த்தி (நிர)

3 இசைகொண் மகாவாக் யத்தால்
இயம்பும் பதத்தந்த மேல்
அசிபதாச்சுதஞான மூர்த்தி (நிர)

---

(218) இராகம் - கேதார கௌளம் - ருபகதாளம்

பல்லவி

நிராமயமே நேரருள் நித்யோதயமே (நிரா)

அனுபல்லவி

சுராஜி தாத்மக்ஞான மோன
சுபாவ மான (நிரா)

சரணங்கள்

1 திரமார்க்கமீதென் றெம்மதத் தோரும்
தெளிவுடன் கோரும்
நிருமலானந்த வெள்ளந் தேங்கும்
நிஜநெறி யோங்கும் (நிரா)

2 வாக்கொடு மனமுந்தனுவு மொன்ருய்
வணங்கினே னன்ருய்
நீக்கிடுவாயென்றன்க வலேயே
நிர்க்குண நிலேயே (நிரா)

3 திகழ்ந்திடுமலரிடை மணந் தங்கும்
சீர்மையாயெங் கெங்கும்
நிகழ்ந்திடுமச்சுதச் சுட ராரும்
நீதியைச் சேரும் (நிரா)

---

(219) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

நிர்ம்மலக்ஞா னஸ்வ பாவ
நித்ய நிராகார தேவ (நிர்)

அனுபல்லவி

கர்ம்மவி தூரபூரண
ப்ரம்மஸ்வ ரூப காரண (நிர்)

சரணங்கள்

1 பாமுலகவாழ்க்கை நம்பி
பாதகனுனேனுள் வெம்பி
ஊமொழிந்துய்யக்கண் பாரும்
உற்றதுணேயில்லே யாரும் (நிர்)

2 வஞ்சகர்க்கயலாம் பண்டு
மதிமண்டலத்தைக் கண்டு
நெஞ்சகங்களிக்கு மோன
நேயரனுபவ மான (நிர்)

3 மரணவாதை யெய்திடா
வகைவந்தருட் செய்திடா
யருணகோடி சங் காச
அச்சுதாநந்தவி லாச (நிர்)

---

(220) இராகம் - இந்துஸ்தானி தோடி - ரூபகதாளம்

பல்லவி

நினை மனமே நிலைநின்று நீதினமே (நினை)

அனுபல்லவி

தனியாமாரண முடிவை
நனிதிகழ்வான் வடிவை (நினை)

சரணங்கள்

1 எத்திசையுமொளி யோங்கும்
இருநிலந்தனைத் தாங்கும்
சத்திய நிலை சேரலாம்
ஜன்மகன் மந் தீரலாம் (நினை)

2 அகத்துறுமிரு ணீக்கும்
அதுலிதமதி யாக்கும்
தகையபரோட்ச காட்சியை
ஸர்வலோக சாட்சியை (நினை)

3 எல்லாம்பொய்யென்று கண்டு
இதயவிண்ணோக்கங் கொண்டு
அல்லும்பகலில்லாச் சோதியை
அச்சுதானு பூதியை (நினை)

---

(221) இராகம் - கரகரப்பிரியா - ரூபக தாளம்

பல்லவி

நின்பாதசேவை யெத்தனை
நேருமோவறியே னெளியேன் (நின்)

அனுபல்லவி

துன்பெலா நீங்கி வாழ
இன்பநேமியிடையி லாழ (நின்)

சரணங்கள்

1 பூரணவான்பொருளனு பூதிப்
பொற்போங்கிடுஞ் சிற்பர நீதி
ஆரணஞ்சொலுமா போஜ் ஜோதி
அச்சுதப்பேரரரு மாதி (நின்)

---

(222) இராகம் - சஹானு - ஆதிதாளம்

பல்லவி

நெஞ்சமஞ்சு தென்ன செய்வேன்
நிலைத்தெவ்விதத்தி லுய்வேன் (நெஞ்)

அனுபல்லவி

தஞ்சமென்றடைந்தே னுன்றன்
சந்நிதியாளரசே யென்றன் (நெஞ்)

சரணங்கள்

1 அறநெறியைக்கை விட்டே
அவனிமாயைக்குட் பட்டே
மறலிக்காளாகி மண்ணில்
மாண்டுபோவதை யெண்ணில் (நெஞ்)

2 நடக்கும்போதோ விடுத்து
நனவிற்றெழிற் படுத்துக்
கிடக்கும் போதோவுள் ளாவி
கிளம்பிலென் செய்வேன் பாவி (நெஞ்)

3 படிஜனன வாதைக்கும்
பலவாம் பிற வேதைக்கும்
அடியேன்விடயா பாசன்
ஆனவச்சுத தாசன் (நெஞ்)

---

(223) இராகம் - சலிலா - அடதாளம்

பல்லவி

நெஞ்சேயெவ்வகை புண்யம்
நீபுரிந்தாயோ கண்யம் (நெஞ்)

அனுபல்லவி

அஞ்சகமீதி லார்வம்
மிஞ்சிவிளங்கப் பூர்வம் (நெஞ்)

சரணங்கள்

1 முடவன்வாயிற் கொம்புத்தே
னடர்ந்தொழுகிய வண்ணம்
படரருட்ஜோதியாங் கடவுளடிக டிண்ணம்
இடைவிடாது நாட இதயவெளியிற் கூட
விடையமருள்விட்டோட வேதார்த்தங்களைப்பாட (நெ)

2 கல்லின்கணுருரிக்கும் வல்லமையதைப் போன்று
அல்லும்பகலென் னுஞ்சொல்
லில்லாமலெஞ் ஞான்று
மெல்லாநாமென்றுள்ளார இகபராபேக்ஷ தீர
நல்லாரிணக்க நேர ஞானம்புதியைச் சார (நெஞ்)

3 அலைகடன்மேவுநுகத் தொளையிலாமை கந்தரம்
நலமிகப்புகுமந்த ஞாயத்தைப்போற் றிரம்
மலவிருளென்னுமோக மாயாவிபினம் வேக
நிலைகொள் நித்ய வைபோக
நிமலாச்சுத விண்ணக (நெஞ்)

---

(224) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

பஜகோவிந்தம் பஜகோவிந்தம்
பண்டரிபுரிகோ பாலமுகுந்தம் (பஜ)

அனுபல்லவி

அஜவந்தித நீரஜபத கந்தம்
அம்பரமயபரமாத்மா நந்தம் (பஜ)

சரணங்கள்

1 சத்யக்ஞானநந்த சாரப்ர தாபம்
சர்வலோக சஞ்சாரசல் லாபம்
நித்யநிரஞ்சன நிருபம ரூபம்
நிர்க்குண நிர்ம்மலநிஷ்கள தீபம் (பஜ)

2 கரிராஜ வரதகாஞ்சன சேலம்
காமிதசுப்ரத கருணாலய வாலம்
பரமபக்தஜனபாலன சீலம்
பவ்யதரான்வித பார்க்கவி லோலம் (பஜ)

3 ககராஜகமன கௌஸ்துப தாமம்
கமலநயனசுபகர முக சோமம்
அகணித குணகணவரியபி ராமம்
அப்ரமேய ஸ்ரீயச்சுத நாமம் (பஜ)

---

(225) இராகம் - - ரூபக தாளம்

பல்லவி

பஜமன குருபதாம் போஜம்
பவ்யகல்பக தேஜம் (பஜ)

அனுபல்லவி

சுஜனவன சுயஸ்வ ரூபம்
சுதசிதாத்மக தீபம்
சுகஜலதிப்ர தாபம் (பஜ)

சரணங்கள்

1 பரமசாந்தபாவ கம்யம்
பக்தமானச ரம்யம்
ஸ்திரகைவல்ய க்ஷேத்ர நாதம்
சிவஜீவைக்ய போதம்
சிதாகாசவி நோதம் (பஜ)

2 சத்பாவநிச்சல தேவம்
சத்யக்ஞானசு பாவம்
சித்பானுமண்டலநி வாசம்
சின்மய சித்வி லாசம்
ஜீமூதசங் காசம் (பஜ)

3 ப்ரக்ருதிரஹிதப்ரம்ம சாரம்
ப்ரவிமலநிர்வி காரம்
அகிர்தஹேஹியந்த்ய வாக்யம்
அமிர்தாநந்த போக்யம்
அச்சுதநா மாக்யம் (பஜ)

(226) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

படமுடியாதரசே துன்பம்
பட்டதெல்லாம் போதும் போதும் (பட)

அனுபல்லவி

விடமுடியாவிடய சுகங்களை
விட்டவரேமேம்பட்டவ ரென்றால் (பட)

சரணங்கள்

1 பொருணசை கொடுபொய்களை விண்டேன்
பொய்யுடல்வளர்ந்திட மிக வுண்டேன்
தருணிகளுறவினிற் களி கொண்டேன்
தாலத்திதனாலென்ன கண்டேன் (பட)

2 நன்னெறிகளைமுழுமையும் விட்டேன்
நலிவுறும்வெவ் வினைகளைத் தொட்டேன்
பன்னெறிகளாலறிவது கெட்டேன்
பாதகனாய்மாதுயர் பட்டேன் (பட)

3 நின்மயமிலகிடநெடு நாளாய்
நேசித்தனனிஜ மிது கேளாய்
சின்மயவொளியென்மண வாளா
தேசச்சுத தாசனை யாளாய் (பட)

---

(227) இராகம் - இந்துஸ்தானி - ஆதிதாளம்

பல்லவி

பதமுதவும் பாவனதேவா நிஜ (பத)

அனுபல்லவி

இதயவெளிச்சேரவே நேரவே நிஜ (பத)

சரணங்கள்

1 இன்பசாகரமதினிடை விளை யாடவே
அன்பருடன்கூடவே நாடவே நிஜ (பத)

2 ஆங்காராதிகளடங்கலு நீங்கவே
தூங்காமற்றூங்கவே யோங்கவே நிஜ (பத)

3 சும்மாவிருந்தருட்சோதியி லாழவே
செம்மையாகவாழவே சூழவே நிஜ (பத)

4 நீநானெனு மொழிநீத்தொரு கோலமாய்
மோனமுறச்சீலமாய் மூலமாய் நிஜ (பத)

5 எச்சமயங்களு மிறைஞ்சிடு நீதியே
அச்சுதானு பூதியே யாதியே நிஜ (பத)

---

(228) இராகம் - வசந்தா - அடதாளம்

பல்லவி

பதியே பரமானந்த நிதியே (பதி)

அனுபல்லவி

கதியேதுணையன்றி யான்
கடைத்தேறச்செய் யொளி வான் (பதி)

சரணங்கள்

1 ஆரணமாதியி னரும் பொருளாகிமன்
காரணசம்பூரணவின் கனியாம் தனியாம் (பதி)

2 விண்டேனிஞ்ஞாலம் வேட்டையின்கோலம்
கண்டேனுட் கொண்டேனிது கனவோ நினைவோ

3 அருட்பிரகாசன் அச்சுத தாசன்
தெருளாய் நற்பொருளா யெங்குந்
திகழ் பார் புகழ்சீர் (பதி)

---

(229) இராகம் - சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

பதியே வாழுங்கதியே பரலோக (பதி)

அனுபல்லவி

துதியே தூயமதியே துரியாதீத (பதி)

சரணங்கள்

1 கற்பிதவுலகினைக் கானலுதகம் போல்
கண்டுதெளிந்திதயாகாச மடைந்து மேல்
நிற்ப தான நீதிஞான மோன
நெறியுள்ளவர்காணும் குறிமரபிற் ரேணும் (பதி)

2 ககனவட்டத்தினின்று காலிறங்கிச் சோராது
கருணைபொழிமுகிலைக் கலந்து பாராது
நிகமநாலும் நேர்மை யொடுகற்றாலும்
நிலையென்னவித்தை யென்னும் வலையறுமோ
மன்னும் (பதி)

3 நிருவிகற்பநிட்டையில் நிதமிருந் துய்ய
நேருஞ்சமய மென்றேநீதயை செய்ய
சருவ லோக சாட்சியா யிருளேகத்
தானின்றருட்கனிந்த வானச்சுதாநந்த (பதி)

---

(230) இராகம் - ஆரபி - ஆதிதாளம்

பல்லவி

பரஞ்சோதி ஸ்வரூபம்
பவ்யப்ர தாபம் (பரஞ்)

அனுபல்லவி

நிரஞ்சன நிபுணநீதி நிட்சேபம்
நித்யமுக்த நிஷ்களநிஜ தீபம் (பரஞ்)

சரணங்கள்

1 கோசபஞ்சகமெனுங் குத்திரங் கடந்தாரும்
குறியோர்ந்த சாந்த முனி
குலபுனிதர்கணசை கொண்டனுதினங் கோரும்
குவவோடு தனித்திகழ்
மாசிலாதமலரிடை மணஞ் சேரும்
வகையனைத்திலுமாமதி யொளி நேரும் (பரஞ்)

2 ஓயாமலமரியற்றிடும் புலன்களை யொடுக்கும்
ஒண்கருணை யெள்ளளவும்
உளத்திலுருத பகடூர்தியிடரைத் தடுக்கும்
ஒருக்காலு மின்ருகிய
மாயாந்தகாரமானமலப் பசையைக் கெடுக்கும்
மாருமலருண்மாரி வருஷித்தின்பங் கொடுக்கும் (பர)

3 உவரியுலவும்பா ருலகமதனின் மீட்டும்
உடலந்தொட ராவணம்
ஒருமொழியினுணர்வி லூறு மமுத மூட்டும்
உசிதமன்ற தாகிய
துவிதமார்க்கமெனுஞ் சோகத்தை யோட்டும்
தூமலிந்திடுமச்சுத நிலை காட்டும் (பரஞ்)

(231) இராகம் - கமாஸ் - ரூபக தாளம்

பல்லவி

பரமசுகாதீத நாதனே சு
பானவானமோன ஞான (பர)

அனுபல்லவி

சரமசுகாதீத கற்பகத்
தருவேயரு வேயென் குருவே (பர)

சரணங்கள்

1 பொன்னைமாதரைப் பூமியைச்சல
புற்புதம்போலாகு மென்றுண்ணி
பொருந்தெனச்சொன்ன புண்ணியனடி
போற்றியேதுதி பண்ணி
அன்னையொப்பெனக் கருணைமாமழை
யல்லும்பகலு மென்னிரு கண்ணி
லாரவேபரமானந்த வெள்ள
மகம்புறத்திலு நண்ணி
அச்சுத நிலையைத் தகவினி
திச்சமயத்தெளி துறத் தனி
நிச்சய மார்க்கம தருள்புரி
உச்சிதகிரணச் சுடர் விரி (பர)

---

(232) இராகம் - சாமா - அடதாளம்

பல்லவி

பரமபத நிவாசனே கண்
பாராய் பிழைக்கச் சேராய் (பர)

அனுபல்லவி

சரமபதத்தைக் கோரும்
சாந்தரினிது சேரும் (பர)

சரணங்கள்

1 மண்ணப்பனலஞ் சேனும்
மாருதமுமாய்த் தோனும்
கண்ணப்பனேயே கானும்
காட்சியருள வேணும் (பர)

2 காலனச்சத்தை யோட்டும்
கருத்துள்ளொளியைக் கூட்டும்
மேலாநிலையைக் காட்டும்
வேதரசத்தை யூட்டும் (பர)

3 மின்னுமகண்ட கீர்த்தி
வெளியாயெங்கனும் பூர்த்தி
மன்னுமச்சுத மூர்த்தி
மாற்றுன்னடியே னார்த்தி (பர)

---

(233) இராகம் - பியாக் - ஆதிதாளம்

பல்லவி

பரமபாவன ஜோதியே ஆதியே (பரம)

அனுபல்லவி

நிருமலாத் மானுபூதி நீதி (பரம)

சரணங்கள்

1 நீ நானெனலகன்று மோனாகாரமாய் நின்று
தானாய்த்தனி தயங்கும் வானாய் வயங்கும் (பரம)

2 பாராது பார்க்குந்துய்ய பேராரடிய ருய்யச்
சோராதின்பஞ்சொரியும் காராய்ப்புகழ் விரியும் (பரம)

3 மாசஞ்சலங்கடுன்னும் பாசாடவியை யின்னம்
நாசஞ்செய்யாததேன் தேசாரச்சுத வான் (பரம)

---

(234) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

பரமாகாசம் திரசித் விலாசம்
பார்பார்மனமே பானுப்ர காசம் (பர)

அனுபல்லவி

வரமாதவரக வனஜநி வாசம்
வல்லிருளவித்தையின் றெல்லை விநாசம் (பர)

சரணங்கள்

1 சத்தசத்திடைத்திகழ் சகலா தாரம்
சாஸ்வத நிஷ்களசகிதகம் பீரம்
தத்துவமசி மொழிதாத்பர்ய சாரம்
த்யானசுபோதய மோன கரரம் (பர)

2 திண்ணங்கண்ணுங் கருத்துஞ் சேர்ந்திச்
சாத்யாகம்
செய்தவரெய்திடுந் திருக்கொளி யேகம்
தண்ணருண்மழை பொழிசாதக மேகம்
சத்யக்ஞானானந்த நித்யவை போகம் (பர)

3 பூரணச்சின்மயப் பொருளொளி சாந்தம்
பொற்புறுந்தன்றிதி புகல்வாக் யாந்தம்

காரண காரியங்கடந்தசித் தாந்தம்
கங்குல்பகலற விளங்குமே காந்தம் (பர)

4 அற்புதநிகமங்க ளனுதினம் பன்னும்
அமிர்தஜோதிமய மாயெங்கு மின்னும்
கற்பனையின்றித்திரி காலமு மன்னும்
கதியுதவுமச்சுத பதிநிலை யென்னும் (பர)

---

(235) இராகம் - பிலஹரி - ஜம்பைதாளம்

பல்லவி

பரமாத்ம ஜோதியே
பரிதிமதி யாதியே (பர)

அனுபல்லவி

திரமார்க்கமோது மறை
சென்னிமிசைமன்றிருவரு ணிறை (பர)

சரணங்கள்

1 பொய்யிந்திரியங்க ளிடப்
போராட்டப்பொலிவு கெட
உய்யும்படிக்ருபை செய்திட
உற்றதுணையாருன்றனை விட (பர)

2 பாராதுபார்க்கும் பரி
பக்குவருண்ணடனம் புரி
சோராமலின்பஞ் சொரி
துரியநிலைவான்சுடரது விரி (பர)

4 கற்பனைகடந்த கதி
காட்டுஞ்சிதாகாச பதி

அற்புதப்ரபாவஸ் திதி
ஆரச்சுதாம்ருதஜல நிதி (பர)

(236) இராகம் - பியாக்கடை - அடதாளம்

பல்லவி

பரமாத்மசோதியே திரமார்க்க நீதியே
பாவாதீத சேதியே (பர)

அனுபல்லவி

அருமாமறைகளெப்போதும் அன்பாயோதாமலோதும்
அசிபதார்த்தமதாகிமன்னும் சசிரவிச்சுட ராதி
யென்னும் (பர)

சரணம்

வானுயகனே யென்கண் மணியே யச்சுதவான்
மதியேகதியே யென்றிடைமா ருது
நானுவித நின்மகிமையை நயமாகப் பாடியும்ஆடியும்
நானிலத்தின் மீது
ஏனென்றன்மேற்றயையிலை யென்று நேர்ந்திடும்
எளியேனுளவறியே னேதங்க டீர்ந்திடும்
ஆனந்தக்கடன்மய மாம்பெருமை யார்ந்திடும்
அத்துவித ஞானத்திற் றேர்ந்திடும்
உத்தமர்க ளுள்ளத்தி லோர்ந்திடும் (பர)

(237) இராகம் - பைரவி - ரூபகதாளம்

பல்லவி

பரலோக பதியே யிக (பர)

அனுபல்லவி

சுரலோகநிவாச ராதி
சுஜனானுதி சோதி —— நீதி (பர)

சரணங்கள்

1 ஈரும்நிலையீதென நன்றாய்
இருப்போர்கடம் மிதயத் தோன்றாய்
மாறாச்சுகஞான போத
மயவேதாதீத நாத (பர)

2 அறையாவரணார்த்தி நீங்கி
அருளாநந்தவெள்ளந் தேங்கி
முறையாய்ப் புவி முழுது மான
மோட்சமளிக்குமோன ஞான (பர)

3 அகம்பத லட்சியார்த்த மூர்த்தி
அச்சுதச்சுடரான கீர்த்தி
பகலோடிரவோய்ந்து மேவப்
பாரருண்மானுபாவ தேவ (பர)

(238) இராகம் - ஆனந்தபைரவி - ஆதிதாளம்

பல்லவி

பராமுக முற்றிடலேன் வினைப்
பயனிதுவோவினி —— யென்செய்வேன் (பரா)

அனுபல்லவி

சராசரங்களிலந் தராத்ம ஜோதியாய்
விராமமின்றிமின்னும் புராதனப் பொருளே (பரா)

சரணம்

1 தானுய்த்தயங்குங் கோனு யானந்தத்
தேனுயச்சுத வானுய்க்
கானுரருளாட்சி காட்சிகதி சாட்சி
மேனுடைடைந்துய்ய வேதாந்தமாரிபெய்ய (பரா)

(239) இராகம் - பியாக் - ரூபக தாளம்

பல்லவி

பரிபூரணபத காரண
பரலோகாதி பதே (பரி)

அனுபல்லவி

விரிபூமண்டலம் யாவும்
விலகாதருள்வெளி மேவும் (பரி)

சரணங்கள்

1 பரிவாய்மா மறை பேணும்
பெரியோரகம் பிறங்கித் தோணும் (பரி)

2 கதிவேறின் றெென நாளும்
துதிசெய்தே னெனே யாளும் (பரி)

3 தானும்பே ரருட் கனிந்த
வானுமச் சுதா நந்த (பரி)

(240) இராகம் - வசந்தா - அடதாளம்

பல்லவி

பரிபூரணுனந்தமே நிஜ
பாவனுன்வய தேவசின்மய (பரி)

அனுபல்லவி

விரிபூமண் டலா காரு
மேவியு மேவாநிரா தார (பரி)

சரணங்கள்

1 பேசாப்பெருமைநலம் பெற்றுத்தவம் புரிந்து
பிறப்பிறப்பெய்துஞ்சன்மப் பிணியதனைப் பிரிந்து
வாசாம கோசரவான்மகிமை தெரிந்து
மன்னும் வரமளி மின்னும் பரவெளி (பரி)

2 சத்தசத் திரண்டிடைத் தயங்கும் ப்ரம்ம சாரமாய்
சமரகித நிர்ம்மல சஹிதகம் பீரமாய்
அத்துவி தத்தினமு தாரும்பாரா வாரமாய்
அதுல ரனுபவ மதிலிலகு நவ (பரி)

3 அதுவிதெனுஞ்சுட்டொழிந்தறிவரிய சூக்ஷமமாய்
ஆதியச் சுதஜோதி யாமப ரோக்ஷமாய்ப்
பொதுநிலை யிலிருந்தும் போத கடாக்ஷமாய்ப்
போக்குவரவொடு நீக்கமகன்றிடு (பரி)

---

(241) இராகம் - பியாக் - ஆதிதாளம்

பல்லவி

பரிபூரணுனந்த தேவனே (பரி)

அனுபல்லவி

விரிபூலோக முள்ளேக போகம் விளங்கும் (பரி)

சரணங்கள்

1 சகலாந் தரங்கத் தகலா நிலையாய்ப்
பகலிர வின்றித் திகழுங் கருணை (பரி)

2 மனமா சிலாஸஜ் ஜனமா தவர்மேல்
வனமாரி பெய்யுங் கனமாம் புயலே (பரி)

3 மருளேகுடிகொள் ளிருளேகவேயின்
றருளேயவிரச்சுதப் பொருளே புனித (பரி)

---

(242) இராகம் - நாதநாமக்கிரியை - ரூபகதாளம்

பல்லவி

பழகப் பழகப் பழுக்கு மருட்கனி ஐயப்
படுவோ ரதன்பலன் காணு ரினி (பழக)

அனுபல்லவி

அழகுடன்றன தறிவா ராய்ந்து
அணுவணுவாய்த் தேய்ந்து தேய்ந்து (பழக)

சரணங்கள்

1 தண்ணொளிசகஜம் பெறத் தயை
பண்ணொளி சிற்பர சுபகர
விண்ணொளி மேவிடு வெளியிரு
கண்ணொளியைக் கண்டு கொண்டு (பழக)

2 தீமனத்திருடிரை விலகிடத்
தூமிகுமதிசுடர் பரவிய
மாமிகுசின்மய சுயவுரு
நாமெனநித நன்று நின்று (பழக)

3 நிருமல நிஜநிலை வளருய
ரருமறை நெறியறை குறிமுறை
யொருமொழி கனமொளி ரச்சுத
குருமணியைக் கூடிநாடி (பழக)

---

(243) இராகம் - துஜாவந்தி - அடதாளம் சாப்பு

பல்லவி

பற்றற்ருரெங்கிருந்த போதிலு நலமே
ப்ராப்தியாகும் ப்ரம்ம பலமே (பற்)

அனுபல்லவி

நற்றே சிகனருளைப் பெற்று நித்யவை போக
முற்றுமோ னவித்தையைக் கற்றுத் தேகாதிலோக (பற்)

சரணம்

1 சின்முத்தி ராங்குசஞ் செங்கரங் களினன்று
திகழ மிகவுந்துயர் செய்யுமனதை வென்று
கண்டவினைக்கலைக் காட்டா வகைய கன்று
கண்ணும்விண்ணு மொன்ருகுங்
காட்சி நிலையினின்று
கதிமுதலென்றிகந் துதி மலியப் படும்
சதுமறைகளெடுத் திதமுறைக் ளிடும்
பொதுமையச்சுத பதமகிமை கண்டு
மதமருளைவிண்டு நிதமானந்தங் கொண்டு (பற்)

---

(244) இராகம் - இந்துஸ்தானி காபி - ஆதிதாளம்

பல்லவி

பாதம் பணிந்தேன் முகம் பார்
பரமனே யுன்றன் (பா)

அனுபல்லவி

நீதயை யற்ருல் கதியார் நிமலனே யுன்றன் (பா)

சரணங்கள்

1 தேகம்பொய்யுற வென்று தெளிவுடனே நின்று
ஏகமானவ ரொடுசேர் ______ எந்தையேயுன்றன் (பா)

2 வரிசையோ டகக்குறி வாய்த் திடை மாருநெறி
தரிசித் துய்யவா வென்றனோர் தந்தையேயுன்றன் (பா)

3 தருணஞ் சகவாசனை தவிர்த்தச்சு த தாசனைக்
கருணையுட னுள்வதேசீர் கர்த்தனே யுன்றன் (பா)

---

(245) இராகம் - கமாஸ் - ரூபகதாளம்

பல்லவி

பார்க்கப் பார்க்கப் பரமானந்தம்
பரிதமாகுதே பவமேகுதே (பார்)

அனுபல்லவி

பூக்கவிழிகள் பொங்கி நிலைகொள்
பூரணஜோதியைப் புவியாதியைப் (பார்)

சரணங்கள்

1 கண்ணி லாரொளி தன்னைப் போலும்
கமலத் துண்மணம் போலு மேலும்
எண்ணி லண்டங்க ளினிய பிண்டங்கள்
எங்கு மாம்பொருளை யில கருளைப் (பார்)

2 குவித லுடனே விரிதலு மற்றுக்
கூடு தலுடன் பிரிதலு மற்றுத்
துவிதமேகிய சூட்சம மாகிய
துரியவடிவதைச் சொன்முடிவதைப் (பார்)

3 கரையி லானந்தக் கடலமு தெனக்
கருத்தி லின்பத்தைக் காட்டு மா கனத்
தரையி லச்சுத தாச வந்தித
சாந்தநற் குன்றதைத் தனிநின்றதைப் (பார்)

(246) இராகம் - கமாஸ் - அடதாளம்

பல்லவி

பார்த்துக்கொண் டிருக் கின்ருன்
பரமபுருட ஞெருவன் (பார்)

அனுபல்லவி

வார்த்தையிலா வடிவாய் முடிவாய் (பார்)

சரணங்கள்

1 எண்ணுமெண்ண மனைத்தும்
பண்ணும்வினை யனைத்தும்
கண்ணுங்கருத்தாகத்தான் எங்கோன் (பார்)

2 திரியவத் தையி னின்று
திகழ்ந்ததுவு மகன்று
துரிய பரம்பொருளாய் அருளாய் (பார்)

3 அலைவையகன்று கோதில்
அச்சுத தாசன் சொல்
நிலைநின்று பார்மனமே தினமே (பார்)

---

(247) இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்

பல்லவி

பார்பார் திருக்கு விலாச சின்மயநிலை
பரவியபேரருளைப்பரம் பொருளை (பார்)

அனுபல்லவி

நீர்பார்வெளிசுடு நெருப்பு மாருதமொடு
நிகில பூரண முடிவை நிஜவடிவை (பார்)

சரணங்கள்

1 சத்துசித் தானந்த சாட்சியாவு முணர்ந்த
முத்த ரடையுந்தருவை மோனவுருவை (பார்)

2 எங்குநிறைந் ததா யிருந்து மறைந்ததாய்ப்
பொங்கும் பூரணஸ்வயத்தைப் போதமயத்தை (பார்)

3 சச்சிதாநந்தபர தத்துவ கோசர
அச்சுத தாசனகத்தை யாடுஞ்சுகத்தை (பார்)

---

(248) இராகம் - அபுரூபம் - ஆதிதாளம்

பல்லவி

பாலிப்பாய்நான் பாலனேன்
பகர்ந்திடுந்தாய் பான்மையாய் (பாலி)

அனுபல்லவி

மேலொளிவெளிசுக மளித்து
மிகக்களித்து மேன்மையாய் (பாலி)

சரணங்கள்

1 மாயைவிலாசம் வாழ்க்கையினேசம்
போய்க்கேவல சுபாவம் பொருந்த
இன்பமருந்த பூர்த்தியாய் (பாலி)

2 ஆரியர்க்காளாய் ஆனந்த முறுந்தூய்
சீரியரோடென்னையுஞ் சேர்த்துக்
கலிதீர்த்து க்ஷேமமாய் (பாலி)

3 சூட்டுதனீங்கித் தூங்காமற்றூங்கி
வீட்டினிலிளைப்பாற விரைந்து
மனங்கரைந்து வேண்டினேன் (பாலி)

4 காசினிக் கருநீர் கார்முகிலென நேர்
பேசும்பேரருண் மாரி பெய்து
தயைசெய்து ப்ரீதியாய் (பாலி)

5 வேதக ஞானம் மேவிடுமோனம்
போத நிலையச்சுதப் பொருளே
திருவருளே போற்றினேன் (பாலி)

---

(249) இராகம் - சக்ரவாளம் - ரூபகதாளம்

பல்லவி

பாவனாதீதவான் தேவனே
பாராதியாம் ப்ரபாவனே (பா)

அனுபல்லவி

மாவானாய்மன்னுங் கோனாகி
யாவுந் தானா மேனிலை (பா)

சரணங்கள்

1 பாரா யருட்கண்பவந் தீராய் சிந்தித்தே னென்றன்
நேராயின்று வாராய் சீராம் பேரொளி (பா)

2 கோணமற்றவமாற்று மாணும்நிலை யெய்திடக்
காணேனென்றுந்தோணேன் வீணேனையயோ (பா)

3 ஓதும்வே தங்கண்முடி மீதாமச்சுதா நந்த
சோதியனு பூதிசேதி நீதி யாதி (பா)

---

(250) இராகம் - பியாக்கடை - ஆதிதாளம்

பல்லவி

பாவாதீதமே மாவான் போதமே
பாராயருட்பரமே பதி நிலையாகியவரமே (பா)

அனுபல்லவி

ஜீவாதாரமே தேவா காரமே
திவ்யக் ஞானமோனச் சிற்பரனைத் திகழ் (பா)

சரணங்கள்

1 சொல்லாரும் பூக்கமழ் கல்லாலின் கீழ்மிகுதாய்
வல்லார்களெல்வர்க்கு மெல்லாமா யல்லவாய்
வில்லாருமாபொருண் மேன்மை யோதாதோதின
விமலகாட்சி சாட்சிமெய்யோங்குங் கன (பா)

2 சன்மார்க்கமேவிடுந் தன்மார்க்கத்தைக் குருவால்
நின்மலமோர்ந்து சின்மயம்பூத்து மேல்
சொன்முடிவா யெங்கணுந்
தோன்றும் பேரொளி பெறும்
தொண்டர்கண்டுகொண்டு துன்போய்ந்தேயுறும் (பா)

3 மண்ணாகிமாய்ந்திடும் புண்ணாருடலி லெனையான
உண்ணாடி வாழாம
லெண்ணாதெலா மெண்ணினேன்
அண்ணாபொறுப்பாய் பிழை யாவு மானந்தோதய
அம்ருத சாரபாரா வாராச் சுதாஹ்வய (பா)

---

(251) இராகம் - நாட்ட குறிஞ்சி - ஆதிதாளம்

பல்லவி.

பானுகோடி தேஜா காரமே
பாபாந்தவி தூரமே (பானு)

அனுபல்லவி

தானதாஞ்சிற் சோதி
யானமோன நீதி (பானு)

சரணங்கள்

1 சத்தசத் திரண்டின் மத்தியிற் றயங்கும்
சுத்தமாம் ப்ரசித்த வஸ்துவாய் வயங்கும் (பானு)

2 பாரெலாஞ் சொரூபா கார மாக் காணும்
பேரருட்பிறங்குஞ் சீரியருட் டோணும் (பானு)

3 தூங்காமற் றூங்குஞ்சீ ரோங்கியெந்த நாளும்
நீங்கா தின்பவெள்ளந் தேங்கவென்னை யாளும் (பா)

4 முச்சந்திப்ரதேசத் துச்சியிற் றேனூரும்
நிச்சலா நந்தவா னச்சுதப் பேராரும் (பானு)

---

(252) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ப்ரம்மா நந்த ரூபமே
நிர்ம்ம லாத்ம தீபமே (ப்ரம்)

அனுபல்லவி

கர்ம்ம ரஹித கண் காட்சியே
கர்த்தனும்பர மாட்சியே
மர்ம்மமோங்கிடுமௌன ஞான
வாழ்க்கையருளக வான த்யான (ப்ரம்)

சரணம்

1 மாமருளாய் மனமலைந்து மேன்
மார்க்கமறியாதிம் மண்ணிடை யான்
பாமரனுய்த்துயர் படுமித் தொல்லையே
பார்த்துமேன்றயை யில்லையே
சோமசூரிய ராதிச்
சுடர்ப்பொருள்களை யுண்டு துலங்கு நன்னீதி

சாமவேதார்த்த விசாரவி க்யாதி
தயங்குமச்சுத சின் மயச்சுயஞ் சோதி (ப்ரம்)

---

(253) இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி

ப்ரம்மாநந்தத்தை நாடு மனமே
நிர்மல சுகந் தேடு தினமே (ப்ரம்)

அனுபல்லவி

தர்மாதர்ம வி சாரமே விட்டுச்
சத்தியமார்க்கந் தனிலுடன் பட்டு (ப்ரம்)

சரணங்கள்

1 சம்சாரமென்பது சந்தையின் கூட்டம்
சண்டன் வரவைக் கண் டாலுட னோட்டம்
ஹம்ஸஸ் ஸோகந்தனே யதற்குள்ளே யேட்டம்
அறியத் தெரியுமே லருளொளி தாட்டம் (ப்ரம்)

2 சுத்தியில் வெள்ளிபோற் றேன்றிய காந்தி
சூனியமானதுபோ ஹனில ப்ராந்தி
இத்திதிதா னுணர்ந் தில குவிஸ் ராந்தி
எவரடைந் தனரோ வவரே வேதாந்தி (ப்ரம்)

3 எப்போது மிப்படி யிருப்போமென் றெண்ணி
இரக்கமற் றுத் தீங்குக ளே நிதம் பண்ணி
அப்போதுந் தீர்ந்திடாதவலாற் குண்ணி
அலைந்தழி யா முன மாதியை நண்ணி (ப்ரம்)

4 இவ்வுட லாதி யெல்லா மிந்திர ஜாலம்
என்றறிந் துய்ய நமக் கிது நல்ல காலம்

அவ்வுணர்ச் சியே சச்சி தாநந்த கோலம்
அச்சுத தாசன் சொல் லருளனு கூலம் (ப்ரம்)

---

(254) இராகம் - சாவேரி - திரிபுடை தாளம்

பல்லவி

பூஜை புரியும் புண்ணியர்க் கேது
புனர்ஜன்மம் பொருந்துந்தீது புவி மீது (பூஜை)

அநுபல்லவி

தேசிகோத்தமன்ஜெறன்னு டிண்ணம்
செப்பிய மொழிதப் பில்லாவண்ணம் சிரத்தையாய்(பூ)

சரணங்கள்

1 இந்திரியங்கள் பூஜாபாத் திரங்கள்
ஏவலாளிகளுயிர்ப்பி ணங்கள்
அந்த மிகு நாடி நதிகண்மூன்று நலங்கொள்
அபிஷேகத்தீர்த் தங்கள்
வந்தையாருதார மலர்க ரூபம்
வளருத ராக்கினி சித்கனை தீபம்
நந்தி தா னந்தமானை வேத் தியம்
நனியாரா தி கண் மண்டல த் ரயம்
இந்த ஞாயத்தி லெதுவும் பிசகாம லென்று
மேகாந்த மதாகுமிடந்தேடிச் சென்று
சிந்தைதெளிந்து தே காலயத்து ளச்சுத
தேவனை பாவனை செய்திடர் போகத்திடமாக (பூ)

---

(255) இராகம் - கரகரப்பிரியா - ஆதிதாளம்

பல்லவி

பூஜை புரிபரி பூரணந்தனையே நிதம்
போற்றி மனமே (பூ)

அனுபல்லவி

நீ ஜகத்துறுங்காரணந்தனையே யுண்
ணிறுத்தி மனமே (பூ)

சரணங்கள்

1 தொன்று புண்ணியத்தொகை யோருருவாகிமேற்
ஞெருந்தத்தசி யென
நின்று மொழிகுரு நெறியேகருவாகி
நேரு மனமே (பூ)

2 சத்தி கண்ணிலை தாண்டிச் சுடர்விரிந்து திகழ்
தனி விதேக
முத்திசேருமுறைமையது தெரிந்து தின
மும்நீ மனமே (பூ)

3 சூத்ரதாரியின் ஞெழிலிது வெனக்கண்டு பர
துரிய ஞான
நேத்ரமிலகி நின்றிடரதை விண்டு அது
நீயாய் மனமே (பூ)

4 நித்திரையின்னித்திரை செய்வாய் விண்
ணேச மோன
முத்திரையின் முறைமையோ டுய்வாய் அக
முகமாய் மனமே (பூ)

5 மூன்றவத்தை முனைக்குமிட மோர்ந்து தனி
முதலா யென்றுந்

தான்றுலங்கிடுந் தன்மையினைத் தேர்ந்து நிச்
சலமாய் மனமே (பூ)

6 மலையிலக்காம் வடிவமதை நாடி மா
மாயை நீங்கி
அலையிலானந் தாம்புதியி லாடி சத்
தாகி மனமே (பூ)

7 ஆசைவலைக்குள் ஆகிமிக வெம்பி யழி
யாமுனச் சுத
தாசன்றிடமாய்ச் சாற்று மொழிநம்பி யருள்
தழைத்து மனமே (பூ)

---

(256) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

பூரணப் பொருளே புகழோங்கிய
பொதுநிலைத் தெருளே புரந்தருளே (பூ)

அனுபல்லவி

ஆரணமாதிய பலநூ லோதி
ஆய்ந்தவ ரடைநீதி யான சோதி (பூ)

சரணங்கள்

1 அதிசுகவடி வுட னடி நடு முடிவிலதாய்
அகலாத தாகியமிர்த கிரணமாய்
மதிரவியாதிய ரிதமுடன் றுதிபுரி
மதாந்தமாசாந்த மனுதியாதி (பூ)

2 போதசாகரசு போதமுனையலால்
போற்றுமச்சுத தா சனுக்கியப் புவிமேல்

ஆதரவேதினி யோதொரு மொழி தனி
அகசதோ தயசுய மானமோன (பூ)

---

(257) இராகம் - செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி

பூரணப் பொருளே பொதுநிலைத் தெருளே
போற்றி னே னேழை நாயே னென்றனுக்
கருள் புரிவாய்ச்சுக
போகசுபாவமதைப் பரிவாய் விரிவாய்ப்பரி (ப)

அனுபல்லவி

காரண காரியங்க டவிர்ந்த கதி
காட்சி யெனும்பரமா நந்தக் கடலாம் (ப)

சரணங்கள்

1 சான்ற மலரின்மணந் தானுறு சீராய்ச்
சத்தியம் போ னேராய்த்
தோன்றுஞ் சராசரங்கள் யாவும் பரி
சுத்த வித்தகச் சுடர் மேவும் சுயமாம் (ப)

2 ஓயாமலுலகிலு பாதி யுண்டாக்கும்
உணர்வதனைப் போக்கும்
மாயாந்த காரமதை வாட்டும் இடை
மாறுதின்பரசத்தை யூட்டும் மதியாம் (ப)

3 சீரார்ந் திலங்கிடத் தாரணி மீது
திக்கினியா ரோது
நேரில்லாதோங்கு நிஜ மோன ஸ்திதி
நிகழுமச்சுத மெய்ஞ் ஞான நெறியாம் (ப)

---

(258) இராகம் - பரசு - ஆதிதாளம்

பல்லவி

பூரணவான் பொருளே எங்கும்பரி (பூ)

அனுபல்லவி

காரணமாந் தெருளே எங்கும்பரி (பூ)

சரணங்கள்

1 நேராயுன்றன் சேவை செய்ய
நேர்ந்திவ் வெளியே னுய்யப்
பாராயருட் பார்வை சீராய் (எங்கும்பரி) (பூ)

2 போதநிலையீ தெனவே
பொருந்திவாழு நினைவே
ஏதுமுணர்ந்திலன் யான் (எங்கும்பரி) (பூ)

3 மாசிலா தோங்கு மதி
மன்னச்சுத தாசன் றுதி
பேசும் பேரொளிவீசும் (எங்கும்பரி) (பூ)

---

(259) இராகம் - மாஞ்சி - அடதாளம்

பல்லவி

பூரணமதியொளி பூத்தமெய்ப் பொருளே
பொது நிலைத் தெருளே (பூர)

அனுபல்லவி

காரணகாரியங் கடந்த ப்ரபாவமான
காட்சியருளுஞ் சர்வ சாட்சிசைதன்ய ஞானக்
கதிரொளியானே சுதைமிகுந்தேனே (பூர)

சரணங்கள்

1 ஓதுங் குணங்குறிக ளேதுமறமண் ணிற்ருன்
நீதி நிகழுமாத்ம போதம் பொருந்திட வான்
சாதனை தழைக்காது போதவ மாக்கி யான்
பேதையிங்கடைகின்ற வாதனைக் கிரங்காயேன்
பேரின்பக் கனியே ஆரியமாமுனியே (பூர)

2 தீராப் பிணிதருசம் சாரமென் றிடும் வெய்ய
காரா ரிருளுருவாம் கோரபாபங்க ணையப்
பேராருநிருமலா காரமோங்கித் துய்ய
சீராரு மானந்த பாராவாரமுற் றுய்யச்
செய்யுமென் கண்ணே மெய்யக விண்ணே (பூர)

3 நாச மடையும்பஞ்ச கோச க்லேச மகன்று
மாசற மன்னும் பரமா காச மயமாய் நன்று
தேசார்ந் தெங்கணு மொளி வீசும்விதமாய் நின்று
பேசா திலங்குந் த்ருக்வி லாசதெய்வம தென்று
பேரணிகொண்ட நேரிலச்சுதா கண்ட (பூர)

---

(260) இராகம் - இந்துஸ்தானி - ரூபகதாளம்

பல்லவி

பூரணமேயுன் பொன்னடிச் சரண்
புக்கினேனரு ளாய் பரி (பூர)

அனுபல்லவி

காரண காரியங் கடந்த
காட்சியே சாட்சியே விரி (பூர)

சரணங்கள்

1 வேதத்தின்முடிவான சோதி
விண்ணக ஜோதி

போதத்தின்கடலாகிப் பொங்கும்
போகமாய் விளங்கும் எங்கும் (பூர)

2 நானீயெனுஞ் சொல் லான தேகி
நடுநிலை யாகி
மோனசின் மய ஞான த்தின் புகழ்த்
தான த்தா தியாய்த் திகழ் (பூர)

3 ஆயுமறிவி லார் மலையாய்
அச்சுத நிலையாய்
ஓயாதுள்ளும் புறம்பு மொன்று யினி
தோங்கும் பே ரொளியாந் தனி (பூர)

---

(261) இராகம் - பியாக் - ஆதிதாளம்

பல்லவி

பூரணுனந்த ஜோதியே

அனுபல்லவி

காரணகாரி யங் கடந்த
கருணை நிறைந்த (பூர)

சரணங்கள்

1 உத்தமர்க ணித்தியஞ் சே வித்துளங் களித்திடவே
சத்தசத்தி டைத் திகழு மத்துவித வத்துவென்னும்
சுத்த (பூர)

2 மங்களவ ளங் கொணிஸ்த
ரங்கார் ணவம் பொங்கும் விதம்
கங்குல் பக லுங்கன முற் றெங்கணும்
விளங்கு மக ளங்க (பூர)

3 துன்னுமிரு ளின்னலற
வென்னையாளுந் தன்னந்தனி
பன்னுமறை சென்னி மிசை
மின்னும்புகழ் மன்னச்சுத மென்னும் (பூர)

---

(262) இராகம் - பிலஹரி - ஆதிதாளம்

பல்லவி

பூரணேதயபோக பாக்கியமே சுர
பூஜித ராஜித (பூர)

அனுபல்லவி

காரணகா ரியங்கணீங்கியே ரவிமதிசங்
காச மோங்கியே
சீரிணங்கு த்ருக்வி லாச விசேஷ
சிதாத்மக ஸ்வரூப
ஸ்திதிவிரி கதிபரி (பூர)

சரணம்

1 பேதவாதங்களேது மிலதாய்
வேதவிதிவழி யேதெரிந்து சுக
சாதனங்கணிறை மாதவர்களெழில்
பாதப்பணிவிடை நீதமளித்திட
வாதா வல்லிருளெனுந்
தீதா குலந்தீர்க்கலா
காதா சிந்தித்ததென்ன
சூதா தொந்தந் தொலைந்த
மீதா கியநன்னிலே
யோதா யற்புதாமல

போதார் ணவசற்குரு
நாதாச்சுத போத சம் (பூரணே)

---

(263) இராகம் - சாவேரி - ஆதிதாளம்

பல்லவி

பேரானந்த வாரிதியே கண்
பாரும்நின்சேவை தாரும்
பாபங்க டரும் (பேரா)

அனுபல்லவி

சீராய்ச் சந்தேகம் போகப்
பூராய்ப் புந்தியாக
ஆரணங்களை வி சாரணை செய்பெரி
யோரிணங்கு காரண பரிபூரண கன (பேரா)

சரணங்கள்

1 வேதமார்க்க விரோத வீணும் வார்த்தைகளாடி
மெலியாதுவாயை மூடி மேலாம்
சாதனைதவருது சகஜசமாதி கூடித்
தனிப்பதென்றரு ளுடிச் சதா
தீதடைந்திடு மனச்செயல்களை விண்ட
சீரியராம்பயிர் செழிக்கத் திரண்ட
பூதலமெங்கணும் பொழிபுன லுண்ட
புயலெனவருண்மழை பொழியு மகண்ட புகழ் (பேரா)

2 காலபாசத்துளாமுன் காரணகாரியங்க ணன்று
கண்டனுமான மகன்று இந்த
ஞாலதோற்றங்களெல்லா நாசமாம்படி வென்று
நாட்டம் பொருந்த நின்று அருட்

கோலத்திருவுருவாய்க் குருமணி யிழைத்திட்ட
குலவுசிங்காதனத்திற் கொலுவாயிருக்கப் பட்ட
சீலச்செல்வம் பிறக்கச்செய்யிலகிடு மட்ட
திசையிலுமிசைவிரி தேவேயென்னிட்ட மிட்ட (பேரா)

3 பிரியாத வன்பொடு பேணும் பெற் றவளைப்போல்
பேதை நம்பினேன்பெரும் பால் நலம்
தெரியாததோ வீதுன்றன்றிருவுளம் பரிட்சித்தால்
திக்கெவர்காசினி மேல் மேவும்
துரிய பூமியருள்தூய பர மார்த்த
சுகமுற்றுருதிருள் தோய்ந்திடுந் தூர்த்த
ரறிய சாத்திய மி லச்சுத மூர்த்த
மாகியெங்கணுமொளி யே யாகி யவெளியே (பேரா)

---

(264) இராகம் - பியாக் - ஆதிதாளம்

பல்லவி

பேரானபிரக் ஞான ப்ரம்மம் (பே)

அனுபல்லவி

சீரானத்யான மோன மர்ம்மம் (பே)

சரணங்கள்

1 நிகம நிஜபோதம் நித்யசுகா தீதம்
அகணித மோதவி நோதம் (பே)

2 சந்ததம் போராட்டம் தருமிந்திரியக்கூட்டம்
ஐந்துக்கு மேலாட்டம் நாட்டம் (பே)

3 படர்ந்தசகஜீவம் பரமென்றேதும பாவம்
கடந்திலங்குந்தேவ தேவம் (பே)

4 மாகலுஷ நாசம் மார்த்தாண்ட சங்காசம்
ஏகப்ரகாசவி லாசம் (பே)

5 நிச்சல நிஷ்காமம் நிர்ம்மலாதி வ்யோமம்
அச்சுதநாமாபி ராமம் (பே)

---

(265) இராகம் - தனுசரி - ரூபகதாளம்

பல்லவி

பொது நடஞ்செயும் பூரணமே
போற்றினேனெனை யாளாய் (பொ)

அனுபல்லவி

சதுராரணஞ் சதாநீதி
சாற்றிடும் பரஞ்சோதி தன்மையைப்பெறுமாதி (பொ)

சரணங்கள்

1 ஆதியந்தமகல வோங்கி
அல்லும் பகலு நீங்கி
போதமயானந்த மானப்
புண்ணியரா தீனப்
பொருளாயொளி மோன:(பொ)

2 அந்தகனுர்கையி லாவி
ஆமுன்னுனை மேவிச்
சிந்தை தீர்ந் திருந்து வாழும்
சீருரை சுரர் சூழும்
சித்தர் கண்முடி தாழும் (பொ)

3 இருளாகியமாயை நீக்கி
எப்போதுந்தன்னை நோக்கி

அருளாந்தரிசனங்கை கூட்டும்
அச்சுத நிலைமாட்டும்
ஆனந்தரச மூட்டும் (பொ)

---

(266) இராகம் - கரஹரப்பிரியை - அடதாளம்

பல்லவி

பொருளாசை பொல்லாது
பொல்லாது புவிமீது (பொரு)

அனுபல்லவி

மருளாமானிட ரென்றும்
மகிழும் மாதவ ரிகழும் (பொரு)

சரணங்கள்

1 தந்தை தாயொடுதமய னநுஜன்
பந்துவர்க்கங்கள் பாரின்மேம்படு
மைந்தர்மித்திரர் மாண்ப ரெனினும்
சிந்தைநைந்திடத்தீங்கு செய்திடும் (பொரு)

2 நேரிட்டகவெளி நேர்மையினிதருள்
ஓரெட் டிரண்டின துண்மை யுணர்த்திடும்
சீரிட் டில கா சாரி யரையுங்
கோரட் டின் முன் கொண்டு போய்விடும்(பொரு)

3 சுத்த நிர்க்குண ஜோதி சுகநிதி
கத்த னுங்கண் காட்சியாய்
எத்தி சையுந்தா னுயிலங்கிடும்
அத்த னச்சுத னங்க்ரி சாட்சியாய் (பொரு)

---

(267) இராகம் - ஆனந்த பைரவி - அடதாளம்

பல்லவி

பொருளேபுரந் தருளே போதமயப்
புகழோங்கும் பூதலந்தாங்கும் (பொ)

அனுபல்லவி

அருளானந் த வாரியி லாழ்ந்தவ ருக்கெஞ் ஞான்றும்
தெருளா யகம்புற முந்
திவ்ய தேஜமாய்த் தோன்றும் (பொ)

சரணங்கள்

1 இமையளவு மன மமைதி
யுறவறி•யேன் சிறியேனன்போ
டேதமறவுனையோதுமுறை குறியேன் மேலாம்
அமலமிகுமிசை கமழுமறைமுடி
யதிலகவுந்தனி யானகாரண
மான நிர்க்குண த்யான நிச்சய
மோனசின்மய ஞான பூரண (பொ)

2 தெரிவ ரியபர துரிய காட்சிய தாய்த் தேகேந்த்ரியாதி
செயல கல சே ஷித்த சாட்சியதாய்த் தானுய்ப்
பிரியமப்ரிய மின்பதுன் பொடு
பிறப்பிறப்பென தது வி தென்றிடும்
பேத ரகித விபூதி பெறு நிஜ
போத ரசவடிவாகி நின்றிடும் (பொ)

3 இனிது மகத்தணு
வெனும் வசனமற்றதாய்ச் சித்தகனமயமாய்
எங்குநிறைந்தொளி பொங்கு நிலையுற்றதாய் நன்ருய்

அனகஜனக சனந்தனாதிக
ளனுபவித்தனு தினமிறை ஞ்சிடும்
அச்சுதச்சுடரான நின்மல
நிச்சலசத்தாகி மிஞ்சிடும் (பொ)

---

(268) இராகம் - பார்சி - ரூபக தாளம்

பல்லவி

போதபரி பூரண காரண
புவியுத் தாரண
பொர்து நிலை யானே
போற்றினேனருளு மாதியனாதிப் பொருளெனப்
புகழ்மிகுந் தேனே (போ)

அனுபல்லவி

ஏதுக்கேழையேனையிச் சோதனை
நாதனே நீதனே நம்பினேனுன் பாதம் (போ)

சரணங்கள்

1 தானதாகித் தன்னிகரொழி
மன்னொரு மொழி துன்னக விழி
மின்னருள் பொழி
தன்மை நன்மை சேர்
வானரூபமாம் ஞான தீபமாம்
மாநிக்ஷேப மாம் (போ)

2 கற்பனைநாசமாய்ப் பொற்பருணேசமாய்க்
காட்சிவிலாசமாய்ச் சாட்சிப்ர காசமாய்
அற்பகலுங்கோரும் அன்பதிகஞ் சேரும்
அன்னவர்முன் னேரும்
அச்சுதப் பேராரும் ஆனந்தவாரி யமுதூரும் (போ)

---

(269) இராகம் - தேசிகதோடி - ரூபகதாளம்

பல்லவி

போதும் போதும் பொருளுந் தேகம்
பூவை மோகம் புவன போகம் (போ)

அனுபல்லவி

யாதுமோர் நலன் பேதையோர்ந்திலன்
தீதிலந்தர்யாமி சாமி (போ)

சரணங்கள்

1 காரணகாரியங்க ளேகிக்
கற்பனை கடந்த செல்வ மாகிப்
பூரணோதயம் பூக்கு நிச்சயம்
பொருந்தாமற்கை விட்டேன் கெட்டேன் (போ)

2 ஆராயும் வேளையி லுனை
யன்றித்திக்கில்லை யாதலா லெனைப்
பாராய்முகம் தாராய்ச் சுகம்
பற்றொன்றையு மேவா தேவா (போ)

3 நித்திரையின்க ணித்திரை செய்யும்
நின்மலர்க்கருண்மாரி பெய்யும்
சித்துருக்கொடு திகழுமேம்படு
ஜீமூதஸ்திதியே பதியே (போ)

4 இன்ப துன்பங்க ளிழந்துறுஞ் சேதி
ஏகாந் தத்தலத் திருத்தி நீதி
அன்பருள்புரி யருஞ்சுடர் விரி
அச்சுதப்ரபோதா நாதா (போ)

(270) இராகம் - இந்துஸ்தான் கல்யாணி - ரூபகதாளம்

பல்லவி

போற்றி போற்றி போத நாதனே
போற்றி போற்றி புறத்து மகத்தும் (போ)

அனுபல்லவி

தோற்றமொடுக்க மின்மையாகிச்
சுகசாகரத் தன்மையாகி
வீற்றிருந்தருள் வெளியே யொளியே (போ)

சரணங்கள்

1 ஆரணப் பொருளாகி யாவும்
ஆய்ந்தோர் செயலோய்ந்து மேவும்
பூரணந்தனைப் புகழ்ந்து மகிழ்ந்து (போ)

2 மோகம் விலக்கி மொழிக டந்த
முத்தியைத்தரு நித்தியா னந்த
போகம்விளையும் பூமியே சாமியே (போ)

3 கற்பிதாந்தகாரந் தாண்டிக்
கதிவாழ்ந்திடும் பதியை வேண்டிப்
பொற்புறத்துதி புரிந்து பரிந்து (போ)

4 தேஜிதாத்ம தீர்த்தஸ் நானம்
செய்தச்சுத தாசன் மோனம்
பூசித்துன்பதம் பொருந்தத் திருந்த (போ)

---

(271) இராகம் - ஈசமனோகரி - ரூபகதாளம்

பல்லவி

மதிசுதாரச நிதியே வான் (ம)

அனுபல்லவி

அதிசுகாஸ் பத கதி காரண
பதிசதோதயபரி பூரண (ம)

சரணங்கள்

1 இகலோகபர லோக
இச்சைகளொழித்தேக போக
சகஜா நந்தந் தரு மோன
த்யானஞானத்தகை யான (ம)

2 சபல குணுத்மனு மௌனத்
தற்காத்தருணம்பினே னுனே
அபரோட்சஸ்வ ரூப ஸ்ரேய
மாயநேய மதிதூய (ம)

3 இன்பீசனயனச் சுதனும்
இமையாவிழியிலகிடத் தினம்
அன்புறுமாத்மானு பூதி
யாதிநீதி யருட் ஜோதி (ம)

---

(272) இராகம் - பைரவி - ரூபக தாளம்

பல்லவி

மர்ம மே னே தர்மந்தானே
மாணகஞான மதிதாணு மார்க்கஞ் சொல (ம)

அனுபல்லவி

கர்மரஹித காட்சியானே
காணரும்பர மாட்சியானே (ம)

சரணங்கள்

1 சுகமாகும் பேரறிவைக் கெடுக்கும்
தொலையாப் பெருந்துன்பத்தைக் கொடுக்கும்
அகமாயாந்த காரம் போக்க
அடியார் பணிக்கா ளாக்க (ம)

2 மாசில் லொருமொழிமதியினைக் கொண்டு
மானில முற்றுந்தன் வடிவெனக் கண்டு
பேசாத விசேஷ முற் றுய்யவே
பேரருண்மாரி பெய்யவே (ம

3 நனிமிகும்பல சமயங்க ளென்னும்
நதிக்குழாம்புகுந் துதிமேன் மின்னும்
அனுபவானந்த நேமியானே
அச்சுதப்பெய ரானே (ம)

---

(273) இராகம் - காம்போதி - ஆதிதாளம்

பல்லவி

மறந்தே னேயானல் வாழ்வே னே (ம)

அனுபல்லவி

பிறந்தே பூமியிற் பேரிடர்மே வாவிதமென்னைப்
பேரன்பொடு நேராண்ட சீரரு டன்னை (ம)

சரணங்கள்

1 ஓர்மொழியுணர்வதி னெண் கருவாய்
உருவா யருவாய் மிகு
பேர்மருவும் ப்ரம்ம வித்தையி னருமை
பேசியின் புதவிய மாசிலாப் பெருமை (ம)

2 பாசவிமுக்த நிஜஸ் திதியே
பதியே கதியே வர
தேசிகாக்ருதியதாகியென் மிடிகளைத்
தீர்த்தடியாரினஞ் சேர்த்த சேவடிகளே (ம)

3 பூரணம் பூத்த மதித் தெருளாய்ப்
பொருளா யருளாய்த் தனி
யாரணங்களோதுஞ் சோதிமணிமலை
யானவச்சுதமெய்ஞ் ஞானமோனநிலை (ம)

---

(274) இராகம் - செஞ்சுருட்டி - ரூபக தாளம்

பல்லவி

மறை முடிப் பொருளான மோன ஞான
வான் பொருளே யருளே (மறை)

அனுபல்லவி

குறையே கிட முறையே யெங்கும்
நிறைவேயெமதிறையே மா (மறை)

சரணங்கள்

1 மதிதெளிந்தக வனசம் விரியும்
வகையருள் புரியும் ஜகத்
பதியேயருங் கதியேதரும்
ததியேசுக நிதியே மா (மறை)

2 நீணிலத்தின்ப நிலையென் றென்றும்
நேசித்திருந் தொன்றும் பலன்
காணேனேதுந் தோணே னுளம்
நாணேனந்தோ வீணேன் மா (மறை)

3 சரத மர்சுத சாமி நீதி
தழைத்திடு மாதி பரா
பரமே நிலவரமே தயா
கரமே மனோஹரமே மா (மறை)

---

(275) இராகம் - கீர்வாணி - ரூபக தாளம்

பல்லவி

மனக்கவலையை மாற்றியருள
வாராய் வரந் தாராய் (மன)

அனுபல்லவி

அனுதினமேலாய வுன்றன்
வனஜாங்க்ரியை வாழ்த்து மென்றன் (மன)

சரணம்

1 விமலஞான தீர்த்தமாய்
வேதகலட்சி யார்த்தமாய்ச்
சுமதிகளுக்கெ தார்த்தமாய்த்
துரிய மூர்த்தமாய்
இமையளவுமாரும லெங்கும்
ஏகபோகமா யிலங்கும்
அமிதசுகோதய காட்சியே
அச்சுத பர மாட்சியே (மன)

---

(276) இராகம் - தோடி - ஆதிதாளம்

பல்லவி

மனமாமாயை மாய்ந்தேக மதாய்
வயங்கக் கண்பாராய் சீராய் (மன)

அனுபல்லவி

கனமாம் ஞாயங்க ளோதும்
கடவுளானே காட்சி யானே (மன)

சரணங்கள்

1 மீதாமார்க்க மேவிக் களிக்க
மிகவன்போடாய்ச் சுகமின்றளிக்கப்
பாதாம்புயமல்லா தொன் றறியேன்
பாரருட் சிறியேன் (மன)

2 சோதிவானக மாதியாவும்
நீதியச்சுத க்யாதிமேவும்
போதான்வயமாம் புண்யோதயமாம்
பொருளே போற்றி யருளேதேற்றி (மன)

---

(277) இராகம் - கேதார கௌளம் - ஆதிதாளம்

பல்லவி

மனமார மாதவம்
மாருது புரிந்து
வாழ்வதென்ரூே தெரிந்து (மன)

அனுபல்லவி

கனமாந்தன் னிலையைப் பெற்று
அனுமானமற்றுத் தினமோன முற்று (மன)

சரணங்கள்

1 காராராரண்யம் சென்று
காயிலைகந்த மூலங்களைத் தின்று
தீராப்பசிநோய் வென்று
திரம்பெறவே நின்று பரம்பொருளு மென்று (மன)

2 இருட்பெரும் படையைக் கீண்டி
இலகுசித்பாஸ்கர னுமிறை யாண்டி
அருட்பெரும் புணையைத் தூண்டி
அகவாரி தாண்டிச்
சுகவாரி வேண்டி (மன)

3 திகழுமடியாரடித் தொண்டு
சித்தித் தகக்கிரந்தி விண்டு
நிகழுஞானும்ருத முண்டு
நிச்சலநெறி கொண்டு
அச்சுதனடி கண்டு (மன)

---

(278) இராகம் - காம்போதி - திரிபுடை தாளம்

பல்லவி

மனமே மாயா ஜகமாம்
வலைக்குள் ளகப்பட்டு நீ
மயங்கித் திரிந் தலையாதே
மரணந் தப்பாதே (மன)

அனுபல்லவி

முனமே செய்பக்தி த்யான
முயற்சியான் மேன்மை யான
தனுவடைந்தும் வீண் காலம்
தனைப்போக்குவதென்ன கோலம் (மன)

சரணங்கள்

1 கருப்பைக்குள்ளாய் மிகுந்த
கவலைப்படும்போ துயர்ந்த
கடவுளை வேண்டிக் கொண்டிருந்த

இருப்பைவிட்டு வந் திங்கே
யேதுசாதித்தா யெங்கே
யெய்தும் பேரின்ப வீடு
என்னவுனக்குக் கேடு (மன)

2 நீங்காபோத சமாதி
நிட்டையகற்றுங் கபோதி
நிலையாய்ப்பொய் வார்த்தைக ளோதித்
தீங்குகள்செய்வ தேனோ
தின்றுறங்குவது தானோ
தெளிவானஞான சித்தி
சீசீயீதென்ன புத்தி (மன)

3 இருடேசிலாதெங் கெங்கும்
இன்பக் கல்லோலம் பொங்கும்
இயல்பளிக்கும் பேரா யிலங்கும்
அருளாழியாம்ப்ர தாபன்
அச்சுதாநந்த ரூபன்
அடிக ளுட்ட மறந்து
அகம்பாவத்திற் சிறந்து (மன)

---

(279) இராகம் - தேசிகதோடி - ஆதிதாளம்

பல்லவி

மாஜோதி மதி நீதி
மறை யாதி (மா)

அனுபல்லவி

தேஜோமயானந்த சனாதன
தேவநிரஞ்சன கேவலாத்மகன (மா)

சரணங்கள்

1 பாராதியண்ட சரா சரங்களின்
பகிரந்தர்க்கதமாகிச் சதாமின்
சீராருந்த்ருக் விலாச விசேஷ
சின்மயகாரண நின்மல பூரண (மா)

2 மோனுக்ருதியடைந்து வேறென்று
முன்னிலையென்பதிலா முறை நின்று
தானுனதன்மை யோங்கிடுஞ் ஜீவ
சாட்சி சதோதய காட்சி நிராமய (மா)

3 அந்தரங்கதரி சனமினிக் காட்டி
ஆனந்தசாகர மதனிடை யாட்டி
எந்தநாளுமறவாவர மீந்தரு
ளிணையக லச்சுதமணியெனு மற்புத (மா)

---

(280) இராகம் - முகாரி - ஆதிதாளம்

பல்லவி

மாயாமயஜகமாம் மருளாதே மனமே (மா)

அனுபல்லவி

நீயாய்ந்து பார்சுகமரம் நினைவோடு மனமே (மா)

சரணங்கள்

1 எஞ்ஞான்றுமாமலை யிலக்குறு மேனிலை
மெய்ஞ்ஞானும் பகமாம் வெளியாமனமே (மா)

2 பொங்குங்கடல்வடி பூரணமேற் படி
லங்கையாரமலகமா மதுவா மனமே (மா)

3 அச்சுத தாசனை யாண்டசர்வேசனை
நிச்சயித்தாலுண் முகமாம் நிலையா மனமே (மா)

---

(281) இராகம் - நாத நாமக்கிரியை - ஆதிதாளம்

பல்லவி

மாருதானந்தந் தரும் வானே
மௌனப்பண் பானே (மா)

அனுபல்லவி

தேருதெளியேன் படும்
தீவினைகடீர்த் திடும் (மா)

சரணங்கள்

1 தண்ணருணீதி யுள்
தயங்குந்த போதனர் கள்
கண்ணுங் கருத்துங்கனந் தேங்கக்
கதிமே லோங்க (மா)

2 மின்னுமாரியன் திண்ணம்
மிகவிளம்பிய வண்ணம்
மன்னுஞ்சொ ரூபோதய மாக
மாயை யேக (மா)

3 நிருமலாச்சுத ஞான
நிச்சய நேர்மை யான
பிரமரசவாரியி லாழப்
பேரொளி சூழ (மா)

---

(282) இராகம் - காபி - சாப்புதாளம்

பல்லவி

முத்திதரு நாதனே முன்வந் தருணீதனே (மு)

அனுபல்லவி

சித்தத்தொளிராரண காரணபூரண (மு)

சரணங்கள்

1 இருணிலை நீங்கிட இன்பம தோங்கிடத்
தெருணிலை யாமக வானகமோனக (மு)

2 பொங்குகட லாழ்ந்திடப் புனிதரொடு வாழ்ந்திட
இங்கன்புரை சீரொளி நேரொளி பேரொளி (மு)

3 அனுதினமாரருளை யச்சுதவான் பொருளை
மனவிழி பூத்திடப் பார்த்திடச் சேர்த்திட (மு)

---

(283) இராகம் - காபி - அடதாளம்

பல்லவி

மூடமனதைச் செம்மையாக் காயோதேவா
மோக்கமுறக் கடைக்கண்ணைக் காயோதேவா (மூ)

அனுபல்லவி

நாடநிஜாநந்த நாட்டினி லமைந்திட
நான்மறை முடிதுய்யனேயென தையனே (மூ)

சரணங்கள்

1 ஆறுவதுசினமென்றவ்வை யுரைத்த மொழி
ஆரணமிதுவன்றியயலு முண்டோ வழி
தேறவோதி யுணர்ந்துஞ் சீரியர்மேன் மீறிச்
சீற்றமோங்கித் திரியுந்துயர் புரியும் (மூ)

2 பெற்று மழிவில்லாத பெருஞ்செல்வ மருளாற்
பிறங்குஞ் சுகநிலையிற் பிழைத்துமீண் டுந்திருக்காற்
கற்றுங் கற்றறிமோழைக் கஷதநிகராய் நிதம்
கலங்கிவீணு யலையும் நிலைகுலையும் (மூ)

3 அச்சுததாசனீங் கறைநீதியைத் துறந்தே
யற்பவிலங்கினம்போ லாகித்தன்னை மறந்தே
துச்சவிடயங்களிற்சொக்கி மதிமயங்கித்
தொலையாப்பிறவிப்பெரும் தொல்லையைத்தரும் (மூ)

(284) இராகம் - பியாக் - ஆதிதாளம்

பல்லவி

மூழ்காதே மூழ்காதே மொழியைக்கேள்
மூடமனதேசத்தில் மோக சமுத்திரத்தில் (மூ)

அனுபல்லவி

வாழ்கநீயெனப்பெரு வாழ்வருளிய குரு
வாய்மொழியைக்கைவிட்டு நாய்போ லலைந்து
கெட்டு (மூ)

சரணங்கள்

1 உலகெங்குங் கானலின் நீர் நீர் நீர் நீர்
ஒக்குந் திருக்கொளியைப் பார் பார் பார் பார்
இலகுமிதுவேநல்ல சீர் சீர் சீர் சீர்
என்னுமாதவர்க்கிணை யார் யார் யார் யார் (மூ)

2 புகழ்மிகுஞ்சிற்பர விண் விண் விண் விண்
பொழியுமமிர்தபானம் பண் பண் பண் பண்
வகைவளர்மேலகக் கண் கண் கண் கண்
மறந்தாலுன் வாயில்விழு மண் மண் மண் மண் (மூ)

3 ஒராதுண்மையைக் கருங் கல் கல் கல் கல்
ஒப்பாயிருக்கின்ருயேன் சொல் சொல் சொல் சொல்
ஏரருளாயுதத்தாற் கொல் கொல் கொல் கொல்
எனக் கொல்வே னினிநிலே நில் நில் நில் நில்

4 நன்ருெளி ராத்மா ராம் ராம் ராம் ராம்
ஞானப்பரம் பொருளே நாம் நாம் நாம் நாம்
என்றுணரவல்லிருள் போம் போம் போம் போம்
இன்றே லெமதண்டனே ஆம் ஆம் ஆம் ஆம்

5 எண்ணுமெண்ணங்க ளெல்லாம் பொய் பொய்
பொய் பொய்
இறந்துபோத லெப்போது மெய் மெய் மெய் மெய்
அண்ணலச்சுதன் பணி செய் செய் செய் செய்
அகம்பாவத்தின் வேரதைக் கொய் கொய் கொய்
கொய்

---

(285) இராகம் - வசந்தா - ஆதிதாளம்

பல்லவி

மெய்ச்சோதிவெளி யாகுமோ
வெவ்வினே போகுமோ (மெய்)

அனுபல்லவி

சச்சிதா நந்தப் பே ரோங்கும்
சகமெலாந் தாங்கும் (மெய்)

சரணங்கள்

1 அதுலிதமாய் மன்னும்
அறிவேதானெனப் பன்னும்
விதமறியார்க்கெப் போதும்
வேதங்க ளோதும் (மெய்)

2 நாஞருலகே தென்று
நாடித்தெளிவாய் நின்று
தாஞகாருள்ளத் தார
சத்கதி சேர (மெய்)

3 தீதிலச்சுதமா யெங்கும்
சின்மயாநந்தம் பொங்கும்
சூதுணராதா ருய்யச்
சுகமாரி பெய்ய (மெய்)

---

(286) இராகம் - இந்துஸ்தானி சாரங்கா - ஆதிதாளம்

பல்லவி

மெய்ஞ்ஞான வெளிமேற் கதி
மேவச்செய் விஸ்வ பதி (மெய்)

அனுபல்லவி

அஞ்ஞாஞந்தகாரத்தைப் பாழ்
ஆக்கும் புவி காக்கும் வான் (மெய்)

சரணங்கள்

1 விண்ணவர் மேவுமணம் வீசிட மேலாய்
விளங்கிடுங்கற்பக விருட்சத்தைப் போலாய்
எண்ணின வெண்ணங்க ளெல்லாம்
எளிதிற் கரங் கூட்டும்
இன்ப மூட்டும்
என்றும் வாட்டும்
இன்ன லோட்டும்
தன்னைக் காட்டும் வான் (மெ)

2 எல்லையகன்றெங்கணு மிடையரு நேசமாய்
ஈதெனுஞ்சுட்டொழிந் தேகப்ர காசமாய்
அல்லும்பக லில்லா வகை
யாரற் புதந் தெரியும்
அன்பு விரியும்
அருள் புரியும்
அகம் பிரியும்
சுகம் சொரியும் வான் (மெ)

3 முச்சுடர் மூலமெனு நிச்சய நேர்ந்திடும்
மூர்த்தி ரகிதாகண்ட கீர்த்தியைச் சார்ந்திடும்
அச்சுதாநந்த வாரிப்பே
ராயொளிரெம் மாதி
யரு நீதி
யக ஜோதி
யனு பூதி
யதி க்யாதி வான் (மெ)

---

(287) இராகம் - நாதநாமக்கிரியை - ஆதிதாளம்

பல்லவி

மெய்யடியார் சேவடியே
மேவிடச்செய் வாயிப் படியே (மெ)

அனுபல்லவி

பொய்யடியாரிட்டம் போக்கிப்
புவியின்போகத்தை நீக்கி (மெ)

சரணங்கள்

1 காரணதேசிக னருளால் கரதலாமலகம் போல்
பூரண சின்மயாநந்த போகமேன்மை யடைந்த (மெ)

2 ஆதியந்த மின்றதாய் அத்வைதமாய் நின்றதாய்ச்
சோதிக்கிரணங்கள் சூழும் துரியவீட்டினில்
வாழும் (மெ)

3 பாவனைக ளற்றதாய்ப் பாரெங்கு முற்றதாய்
மேவும் பேரரு ணேமியே மின்னுமச்சுத சாமியே (மெ)

---

(288) இராகம் - அஷ்டராகமாலிகை - அட்தாளம்

பல்லவி (பைரவி)

மேம்பாடா மின்பவீடடைந் துய்யும் ப்ரம்ம
வித்தை பயிற விவேகம் அருளாய் (மே)

அனுபல்லவி (ஆம்போகி)

ஆம்போகித் தலமாதியாவு நிறைந்த
ஆபோஜ் ஜோதிஸ்வ ரூபபாக்ய மமைந்த (மே)

சரணங்கள் (சாரங்கா)

1 பேராரும் பரமாத்ம சாரங்கதிக் குஞ்சுக
பாராவாரம்படிந்து சீராகநினை யல்லால்

(சாவேரி)

ஏராருமென்னகத் தீசா வேறில்லை கதி
நேராய்வந் தெனையாளாய் கோரினேனன்பாய் (மே)

(சஹானா)

2 ஆசாபாசங்களற்றுப் பேசாப்பெருமை பெற்று
மாசற்றோருங்குமகண்ட தேசான தீரர்கள்

(ஆனந்த பைரவி)

நேசித்தெப்போதும்விசு வாசித்தெய்திடுஞ் சித்வி
லாசானந்தபரிதா காசமென்றிடு மிக்க (மே)

(பியாக்கடை)

3 வான்கதி நின்னையல்லான் மண்டலத்தில் யாரைத்
தான் கருத்துண்ணம்பியான் கடைத் தேறுவேன்

(சங்கராபரணம்)

ஏன்கருணையென்மீதி லில்லைசங்க ரஹித
கான் குலவுமச்சுதா காரகர்த்தவ் யமே (மே)

---

(289) இராகம் - கேதாரம் - ஆதிதாளம்

பல்லவி

மேனிலையான சுக
மோனமெய்ஞ் ஞானமே (மேனி)

அனுபல்லவி

வானிலைவயங்குந் தூய்
வரமரு ளாய் (மேனி)

சரணங்கள்

1 மனத்தொழி லோய்ந்து
மதிமண்டலந் தோய்ந்து
தனித்திருக்க வேண்டினேன்
ததி தமியேன் (மேனி)

2 சிறப்புறத்தன்னைக் கூடும்
சீரியரின்ப நாடும்
பிறப்பிறப்பில்லா வொன்றே
பேரருட் குன்றே (மேனி)

3 இதுசமயங்கண் பாரும்
இல்லைகதியிங் காரும்

அதுலிதா நந்த சீர்
அச்சுதப் பேர் (மேனி)

---

(290) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

மோனமருளும் ப்ரக்ஞான
மூர்த் தியே (மோ)

அனுபல்லவி

தீனனேன் மேனிலை
சேரவுள் ளார (மோ)

சரணங்கள்

பேரணி யுந்தேசிகன்பேசின விதமாய்ச்
சீரணிந்து சஞ்சலந் தீர்ந்திதமாய்க்
காரணவேதம் காட்டுகிர்ப் பேதம்
பூரண போதம் பொங்கும் விநோதம்
பூவலயமதிற் கடந்தடியேன் புரி
தீவினைகளகலக் கருணைமழை சொரி
மாவிண்ணுரு தாவிடுமச்சுத குரு
தேவகேவலப்ர பாவமேவு நிஜ (மோ)

---

(291) இராகம் - உசேனி - ரூபகதாளம்

பல்லவி

யாதுமைம்மாறியற்ற வல்லேன்
பேதையே னென்றுந் தெரிந் தில்லேன் (யா)

அனுபல்லவி

வேதாதீதவிய னுருவே
விமலநிஜாநந்த குருவே (யா)

சரணங்கள்

1 உன்னையல்லாலுல குயிர் பரம்
ஒருக்காலத்து மின்றெனத் திரம்
சென்னியிற்கரஞ் சேர்த்தன்பா யன்று
திருவருடீக்கை செய்ததற் கின்று (யா)

2 வினைதடித்துழல் வெய்யனு மென்னை
விரைந்தாண்டநின் மெய்யரு டன்னை
நினைக்குந்தோறு நெஞ்ச முருகுதே
பனிக்கண்ணு ருய்ப் பெருகுதே (யா)

3 சொல்லருமாபாசத் தன்மை
தொலைத்தொளிவீசிடு நன்மை
அல்லும்பகலும்பெற வெனையே
அச்சுதாகாரஞ் செய் தனையே (யா)

---

(292) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ஆரைத்தான் கோரிநா யேன்
பேரின்ப மெய்து வேன்
ஆழிசூழம்புவியின் மீது
அதனை யோது (யா)

அனுபல்லவி

சீராரவே செய்யும்
சோராதானந்தமாரி பெய்யும்
காராகாரமா ஞேனே
கண்மணியச்சுதக் கடவு ளானே (யா)

சரணங்கள்

1 கானலுதக ஞானமென் றனைத்தையும் யான்
கருத்திற் றிருத்தமொடு
கண்டேதுதி விண்டேவிதி
கர்மவிமுக்த மொளிரு நேர்
கதிநிதானஸ் திதியாம்
திருவருள்பெறத் திரமிலை யினிதுறத்
தீய வினைகளற (ஆ)

2 வானாதியாவுமா யெங்கும்
தானே தானாகித் தயங்கும்
தகையோர்ந்தினி யகசலசம்
திகழோர்மொழி தியானிப்பவரைத்தா னாளும் (வா)
ஏதொருபேதமிலா ததுவாய்
இகமொடுபரமும் பொதுவாய்
இமையவருணுமின் மதுவாய்
சமமக லமல மவிரும் (வா)

3 சுட்டுதலிலாத சுகசொருபநெறி சொலாத
சுருதி சாரமாம்
சுகிர்தசுஸரித சுமனசகித
சுரகுருதுரிய நிலையில குமதி
சுத்தாத்மஜோதியெழி லைத்தாவு மத்துவித
சித்தாந்தசீர்மை சத சத்தானதாம்
தனியதாகு நனிசேரு மற்புத
தவமினிபுரிந்திடச் சிவபதந் தெரிந்திட (யா)

---

(293) இராகம் - மோகனம் - ஆதிதாளம்

பல்லவி.

ராமம் கனஸ்யாமம் குணதாமம் ரம்ய நாமம் (ரா)

அனுபல்லவி

க்ஷேமம் முகசோமம் ரிபுபீமம் சித்தகாமம் பஜே (ரா)

சரணங்கள்

1 வீரம்மேருதீரம் சுகுமாரம் ஆத்மசாரம்
சூரம் சர்வாதாரம் சத்விசாரம் சுபாகாரம் பஜே (ரா)

2 தியானம்சித்தலீனம் ஸ்ருதிமானம் தயாஸ்தானம்
க்ஞானம் சுயபானம்கர்மஹீனம் ஸ்ருதிநூனம்
பஜே (ரா)

3 வேதம்வேத கீதம்நிஜபோதம் விஸ்வாதீதம்
மோதம் தசநாதம் சுவிநோதம் ம்ருதுபாதம் பஜே (ரா)

4 ஸ்ரீசம் ஸ்ரீநிவாசம் மந்தஹாசம் சித்விலாசம்
பாசம்சிதாகாசம் அச்சுதேசம் பயநாசம் பஜே (ரா)

---

(294) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

ரவிகுலராமம் ராட்சச வம்சபீமம் (ரவி)

அனுபல்லவி

பவனாத்மஜ பூஜிதம் பதசாரஸ விராஜிதம் (ரவி)

சரணங்கள்

1 க்ஷீராப்திசயன தேவம் சிதக்னிஸ்திதி ப்ரபாவம்
தாரகநாமாமிர்தம் தரஜாங்கனஹ்ருத் கதம் (ரவி)

2 மதனகோடி சுந்தரம் மௌனிஜன மனோகரம்
விதிநிஷேத நிக்ரகம் விமலவிராட் விக்ரஹம் (ரவி)

3 மாயாந்தகார நாசம் மார்த்தாண்ட சங்காசம்
ஸ்ரீயுதாச்சுதாத்மகம் சிந்தயாமி சந்ததம் (ரவி)

---

(295) இராகம் - உசேனி - ஆதிதாளம்

பல்லவி

வஞ்சநெஞ்ச மஞ்சுதே வாராயோ
வந்தென்னேராய்க் காவாயோ வாதேயோ (வஞ்)

அனுபல்லவி

சஞ்சலப் படுத்துங்கோர . சாகரமயசம்சாரத்
தாபத்தி னுலே தரைமேலே (வஞ்)

சரணம்

1 இன்புறுஞ்சுடர டைந்து
இருட்படலங் கடந்து
இச்சைகளனைத்து மேகி
இன்ப மாகி
அன்பர்களகங் களிக்கும்
அச்சுத நிலை யளிக்கும்
ஆனந்தத்தேனே யருளானே (வஞ்)

---

(296) இராகம் - இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

பல்லவி

வந்தனம்புரிந்து வாழ்த்துவாம் வான்
மகிமையிலங்குந்தனி வஸ்துவை யினி (வந்)

அனுபல்லவி

சந்ததமு மானந்த சிந்துமயந் தயங்கும்
அந்தரங்க சேதியை யனக ஜோதியை (வந்)

சரணம்

1 பெரியோர்களைச் சேர்ந்திடப்
பேதபுத்தி பேர்ந்திடத்

துரியாதீத பதத்தைச்
சுவி சேஷத்தை (வந்)

---

(297) இராகம் - ஆரபி - ஆதிதாளம்

பல்லவி

வந்தாதரணை செய் தரிசனம்
தந்தாதரணை செய் சாமி இது
தருணம் பவஹரணம் புவிதரணம்
ம்ருது சரணம் ஹித ஸ்மரணம் தந்து (வந்)

அனுபல்லவி

சிந்தாகுலங்களைக் கடந்தானந்தப் புணரிச்
சீருணர்ந்துகுளிக்க நேருணர்ந்து களிக்க (வந்)

சரணங்கள்

1 இந்திரஜாலம் இணையிந்த ஞாலம்
வந்ததன் மூலம் வான்பொருட் கோலம்
மந்திரமாமறை வாக்கியத் துண்ணிறை
மாண்மை குருமணியினுல்
தந்திரமோர்ந்து தானெனத் தேர்ந்து
தற்பரமாய்வெளி சிற்பரமா யொளி
ரந்தத்திருட்சி யச்சுத காட்சி
ஆனசத்தேதனி மோனவித்தே யினி (வந்)

---

(298) இராகம் - பந்துவராளி - ஆதிதாளம்

பல்லவி

வந்தேனுண்டருளே வான்பொருளே (வந்)

அனுபல்லவி

தந்தேன்யாக்கையும் சாற்றுமாவிப் பொருளும் (வந்)

சரணங்கள்

1 வஞ்சமனத்துறு பஞ்சபுலன் புரி
சஞ்சலமற்றெளி மிஞ்சுபரஞ்சுட
ரெஞ்சலிலாதடை யுஞ்சுகமின்றளி
அஞ்சலிசெய்திணை கஞ்சபதந்துணை (வந்)

2 துச்சசுகங்களி லிச்சையொழித் தொளிர்
சச்சிதாநந்தநி லேச்சகஜம் பெற
நிச்சயமனதுட னெச்சமயங்களு
மெச்சிதினந்துதி யச்சுதனேததி (வந்)

---

(299) இராகம் - ஆரபி - ஆதிதாளம்

பல்லவி

வரந்தாராய் வந்துநேராய் மகிழ்ந்துமா
மதிமண்டலத்திற்கதி பதியே கதியே (வர)

அனுபல்லவி

நிரந்தர மருந்தவநேர்ந்திரு டீர
நினைச்சேர நிஜாகார மார (வர)

சரணங்கள்

1 கனவிந்திரஜாலங் கானனீர் வண்ணம்
கற்பிதமாமுல கந்தனிற் றிண்ணம்
ஜனன மரணமெனுந் தரங்கங்க ளோயச்
சதுபாயமதனை யேய தூய (வர)

2 காலபாசத்து ளாகாமுனம் நீதி
கமழுமமலசிதா காசத்தின் சேதிச்

சீலந்தெரிந்திடச் செய்திடநீயல் லாது
செகமீது திக்கேது வோது (வர)

3 துன்னுஞ்சங்கற்பங்க ளென்னு மருணீக்கிச்
சுத்தநிர்க்குணசுயஞ் சுடர்க்கொழுந்தை நோக்கி
மின்னுமச்சுதாநந்த வேலையி லாழ
வினைதாழ வெளிசூழ வாழ (வர)

---

(300) இராகம் - வராளி - அடதாளம்

பல்லவி

வருமோபரமசுக வாழ்வெளிதாக (வரு)

அனுபல்லவி

குருமார்க்கமில்லாது குவலய மீது (வரு)

சரணங்கள்

1 எல்லாஞ்சொரூபம் எனுமதி தீபம்
இல்லாமலம்மம்மா இம்மையிற் சும்மா (வரு)

2 மோன சமாதி முயலுநன் னீதி
தானுய்ந்து கோணுமல் தன்னைக் காணுமல் (வரு)

3 அச்சுதன் பாதம் அடையுமெய்ப் போதம்
நச்சாது கைவிட்டால் நமனுக்காளாகிக் கெட்டால் (வரு)

---

(301) இராகம் - ஸ்ரீராகம் - திரிபுடைதாளம்

பல்லவி

வருவாய் வரந்தருவாய்
மாமதித் தெருளே
வான் பொருளே (வரு)

அனுபல்லவி

அருவா யுருவாய்ப்பா ரெங்குஞ்சீ
ரானந்தநிலை யான குருவே
ஞானிகள் வாழ்சுர தருவே (வரு)

சரணங்கள்

1 சாரஹீனசம்சார சமுத்ர
கோரதுக்க நிவாரண மாக்கித்
தீரமேற்றிட வோருயிர்த் துணையினி
யாரெனக்குப் பாரகந் திக்கு (வரு)

2 தாலத்தாசை தவிர்ந்திடு மடியர்
பாலிலங்கிடும் பரஞ்சுடர் மணியே
காலபாசம தாலடையும் பிணி
சாலநீங்க மேலிசை யோங்க (வரு)

3 மாசிலாது வளங்கொளுந் துரிய
தேசமுற்றொளி வீசிடத் தனியே
பேசிடாத விசேஷமா யச்சுத
தாசனுய்ய நீசுக மிய்ய (வரு)

---

(302) இராகம் - சங்கராபரணம் - ரூபக தாளம்

பல்லவி

வாசாக்ஞானம் பேசி
வாதிட் டால்
போதமுளுதித் திடுமோ (வா)

ஆசார்யனருளாற் றன்னை
அறியுமதி மறந்து
அகம்பாவத்திற் சிறந்து (வா)

சரணங்கள்

1 தனியாமெய்ஞ் ஞானயோக சாதனை புரியாது
தத்வமசிமொழியின்றுத்பர்யந் தெரியாது
துனியளிக்குஞ் சங்கற்ப சனியன் பிரியாது
சோதியகவிசும்பினீதி நீரஜம் விரியாது (வா)

2 மடவாராதிவையக வாஞ்சையை நேசித்து
மதபேத மெனுந்துஷ்ட வழியிற் ப்ர வேசித்து
நடுவான மறைகளை நலமென்றுன்னி வாசித்து
நானாவித கர்மானுஷ்டா னங்களையப்பி யாசித்து (வா)

3 கருவிகரணங்களின் கவலையிரு டீராது
கருதரிய சின்மயக் கதிரொளியைப் பாராது
நிருவிகற்பசமாதி நீதிநிலை யோராது
நிச்சல சுகந்தரு மச்சுத விபுவைச் சேராது (வா)

---

(303) இராகம் - யமுனாகல்யாணி - ஆதிதாளம்

பல்லவி

வாராது வாராது
வல்வினைக டீராது (வாரா)

அனுபல்லவி

ஆரியன் னருளின்றித் தேட்டம்
ஆகிய சொரூப நாட்டம் (வாரா)

சரணங்கள்

1 அழிவிலொளியுரு வாயுளத்து
ளகவு மானந்தந் திகழும்வத்து
வழியுணராதென்ன வப்யசித்து
மன்னும்வைராக்ய சம்பத்து (வாரா)

2 சீருறுஞ்சிற்சுக ஸ்தானம்
தெரிந்திலாதெஞ் ஞான்று மோனம்
ஆருறும்பர மாத்ம த்யானம்
ஆயிலகுமனுபவ ஞானம் (வாரா)

3 சச்சிதா நந்த சித்தி
தாவுமன்பர்கண்மேவு முத்தி
அச்சுதாநந்ததீர்த் தத்தி
லாழச்செய்யு மபேத புத்தி (வாரா)

---

(304) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

வானகஜோதியே ஞானவி பூதியே
மேனிலை யாதியே தானரு ணீதியே (வா)

அனுபல்லவி

தீனனே னஞ்சலி செய்துநின்றேன் கலி
தீர்த்திடுவாய் கடைக் கண்
பார்த்திடு வாய்கதி சேர்த்திடு வாய்தநி
காத்திடுவாய் துதி (வா)

சரணங்கள்

1 நீண்டவன் மாயை நீத்தவர் சேரும்
நித்தி யாநந்த நிலையினி லாரும்
ஆண்டவனே சிற்சபை தாண்டவனே துயர்
மீண்டவனேயுனை வேண்டினே னுளனை (வா)

2 தன்னரும் பேரரு டழைக்கவெந் நாளும்
சகதலமெல்லாந் தனியர சாளும்

மன்னவனே சிருட்டிக்கு முன்னவனே முறை
துன்னுந்தூய வான்மறை சொன்னவனே நிறை (வா)

3 சீரணியுமச்சுத தேஜமா யெங்கும்
தெரிவரிதாம்பர செல்வமி லங்கும்
ஆரணமேபாப நிவாரணமே ஜகத்
காரண மேபரி பூரணமே விரி (வா)

---

(305) இராகம் - இந்துஸ்தானி - ஆதிதாளம்

பல்லவி

வானக ஜோதி
தானேதானுன நீதி வர (வா)

அனுபல்லவி

மேனிலை மின்னுங்கதி வீதி
ஞானிக ளனு பூதி (வா)

சரணங்கள்

1 மனச்செயல்கள் விரிந்திடும்
மாருத்துன்பம் புரிந்திடும்
ஜனனமரண மெனும் பீதி
தன்னை மாய்த்திடு மேதி (வா)

2 கர்மாகர்மங்க ளின்பம்
காலமகாலந் துன்பம்
தர்மாதர்மங்களொடு ஜாதி
சமய மில்லாச் சேதி (வா)

3 நிருமல நிலையது மேவிடும்
நீளிச்சை நிதமுந் தாவிடும்

அருமா மறைமொழி யாதி
அச்சுதசுகாம் போதி (வா)

---

(306) இராகம் - கன்னடா - ரூபகதாளம்

பல்லவி

வாஞயகனே வரமருள்
மாணகஜோதி மண்ஞதி (வா)

அனுபல்லவி

தானதானமோன ஞான
சாரபாரா வாரகம் பீர (வா)

சரணங்கள்

1 சாதன சதுட்டயந் தேர்ந்து
சற்குருதாளிணை சார்ந்து
நீதமுறுந் தன்னிலை யோர்ந்து
நிதங்களி கூர்ந்து
மாதவஞ்செய் தபோதனர்க்கித
மாக முணர்த்தி வாழ்ந்திடும் வித
மோதமுதவும் பேதரஹித
மூர்த்தி யகண்ட கீர்த்தி யச்சுத (வா)

---

(307) இராகம் - கேதாரம் - ஆதிதாளம்

பல்லவி

வானிலையே ஜோதி
மேனிலையே யாதி (வா)

அனுபல்லவி

ஞாஞனந்த மோனங்கனிந்த

சரணங்கள்

1 மலவிரு ளோட்டும் மதியொளி கூட்டும்
தலமிசை மீட்டும் ஜன்மித்திடாத்தடங் காட்டும் (வா)

2 சகலமுந் தாங்கும் சங்கற்ப நீங்கும்
சுகவாரி தேங்கும் தொந்தமில்லாத்துதி யோங்கும் (வா)

3 வன்பவந் தீரும் வகையருட் பாரும்
அன்பருட்சேரும் அச்சுதநாம மாரும் (வா)

---

(308) இராகம் - காம்போதி சதுரம்ஜாதி - ஜம்பைதாளம்

பல்லவி

வினை தீர்ப்பாய் வேண்டினேனிவ்
வேளை காப்பாய் மேலாமோட்ச
வீட்டிற் சேர்ப்பாய் (வினை)

அனுபல்லவி

அனைபோ லடியார்க் கருள் வோனே
ஆனந்தத் தேனே
ஆதி யப்ரமேய ஸ்ரேய
மாய தேவனே (வினை)

சரணங்கள்

1 சின்மயபரிபூரணபுவி காரண கதிமுதலாந்
திருவருள் சொரிகன திருக்கொளியென மறை
செப்பிடு மொருமொழி சேதி
சிற்பரஜோதி சிவானு பூதி
செறியுமாதி சிதாகாச விலாசமே (வினை)

ஏனோ சிறியேன்மீது வாது வோது
தானனசாட்சி காட்சியாட்சியே யினி (ஏனோ)

மனது கெடவயங்கு முனிகளுக் குலகிடை
ஜனனமரணமக லனகபதவி யருள்
புனித குருமணியே (ஏனோ)

மோனமுதவுமக த்யான மார்க்க சோ
பான பாவனமதிலீன பரமசுக
ஞான வானகபதி (ஏனோ)

தீய மனமலினமெனுந் திமிரமதைச்
சேதிக்குந் திண்ணிய கண்ணிய வடிவுறுங்கன
தேஜமாந் தேயமாய்ச் சேஷமாய்த்
தூயஞானந் தோயு மேன்மை
துன்னுமரு ணேய மாய
ஸ்ரீயச்சு தார்ணவமே (ஏனோ)

---

(309) இராகம் - கமாஸ் - ஆதிதாளம்

பல்லவி

வீணாய்க்காலங் கழிக்காதே
வெய்ய நெஞ்சமே (வீண)

அனுபல்லவி

காணுதருளைப் பழிக்காதே
கதியே தினி (வீண)

சரணங்கள்

1 பெண்டுபிள்ளைகடமைக் கண்டனி சமுங்களி
கொண்டறுசுவையுண வுண்டுண் டுறங்கியினி(வீண)

2 நீண்டபுகழோடுல காண்டமுடி மன்னரும்
மாண்டுபோ வதைப்பார்த்து மீண்டறி வில்லாதினி (வீ)

3 மானிடஜன்ம மரிதான தென் றுன் னுமனீ
ஏனலேகிருயிதுபோனுல் வருமோ வினி (வீணு)

4 ஆவியுடலேவிடுத் தேவெளியாகு முனங்
கேவல நிலேயதை மேவிப் பிழைப் பாயினி (வீணு)

5 பார்த்த விடமெங்கணும் பூர்த்தியா யொளிசெயுங்
கீர்த்திமிகு மச்சுத மூர்த்தியை மறந்தினி (வீணு)

---

(310) இராகம் - தோடி - ரூபக தாளம்

பல்லவி

வேதக சின்மாத்திர ப்ர
போத சுப்ர சாதமே (வேத)

அனுபல்லவி

தீதகமிலாதசுக சாதக வினேதமே (வேத)

சரணங்கள்

1 ஊணுறக்க வாதை யகன்று
கோணறுங் குறியுள் ளென்று
மாணிலகு சேணு ருவைக்
காணனுபவங் தோணுமோ (வேத)

2 ஜீவனென்னு மிரு ணீங்கவே
தூவெளிநல மோங்கவே
கேவலப்ர பாவ நிலே
மேவவரந் தாவிரைவாய் (வேத)

3 ஆதியரு ணேமி ஞான
நீதியச்சுதப் பேரான
மேதகை நாதனே யினி
சோதனைசெய்யா தெனை யாள் (வேத)

---

(311) இராகம் - இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

பல்லவி

வேத கீத நாத மோத
போதாம் ருத நிதி
யேதயை செய் ததி (வேத)

அனுபல்லவி

பேதரஹிதசா தனங்களிற் றேர்ந்திடும்
பெரியோரகம்புறம் பெருமையுற் ளூர்ந்திடும் (வேத)

சரணங்கள்

1 உன்னற்கரிதாம் புகழ்
ஒங்கியொன்ருய்த் திகழ்
தன்னேட்டைக்கண்டு நேர்
முன்னிசுரன் சொன்ன சீர் (வேத)

2 துரிதாந்தகாரங் கெடத்
துலங்கியான் வாழ்ந்திட
விரிமேதினி மீது
வேறுதிக் கேது (வேத)

3 சமமற்றுல கெங் கெங்கும்
சாட்சிசத்தாய்த் தங்கும்
அமலாச்சுத மணி
யாமெனும்பே ரணி (வேத)

---

(312) இராகம் - உசேனி - ரூபகதாளம்

பல்லவி

வேதார்த்த விசேஷ
மெய்ப் பொருளே வான்
வீ டருளே (வேதா)

அனுபல்லவி

போதார்த்த ப்ரபோத சின்மய
பூரண சர்வ சாட்சி காரண (வேதா)

சரணம்

1 நிருமல நிர்க்குண நிலை மின்ன
நேராகியன் ருரியன் சொன்ன
ஒருமொழியா லொளிரின்பக் கல்லோலம்
உற்றிங் குய்வ தெக் காலம்
கருமபந் தங்க ளொழி பாவ
கம்யமானச ரம்ய தேவ
பரமமூர்த்தியே நாயேனைக் கண்
பாரும் மாயைப் படலந் தீரும் (வேதா)

2 கையகநெல்லிக் கனிபோலிப் போது
கண்டுள்ளும்புறம்புங் கடைத் தே ருது
பொய்யழியும்புன் குரம்பை தானும்
போனபின் யாதேனும்
செய்யும் வகைத் தெளிவுண் டாகுமோ
உய்யும் வகை யூழ் வலி போகுமோ
மெய்யொளிவிளக் கேவீணுய்க் கெட்டு
விடுவேன் நீவே றெண்ணிற் கெடுவேன் (வேதா)

3 தேனெந்தத்திதி யுண்டளி குலம்
சேட்டை யற்றுத் திகழ்ந்திருக்கு நலம்

மோனந்தயங்கு முறைமை யுக
முகசமாதி சுக
ஞானந்தயை செய்யேனைய சீர்
ஏனென்றனுக்கேகரஸ பூர்
ணனந்தார்ணவமே சிவமே யெம்
மாதியச்சுத சுயஞ் சோதி (வேதா)

---

(313) இராகம் - காபி - ஆதிதாளம்

பல்லவி

வேறுதுணை யாருங்காணேன்
மேதினியி லந்தோ வீணேன் (வேறு)

அனுபல்லவி

ஈறுகடந்தில காதியே
எங்குநிறைந்த ஜோதியே (வேறு)

சரணங்கள்

1 மூடனுகியவென்றன் மேல்
முற்றுமாயையையேவி னல்
ஈடேறுவேனே செப்பா
யென்பிழைபொறுத்தா ளப்பா (வேறு)

2 இத்தனுநாசமாகா முன்
இருடேசிலாது மின்
சித்துருவாமுனைச் சேவிக்கச்
சேயனுயெனைப் பாவிக்க (வேறு)

3 ரனிந்தச் சோதனைகண் பாராய்
என்றுயரந் தீராய்

ஆனந்தபாரா வாரமே
அச்சுத ப்ரம்மா காரமே (வேறு)

---

(314) இராகம் - பியாக் - ரூபக தாளம்

பல்லவி

வேறே ராதாரங்காண் கிலேன்
மேதினி மீது வீணேன் (வே)

அனுபல்லவி

ஆருறுக்கப்பாற் ருவுங் கேவ
லானந்த் மேவ (வே)

சரணங்கள்

1 ஆவலாம்பேரடவியி லோடி
அலேந்தகந்தேடி வாடி
பாவியான்படும் பாதை நீக்கப்
பரிசுத்த மாக்கக் காக்க (வே)

2 நேரில்லாம லோங்கு மாதி
நிகமத்தின் சேதி நீதி
சீராருஞ் சுகவாரியி லாழத்
திருக்கொளி சூழ வாழ (வே)

3 எந்தநாளு மேழை மீது
ஏதுக்கிவ் வாது வோது
அந்தரங்கத்தி லாரெம் மானே
அச்சுத வானே தேனே (வே)

---

(315) இராகம் - காம்போதி - அடதாளம்

ஆதியேபரஞ் சோதியே மிகு
நீதியே நின் பாத வுற்வது
நீங்குமேலரு டாங்குமோ வொளி
யோங்குமோ வின்பந் தேங்குமோ
வேதமுடி யுறை
போதரச நிறை
ஏகமே புரி யோகமேசுக
போகபூமியி லாகு மகணித
புண்ய மேயதி கண்யமேலா
வண்யமே காருண்யமே

மோகவிரு ளொழி
பாக மதை மொழி

மோனமே பர ஞானமே யக
வானமே நிலே யானவொரு மொழி
மர்மமே நிஜ தர்மமே நிஷ்
கர்மமே பர ப்ரம்மமே

தீனனே னெனே
ஏனிச் சோதனே

தேவனே திகழ் ஜீவனே மானு
பாவனே பரமே வந்தனன் முகம்
பாருமே யிலே யாருமே கதி
வாருமே கலி தீருமே

சேவித்தேன் மனம்
மேவியனு தினம்

ஆசை யாய்ப்புகழ் பேசி வேண்டிடு
மாசிலச்சுத தாச னிதயநி

வாசனே சுப்ர காசனே ஜக
தீசனேயக நாசனே

நேசித் தரு ளொளி
காசினியி லளி (ஆதியே)

---

(316) கண்ணிகள் - இராகம் - ஆரபி - அடதாள சாப்பு

1 வையகமெங்கு நிறைந்திலங்கு ஞான
வானமானவர மோனமே
பொய்யக லத்தவஞ்செய்யுமடி யருட்
பூரணமான தியானமே

2 ஆதியுமாகியனாதியு மாகிய
கண்ட மாகிநின்ற சோதியே
பேதித்திடுமத வாதிகளுக் கெட்டாப்
பேதாதீத வேத நீதியே

3 சுத்தமாய்ப் புத்தமாய் நித்தமுத்த ருய்யச்
சோனை மாரிபெய்யு மேகமே
நித்தமாய் நின்மல மாயென துட்புற
நீங்கா திருந்தரு ளேகமே

4 முச்சுடருக்கு முதற்சுட ராய்த்திரி
மூர்த்தியுமாமுதன் மூர்த்தியே
அச்சுதாநந்த பாராவார மாயிரண்
டற்றொளிருங்கன பூர்த்தியே

---

(317) கண்ணிகள் இந்துஸ்தான் காபி - ஆதிதாளம்

கண்ணாரின்பசாகரப் பரம் பொருளே
கனமுறுந்தெருளே கதியருளே

2 பண்ணாருமறைப் பதப்பொரு ணீதமே
பாவங்கடந்தெங்கணு மேவுமெய்ப்போதமே
3 திவிபுவியாதியாய்த் திகழ்பரஞ் சோதியே
உவமையிலாதொளிரொரு மொழி யாதியே
4 காரணமீதெனக் கண்டவ ருள்ளமே
பூரணச்சின்மயம் பொலிந்திடும் வெள்ளமே
5 சுழிமுனை ஜொலித்திடுஞ் சுயஞ்சுடர் மணியே
விழிமுனை மேவியமேலவர் பணியே
6 நடுநிலைப்பார்வையி னவநவ காட்சியே
உடுநிலாப்பரிதியோடொளிர் முதற் சாட்சியே
7 சாம்பவிமுத்திரைதனில் விளை சுகமே
மேம்படுசிற்பரவெளிவா னகமே
8 கனகுருவருளினுற் கண்டுணர் ப்ரம்மமே
அனுபவவேத்தியமாகிய மர்மமே
9 உச்சிதபதந்தரு நிச்சயப் பொருளே
அச்சுததாசனை ரட்சித் தருளே (கண்)

---

(318) கண்ணிகள் இராகம் - சாமா - ஏகதாளம்

1 ஆதிபரஞ் சோதியம்பலம்
அருணிறை நீதியம்பலம்
மீதமையுஞ் சேதியம்பலம்
மேதையரனு பூதியம்பலம்

மேன்மைநெறி சதுர்மறை
விளங்குங்குறி மெய்க்கதிக்கு
வித்தாம் சதசத்தாம் பொது மேவு மன்பது

2 அன்பருள் விலாச பதம்
அந்தரங்க நேசபதம்

இன்புறுசர் வேசபதம்
ஏகப்பிர காச பதம்

இடுநடனம் எழிலுணர்ந்
திருக்க நிதம் இணையகல்
இதயம்சுகவுதயம் சொல் விழந்திலங்கு முதல்

3 முதலெனுந் துரியபொருள்
மொழிவதற் கரியபொருள்
அதுலித பெரியபொருள்
அனைவர்க்கும் பிரிய பொருள்

அற்புதத்தைக் கண்டு நிக
ரறைவதெத்தை முப்பாழுக்கும்
அயலாந் தயைப்புயலாந் தெள்
அமுதெனுங் கலைகள்

4 கலகங்க ணீங்குமொளி
கண்டாருளந் தேங்குமொளி
உலகங்க டாங்குமொளி
உள்ளும்புறம் போங்கு மொளி

ஒன்றலவோ நெஞ்சேயதை
யுஞ்சொலவோ பேதவாத
மோதல்மையலாத லற்று உண்மையைப்பா ருற்று

5 உற்றகன தர்ம்மநிலை
ஒருமொழி மர்ம்மநிலை
பற்றகலும் ப்ரம்மநிலை
பார்த்திடினிஷ் கர்ம்மநிலை

பாவமிலை யுண்டென்போர்
படுவர்தொல்லை பேரானந்த
பரிதம் நிஜசரிதம்தனைப் பார்க்கப் போகும் வினை

6 வினையொழி ஞானமணி
மிளிரகத் யானமணி
கனதர மோனமணி
கண்ணுங்கருத் தானமணி

காரணத்தைச் சுகபரி
பூரணத்தைப் பொருந்த வெக்
காலும்சுடர் மேலுந்தோயுங் காரிருண் மாயும்

7 மாயை துறந்த தலம்
வசன மிறந்த தலம்
தாயாய்ச் சிறந்த தலம்
சத்தம் பிறந்த தலம்

ஜாதிகுலம்பந்தமுத்தி தவிரமலம் அத்துவித
சாந்தம் நிகமாந்தஞ் சுகந்தழைக்குங்கற்பகம்

8 பகனிசி விண்டமதி
படிபுகழ் கொண்டமதி
திகழும கண்டமதி
சின்மயந்தி ரண்ட மதி

தெளிய முதம் புசித்தவர்
தீர்ந்துநிதந் தன்னிலையிற்
செழித்தால் பந்தமொழித்தால் தோணுந்
திருவருட் காணும்

9 காணரிய சூட்சமநெறி
கருணைக டாட்சநெறி
மாணரப ரோட்ச நெறி
மாசகன்ற மோட்ச நெறி

வந்ததானல் பிறப்பினி வாராதுமேல் மாகலையின்
மானங் தனிவானம் சுத்தம் வளர்ந்திடும் வித்தம்

10 வித்தகநிட் சேபவெளி
விசுவப்ர தாப வெளி
சித்தத்துறுந் தீப வெளி
திவ்யஸ்வ ரூப வெளி

சேர்ந்திடுவார் திருக்கெனத்
தேர்ந்திடுவார் தினந்தினந்
திரமாய்ப் பராபரமாய்ச் சுயந்
தெரியு மெத்திசையும்

11 திசைமுழு தாயபரம்
சித்திக் குபாயபரம்
அசிபத ஞாயபரம்
அச்சுதாப்ர மேயபரம்

அதைக் கலந்து ஜடபாவ
மறத்தொலைந்து மின்னச்சொன்ன
ஆர்யன்ஞானசூர்யன் னடி யணியு மெம்முடி (ஆதி)

---

(319) கண்ணிகள் இராகம் - சாமா - ஆதிதாளம்

1 தேவாதிதேவ திகழுமானு பாவ
மூவுலகாகியபெரு மானே
முத்தொழிலானே மோனகவானே

2 மாயாசம்சார மையலற்றுள்ளார
நீயாதரியாய் நீதியே
நிர்மலஜோதியே நிஜமறை யாதியே

3 சித்தாந்தத்தெருளே சின்மயமெய்ப் பொருளே
சத்தாகியசமரச போதனே
சகதாதீதனே சற்குரு நாதனே

4 நம்பினே னுன்றனே ரட்சணே செய்யென்றனே
உம்பர்க்கரிதாகிய வுருவே
ஒப்பகலருவே யொளிர்சுர தருவே

5 தானேதானுன சாமிசத்யக் ஞான
பாஞேதயபாவன பதியே
பரமுறுகதியே பண்புறு நிதியே

6 நின்பாலன்பு கொண்டு நிற்குமென்னெண்ணங்கண்டு
இன்பாலருளாம் நிலே யோது
இனிதுணேயேது இப்படி மீது

7 மிகப்பாவம் புரிந்து விட்டேனேயோ தெரிந்து
சகதலத்தின்கண் முறையே
தவிரென்குறையே தண்ணரு ளிறையே

8 இலங்குந்தன்னேக்கண்டு இன்பரசத்தையுண்டு
துலங்கப்பண்ணுமென் னத்தனே
துரியதலத்தனே துகளறு சுத்தனே

9 சோகமோகங்களென்னும் துன்பகன்றெங்கு மன்னும்
ஏகப்ரகாசோர் சிதமே
இருளொழி விதமே யின்பரு ளிதமே

10 ஏனிந்தச்சோதனே யெந்தையே யாளுமெனே
ஆனந்தத்தெள்ளமு தணியே
அடியவர் பணியே யச்சுத மணியே (தேவா)

---

(320) கண்ணிகள் இராகம் இந்துஸ்தான்காபி ரூபகதாளம்

1 நாதப்ரம்ம ஜோதியே நமோ நமோ
மாதுர்யமிகும் போதரசமெப்

போதுமே பொழிதாய்
வாஞய்த்தாஞய்வாழச் செய் யெந்தாய்

2 எந்தநாஞமேக மாயொளி ரீஸ்வரா
சந்ததமென்னு ளந்தனிலுனைச்
சிந்தித்தேன் வரமே
தாராய்வாராய் சாட்சி சாகரமே

3 சாட்சிபிரம்மசாரமே சதோதயம்
மாட்சிமை மலி மோக்ஷநிலை கடாட்சித்தாண்டருளே
மாசிலாசின்மய மதித் தெருளே

4 தெருணிலையடியா ரஞதரஞ் சீருய்ய
நிருமலசுகந் தரு மளவிலாப்
பெருமை யுன்னதமே
நீதி யாதி நிர்க்குணப் பதமே

5 பதமுறுஞ் சொப்ரகாச பாவன பாக்யமே
இதமுறுங்கதியுதவு முச்சுடர் முதலதா முறையே
ஏதுவாது இன்னமெம் மிறையே

6 எம்மதத்தருஞ் சம்மதித்தினி தேத்திடும்
செம்மையே பவ மும்மலமற
விம்மையிற்றயை பார்
தேவேகோவேதிக்கு வேறினி யார்

7 திக்கெட்டும் விட்டு
நீங்காதின்பந் தேங்குமாச்
சித்தகனவிலக்கருளுந்திருக்கொளி மலையே
சீர்த்தி பூர்த்தி தெய்வவா னிலையே

8 நன்னிலைசக ஜாநந்தந்தரு நாட்டமே
முன்னிலை யெனு மின்னலகல

மன்னு நித்தியமே
மோன ஞானமான சத்தியமே

9 சத்தசத்திடைத் தாளுய்த்திகழ் சாந்தமே
நித்தியபரதத்துவநெறி யைத்தருஞ் சுயமே
நேர்மை சீர்மை நிகழு நிச் சயமே

10 நிச்சிதாத்ம க்ஞானமே நிஜாநந்தம்
அச்சுதமெனு நற் சதுர்மறை யுச்சியின் முடிவே
அன்பே யின்பே யமலவான் வடிவே (நாத)

---

(321) கண்ணிகள் இராகம் - முகாரி - ரூபகதாளம்

1 சுகஸ்வரூப மான ஞான
சோதி வானமே
தகைசேரிதயம் தன்னி லுதயம்
தழைக்குந்தியானமே மோனமே

2 மோட்சநிலையில் முற்றிவாழுஞ் சொல்
மொழியுமா முனியே
சாட்சியாயெங்கும் தானெனத்தங்கும்
சமரசக் கனியே தனியே

3 சந்ததமருள் தந்திடு மிருள்
தகர்க்கும் பேரொளியே
அந்தமாமடி யார்மனக் கடி
யலருறையளியே வெளியே

4 வித்தக நெறி மேவுமெய்க்குறி
மிளிரு மூர்த்தியே
அத்துவிதப்பண் பாகியென்றன்கண்
அமைந்தபூர்த்தியே கீர்த்தியே

5 கேவல மயம் தாவுநிச் சயம்
கிளர்ந்திட வறியேன்
தேவயானிதம் சேவித்துன் பதம்
தெரிந்திடக்குறியே னறியேன்

6 செம்மையேதிகழ் தேவர்கண்மகிழ்
திருக்பரா பரமே
வெம்மனங்கெட்டு விடயங்கள்விட்டு
விளங்கச் செய்திரமேவரமே

7 வயங்குமம்ருத மழைபெய் யற்புத
மாணெழின் மதியே
தயங்கிடத்தேரும் சமயங்காளாறும்
சாருஞ்சத் கதியே பதியே

8 பாருணராத சீருறு நாத
பரமாணு பூதியே
நேரிலகண்டப் பேரதைக்கொண்ட
நிர்ம்மலநீதியே யாதியே

9 அன்பசிபத மாரு மூர்ச்சித
மாம்வே தாந்தமே
இன்பதுன்பொன்று மின்மையா யென்று
மிலகேகாந்தமே சாந்தமே

10 சச்சிதாநந்த சாரம் நிறைந்த
சாகரத் தெருளே
இச்சித்தெந்நாளும் என்முறை கேளும்
அச்சுதப் பொருளே யருளே (சுக)

(322) கண்ணிகள் இராகம் - சாமா - அடதாளசாப்பு

1 சத்யக் ஞானுனந்த சாந்த தேஜஸமைந்த
நித்யநிர்மல ஜோதியே
நேராய்ச் சீராய்
நின்றருடசெய் யாதியே

2 நீதிநிர்க்குணவழி நிகழ்த்திடுமோர்மொழிச்
சேதிநவிற்று மார்யனே
சித்தாய்ச் சத்தாய்த்
திகழும்போத சூர்யனே

3 சூரிஜனங்களுள்ளம் துலங்கின்பரச வெள்ளம்
ஆருநிஷ்கள ரூபமே
அஜமே நிஜமே
அற்புதாகண்ட தீபமே

தீபதி யெனப்படும் தெய்வமேயென்கொடும்
4 தாபத்தை மாற்று மையா
தகையாய் வகையாய்ச்
சரணுற்ற தென்ன பொய்யா

5 பொய்யனென் றகற்றினல் பொருந்துங் கதியினிமேல்
செய்யவல்லவரிங் கியார்
சிறியேன் அறியேன்
தெரிந்தொளிரக்கடைக் கண்பார்

6 மாமலரயன் கண்ணன் மாசிலந்தி வண்ணன்
தோமறத்துதிகே வலமே
சுகமே யகமே
சுயம்பழுத்திடும் பலமே

7 பலவிதத்திலென்மனம் பாதைபட்டனுதினம்
அலேவேனுயினுந் தீனனேன்

அன்றும் இன்றும்
அகத்திலுனேப்பிரிந் தில்லேன்

8 இல்லதுள்ள தென்னும் இரண்டினிடையிற் றுன்னும்
சொல்லரும்பொரு டன்மையே
சுத்த முத்த
சுபாவந்தழைக்கு நன்மையே

9 நன்மை நாதமுடிவில் நானென்றகவுங் கோதில்
சின்மய ஞானந் தெளியேன்
ஜென்ம கன்ம
சேடமெக்கால மகல் வேன்

10 அகலாதெங்கணுமாகி யதுவிதெனுஞ்சுட்டேகித்
தகைமின்னச்சுத ப்ரம்மமே
தானுய் வானுய்த்
தயங்கச்செய் யேன் மர்மமே (சத்)

---

(323) கண்ணிகள் இராகம் - கேதாரம் - அடதாளம்

1 அப்பா வொப் பில்லானே என்
அன்பே யின்ப வானே
துப்பார்ந்திடு மறை
சுகமே யக முகமே

2 முன்னும் சுட் டகன்று மோன
முத்திரை மேவி நின்று
தன்னுட்ட மொழியாத
தன்மைசெய் யழியாத
தனமே கனு கனமே

3 கண்ணே கண்மணியே ஞானக்
கண்ணுடையோர் பணியே
உண்ணேசித்தே னுனே
உகந்தாட்கொளு மெனே
ஒளியே பர வெளியே

4 மேலாஞ் சந்தோ ஷமே சாம
வேதார்த்த விசேஷமே
நாலாம்பத மிய்யும்
நாளும்பேரருள் செய்யும்
நலமே நிரு மலமே

5 நித்யாநந்தஸ் திதியே தாஞய்
நிகழுநிர்க்குண நிதியே
சத்யாத்மக ஞான சாரத்யான மோன
தகையே தனி வகையே

6 வாஞய்வளியன னீர் மண்ஞய்
மற்றுமாய்மன்னுஞ் சீர்
தாஞகும்ப்ரபாவ சாட்சியபேத தேவ
தருவே குரு வுருவே

7 வாசாக்ஞானங் கோஞ வகை
வதறுந்துன்மார்க்கர் காஞ
மாசேதுமில்லாத வஸ்துமயப்ரபோத
வரமே சுஸ் திரமே

8 தீராத்துயரந் தீர்ந்து எல்லாம்
திருக்கொளியாமென் ஞேர்ந்து
சீராகிடத்திண்ணம் தேடிவந்தேனினெண்ணம்
சிறியேன் றெரி வறியேன்

9 ஆதாரம் வேறின்ருய் நின்பால்
அடைந்தேன் பாலிப்பாய்
பூதலத்திலற்புதப் புகழாருமச்சுதப்
பொருளே திரு வருளே

---

(324) கண்ணிகள் இராகம் - காம்போதி - ஆதிதாளம்

1 கண்ணே கண்மணியானே
கருணைவாரிபெம் மானே தேனே (கண்)

விண்ணே விண்ணுதி மோன
விபுவேவிஸ்வப்ர தான ஞான (கண்)

2 தாழ்வாகுஞ் சோகமோக
சம்பவமாகும் பூலோக போக
வாழ்வதா னைந்து மெத்த
வாடினேனருளு முத்த சுத்த (கண்)

3 மனதின் மாசதை விண்டு
மன்னுந்தன்னுருவு கண்டு கொண்டு
தனிமையாய்த் தவஞ் செய்யச்
சரணுற்றேனென்ற னைய மெய்ய (கண்)

4 மாயாகாரிய ஜீவ
மருளுற்றிடாமானு பாவதேவ
தாயா யாதரி வேத
சாராகாரசத் போத நாத (கண்)

5 கேதகாரண கர்மக்
கிரியை கெட்டிலகு தர்ம்ம மர்ம்ம
போத பூரணம் பூத்த
பொருடன்மைதிக ழெதார்த்த மூர்த்த (கண்)

6 துங்கமா மறைச்சொல்லைச்
சோதிக்கிலங் கொன்றுமில்லை தொலலை
எங்குமாப் பரஞ்சோதி
எய்திஞேர்களனு பூதி யாதி (கண்)

7 நாஞுகும்சித் விலாச
நாட்டத்தோங்கும் ப்ரகாச நேச
தாஞுகும் பரமாட்சி
சத்தாமாத்திர சாட்சி காட்சி (கண்)

8 எந்நாளுநினைத் திண்ணம்
எண்ணினேனென்ற னெண்ணம் வண்ணம்
இந்நாளின் முற்றுருதோ
என்செய்வேன் செய்த தீதோயாதோ (கண்)

9 தெரியேனுண்மை யீதென்று
சிறியேனென்செய்வே னின்று நன்று
புரிவாய் நீ திக்கல்லாது
புவியில்வே ருெருவ ரேது வோது (கண்)

10 நிச்சிதாத்மக ஞாய
ஞெப்தியேகருளத் தாய தூய
அச்சுதாநந்த பூமி
அருளுஞ்சர்வாந்தர் யாமி சாமி (கண்)

---

(325) கண்ணிகள் இராகம் - சாமா - ரூபக தாளம்

1 ஈததிசயம் ஈததிசயம் ஈததிசயமே
யாதென்றிதனையே தெரிந்து யான்
ஓதுவன் பேதை யேன்

ஆ ஆ ஆ ஆ அம்மா

2 கரமில்லாதவ ஞேவியங்களைக் கம்மில் வரைவதும்
வரமறைகளை வாயற்ருேனுரை மகிழ்ந்துபுரிவதும்

ஆ ஆ ஆ ஆ அம்மா

3 காலில்லாதவ னாலேணியின்மேற்
கடுகிப் போகின்றதும்
ஆலயந்தெய்வ மாளின்றி யென்று
மர்ச்சனை யாகின்றதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

4 உருவில்லாதவன் செங்கோலேந்தி
யுலகைப் புரப்பதும்
பெருங்குடும் பத்தனும் துறவியாய்ப்
பேருற் றிருப்பதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

5 அனலில்லாம லோமகுண்ட
மனிச மெரிவதும்
மனமகிழ்வுற நீரில்லாது
மாரி சொரிவதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

6 ஒருவருமடிக்காது கிண்கிணி
யோசை யொலிப்பதும்
திரியுமெண்ணெயு மின்மையாகித்
தீபம் ஜொலிப்பதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

7 தெளிவாகிய தீம்புனலிடைச்
செந்தணற் றுன்னுவதும்
விளம்பிய வெந் தழலிற்றாமரை
விரிந்து மின்னுவதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

8 தகைசொருப மின்மையாகித்
தாண்டவம் பண்ணுவதும்

புகையிலாத வகையனந்தம்
புயல்கள் நண்ணுவதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

9 செப்புஞ்ஜனங்க ளின்மையான
தேசங் காணுவதும்
வெப்பமகலக் கிரணஞ் சூழ
வெய்யோன் ரேறுவதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

10 கானலாற்றி லாழ்ந் தனந்தம்பேர்
கடலிற் புக்கின்றதும்
மானிலத்தமாவாசை யன்றுமா
மதி யுதிக்கின்றதும்
ஆ ஆ ஆ ஆ அம்மா

11 வண்ணமோரணுவி லெண்ணிலண்ட
வரிசை தங்குவதும்
தண்ணீரில்லா தச்சுதானந்த
சாகரம் பொங்குவதும் (ஈத)

---

(326) கண்ணிகள் இராகம் - செஞ்சுருட்டி - ஏகதாளம்

சொன்னுன் சொன்னுண்டி சொல்லாமலே
அந்நாளிலரு ளாதி சற்குரு

1 வேதாந்தத்தின் வித்தக னென்பாரடி வெளி
வீதியில்வரு சேதியி னேரடி திகழ்
நாதாந்தத்தினவநவ சீரடி ரூப
நாமந்தவிர் சாமிக்குச்சம மாரடி யடி (சொ)

2 பொற்போடென்ற னைத்தனியா யிருத்யுடற்றி
பொருளாவியுங் கைக்கொண்டுளந்திருத்தி யொளிர்
கற்பூரமலையி னெருப்பு வத்தி யிட்ட
கதைபோன்மதியுதயந்தனைக் காணச் சித்திமுத்தி

3 மாவாஞதி தத்துவங்களின் றெழி லற்று
வகையாய்க்களைந் துன்னைப்பாரென்றுபழி யொழி
பாவாதீதமாயிலகு முள்விழி மின்னப்
பார்மேலதி சீர்மேவிடு மோர்மொழிவழி

4 துள்ளும்மகங் காரப் பேயை யோட்டிப் பாவம்
தொலையும்மஜ பாநலத்தை யூட்டிச் சதா
உள்ளும் புறம்புமோ ரொளி காட்டிச் சுதை
யூறும் பே ரின்பரசமினி தூட்டி நாட்டி

5 சாமவே தக்கருத்தினை விண்டு அவன்
சமர்த்தாலெனைத் தன்னுண் மடக்கிக்கொண்டு திர
மாமாநாம் சித்துரு வெனக் கண்டு சுகம்
ஆரும்படி நேராய்க்கரு ணைத்திரண்டு பண்டு

6 மெய்ஞ்ஞான வெளிவெள்ள மேற்பெருக்க ஜன்ம
வேதனையென்னும் விடயங்கள் சுருக்க இகழ்
அஞ்ஞானவாதபேதங்க டருக்க மகன்
றகலாநிலை யதுவாகிச் சும்மா விருக்கச் தருகேசெருக்க

7 சீராரரி சிவனய ஞதி முனி
தேவருஞ் சித்தரு மறைகளோதித் தெளிந்
தாராய்ந்துணர்வதற்கரிய சோதி மய
மாயோங்கிடுமாணிலையாத்மானு பூதி நீதி

8 பலகாலும் பழிமொழிக ணவின்று கொடும்
பாதகங்களைப் பண்ணிப்பய மகன்று நிதம்

உலகாயுத னுயுண்மருண் டுழன்று பொழு
தொழிப்போர்க் கின்ப நிட்டையினரு ளொட்டா
தென்று நன்று

9 வெம்மாயாமயமனக் கல்லை யனன்
மெழுகாக்கின னழகுட னெல்லை யிலா
அம்மார்க்கமுற் றகன்றனன் றொலலை யினி
யாராலெமக் காகும்பயன் யாதுமில்லை யொல்லை

10 மின்னூர்கட மோகமெனு மூழி வளி
வீசாதச்சு தானந்தப் பேராழி தனில்
எந்நாளும் படிந்துய்ய வென்றோழி வரம்
ஈந்தானவ னிருதாண்மல ரென்றும்வாழி வாழி (சொ)

---

(327) கண்ணிகள் இராகம் - உசேனி - ரூபகதாளம்

1 ஆண்டுகொண்டாண்டி குருநாதன்
அருள் புரிந்தாண்டி குருநாதன்

தாண்டவபாதந்தனைத் தாக்கி முடி
தன்னிற் றனியாயெனைத் தயை செய்து (ஆ)

2 முன்னிலையை நீக்கி மோகித்திடு
மூதறிவைப் போக்கி முறைப்படி
என்னையுந்தா னாக்கி யின்னமுதம்
ஈந்தருட் கண் ணோக்கி ஏகாந்தத்தில் (ஆ)

3 ஜீரணமாகிடு மூன் றேயத்துறுஞ்
சின்மயனாமெனைத்தான் திகழ்பரி
பூரணப்பொற்பாக்கினான் பொருந்துமப்
புதுமையென் னென்றிசைப்பேன் புந்தியிலேன் (ஆ)

4 ஆரொளி தந்திரத்தை யறிந்துசி
தாகாச ரந்தரத்தை யாராய்ந்தேகிப்
பேரொளிச் சுந்தரத்தைப் பெற்றிருக்கப
பேசாத மந்திரத்தைப் பேசிப்ரீதி (ஆ)

5 காண்பானெடு காட்சி காட்சிப்பொருள்
கடந்திடுஞ் சாட்சி கனம்பெறும்
சேண்புலத்தத் தாட்சி திருக்க தே
திண்மைப்பர மாட்சி தெளியென்று (ஆ)

6 ஓயாதெடுத் தெடுத்து வுடலுழல்
ஊழ்வலியைத் தடுத்து வுலகென்னு
மாயாமலங் கெடுத்து வஸ்துமய
மாகுஞ்செல்வங் கொடுத்து மாதாவைப்போல் (ஆ)

7 பேதமையைப் பேர்த்துப் பேராசையாம்
பேயைக்கரை சேர்த்துப் பேதித்திடும்
தீதகத்தைத் தீர்த்துத் தினம்படுஞ்
சிந்தனையைப் பார்த்துத் சேமமுற (ஆ)

8 அன்பாயுளத் தொளித்து அணியோங்கும்
அக்கள்வனைக் களித்து அடைந்தென்றும்
இன்பக்கடல் குளித்து இலங்கிட
என்னையெனக் களித்து எச்சரித்து (ஆ)

9 வஞ்சியர்போக மொத்து மண்ணுந்திர
வாழ்வாகுமென்றிச் சித்து வாதைப்படு
நெஞ்சந்துலங்க வைத்து நிச்சலமாய்
நில்லென்ருசீர் வதித்து நேசத்துடன் (ஆ)

10 பந்தத்திரய பாபம் பற்றகலப்
பண்ணிஸ்வய ரூபம் பார்த்திருக்க

எந்தைமதி தீபம் ஏற்றிச்சுக
மீந்தான்பிர தாபம் என்னென்பேன் (ஆ)

11 வந்தவரவை விண்டு மறைக்கயன்
மார்க்கஞ்சிலவுங் கண்டு வாதாடிப்பின்
தந்தம்மதமேற் கொண்டு சாதிப்போர்க்குச்
சன்மகன்மங்க ளுண்டு தப்பா தென்று (ஆ)

12 தாஞகிய வேட்டைத் தகவோதா
தாருக்கென்றுங் கேட்டைத் தரும்வெய்ய
மானதமே மூட்டை வளர்ந்திடும்
வந்தடையார் வீட்டை மதியென்று (ஆ)

13 அருமறைக் கெட்டாது அட்டாங்கயோ
கத்திலுங் கிட்டாது அதன்குறி
தெரியவு மொட்டாது தேயுமுனைச்
சித்தத்திற் றட்டாது சித்தாமென்று (ஆ)

14 நன்றது தாஞகித் தானதென்று
நாமமிரண்டு மேகி நாட்டமுடன்
நின்றவனே யோகி நெறிவேறு
நேசிப்போனே ஜோகி நிகரென்று (ஆ)

15 அண்டபுவன மெங்கும் அகண்டவி
லாசப்ரகாசந் தங்கும் அப்பெருமை
கண்டவருள்ளம் பொங்கும் கதிர்மதி
காந்திக்கப்பா லிலங்கும் கதியென்று (ஆ)

16 நிர்மல சிற்சோதி நிராமய
நிஷ்களநன் னீதி நிராதார
மர்மசுகானு பூதி மலியுஞ்ச
மாதிநிலை யோதி வற்புறுத்தி (ஆ)

17 அசைவாயிருக்கு மூச்சு அகவிண்ணுள்
ஆக்கிலுண்டோ பேச்சு அவித்தையாம்
விசனநிசி போச்சு மீதனைத்தும்
வெட்டவெளி யாச்சு வியந்திட்டேன் (ஆ)

18 எல்லைகடந்து மீது ஏராரும்பேர்
இன்பமமைந்த போது இதாகிதம்
அல்லும்பகலங் கேது யாருக்கியார்
அறைவ ரதாகாது ஆகாதென்று (ஆ)

19 சத்தியஞான சாரம் தந்தோனுக்குச்
சமமோருப காரம் தனையெண்ணி
எத்தைச்செயலிந் நேரம் ஏழையேன்
ஏதுங்காணேன்தீரம் இதுகாறும் (ஆ)

20 இச்சகவாழ்வி னின்று என்னதுயான்
எனுமகங்கொண்டு ழன்று இருந்தேனை
அச்சுதாநந்த னென்று அபிதானம்
ஆகும்படிக்கு நன்று ஆகத்தான் (ஆ)



மங்களம்.

கண்ணிகள் இராகம் - சுருட்டி - ஏகதாளம்

1 வையக முய்யவந் தைய மறுத்தோனே
மங்களம் ஜய மங்களம்
துய்யசம் பத்கிரி மெய்யனு மென்கோனே
மங்களம் ஜய மங்களம்

2 ஆரண மர்மம தான பரஞ்சோதி
மங்களம் ஜய மங்களம்
காரண காரியங் கடந்தவ ருண்ணீதி
மங்களம் ஜய மங்களம்

3 ஜீவருந் தேவரும் யாவரு மாய்நின்ருேய்
மங்களம் ஜய மங்களம்
பாவ மபாவம் படத்திடமாய் வென்ருேய்
மங்களம் ஜய மங்களம்

4 சச்சிதா நந்த சமரச ஞானமே
மங்களம் ஜய மங்களம்
அச்சுதா கண்ட வகோசர வானமே
மங்களம் ஜய மங்களம்

வாழி விருத்தம்

முச்சுடர் வாழி முகிலினம் வாழி
மூவருந் தேவரும் வாழி
நிச்சல ஞான தேசிகன் வாழி
நித்திய முத்தர்கள் வாழி
சச்சிதா நந்த பரம்பொருள் வாழி
சம்பத் கிரிப்ரம்ம பீடத்து
அச்சுதா நந்த வமலனே டிந்நூல்
அவனியுள் ளளவும்வா ழியரோ

அத்வைத கீர்த்தனனந்தலஹரி முற்றிற்று.

கே. வி. பிரஸ், வேலூர்.—(வ. ஆ.)

பிழையும், திருத்தமும்.

சீர் எண்	இடம்	வரி	பிழை	திருத்தம்
5	ச. 3	1	ஜோதியாய	ஜோதியாய்
18	ச. 1	4	சாட்சி	காட்சி
19	அனு	2	மார்க்கத்தைப	மார்க்கத்தைப்
30	ச. 1	4	இநத	இந்த
53	பல்	2	டருளே	டெருளே
55	ச. 1	1	கதிய	கதியய
61	ச. 2	8	தெவ்வ	தெய்வ
62	ச. 3	1	வீனத்திலும்	லீனத்திலும்
63	ச. 3	3	மறந்ததால	மறந்ததால்
64	ச. 2	1	சொல்லகனறு	சொல்லகன்று
66	பல்	1	என்றனுவி	எந்தனுவி
,,	ச.	1	இயஙகு	இயங்கு
67	அனு	1	நல	நலம்
69	அனு	2	ன்றிவிற்	னறிவிற்
73	ச. 3	2	குழல	குழல்
77	ச. 5	2	மச்சத	மச்சுத
90	ச. 1	1	மெனவயுந்	மெவையுந்
92	ச. 5	3	வானபரம்	வான்பரம்
100	ச. 2	3	கடந	கடந்
138	ச. 3	1	விணணும்	விண்ணும்
143	ச. 2	1	ஜோனறு	ஜோன்று
145	ச. 2	4	ப்ரம்மாகி	ப்ரம்மமாகி
149	ச. 5	4	ம்ம்ஸஸ்வ	மம்ஸஸ்வ
150	ச. 1	4	திகழும	திகழும்
156	ச. 3	2	மய்மாய்	மயமாய்
159	அனு	2	பராட்ச	பரோட்ச
177	ச. 2	3	அலைநது	அலைந்து
179	ச. 2	1	நாடியன்	நாடியான்
180	ச. 3	2	யெத்திக்குந	யெத்திக்குந்
184	ச. 4	4	நம்பினோ	நம்பினே
191	பல்	1	செய	செய்
206	ச. 1	3	யமைந்த்திடு	யமைந்திடு
221	ச. 1	4	பேராரு	பெராரு

பிழையும், திருத்தமும்.

சீர் எண்	இடம்	வரி	பிழை	திருத்தம்
243	ச. 1	3	கண்ட	கன்ம
,,	,,	,,	கலேக்	கடலேக்
245	ச. 2	3	சூட்சும	சூட்ச்ம
250	ச. 3	3	லெனேயான	லெனேயான்
251	அனு	1	தான தாங்சிற்	தான் தாஞ்சிற்
260	ச. 1	2	ஜோர்தி	ஜோதி
262	பல்	1	பாக்சியமே	பாக்கியமே
264	ச. 3	1	ரூேதும	ரூேதும்
267	ச. 3	7	நிச்சல	நிச்சலச்
270	பெயர் தலைப்பு.		ரூபசுதாளம்	ரூபகதாளம்
273	ச. 1	1	ஞென்	ஞெண்
278	ச. 2	1	நீங்கா	நீங்காப்
324	ச. 6	3	எங்குமாப்	எங்குமாம்
325	ச. 10	1	தனந்தம்போ	தனந்தம்பேர்
326	ச. 2	1	யிருத்யுடற்றி	யிருத்தியுடற்
,,	ச. 4	3	ரொணி	ரொளி
,,	ச. 6	4	தருகேசெருக்க	செருக்க
,,	ச. 9	3	றகன்றனன	றகன்றனன்
,,	,,	,,	ஒருலலே	ஒருல்லே
327	ச 9	2	ரந்தரத்தை	ரந்திரத்தை
,,	,,	3	பெற்றிருக்கப	பெற்றிருக்கப்

Book Presented by:
Dr. T. P. MEENAKSHISUNDARAM,
VICE-CHANCELLOR,
MADURAI UNIVERSITY,
MADURAI.

MADURAI UNIVERSITY LIBRARY

விலை ரூபா இரண்டரை.

வேலூர்
கே. வி. பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இப் புத்தகம் கிடைக்குமிடம்;

வித்துவான் வைத்தியலிங்கம் பிள்ளை,
ஸ்ரீ அச்சுதாநந்த நிலையம்,
வல்லம், கண்ணமங்கலம் போஸ்டு.
(வ. ஆ. ஜி.)

ஸ்ரீ கணேசர் பிரஸ்,
பஜார் வீதி, ஆர்க்காடு. N.A.

கே. வி. பிரஸ் புக்டிபோ,
வேலூர். N.A.